99091

சோதிட அரிச்சுவடி

(நான்கு பாகம்)

இஃது
பாலக்காடு பிரம்மஸ்ரீ
நித்தியானந்த சோதிடர் அவர்களால்
இயற்றியது

B. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ்
26, வெங்கட்ராமய்யர் தெரு, கொண்டித்தோப்பு,
சென்னை-79.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய

சோதிட அரிச்சுவடி

(நான்கு பாகம்)

இஃது

பாலக்காடு பிரம்மஸ்ரீ

நித்தியானந்த ஜோதிடர் அவர்களால்

இயற்றியதை

மதுரைமாநகரம்

கவிராஜ கந்தசாமிப்பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டது.

கஸ்தூரி பப்ளிகேஷன்ஸ்

கல்லூரி நூல்கள் பள்ளி புத்தகங்கள்

விற்பனையாளர்

நெ. 33, பத்ரியன் தெரு, முதல் மாடி,

சென்னை-600 001

பிரசுரித்தவர்கள் :

B. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ்

26, வெங்கட்ராமய்யர் தெரு, கொண்டித்தோப்பு,

சென்னை-79.

பதிப்புரிமை] 1995 [விலை ரூ. 35-00

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கடவுள் துணை

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய

ஜோதிட அரிச்சுவடி

— ஃ —

(முதல் பாகம்)

சுந்தரகணேசர் துதி

உலகினில் பிறந்தோர்க்கு உற்றநற் சுகதுக்கங்கள்
நிலமிசை காண்பதற்கு நீடிய ஜோதிடத்தின் [லாம்
பலகலைஆராய்ந்தோர்ந்து பலன்சொல்லும்விபரமெல்
கலவர மில்லாதோத கணபதிதுணை செய்வாரே.

(இதன் பொருள்) பகவானுல் சிருஷ்டிக்கப்பட்ட பூலோகத்தில் பிறந்த மனிதர்களின் வாழ்நாள் வரையிலும் அனுபவிக்கும் சுகதுக்கங்களை ஜோதிடத்தில் கணித்துப் பலன்களை விபரமாய்ச் சொல்லுவதற்கு கணேசமூர்த்தி துணை யிருப்பார்.

சீஷன் :—சுவாமி குருநாதரே ! உலகத்தில் பிறந்த மனிதர்களின் சுகதுக்கங்களைக் கவனிப்பது எவ்விதம் ?

குரு :—அவரவர்கள் பிறந்த இராசி லக்கினத்தைப் பார்த்தால், இன்னின்ன கிரகம் இன்னின்ன வீட்டிலிருந்தால், இன்னின்ன விதமாய் பலன் நடக்குமென்று சொன்ணுல், அனுபவத்தில் சரியாயிருக்கும்.

சீஷன் :—அதன் விபரமெவ்விதம் ?

குரு :—முதலாவது இலக்கினம் நிச்சப்படுத்திக் கொள்ளும் விபரத்தைக் கவனிக்க வேண்டும். இதன் விபர மெவ்வித மெனில் :

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

<table>
<tr><td>பங்குனி
மீனம்
4½</td><td>சித்திரை
மேஷம்
4¼</td><td>வைகாசி
ரிஷபம்
4¾</td><td>ஆனி
மிதுனம்
5¼</td></tr>
<tr><td>மாசி
கும்பம்
4¾</td><td colspan="2" rowspan="2">அவ்விதமாய் இரவுபகல்
இங்கிலீஷ்
24-மணி நேரத்தில்
60—நாழிகைக்கும்
12-இலக்கினம் நடக்கும்</td><td>ஆடி
கடகம்
5½</td></tr>
<tr><td>தை
மகரம்
5¼</td><td>ஆவணி
சிம்மம்
5¼</td></tr>
<tr><td>மார்கழி
தனுசு
5½</td><td>கார்த்திகை
விருச்சிகம்
5¼</td><td>ஐப்பசி
துலாம்
5</td><td>புரட்டாசி
கன்னி
5</td></tr>
</table>

சீஷன் :—இதன் விபர மெவ்விதம் ?

குரு :—சித்திரை மாதத்தின் முதல் தேதியில் பகல் 3-மணிக்கு குழந்தை பிறந்தால், அதற்கு ஜனன லக்கின விபர மெவ்விதமெனில் அன்றைய தினத்தின் இங்கிலீஷ் 10-மணியின் கணக்கைப்போல காலை 6-மணியிலிருந்து பகல் 3 மணிக்கு தமிழ் கணக்கின் சூரிய உதயாதி 22-½ நாழிகையாகும். அந்த சமயத்தில் நடக்கும் இலக்கின மென்னவெனில்; மேற்குறிப்பித்த சக்கரத்திற் காட்டிய விதமே கவனிக்கும் விபரம் எவ்விதமெனில் :

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மேஷம்	$4\frac{1}{4}$
ரிஷபம்	$4\frac{3}{4}$
மிதுனம்	$5\frac{1}{4}$
கடகம்	$5\frac{1}{2}$
சிம்மம்	$5\frac{1}{4}$

சுக்	சூரி புத	செவ்	
			ராகு
கேது			லக்
குரு	சந்	சனி	

ஆகமொத்தம் 25-நாழிகை சிம்மலக்கினம் உதயமாகி

$2\frac{1}{2}$-நாழிகை இருப்பு

இவ்விதமாக அன்றைய தினத்தின் லக்கினத்தை யனுசரித்து அச்சமயம் அந்தந்த வீட்டிலிருக்கும் கிரகங்களின் பலன்களைச் சொல்லவேண்டும்.

சீஷன் :—குருநாதரே ! தாங்கள் சொன்ன இலக்கின முதல் மற்ற வீட்டில் கிரகமிருந்தால் அந்த ஸ்தானத்திற்கு எந்தெந்த லக்கினமென்று சொல்வது ?

குரு :—பிறந்த நாழிகையில் அமைவதுதான் ஜனன லக்கினம்; மற்றவை கவனிப்ப தெவ்விதமெனில் :

லக்கினம்—உயிர் லக்கினம்

2-வது :—குடும்பஸ்தானம், வாக்குஸ்தானம்.

3-வது :—சகோதரஸ்தானம், தீரஸ்தானம்.

4-வது :—மாதுருஸ்தானம், சுகஸ்தானம்.

5-வது :—புத்திரஸ்தானம்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

6-வது :—சத்துருஸ்தானம்
7-வது :—களத்திரஸ்தானம்
8-வது :—ஆயுள்ஸ்தானம்
9-வது :—பிதுர்ஸ்தானம், பாக்கியஸ்தானம்
10-வது :—ஜீவனஸ்தானம்
11-வது :—ரூத்தசகோதரஸ்தானம், இலாபஸ்தானம்
12-வது :—சயனஸ்தானம், விரயஸ்தானம்

அவ்விதமாய்ச் சொல்லவேண்யது. இந்த ஸ்தானங்களில் கிரகங்களிருந்தால் அவரவர்கட்கிசைந்த நட்பாட்சி யுச்சம் பகை நீசமெனும் பதத்திற்குரிய விதமே சுபாசுப பலனைத் தருவார்கள்.

சீஷன் :—சுவாமி! கிரகங்களின் நட்பாக்ஷி உச்சம் பகை நீசமென்பதை பிறகு கவனிக்கிறேன். ராசிகளில் சரராசி, ஸ்திரராசி, உபயராசி யென்பதை அனுக்கிரகம் செய்யவேண்டும் சுவாமி.

மீனம் உபயராசி	மேஷம் சரராசி	ரிஷபம் ஸ்திரராசி	மிதுனம் உபயராசி
கும்பம் ஸ்திரராசி	இவ்விதமான இராசி வீட்டிலிருக்கும் கிரக நிலையைக் கண்டு பலன் சொல்லவும்		கடகம் சரராசி
மகரம் சரராசி			சிங்கம் ஸ்திரராசி
தனுசு உபயராசி	விருச்சிகம் ஸ்திரராசி	துலாம் சரராசி	கன்னி உபயராசி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு:—சரி; அவ்விபரம் சொல்லுகிறேன் கவனிப்பாய்.

சீஷன் :—*சுவாமி* ! தமது அனுக்கிரகத்தின்படியே நவக்கிரகங்களிருக்கும் 12-இராசிகளில் சரம், ஸ்திரம், உபயமென்பதைக் கவனித்துக்கொண்டேன். ஆனால், இராசியென்பது என்ன ?

குரு :—சந்திரனிருக்கும் ஸ்தானமே ராசியாகும்.

பூரட்டாதி $\frac{1}{4}$ உத்ரட்டாதி 1 ரேவதி 1 மீனராசி	அசுவனி 1 பரணி 1 கிருத்திகை $\frac{1}{4}$ மேஷராசி	கிருத்திகை $\frac{3}{4}$ ரோகணி 1 மிருகசீரிட $\frac{1}{2}$ ரிஷபராசி	மிருகசீரிட $\frac{1}{2}$ திருவாதிரை 1 புனர்பூசம் $\frac{3}{4}$ மிதுனராசி
அவிட்டம் $\frac{1}{2}$ சதயம் 1 பூரட்டாதி $\frac{3}{4}$ கும்பராசி	இவ்விதமாய் அந்தந்த தினத்தில் பஞ்சாங்கத்தில் தோற்றும் நக்ஷத்திரங்களில் சந்திரன் சஞ்சரிப்பதே ராசியாகும். ஆனால் ஒவ்வொரு ராசியிலும் $2\frac{1}{2}$-நாள் வரையிலும் சந்திரன் நிற்பதால் அதை நாமே கவனித்து ஜாதகம் எழுதும்போது போட்டுக் கொள்ளவேண்டியது.		புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம் 1 ஆயிலியம் 1 கடகராசி
உத்ராடம் $\frac{3}{4}$ திருவோணம் 1 அவிட்டம் $\frac{1}{2}$ மகராசி			மகம் 1 பூரம் 1 உத்திரம் $\frac{1}{4}$ சிங்கராசி
மூலம் 1 பூராடம் 1 உத்திராடம் $\frac{1}{4}$ தனுசுராசி	விசாகம் $\frac{1}{4}$ அனுஷம் 1 கேட்டை 1 விருச்சிகராசி	சித்திரை $\frac{1}{2}$ சுவாதி 1 விசாகம் $\frac{3}{4}$ துலாராசி	உத்திரம் $\frac{3}{4}$ அஸ்தம் 1 சித்திரை $\frac{1}{2}$ கன்னியாராசி

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சீஷன் :—அதன் விபரத்தையும் திருவருள்புரிவீர் சுவாமி.

குரு :—சரி! அவ்விதமே உபதேசிக்கின்றேன் கவனிப்பாய்! குழந்தை பிறந்தநாளின் கிழமையில் எந்த நக்ஷத்திரமிருக்கின்றதோ அந்த நக்ஷத்திரத்தில் சந்திரனிருப்பதுதான் இராசியாகும்.

சீஷன் :—இவ் விசேஷத்தை விபரமாய்ப் புகல்வீர் குருநாதா.

குரு :—அடியிற் குறிப்பிக்கும் சக்கரத்தைப் பார்.

சீஷன் :—ஒவ்வொரு வீட்டிலும் கிரகங்கள் சஞ்சரிக்கும் காலத்தின் விபர மெப்படி ?

குரு :—எனது அன்பான சிஷ்யனே! இந்த பனிரெண்டு ராசியிலும், 9 கிரகங்களும் இருக்கும் கால நிர்ணயத்தைச் சொல்லுகிறேன் கவனிப்பாய். அதெவ்விதமென்றால் : மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் 12–ராசியிலும் கிரகங்கள் இருக்கும் கால நிர்ணயம் எவ்விதமெனில் :—

ஒவ்வொரு இராசியிலும் கிரகங்கள் நிற்குங்காலம்

சூரியன் 1–மாகம்	சுக்கிரன் 1–மாதம்
சந்திரன் $2\frac{1}{4}$-நாள்	சனி $2\frac{1}{2}$-வருஷம்
செவ்வாய் $1\frac{1}{2}$–மாதம்	இராகு $1\frac{1}{2}$–வருஷம்
புதன் 1-மாதம்	கேது $1\frac{1}{2}$–வருஷம்
குரு 1-வருஷம்	இவ்விதமாய் சஞ்சரிப்பார்கள்

சீஷன் :—சுவாமி! கவனித்துக்கொண்டேன். ஆனால் நவக்கிரகங்களின் பார்வைஸ்தானத்தின் விபரத்தைச் சொல்வீரென்று கோருகிறேன்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு :—சிஷ்யா, சூரியனுக்கு 3-7-ம், சந்திரனுக்கு 7-ம், செவ்வாய்க்கு 4-7-8-ம், புதனுக்கு 7-ம், குருவுக்கு 5-7-9-ம், சுக்கிரனுக்கு 7-ம், சனிக்கு 3-7-10-ம், இராகுவுக்கு 3-7-12-ம், கேதுவுக்கு 3-7-12-ம் பார்வை ஸ்தானமாகும். இவர்களில் குரு, புதன், சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன் பார்வையினுல் சுபமாகும். மற்றவர்கள்பார்வையினுல் அசுபமாகும்.

சீஷன் :—சுவாமி! பிள்ளை பிறந்தால் அதற்கு நாமகரணம் சூட்டுதல் பெயரிடும்படியானவை எவ்விதம்?

குரு :—அடியில் குறிப்பித்த விதமாக எழுத்துக்களில் முதலெழுத்தைக்கொண்டு பெயரிடுவது. முன் சொன்னபடியே குழந்தை பிறந்ததினத்தின் வேளையில் எந்தெந்த நக்ஷத்திரபாகம் வருகிறதோ அந்தப் பாகத்தின் முதலெழுத்தையே குறிப்பித்து பெயரிட்டால் அந்தந்தஇராசியைக் குறிப்பிக்கும். எப்படியெனில்:—அந்தக் குழந்தை பிறந்த வேளையில் அஸ்த நக்ஷத்திரம் முதற்பாதமானுல் பு-என்னும் அக்ஷரம் வரும். அச்சமயம் ஆண் குழந்தையானுல் புருஷோத்தமன் என்றும், பெண் குழந்தையானுல் புனிதவதி யென்றும் பெயரிட வேண்டும். அப்போது அந்த நக்ஷத்திரத்தில் சந்திரன் சஞ்சரிப்பதால், கன்னியாராசியாகும். அதனை மேற்குறிப்பித்த பெயருடையவர்களின் ஜன்ம ராசியாகக் கொண்டு பன்னிரண்டு ராசியிலிருக்கும் கிரகங்களால் நடக்கும் பலன்களைச் சொன்னுல் அனுபவத்தில் சரியாயிருக்கும். அதன் விவரம் எவ்விதமெனில் :—

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நாமநக்ஷத்திர எழுத்துக்களின் விபரம்

நக்ஷத்திரங்கள்	1	2	3	4
அசுவனி	சு	சே	சோ	லா
பரணி	லி	லு	லெ	லோ
கார்த்திகை	அ	இ	உ	ஏ
ரோகணி	ஒ	வ	வி	வு
மிருகசீரிடம்	வே	வோ	கா	கி
திருவாதிரை	கு	க்க	ங	ச
புனர்பூசம்	கே	கோ	ஹ	ஹி
பூசம்	ஹு	ஹே	ஹோ	ட
ஆயில்யம்	டீ	டு	டே	டோ
மகம்	ம	மி	மு	மே
பூரம்	மோ	டா	டி	டு
உத்திரம்	டே	டோ	பா	பி
அஸ்தம்	பூ	ஷ	ண	ட்ட
சித்திரை	பே	போ	ரா	ரி
சுவாதி	ரு	ரே	ரோ	த
விசாகம்	தி	து	தே	தோ
அனுஷம்	நா	நீ	நு	நே
கேட்டை	நொ	ய	யி	யூ
மூலம்	யே	யோ	ப்பா	ப்பி
பூராடம்	ப்பூ	தா	ப	ட
உத்திராடம்	பே	போ	ஜ	ஜி
திருவோணம்	ஜு	ஜே	ஜோ	க
அவிட்டம்	க	கி	கு	கே
சதையம்	கோ	ஸ	ஸி	ஸு
பூரட்டாதி	ஸே	ஸோ	த	தி
உத்திரட்டாதி	து	ஷ	ஞா	த
ரேவதி	தெ	தொ	ச	சி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இவ்விதமாய் அந்தந்த நாளில் பிறந்தால் அந்தந்த நாளில் நடக்கும் நக்ஷத்திரங்களில் எத்தனை நாழிகையில் குழந்தை பிறந்தாலும், அந்தந்த நக்ஷத்திரங்களின் பாத சாரத்தின்படியே வந்த எழுத்தை முதலெழுத்தா யமைத்துப் பெயரிட்டால் அதில் ஜன்ம ராசியாக சந்திரனிருந்த ஸ்தானத்தைக் குறிக்கும். இதைப் பார்த்துத்தான் இராசி பலனைச் சொன்னால் அனுபவத்தில் சரியாயிருக்கும்.

நவக்கிரகங்களின் ஆட்சிவீடு அறியும் விபரம்

விருத்தம்

மேஷந்தேள் குஜனுக்காட்சி மிதுனம் பெண் புதனுக்
[காட்சி
தேசுலா நண்டிற்சந்திரன் தினகரன்சிம்மத்தாட்சி
மாசிலா தனுசுமீனம் மறையவர்க்காட்சியாகும்
பேசியரிஷபங்கோனும் புகர்தனக்காட்சியாமே.

(இ-ள்.) சூரியபகவானுக்கு சிம்மராசி ஆட்சியாகும். சந்திரபகவானுக்கு கடகராசி ஆட்சியாகும். செவ்வாய் பகவானுக்கு மேஷ ராசியும், விருச்சிக ராசியும் ஆட்சி வீடாகும். புத பகவானுக்கு மிதுன ராசியும் கன்னியா ராசியும் ஆட்சியாகும். குரு பகவானுக்கு தனுசுராசியும், மீனராசியும் ஆட்சியாகும். சுக்கிர பகவானுக்கு ரிஷப ராசியும், துலாராசியும் ஆட்சியாகும்.

விருத்தம்

நன்மைசேர் சனீஸ்வரர்க்கு நவில்கும்பம்மகரம் ஆட்சி
அன்புசேர் ராகுகேது காட்சிவீ டில்லாதாலே
இன்பமா யெந்தவீட்டில்இருப்பினும் அதுவேஆட்சி
வன்மையா யுந்தனுக்கு வழுத்தினேன் மனதில்
[வையே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) சனி பகவானுக்கு மகரராசியும் கும்ப ராசியும் ஆட்சிவீடாகும். ஆனால் சப்த கிரகங்களுக்கும் பனிரெண்டு இராசி வீடுகளும் சொந்தமாய்விட்டதாலும் அப்பால் வந்த இராகு கேதுகளுக்கு இராசி வீடு காலி யில்லாதபடியால் அவ்விருவரும் அவர்களின் அதிகாரஞ் செலுத்துவதற்கு வருகிற வீடுகள் ஒவ்வொன்றும் அவர்களிருவருக்கும் அவர்களுக்குரிய சொந்த வீடாய் மதித்து அந்த வீட்டிற்குடைய இராசிநாதன் கொடுக்கும் பலனையே அவர்கள் கொடுப்பார்களாம்.

சீஷன் :—சுவாமி ! தாங்கள் தெரிவித்த விதமே அந்தந்த கிரகங்கள் தமது ஆட்சி வீட்டிலிருந்தால் எவ்வெவ் விதமாகிய பலனைத் தருவார்கள்.

குரு :—எனது அன்புள்ள சிஷ்யா ! உன் மனம்போலவே சொல்லுகிறேன் கவனிப்பாய்.

விருத்தம்

ஆட்சிவீட்டில்நின்றாலும் அந்தந்தகிரகமெல்லாம்
மாட்சியாய்சுபா சுபங்கள் மனிதரையடையச்செய் [வார்
சூட்சியாயுந்தனுக்கு சொல்லியவிபரமெல்லாம்
காட்சியாய்மனதில்வைத்து கவனித்துக்கொள்ளு
வாயே.

(இ-ள்.) கிரகங்கள் தமது சொந்தவீட்டிலிருந்தாலும் தாம் நின்ற ஸ்தான பலனையே தருவார்கள். இந்த மர்ம இரகசியத்தைக் கவனியாமல் கிரகங்கள் தமது சொந்த வீட்டில் வந்து ஆட்சி பெற்றிருப்பதால் தமக்கு நல்ல பலன் கிடைக்குமென்று மனிதர்கள் சொல்லிக் கொள்வதினால் பிரயோசனமில்லை. அவரவர்கள் இராசி பலனை அனுசரித்துத்தான் பலனைத் தருவார்கள். இந்த இரகசியத்தைத்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வருஷங்கள் — 60

பிரபவ	சர்வசித்து	பிலவங்க
விபவ	சர்வதாரி	கீலக
சுக்கில	விரோதி	சௌமிய
பிரமோதூத	விக்ருதி	சாதாரண
யிரஜோற்பத்தி	கர	விரோதிகிருது
ஆங்கீரச	நந்தன	பரிதாபி
ஸ்ரீமுக	விஜய	பிரமாதீச
பவ	ஜய	ஆனந்த
யுவ	மன்மத	ராக்ஷச
தாது	துன்முகி	நள
ஈஸ்வர	ஹேவிளம்பி	பிங்கள
வெகுதானிய	விளம்பி	காளயுக்தி
பிரமாதி	விகாரி	சித்தாத்திரி
விக்கிரம	சார்வரி	ரௌத்திரி
விஷு	பிலவ	துன்மதி
சித்திரபானு	சுபகிருது	துந்துபி
சுபானு	சோபகிருது	ருத்ரோங்காரி
தாரண	குரோதி	இரக்தாக்ஷி
பார்த்திப	விசுவாவசு	குரோதன
விய	பராபவ	அக்ஷய

ஆக ௵ 60

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மாதங்கள், கிழமைகள், திதிகள்

மாதங்கள்-12	கிழமைகள்-7	திதிகள்-15
சித்திரை	ஞாயிறு	பிரதமை துதியை
வைகாசி	திங்கள்	திரிதியை சதுர்த்தி
ஆனி	செவ்வாய்	பஞ்சமி சஷ்டி
ஆடி	புதன்	சப்தமி அஷ்டமி
ஆவணி	வியாழன்	நவமி தசமி
புரட்டாசி	வெள்ளி	ஏகாதசி துவாதசி
ஐப்பசி	சனி	திரயோதசி சதுர்த்தசி
கார்த்திகை		அமாவாசை [தேய்பிறை
மார்கழி		
தை		பௌர்ணமி [வளர்பிறை
மாசி		
பங்குனி		
ஆக 12.	ஆக-7.	ஆக-15

இவ்விதமே 15-நாளைக்கு வரும் திதிகள் தேய் பிறையாகிய கடைசி தி தி யா கி ய அமாவாசைக் குப் பிறகு வருகிற திதிகள் வளர்பிறையாகும்.

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அதன்கடைசியில் வருகிற திதிகள் தேய்பிறையா மென்றறிவாய்.

விருத்தம்

அன்புட னுலகோரெல்லாம் ஆனதோர் சுக்ல பக்ஷ, நன்மையாம் தினத்தில் வாய்ந்த நக்ஷத்ர சுப யோகத்தில், பன்னும்வர்த்தகம் உத்தியோகம் பக்ஷமாய்ச் செய்வாராகுல், இன்பமும் சுகமும பாக்கிய இலாபமும் பெறுவார்தானே

சீஷன் :—குருஸ்வாமி ! தாங்கள் அடியேனுக்கு இவ்வளவு அன்புகூர்ந்து தெரிவித்தவைகளை முழுவதும் கவனித் துணர்ந்தேன். ஆனுல், நவக்கிரக காரகாதிபதிகளின் விபரம் சொல்வீர்.

குரு :—சரி சொல்லுகிறேன் கவனிப்பாய்.

நவக்கிரக காரகாதிபதிகள்

சூரியன்–பிதுர்காரகன்

சந்திரன்–மாதுர்காரகன்

செவ்வாய்-சகோதரகாரகன்

புதன்-வித்யாகாரகன்

வியாழன்–புத்திரகாரன்

சுக்கிரன்–களத்திரகாரகன்

சனி-ஆயுள்காரகன்

இராகு } பிதாமாதுர்காரகன்
கேது }

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அமிர்தயோகம், சித்தயோகம், மரணயோகம்

நட்சத்திரம்	ஞா.	திங்.	செ.	புத.	வி.	வெ.	சனி
அசுவினி	சித்த	சித்த	சித்த	மர	அமி	அமி	சித்த
பரணி	பிர	சித்த	சித்த	சித்த	சித்	தத்த	சித்த
கிருத்திகை	சித்த	மர	சித்த	அமி	மர	சித்த	அமி
ரோகணி	சித்த	அமி	அமி	சித்த	மர	மர	சித்த
மிருகசீரிட	சித்த	சித்த	சித்த	சித்த	மர	சித்த	சித்த
திருவாதி	சித்த	சித்த	மர	சித்த	மர	சித்த	சித்த
புனர்பூசம்	சித்த	அமி	சித்த	சித்த	அமி	சித்த	சித்த
பூசம்	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த	மர	சித்த
ஆயிலியம்	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த	மர	மர
மகம்	மர	மர	சித்த	சித்த	அமி	மர	அமி
பூரம்	சித்த	சித்த	சித்த	அமி	சித்த	சித்த	சித்த
உத்திரம்	அமி	சித்த	அமி	அமி	மர	சித்த	மர
அஸ்தம்	சித்த	சித்த	சித்த	மர	சித்த	அமி	மர
சித்திரை	சித்த	பிர	சித்த	சித்த	சித்த	சித்த	மர
சுவதி	சித்த	அமி	சித்த	சித்த	அமி	சித்த	சித்த
விசாகம்	மர	மர	மர	சித்த	சித்த	சித்த	சித்த
அனுஷம்	மர	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த
கேட்டை	மர	சித்த	மர	சித்த	பிர	மர	சித்த
மூலம்	அமி	சித்த	அமி	மர	சித்த	அமி	சித்த
பூராடம்	சித்த	மர	சித்த	அமி	சித்த	பிர	சித்த
உத்திராடம்	அமி	மர	பிர	அமி	சித்த	சித்த	சித்த
திருவோணம்	அமி	அமி	சித்த	சித்த	சித்த	மர	சித்த
அவிட்டம்	மர	சித்த	சித்த	பிர	சித்த	சித்த	சித்த
சதயம்	சித்த	சித்த	மர	சித்த	மர	சித்த	அமி
பூரட்டாதி	சித்த	சித்த	மர	அமி	சித்த	சித்த	மர
உத்ரட்டாதி	அமி	சித்த	அமி	சித்த	சித்த	சித்த	சித்த
ரேவதி	அமி	சித்த	சித்த	மர	சித்த	சித்த	பிர

அமி - அமிர்தயோகம். சித்த - சித்தயோகம்.
மர - மரணயோகம். பிர - பிரபலாரிஷ்டம்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இவ்விதமாகிய மேற்குறிப்பித்த தினங்களில் வரும் நக்ஷத்திரங்களின்படியே வருகிற அமிர்தயோகத்தில் எந்தக் காரியத்தையும் செய்யலாம். மரண யோகமாயிருக்கும் நாளில் எந்தக் காரியத்தையும் செய்யலாகாது.

சீஷன் சொல்வது

விருத்தம்

ஆசிரியாவென்குருவே நாளில்தோன்றும்
அசுபதினம்சுபதினத்தின் விபரந்தனே
வீசுபுகழென்குருவே அடியேனுக்கு
விபரமாய்ப்புகல்வீரென் றுமதுபாதம்
மாசிலாமனத்துடனே தியானஞ்செய்து
மதிசிதருதுமதுசொல் கவனிக்கின்றேன்
பாசமுடனெந்தனுக்கு உபதேசிப்பீர்
பாரெங்கும்முன்னோர்கள் புகழும்நாதா.

சீஷன் :—சுவாமி ! ஒவ்வொரு நாளிலும் சுபவேளை அசுபவேளை யென்னும் விதத்தை இன்னின்னதென்று அடியேனுக்கு உபதேசித்தருள வேண்டும்.

குரு :—எனதன்பிற்கிசைந்த பிரியமான சிஷ்யனே ! நீ விருப்பத்துடன் கேட்கும் விஷயங்களை யெல்லாம் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கவனிப்பாய்.

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நக்ஷத்திரங்கள், யோகம், கரணங்கள்

நக்ஷத்திரங்கள்-27	யோகங்கள்-27	கரணங்கள்-11
அஸ்வனி	விஷகம்பம்	பவம்
பரணி	பிரீதி	
கிருத்திகை	ஆயுஷ்மான்	பாலவம்
ரோகணி	சௌபாக்கியம்	
மிருகசீரிடம்	சோபனம்	கௌலவம்
திருவாதிரை	அதிகண்டம்	
புனர்பூசம்	சுகர்மம்	கரசை
பூசம்	திருதி	
ஆயில்யம்	சூலம்	வணிசை
மகம்	கண்டம்	
பூரம்	விருத்தி	சகுனி
உத்திரம்	துருவம்	
அஸ்தம்	வியாகதம்	பத்திரை
சித்திரை	ஹர்ஷணம்	
சுவாதி	வச்சிரம்	சதுஷ்பாதம்
விசாகம்	சித்தி	
அனுஷம்	விதிபாதம்	நாகவம்
கேட்டை	வரியான்	
மூலம்	பரிகம்	கிமஸ்துக்கினம்
பூராடம்	சிவம்	
உத்திராடம்	சித்தம்	ஆக 11
திருவோணம்	சாத்தியம்	
அவிட்டம்	சுபம்	
சதயம்	சுப்பிரம்	
பூரட்டாதி	பிரமம்	
உத்ரட்டாதி	மாகேந்திரம்	
ரேவதி	வைதிருதி	
ஆக 27	ஆக 27	

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கேது { மோக்ஷகாரகன்
மாதாமாதுர்காரகன்
ஞானகாரகன் }

இவ்விதமாய் கவனித்துக்கொண்டு அவரவர்கள் ஜாதக லக்ஷணத்தின்படியே பலாபலன்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

சீஷன் :—சுவாமி ! ஒவ்வொரு தினத்திலும் அமிர்த யோகம் சித்தயோகம் கவனிப்ப தெவ்விதம் ?

குரு :—ஒவ்வொரு தினத்திலும் வரும் கிழமையில் வருகிற நக்ஷத்திரங்களின்படியே அமிர்தாதி சித்தயோக தினங்கள் அமையும். அந்த சுபதினங்களில்தான் எவ்விதமான சுபகாரியங்களையும் செய்யவேண்டும். ஆனால் மரணயோகம் வரும்படியான தினங்களில் சுபகாரியங்களை ஆரம்பஞ் செய்யலாகாது.

சீஷன் :—அதை அடியேனுக்கு விபரமாய்ச் சொல்லுவீர் சுவாமி !

குரு :—சொல்லுகிறேன் கவனிப்பாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அமிர்தயோகம், சித்தயோகம், மரணயோகம்

நட்சத்திரம்	ஞா.	திங்.	செ.	புத.	வி.	வெ.	சனி
அசுவினி	சித்த	சித்த	சித்த	மர	அமி	அமி	சித்த
பரணி	பிர	சித்த	சித்த	சித்த	சித்	தத்த	சித்த
கிருத்திகை	சித்த	மர	சித்த	அமி	மர	சித்த	அமி
ரோகணி	சித்த	அமி	அமி	சித்த	மர	மர	சித்த
மிருகசீரிட	சித்த	சித்த	சித்த	சித்த	மர	சித்த	சித்த
திருவாதி	சித்த	சித்த	மர	சித்த	மர	சித்த	சித்த
புனர்பூசம்	சித்த	அமி	சித்த	சித்த	அமி	சித்த	சித்த
பூசம்	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த	மர	சித்த
ஆயிலியம்	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த	மர	மர
மகம்	மர	மர	சித்த	சித்த	அமி	மர	அமி
பூரம்	சித்த	சித்த	சித்த	அமி	சித்த	சித்த	சித்த
உத்திரம்	அமி	சித்த	அமி	அமி	மர	சித்த	மர
அஸ்தம்	சித்த	சித்த	சித்த	மர	சித்த	அமி	மர
சித்திரை	சித்த	பிர	சித்த	சித்த	சித்த	சித்த	மர
சுவதி	சித்த	அமி	சித்த	சித்த	அமி	சித்த	சித்த
விசாகம்	மர	மர	மர	சித்த	சித்த	சித்த	சித்த
அனுஷம்	மர	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த
கேட்டை	மர	சித்த	மர	சித்த	பிர	மர	சித்த
மூலம்	அமி	சித்த	அமி	மர	சித்த	அமி	சித்த
பூராடம்	சித்த	மர	சித்த	அமி	சித்த	பிர	சித்த
உத்திராடம்	அமி	மர	பிர	அமி	சித்த	சித்த	சித்த
திருவோணம்	அமி	அமி	சித்த	சித்த	சித்த	மர	சித்த
அவிட்டம்	மர	சித்த	சித்த	பிர	சித்த	சித்த	சித்த
சதயம்	சித்த	சித்த	மர	சித்த	மர	சித்த	அமி
பூரட்டாதி	சித்த	சித்த	மர	அமி	சித்த	சித்த	மர
உத்ரட்டாதி	அமி	சித்த	அமி	சித்த	சித்த	சித்த	சித்த
ரேவதி	அமி	சித்த	சித்த	மர	சித்த	சித்த	பிர

அமி - அமிர்தயோகம். சித்த - சித்தயோகம்.
மர - மரணயோகம். பிர - பிரபலாரிஷ்டம்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இவ்விதமாகிய மேற்குறிப்பித்த தினங்களில் வரும் நக்ஷத்திரங்களின்படியே வருகிற அமிர்தயோகத்தில் எந்தக் காரியத்தையும் செய்யலாம். மரண யோகமாயிருக்கும் நாளில் எந்தக் காரியத்தையும் செய்யலாகாது.

சீஷன் சொல்வது

விருத்தம்

ஆசிரியாவென்குருவே நாளில்தோன்றும்
அசுபதினம்சுபதினத்தின் விபரந்தனை
விசுபுகழென்குருவே அடியேனுக்கு
விபரமாய்ப்புகல்வீரென் றுமதுபாதம்
மாசிலாமனத்துடனே தியானஞ்செய்து
மதிசிதருதுமதுசொல் கவனிக்கின்றேன்
பாசமுடனெந்தனுக்கு உபதேசிப்பீர்
பாரெங்கும்முன்னோர்கள் புகழும்நாதா.

சீஷன் :—சுவாமி! ஒவ்வொரு நாளிலும் சுபவேளை அசுபவேளை யென்னும் விதத்தை இன்னின்னதென்று அடியேனுக்கு உபதேசித்தருள வேண்டும்.

குரு :—எனதன்பிற்கிசைந்த பிரியமான சிஷ்யனே! நீ விருப்பத்துடன் கேட்கும் விஷயங்களை யெல்லாம் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கவனிப்பாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வாரங்கள்	இராகு காலம்		குளிகை காலம்		எமகண்ட காலம்		அர்த்தப் பிரகணன்		காலன்		இரவு எமகண்டன்	
வேளை	மணி முதல்	மணி வரை	மணி முதல்	மணி வரை	மணி முதல்	மணி வரை	மணி முதல்	மணி வரை	மணி முதல்	மணி வரை	மணி முதல்	மணி வரை
ஞாயிறு	4½	6	3	4½	12	1½	10½	12	6	7½	6	7½
திங்கள்	7½	9	1½	3	10½	12	9	10½	3	4½	3	4½
செவ்வாய்	3	4½	12	1½	9	10½	7½	9	1½	3	1½	3
புதன்	12	1½	10½	12	7½	9	6	7½	12	1½	12	1½
வியாழன்	1½	3	9	10½	6	7½	3	4½	10½	12	10½	12
வெள்ளி	10½	12	7½	9	3	4½	1½	3	9	10½	9	10½
சனி	9	10½	6	7½	1½	3	12	1½	7½	9	7½	9

CC-0. OldTTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சீஷன் சொல்வது

விருத்தம்

எந்தனுக்கு நன்மனதாய் ஜோதிஷத்தை
எளிதாகத் தாரணியில் உபதேசித்த
சுந்தரஞ்சேர் குணமமைந்த குருவேமாந்தர்
சுற்றத்தா ருடன்விருந்து புசிக்கும்நாளில்
பந்தமுடன் யாத்திரைகள் சுபாசுபங்கள்
பக்ஷமுறும் ஸ்நானநாள் விவரமெல்லாம்
அந்தமுடனெந்தனுக்கு உபதேசிப்பீர்
ஆசிரிய நின்பாதம் நம்பினேனே.

(இ-ள்.) சுவாமி! தாங்கள் அடியேனுக்குத் தெரிவித்த காலாகாலத்தைக் கவனித்துக்கொண்டேன். ஆனால், வழிப்பிரயாணஞ் செய்தல், வஸ்திரமுடுத்தல், விருந்துண்ணால் முதலானவைகளுக்கு எந்தெந்த நாள் உபயோகமாகும்.

குரு :—சொல்லுகிறேன் கவனிப்பாயாக.

ஆகாத நக்ஷத்திரங்கள்

விருத்தம்

ஆதிரைபரணி கிருத்திகை
ஆயில்யமும்முப் பூரங்கேட்டை
தீதுறும் விசாகம்சோதி
சித்திரை மகமீராறும்
மாதனங் கொண்டார்தாரார்
வழிநடைப் பட்டார்மீளார்
பாய்தனிற் படுத்தோர்தேரார்
பாம்பின்வாய்த் தேரையாமே.

(இ-ள்.) இருபத்தேழு நக்ஷத்திரங்களில் திருவாதிரை, பரணி, கிருத்திகை, ஆயிலியம், பூரம், பூராடம்,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பூரட்டாதி, கேட்டை, விசாகம், சுவாதி, சித்திரை, மகம் இந்த 12–நக்ஷத்திரங்களில் கடன் வாங்கியவர் சமயத்திற்குக் கொடுக்க முடியாது. தேசசஞ்சாரம் செய்வதற்காக பிரயாணப்படுவர் மறுபடியும் திரும்புவதற்குப் பலவிதமாகிய கஷ்டம் சம்பவிக்கும். வியாதியென்று பாய்தனிற் படுத்தவர் சரீரசௌக்கியம் பெற்று எழுந்து வருவதற்கு கஷ்டம்.

கோடி வஸ்திர முடுத்தல்

விருத்தம்

காரியிலழுக்கதாகும் கதிரவன்பீடையாகும்
மாரியில்நணையுந்திங்கள் வன்புதன்கந்தையாகும்
வீரியமில்லைசெவ்வாய் வெள்ளியில்மடந்தைசேர்வாள்
கூறியவியாழன் நன்ருய் குலவியஆடைசாத்தே.

(இ-ள்.) சனிக்கிழமை தினத்தில் புதிய வஸ்திரம் அணிந்தால் சீக்கிரம் அழுக்காகும். ஞாயிறில் துன்பம் நீங்கும். திங்கட்கிழமை தினம் சதாகாலமும் ஜலத்தில் நணைந்தவிதமாயிருக்கும். புதன்கிழமை தினத்தில் புதிய வஸ்திர முடுத்திஞல் சீக்கிரம் கிழியும் செவ்வாய்க் கிழமை தனத்தில் புதிய வஸ்திரமுடுத்திஞல் அந்த வஸ்திரத்தை உடுத்தியிருக்கும் வரையில் மனதைரியமில்லாமல் திகிலடைந்து சஞ்சலமா யிருப்பதற்காகும். வெள்ளிக்கிழமை தினத்தில் புதிய வஸ்திர முடுத்திஞல் இலட்சுமி கடாக்ஷமுண்டாகும். வியாழக்கிழமை தினத்தில் புதிய வஸ்திரமுடுத்திஞல் சகலவித நன்மையுண்டாகும்.

விருந்துண்ண

வெண்பா

வெள்ளிசனி திங்கள் விருந்துண்ணப்புதனுமாம்
கள்ளவி யாழங் கசப்பிக்கும்—கொள்ளகதிர்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தீராப் பகைகாட்டும் செவ்வாய் தனக்குமே
வாராப் பகையும் வரும்.

(இ-ள்.) புதிதாய் ஒருவர் வீட்டில் விருந்து புசிப்பதா யிருந்தால், வெள்ளி-சனி-புதன்-திங்கள் இந்த நான்கு நாட்களில் உத்தமமாகும். வியாழக்கிழமை மனவெறுப் புண்டாகும். ஞாயிற்றுக்கிழமையானல் தீராப் பகை யுண்டாகும். செவ்வாய்க்கிழமையானல் வராத பகை யெல்லாம் வரும்.

ஊர்ப்பிரயாணம் தேசசஞ்சாரம் போவதற்கு

எண்சீரடி விருத்தம்

திங்களொடு சனியிரண்டுங் கிழக்கேயாகா
 தெற்குமுகம் போகவென்றல் வியாழமாகா
தங்குகின்ற விடமறிந்து மேற்கேபோக
 தம்பியடா வெள்ளிரவி ஆகாதாகா
அங்கெனவே வடக்குமுகம் பிரயாணந்தான்
 அப்பனே செவ்வாயும் புதனுமாகா
இங்கிவைகள் சிவனர்கைச் சூலமாகும்
 ஏற்கநாள் போகவென்றல் சூக்ஷங்கேளே.

(இ-ள்.) ஊர்ப்பிரயாணம் தேசசஞ்சார யாத்திரை வாசியாகப் போக நினைப்பவர்கள் சனி திங்கட்கிழமை தினத்தில் கிழக்குபக்கம் போகலாகாது. வியாழக்கிழமை யில் தெற்கே போகலாகாது. வெள்ளிக்கிழமை தினமும், ஞாயிற்றுக்கிழமை தினமும் மேற்கே போகலாகாது, செவ்வாய்க்கிழமை தினமும் புதன்கிழமை தினமும் வடக்கே போகலாகாது ஏனெனில், அந்தக் கிழமையில் அந்தந்த இடத்தில் வாரசூலையா யிருக்கும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வாரசூலே சக்கரம்



அவசியமாய்ப் போகவேண்டுமானுல்

வெண்பா

வடக்குதயம் சென்றதுகால் வாழ்கிழக்கோடுச்சி
அடுக்குநமன் திசைகோடந்தி—கொடகீழ்
நடுராவிற்சென்ருலே நாள்பார்க்கவேண்டாங்காண்
வடுவில்லா தென்றே மகிழ்.

(இ-ள்.) வாரசூலேயா யிருக்கும் திசைமார்க்கமாய் போகக்கூடாதாகையால், அவசியமாய்ப் போகவேண்டியதா யிருந்தால், சூரியோதயத்தில் வடக்கிலும், சூரியன் உச்சியில் வரும் சரியான மத்தியானத்தில் கிழக்கிலும், சூரியன் அஸ்தமயமான சாயங்கால வேளையில் தெற்கிலும், நடுராத்திரியில் மேற்குமாகவும்போனுல் யாதொரு பலன்களுமில்லை. வாரசூலை பிழையாகாது.

CC0. No Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சிஷன் :—சுவாமி! எண்ணெயிட்டு தலைமுழுகும் நாளின் பயனெவை.

எண்ணெய் ஸ்நானத்திற்குரிய நாள்

எண்சீர் விருத்தம்

அருக்கனெண்ணெய் அழகழிக்கும்
அணியாதிங்க ளாகாது
திருக்கருஞ்செவ்வா யுயிர்போக்கும்
செய்யபுதனிற் பொருளுண்டாம்
கருத்தையழிக்கும் கவின்வியாழம்
கைப்பொருள்போக்கும் கனவெள்ளி
பொருத்தமுண்டாம் சனியெண்ணெய்
பேணிமுழுக வல்லவரே.

(இ-ள்.) எண்ணெய் ஸ்நானஞ் செய்வோர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையில் அழகுபோகும். திங்கட்கிழமையில் மனச்சஞ்சல முண்டாகும். செவ்வாய்க்கிழமையில் சரீர அசௌக்கியமும் பயங்கரமுந் தோன்றும். புதன்கிழமையில் திரவிய லாபங்கிடைக்கும். வியாழக்கிழமையில் மனவிசார முண்டாகும். வெள்ளிக்கிழமையில் திரவிய நாசமாகும். சனிக்கிழமையில் சரீராரோக்கியமும் வல்லமையும் பொருந்தி யிருக்கும்.

விருத்தம்

ஜெயாபஜெயம் காண்பதற்கு ராசிலக்னமும்
திசாபுத்திகிரகங்கள் நோக்கங்கண்டு
நயமாகத்தரணியோர் புகழ்ந்துரைக்க
நடப்பதுதானுத்தமமென் றெண்ணவேண்டும்.

குரு :—எனது அன்பார்ந்த சிஷ்யா! நீ வினவியதும் சரியான கேள்விதான். யான் சொல்வதைக் கவனிப்பாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

திசாநாதர்கள் பொருந்திய நக்ஷத்திரங்கள்

கிருத்திகை உத்திரம் உத்திராடம்	இம் மூன்றும் சூரியதிசை வருடம்-9
ரோகணி அஸ்தம் திருவோணம்	இம் மூன்றும் சந்திர திசை வருடம்-10
மிருகசீரிடம் சித்திரை அவிட்டம்	இம் மூன்றும் செவ்வாய் திசை வருடம்-7
திருவாதிரை சுவாதி சதையம்	இம் மூன்றும் இராகு திசை வருடம்-18
புனர்பூசம் விசாகம் பூரட்டாதி	இம் மூன்றும் குருதிசை வருடம்-16
பூசம் அனுஷம் உத்ரட்டாதி	இம் மூன்றும் சனிதிசை வருடம்-19
ஆயிலியம் கேட்டை ரேவதி	இம் மூன்றும் புதன் திசை வருடம்-17
அஸ்வணி மகம் மூலம்	இம் மூன்றும் கேது திசை வருடம்-7
பரணி பூரம் பூராடம்	இம் மூன்றும் சுக்கிர திசை வருடம்-20

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஆகமொத்தம் நக்ஷத்திரங்கள் 27-க்கும் நவக்கிரக திசாவருஷம் 120—ஆக பொருந்தும்.

சீஷன் :—சுவாமி! திசாநாதர்களின் வருஷாதிகளில் புத்திநாதர்களிருக்கும் சகல நிர்ணயத்தையும் அடியே னுக்கு விவரமாய்ச் சொல்வீர்.

குரு சொல்வது

எண்சீரடி யாசிரிய விருத்தம்

அன்பானசிஷ்யாகே ளுந்தனுக்கு
அறிவிப்பேன்திசாபுத்தி விவரந்தன்னை
உன்மனதிலிதைநிறுத்தி கணிதமெல்லாம்
ஊக்கமுடன்கவனித்துப் பலனுரைப்பாய்
ஒன்பதுபேர்திசைகளிலும் புத்திநாதர்
ஒவ்வொருவராகவந்து மனிதருக்கு
நன்மைதுன்மைபலனனைத்துங் கொடுப்பதெல்லாம்
நலமுடனேசொல்லுகிறேன் கவனிப்பாயே.

(இ—ள்.) எனது அன்பார்ந்த சிஷ்யா! நவக்கிரகங் களின் திசைகளில் அந்த ஒன்பது கிரகங்களுமே ஒவ் வொருவராய் புத்திநாதர்களாக வந்து, மனிதர்கட்குக் கால நிர்ணயத்தின்படியே சுபாசுப பலன்களைக் கொடுக் கும் விசேஷத்தைச் சொல்லுகிறேன். உனது மனதை ஓரிடத்திலேயே நிறுத்தி கவனமாய்க் கேட்பாய்.

சூரியதிசை 6-வருஷத்திற்கும் புத்திநாதர்களிருக்கும் காலநிர்ணயமும் பலாபலன்களும்

சூரியதிசையில் சூரியபுத்தி 3-மாதம் 18-நாள்

சூரியன் சுபக்கிரகங்கள் சேர்க்கை அல்லது பார் வையா யிருந்தால் சுபமங்களகரமாகவும், சவுக்கியமாகவு

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மிருக்கும். ஆனால், சனி-ராகு-கேது பார்வை பெற்றா லும், சம்பந்தமா யிருந்தாலும் பலவிதமான துக்கமும் கஷ்டமும் பிதுர்வர்க்கத்தில் சூதகமும் உண்டாகும்.

சூரியதிசையில் சந்திரபுத்தி 6-மாதம்

சந்திரன் கேந்திர திரிகோண வாக்குஸ்தானங்களி லிருந்தால் வித்தியாலாபம், குடும்பத்தில் சந்தோஷம், திரவியலாபம், பெரியோர்கள், பிரபுக்கள் சேர்க்கை, வெற்றியுண்டாகும். ஆனால் சந்திரன் 3,6,8, 12-மிடங் களிலிருந்தால் வறுமையும் கஷ்டமுமுண்டாகும்.

சூரியதிசையில் செவ்வாய்புத்தி 4-மாதம் 6-நாள்

செவ்வாய் கேந்திராதிபதியாய் சுபக்கிரகங்கள் பார்வை பெற்றாலும், சுபக்கிரகங்கள் சம்பந்தமானாலும் காணி, பூமி, வீடு வாங்குதல், திரவியலாபம், கீர்த்தியும் உண்டாகும். ஆனால், சனி, ராகு கேதுவுடன் சேர்ந்து செவ்வாய் கோண திரிகோண விரய ஸ்தானத்திலிருந் தால் பலவிதமான நஷ்டமும் சஞ்சலமும், கலகமும், கவலையும் கஷ்டமும் உண்டாகும்.

சூரியதிசையில் இராகுபுத்தி 10-மாதம் 28-நாள்

இராகுபகவான் கேந்திராதிபதியாய் மேஷம், ரிஷ பம், கடகம், கன்னி, மகர ராசியிலிருந்தால் திரவியலாபங் கிடைக்கும். விரையஸ்தானத்திலிருந்தால் வறுமையும் துன்பமும் உண்டாகும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சூரியதிசையில் குருபுத்தி

6-மாதம் 18-நாள்

குருபகவான் இலக்கினம் வாக்குஸ்தானம், கோண திரிகோண லாபஸ்தானத்திலிருந்தால், வித்தியாலாபம், புத்திரலாபம், வியாபார விர்த்தி, திரவியலாபம், பந்து கூட்டமும் உண்டாகும். ஆனால் குருபகவான் 3, 6, 8, 12-ம் ஸ்தானத்திலிருந்து, சனி, ராகு, கேது, பார்வை பெற்றாலும், சம்பந்தமானாலும் பலவித கலகமும், வியாதியும் வறுமையும், கஷ்டமும் உண்டாகும்.

சூரியதிசையில் சனிபுத்தி

11-மாதம் 12-நாள்

சனிபகவான் கேந்திராதிபதியாய், நட்பு, ஆட்சி உச்ச ஸ்தானத்திலிருந்து சுபக்கிரகங்கள் பார்வை பெற்றிருந்தால் தீரமும், வல்லமையும், உத்தியோக விர்த்தியும், திரவிய லாபமும் கிடைக்கும். ஆனால், சனிபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்தால் பலவிதமான கஷ்டமும் கவலையும் வறுமையும் உண்டாகும்.

சூரியதிசையில் புதன்புத்தி

10-மாதம் 6-நாள்

புதன் இலக்கின வாக்குஸ்தான திரிகோண ஸ்தானத்திலிருந்தால் திரவியலாபம், வித்தியாலாபம், கீர்த்தியும் உண்டாகும். ஆனால், புதன் 3, 6, 8, 12-இராசியிலிருந்தால் துக்கமும், சோம்பலும், கஷ்டமும், கலகமும் வறுமையும் உண்டாகும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சூரியதிசையில் கேதுபுத்தி
4-மாதம் 6-நாள்

கேதுபகவான் சுபக்ஷேத்திரத்திலிருந்து குரு சுக்கிரன் பார்வை பெற்ருல் கல்வியும், ஞானமும், கீர்த்தியுமுண்டாகும். ஆனுல், சூரியன், சனி, செவ்வாய் பார்வை பெற்ருல் பலவிதமான கஷ்டமும், வறுமையும், கவலையும் நேரிட்டு தேசசஞ்சாரியா யலையச் செய்யும்.

சூரியதிசையில் சுக்கிரபுத்தி 1-வருஷம்

சுக்கிரன் கேந்திர திரிகோண, இலக்கினம், வாக்குஸ்தானத்திலிருந்தால், கல்வியும், வித்தையும், புத்தியுமுண்டாகும். சுக்கிரன், 3-6-8-12-ம் ஸ்தானத்திலிருந்து சனி, செவ்வாய், ராகு, கேது பார்வை பெற்ருல் பலவிதமான வியாதியினுல் மெலிந்து கஷ்டப்படுவார்கள்.

சீஷன் :—குருநாதா ! தாங்கள் புகன்றவை யனைத்தும் கவனித்துக்கொண்டேன். ஆனுல் சந்திர திசையில் வரும் ஒவ்வொரு புத்திநாதரின் பலன்களையும் அடியேனுக்குச் சொல்லுவீர் சுவாமி.

குரு:—அப்படியே சொல்லுகின்றேன் கவனிப்பாய்.

சந்திரதிசையில் சந்திரன் புத்தி 10-மாதம்

சந்திரன் இலக்கினம் வாக்குஸ்தானம் கேந்திர திரிகோணத்திலிருந்தால் விசேஷ நற்பலனும், வித்யாபிவிர்த்தியும் உத்தியோக விர்த்தியும், திரவிய லாபமும் தருவார். சந்திரன் மறைவுஸ்தானத்திலிருந்து சனி, ராகு, கேது பார்வை பெற்றும், சம்பந்தமானுலும், சீதளம், ஜுரம், மதிமயக்கம், வறுமை, பிணியும் உண்டாகும்,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சந்திரதிசையில் அங்காரகபுத்தி 7-மாதம்

அங்காரகன் ஆட்சி உச்ச நட்பு ஸ்தானங்களிலிருந்து புதன், குரு, சுக்கிரன், பார்வை பெற்றால் சுபகரமான நல்ல பலன்களும், சரீர சவுக்கியமும் பந்துமித்திரர் சகாயமும் உண்டாகும். காணி பூமி லாபமும் கிடைக்கும். ஆனால், அங்காரகன் பகை நீசஸ்தானத்திலிருந்து சனி, ராகு, கேது பார்வை பெற்றால் உஷ்ண வியாதியும், கலகமும், சண்டை சச்சரவும் நஷ்டமும் உண்டாகும்.

சந்திரதிசையில் இராகுபுத்தி 1-வருஷம் 6-மாதம்

இராகு தனக்குரிய சுபஸ்தானத்திலிருந்து குரு, சுக்கிரன் புதன், சந்திரன் பார்வை பெற்றால் பலவித தன்மையும் திரவியலாபமும்கிடைக்கும். ஆனால், இராகு, சனி, செவ்வாய் பார்வையானல் பலவிதமான கலகமும் கவலையும் உண்டாகும்.

சந்திரதிசையில் குருபுத்தி 1-வருஷம் 4-மாதம்

குருபகவான் சந்திரனுக்கு கேந்திர திரிகோண ஸ்தானத்திலிருந்தால் புத்ரமித்ரகளத்திர லாபமும், வியாபார விருத்தியும், திரவியலாபமும் கிடைக்கும். ஆனால், குருபகவான் சந்திரனுக்கு 6-8-12-ம் ஸ்தானத்தி லிருந்தால பலவிதமான கவலையும் உண்டாகும்.

சந்திரதிசையில் சனிபுத்தி 1-வருஷம் 7-மாதம்

சனி பகவான் கேந்திர ஸ்தானங்களி லிருந்தால் கீர்த்தியும், பெருமையும், விவாபாரவிர்த்தியும், உத்தியோக லாபமும், திரவிய லாபமும் கிடைக்கும், ஆனால்,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சந்திரனுக்கும் மறைவு ஸ்தானத்தி லிருந்தால் பித்த வியாதியும் கஷ்டமும் கவலையும் உண்டாகும்.

சந்திரதிசையில் புதன்புத்தி
1-வருஷம் 5-மாதம்

புதபகவான் திசாநாதனுகிய சந்திரனுக்கு கேந்திர திரிகோண ஸ்தானங்களி லிருந்தால் சரீர சவுக்கியமும், மனேற்சாகமும், சங்கீத பிரியமும், ஸ்திரீ சேர்க்கையும், திரவிய லாபமும் கிடைக்கும். ஆனுல் புதன் பகை நீச ஸ்தானத்திலிருந்து சனி, ராகு, கேது பார்வையானுல் மன சஞ்சலமும், திகிலும், கவலையும், வறுமையும், கஷ்டமும் உண்டாகும்.

சந்திரதிசையில் கேதுபுத்தி 7-மாதம்

கேதுபகவான் சந்திரனுக்கு 3-6-11-ம் ஸ்தானத்திலிருந்து குரு, சுக்கிரன் பார்வையானுல் மாத்திரம் கவலையில்லாமல் ஞானமும், கீர்த்தியும், வித்யாலாபமும் பகவத் பக்தியானந்தமும் பொருந்தி யிருக்கும்.

சந்திரதிசையில் சுக்கிரபுத்தி
1 -வருஷம் 8-மாதம்

சுக்கிரன் ஆட்சி உச்ச நட்பு ஸ்தானங்களிலிருந்து திசாநாதனுகிய சந்திரனுக்கு கேந்திர திரிகோண ஸ்தானங்களிலிருந்தால் சுக சவுக்கியமும், திரவிய லாபமும் கிடைக்கும். சுக்கிரன் திசாநாதனுகிய சந்திரனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தாலும், லக்கின ஜீவன பாக்கிய குடும்பஸ்தான ராசியில் அஸ்தமனமாயிருந்தாலும், தீராக் கவலையும், சஞ்சலமும் வறுமையும் உண்டாகும்.

சந்திரதிசையில் சூரியபுத்தி 6-மாதம்

சூரியன் திசாநாதனுகிய சந்திரனுக்கு கேந்திர கோண திரிகோண ஸ்தானத்திலிருந்து சிம்மராசி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

யில் ஆட்சிபெற்றிருந்தால் பலவிதமான நன்மையும் திரவியலாபமும் பிரபுக்கள் சகாயமும் உத்தியோக விர்த்தியும் வியாபார லாபமும் கிடைக்கும். ஆனால் திசாநாதனுகிய சந்திரனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்து பகை நீசஸ்தானத்திலிருந்தால், வறுமையும், கவலையும் கஷ்டமும் பொருந்தி யிருக்கும்.

சீஷன் :—குருநாதா ! தாங்கள் உபதேசித்தவை யனைத்தும் கவனித்தேன். இனி செவ்வாய் திசையில் நடக்கும் ஒவ்வொரு புத்தி நாதர்களின் பலன்களையும் விவரமாய்த் தெரிவிப்பீர்.

குரு :—அவ்விதமே தெரிவிக்கிறேன் கவனிப்பாய்.

செவ்வாய்திசையில் செவ்வாய்புத்தி
4-மாதம் 27-நாள்

செவ்வாய் பகவான் ஆட்சி, உச்ச, நட்பு ஸ்தானங்களிலிருந்து இலக்கினத்திற்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால் பூமி, வீடு, நிலம் முதலான லாபத்துடன் கீர்த்தியும், புகழு முண்டாகும். ஆனால், செவ்வாய் பகை நீசஸ்தானத்திலிருந்து ஜனன லக்கினத்திற்கு மறைவு ஸ்தானத்திலும், சனி ராகு, கேது பார்வை பெற்று மிருந்தால் பலவிதமான கலகமும், இரத்தகாயம், சண்டை சச்சரவு முதலான கஷ்டங்களு முண்டாகும்.

செவ்வாய்திசையில் இராகுபுத்தி
11-வருஷம் 18-நாள்

இராகுபகவான் திசைநாதனுகிய செவ்வாய் பகவானுக்கு கேந்திரஸ்தானங்களிலிருந்து ஆச்சி உச்சமா

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

யிருந்தால் மனோற்சாகம் தைரியம், பொருள் சேர்க்கை முதலான சாமர்த்தியமெல்லாம் பொருந்தி யிருக்கும் மறைவு ஸ்தானமாகி ஜனன லக்கினத்திற்கு விரயஸ்தானத்திலிருந்து சனியின் பார்வைபெற்ருல் வறுமை, பிணி சத்துருபயம், பயங்கரமான கஷ்டங்களெல்லாம் தோன்றும்.

செவ்வாய்திசையில் குருபுத்தி

11-மாதம் 6-நாள்

குருபகவான் ஜனன லக்கினத்திற்கு கேந்திர திரிகோண ஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய செவ்வாய் பகவான் பார்வை பெற்றிருந்தால் பகவத்பக்தி தீர்த்த யாத்திரை, திருவிழா, காட்சி, லாபம், பெரியோர் சகவாசம் முதலான சகல பலனும் கிடைக்கும். ஆனுல், பகை நீசஸ்தானத்திலிருந்தால் மனோ விசாரம், மனோ துக்கம் கஷ்டம், கவலையும் பொருந்தி யிருக்கும்.

செவ்வாய்திசையில் சனிபுத்தி

1-வருஷம் 1-மாதம் 9-நாள்

சனிபகவான் திசநாதனுகிய செவ்வாய் பகவானுக்கு கேந்திரஸ்தானத்திலும் நட்பாட்சி உச்சஸ்தானத்திலு மிருந்தாலும் கீர்த்தி, மனோற்சாகம் தைரியம், திரவிய லாபம் பொருந்தயிருக்கும். ஆனுல் சனிபகவான் இலக்கினத்திற்கு மறைவு ஸ்தானத்தி லிருந்தாலும், திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்தி லிருந்தாலும், பலவிதமான கலகமும் கலவரமும் வறுமையும் பித்த உஷ்ணமும் ஜுர வியாதியும் பொருந்திய கஷ்டமெல்லாந் தோன்றும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

செவ்வாய்திசையில் புதன்புத்தி

14-மாதம் 27-நாள்

புதபகவான் ஜனன லக்கினத்தின் கோண திரிகோண ஸ்தானத்தில் ஆக்ஷி, உச்சம், நட்புபெற்றும் திசாநாதனுகிய செவ்வாய் பகவானுக்கு கேந்திராதிபதியாயிருந்தால் வித்யாபிவிருத்தி, வியாபார லாபம், புத்திர பாக்கியம், பந்துக்கூட்டம், திரவிய லாபம், முதலான நல்ல பலன்களுண்டாகும். திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் புத்தி மயக்கம், சித்தப்ரமை, வறுமை முதலான பிணி பயங்கரமான கஷ்டமாயிருக்கும்.

செவ்வாய்திசையில் கேதுபுத்தி

4-மாதம் 27-நாள்

கேதுபகவான் ஜனனலக்கினத்திற்கு மறைவு ஸ்தானத்திலிருந்த சனி பார்வைபெற்று திசாநாதனுகிய செவ்வாய் பகவானுக்கு சத்துரு ஸ்தானத்திலிருந்தால் இரத்த காயம், அக்கினி, விஷம் கலகங்களால் கண்டங்களும் நஷ்டமுந் தோன்றும். திசாநாதனுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்து ஜனன லக்கினத்திற்கு 3-6-11-ம் ஸ்தானத்திலிருந்தால், சத்துருஜெயம், பகவத்பக்தி திரவிய லாபமும் கிடைக்கும்.

செவ்வாய்திசையில் சுக்கிரபுத்தி

1-வருஷம் 2-மாதம்

சுக்கிரபகவான் ஜனனலக்கினம் வாக்குசுகஸ்தானம் கோணம் திரிகோண ஸ்தானத்தில் நட்பு, ஆட்சி, உச்ச ஸ்தானத்திலிருந்து, திச நாதனுக்கு கேந்திரஸ்தானத்திலிருந்தால், சத்துருஜெயம், சிநேகிதர் சேர்க்கை, பந்து கூட்டம் களத்திரலாபம் கிடைக்கும் ஆனல், திசா

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நாதனுகிய செவ்வாய் பகவானுக்கு சுக்கிரபகவான் மறைவு ஸ்தானத்திலிருந்தால் பலவித கஷ்டமும் வறுமையும் உண்டாகும்.

செவ்வாய்திசையில் சூரியபுத்தி

4-மாதம் 6-நாள்

சூரியபகவான் ஜனன லக்கினத்திற்கு கேந்திரஸ்தானம் நட்பு, ஆட்சி, உச்ச ஸ்தானங்களிலிருந்து திசாநாதனுகிய செவ்வாய் பகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால், வியாபாரவிருத்தி, உத்தமர்சேர்க்கை உத்தியோக விருத்தி, திரவியலாபம், தானதர்ம பரோபகாரஞ் செய்யும் நன்மையெல்லாம் கிடைக்கும். ஆனுல் சூரியன் திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்து, சனி, இராகு, கேது பார்வை பெற்று பகை நீசஸ்தானத்திலிருந்தால் வறுமையும் கவலையும், உஷ்ண வியாதியும், கலவரமும் கஷ்டமுந் தோன்றும்.

செவ்வாய்திசையில் சந்திரபுத்தி 7-மாதம்

சந்திரபகவான் ஜனன லக்கினத்தின் லக்கினம் கேந்திரம், கோணம், திரிகோண ஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய செவ்வாய் பகவானுக்கு கேந்திர ஸ்தானங்களிருந்தால் ஆபரணுதிகளும் வஸ்திர சம்பத்தும், திரவிய லாபமும், உத்தியோகவிர்த்தியும், வியாபார லாபமும் கிடைக்கும் ஆனுல் சந்திரபகவான் திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால், கஷ்டமும் கவலையும், பலவிதமான நஷ்டமும் உண்டாகும்.

சீஷன் :—குருநாதா! இராகுதிசை 18-வருஷம் வரையிலும் வரும் புத்திநாதர்களின் பலன்களையும் விபரமாய் புகல்வீர்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு:—சிஷ்யா! உனது விருப்பத்தின்படியேசொல்லுகிறேன் கவனிப்பாய்.

இராகுதிசையில் இராகுபுத்தி
2-வருஷம் 8-மாதம் 12-நாள்

இராகு பகவான் ஜனன லக்கினத்திற்கு கேந்திர ஸ்தானத்திலிருந்து தனது சுயபுத்தியில் பயங்ரகர மில்லாமல், கோட்சாரப்பலனை அனுசரித்து பொதுவாய் சுபத்தில் நடக்கும். ஆனால் இலக்கினத்திற்கு 6-8-12-ம்வீட்டிலிருந்தால், சுயபுத்தி முழுமைக்கும் கஷ்டமும் கவலையும், பந்துமித்திரர் கலகமும், மனைவியின்மீது வெறுப்பும், பூமி வீடு கைவிட்டுப் போகுதல் முதலான கவலையும், தேசாந்திரியாய்த் திரியும் கஷ்டமும் பொருந்தி யிருக்கும்.

இராகுதிசையில் குருபுத்தி
2-வருஷம் 4-மாதம் 24-நாள்

குருபகவான் ஜனனலக்ன குடும்பஸ்நான கோண திரிகோண நட்பு, ஆக்ஷி, உச்சஸ்தானங்களிலிருந்து திசநாதனுக்கு இராகு பகவானுக்கு கேந்திரஸ்தானத்திலிருந்தால் சரீராரோக்கியம், ஸ்திரீ சேர்க்கை, சுகசவுக்கியம், கீர்த்தி, திரவியலாபமும் கிடைக்கும் ஆனல் குருபகவான் 8, 6, 3, 12-வது ஸ்தானத்திலிருந்து திசாநாதனும் தானிருக்கும் ஸ்நானம் பகை நீச்சஸ்தானமாகவும் இருந்தால் மனபயங்கரம், உத்தியோக ஸ்தானத்தில் கலகம், வியாபாரத்தில் நஷ்டமும், பகையும் பத்துமித்திரர் மனவெறுப்பும், யாத்திரை வாசமும் தரித்திர ஹிம்சையும் பலவிதமான கஷ்ட நஷ்டமும் பொருந்தி யிருக்கும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இராகுதிசையில் சனிபுத்தி

2-வருஷம் 10-மாதம் 5-நாள்

சனிபகவான் ஜனனலக்கினத்தின் 3-6-11-ம் ஸ்தானத்தில் நட்பு, ஆக்ஷி, உச்சஸ்தானுதிபதியா யிருந்து திசாநாதனுகிய இராகு பகவானும் கேத்திரஸ்தானத்தி லிருந்தால் மன தைரியமும், நல்லோர் சேர்க்கையும், இரும்பு, கறுப்பு தான்யாதிகள் வியாபாரமும், திரவிய லாபமும், வீரத்தன்மையான உத்தியோகமும், சாமர்த்தியமும் பொருந்தியிருக்கும், ஆனுல், சனி பகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கும் மறைவு ஸ்தானந்திலிருந்தால், பலவிதமான துன்பமும், துயரமும், வறுமையும், நஷ்டமும், கவலையும் தோன்றும்.

இராகுதிசையில் புதன்புத்தி

2-வருஷம் 6-மாதம் 18-நாள்

புதபகவான் சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசமாயிருந்து திசாநாதனுகிய இராகு பகவானுடன் சம்பந்தமானுலும் பார்வை பெற்ருயினு மிருந்தால் பலவிதமான கலகமும், கஷ்டமும், கவலையும், பகையும் வியாதியும் மனபயங்கரமுமா யிருக்கும். ஆனுல் புதபகவான் ஆக்ஷி, உச்ச, நட்பு ஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு கேந்திர திரிகோண ஸ்தானத்திலிருந்தால் வியாபார விருத்தியும், உத்தியோக மேன்மையும், திரவிய லாபமும் புத்திர சம்பத்தும், புகழும், கீர்த்தியும், பெருமையும் உண்டாகும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இராகுதிசையில் கேதுபுத்தி

1-வருஷம் 18-நாள்

கேதுபகவான் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகர ராசியிலிருந்து புதன், குரு, சுக்கிரன் பார்வை பெற்ருல் வித்யாலாபம், சாஸ்திர விசாரணை, மகான்கள் தரிசனம், வியாபார விருத்தி, திரவிய லாபம், உத்தியோக சம்பத்து முதலானவை யனைத்தும் கிடைக்கும். ஆனுல், கேதுபகவான் உதய லக்கினத்திற்கு விரய ஸ்தானத்திலிருந்து சூரியனும் சந்திரனும் சம்பந்தமானுலும் பார்வைபெற்ருலும் பலவிதமான துன்பமும் தொல்லையும் கவலையும் கஷ்டநஷ்டங்களுமுண்டாகும்.

இராகுதிசையில் சுக்கிரபுத்தி

3-வருடம்

சுக்கிரபகவான் லக்கினம், வாக்குஸ்தானம், கேந்திர திரிகோண லாப ஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய இராகு பகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால் சுக சவுக்கியம், ஸ்திரீகள் சேர்க்கை, வியாபாரவிருத்தி, உத்தமர் சேர்க்கை, உத்தியோக சம்பத்து, திரவிய லாபம் முதலான நன்மையுண்டாகும். ஆனுல், சுக்கிர பகவான் ஜனன லக்கினத்திற்கு 6, 8, 12-மிடத்திலும் கன்னியா ராசியிலுமிருந்து திசாநாதனுக்கு ரோகஸ்தானம், விரய ஸ்தானத்திலிருந்தால் பலவிதமாகிய தோஷத்தினுல் வியாதியும் கஷ்டமும் கவலையும் பொருந்தியிருக்கும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இராகுதிசையில் சூரியபுத்தி

10-மாதம் 24-நாள்

சூரியபகவான் ரோகஸ்நானம், ஆயுள் ஸ்நானம், விரயஸ்தானம், துலாம், மகரம், கும்பராசியிலிருந்து திசா நாதனுக்கு இராகுபகவான் பார்வை பெற்ருலும், சம்பந்தமா யிருந்தாலும் பலவிதமான துன்பமும் துயரமும், சண்டை சச்சரவும், தரித்திர ஹிம்சையும், கஷ்டமும் கவலையுமாய் அழுகையும் துக்கமும் தேச சஞ்சாரமும், விஷயமும், அக்கினிபயமுமா யிருக்கும். ஆனுல் சூரிய பகவான் நட்பு ஆட்சி உச்ச ஸ்தானத்திலிருந்து குரு, புதன் சுக்கிரன் பார்வை பெற்ருலும், சம்பந்தமா யிருந்தாலும், திசா நாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்நாலும் தானிருத்த ஸ்நானுதிபத்தியத்திற் கிசைத்த சுப பலன்களாகிய பந்துமித்திர சேர்கிகை வியாபாரவிருத்தி திரவிய லாபம், உத்தியோக சம்பத்து, சரீர சவுக்கியம் முதலான நன்மையே உண்டாகும்.

இராகுதிசையில் சந்திரபுத்தி

1-வருஷம் 6-மாதம்

சந்திரபகவான் லக்ஷின ருடும்பஸ்தான கேந்திர திரிகோண இலாபஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய இராகு பகவானுக்கு மறைவு ஸ்தானத்தி லிருந்துக் கொண்டு, குரு, புதன், சுக்கிரன் பாாவை பெற்று நட்பாட்சி உச்ச ஸ்தானத்தி லிருந்தால் வித்தியா லாபம், வியாபார லாபம், திரவிய லாபம், பந்துஜன கூட்டம், ஸ்திரீகள் சேர்க்கை, மனேற்சாகம், புத்திரசம்பத்து முத

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

லான நற்பலன்கள் உண்டாகும். ஆனால், சந்திரபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனாகிய ராஜ சம்பந்தமும் பார்வை பெற்றாலும் சிறை, கலகம், சத்துரு சேர்க்கை, கைப்பொருள் நஷ்டம், வியாபாரநஷ்டம், உத்தியோக விரோதம் முதலான பலவிதமாகிய கஷ்டத்தை யுண்டாக்கும்.

இராகுதிசையில் செவ்வாய்புத்தி
1-வருஷம் 18-நாள்

செவ்வாய்பகவான் விருச்சிகம், மகரம், மேஷராசியிலிருந்து உதய லக்கினத்திற்கு கேந்திர லாபஸ்தானத்திலிருந்து திசாநாதனாகிய இராகு பகவானுக்கும் கேந்திரஸ்தானத்திலிருந்தால் பூமிலாபம், சத்துருஜெபம், வியாபார விருத்தி, திரவிய லாபமும், உத்தியோக சம்பத்து முதலாகிய நன்மையெல்லாம் கிடைக்கும். ஆனால், செவ்வாய் பகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசநாதனாகிய இராகு சம்பந்தமானாலும் பார்வை பெற்றாலும் பலவிதமான கஷ்டநஷ்டங்களும் சத்துரு விரோத கலகங்களும், வியாதி, தரித்திர இம்சைகளும், அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமா யிருக்கும்.

சீஷன்:—சுவாமி குருநாதரே! தாங்கள் எனக்கு உபதேசித்தவை யனைத்தும் கவனித்துணர்ந்தேன். ஆனால் தேவகுருவாகிய வியாழ பகவான் திசையில் நடக்கும் ஒவ்வொரு புத்திநாதர்களின் சுபாசுப பலன்களையும் விவரமாய்ப் புகல்வீர் சுவாமி.

குரு:—அவ்விதமே சொல்லிக்கொண்டு வருகிறேன் கவனமாய்க் கேட்பாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குருதிசையில் குருபுத்தி

2-வருஷம் 1-மாதம் 18-நாள்

குருபகவான் நட்பாக்ஷி உச்சஸ்தான இலக்கின குடும்பகோண திரிகோண லாபஸ்தானுதிபத்தியம் பெற்றிருந்தால் வித்தியாலாபம், புத்தி சாதுர்யம், பந்துமித்திரர் நட்பு, உத்தம சிநேகிதர் சேர்க்கை, உத்தியோக விர்த்தி, திரவியலாபம், வியாபார மேன்மை முதலான நன்மைகளும், சரீராரோக்கியம், பகவத் பக்தி விரதானுஷ்டான சுகவாழ்வு பெருகும். குருபகவான் ஜனன லக்கினத்திற்கு மறைவுபெற்று பகை நீசஸ்தானத்திலிருந்து சனி, ராகு, கேது சம்பந்தமானுலும் பார்வை பெற்ருலும், கைப்பொருள் நஷ்டம், வியாபார நஷ்டம், உத்தியோக ஸ்தானத்தில் கலகம், சித்தப்பிரமை மனவிசாரம், தேசசஞ்சாரம், அன்னவஸ்திர பஞ்சம் வறுமை முதலான துக்கமும் துயரமுமா யிருக்கும்.

குருதிசையில் சனிபுத்தி

2-வருடம் 6-மாதம் 12-நாள்

சனிபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து சூரியன் சம்பந்த பார்வையாய் திசாநாதனுகிய குருபகவானுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் கைப்பொருள் நஷ்டம்' வியாதி, மனசஞ்சலம், திருடர்களாலும் வஞ்சகர்களாலும், திரவிய நஷ்டம், மனசஞ்சலம், திகில், சூதகம், வியாபார நஷ்டம், உத்தியோக ஸ்தானத்தில் கலகம், அன்னவஸ்திர பஞ்சம், கடன்காரர் தொந்தரை முதலான கஷ்டமெல்லாம் விலகும். ஆனுல், சனிபகவான், கும்பம்,மகரம்,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

துலா ராசியிலிருந்து புதன் சுக்கிரன் பார்வைபெற்றும் திசாநாதனுக்கு கேந்திர திரிகோண ஸ்தானத்திலிருந்தால் மனதைரியமும் வியாபார விருத்தியும் உத்தியோக சம்பத்தும் திரவிய லாபமும் கிடைக்கும்.

குருதிசையில் புதன்புத்தி
2-வருஷம் 3-மாதம் 6-நாள்

புதபகவான் ஜனனலக்கின வாக்குஸ்தான கோண திரிகோண லாபஸ்தானத்தில் ஆட்சி, உச்ச, நட்பு ஸ்தானாதிபதியாயிருந்து திசாநாதனுகிய குரு பகவானுக்கு கோண திரிகோண ஸ்தானத்தி லிருந்தால் வித்தை, விவேகம், புத்தி சாதுரியம், பந்து மித்திரர் சேர்க்கை, மனையாள் சுகானந்தம், புத்திரசம்பத்து,வியாபாரலாபம், உத்தியோகவிர்த்தி, திரவியலாபமும் கிடைக்கும். ஆனுல் புதபகவான் இலக்கினத்திற்கு ஆறெட்டு பனிரெண்டாமிடத் ததிபதியாய் பகை ஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் மறதி, சோம்பல், விசேஷநித்திரை, வியாபார நஷ்டம், உத்தியோக ஸ்தான கலகம், திரவிய நஷ்டம், பந்து ஜனங்களின் பகைமுதலான நஷ்டங்களெல்லாம் விளைவிக்கும்.

குருதிசையில் கேதுபுததி
11-மாதம் 6-நாள்

கேதுபகவான் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம் மகர ராசியிலிருந்து குரு சுக்கிரன் பார்வை

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பெற்று ஜனன லக்கினத்திற்கு ஆருமிடத்திலிருந்தாலு
கேந்திரஸ்தானத்திலிருந்தாலும் திசாநாதனுகிய குருப
வானுக்கு திரிகோண ஸ்தானத்திலிருந்தால் தெய்வபக்
மகான்கள் தரிசனம் தேவாலய பூஜை விரதானுஷ்ட
னம் வித்தியாலாபம் திரவியலாபம் முதலான நன்மை
யனைத்துங் கிடைக்கும். ஆனுல் கேதுபகவான் சன
செவ்வாய் பார்வைபெற்று திசாநாதனுக்கு மறைவு ஸ்த
னத்திலிருந்தால் பலவிதமான மனச்சஞ்சலம், கை
பொருள் நஷ்டம், திருடர்பயம், வறுமை பிணி முதலா
கஷ்டமும் கவலையுமா யிருக்கும்.

குருதிசையில் சுக்கிரபுத்தி

2-வருடம் 8-மாதம்

சுக்கிரபகவான் ஜனனலக்ன சுகபஞ்சம பாக்கி
இலாபஸ்தானத்தில் நட்பாட்சி உச்சமா யிருந்தும் திச
நாதனுகிய குருபகவானுக்குக் கோண திரிகோண ஸ்த
னத்திலிருந்தால் ஞானம், கல்வி, வித்யாபிவிருத்தி, உ
தமர் சேர்க்கை, மனைவி மைந்தர் சுகவாழ்வு, கீர்த்
வியாபார லாபம், பொன் பொருள் பூஷணுதிகளனைத்து
பொருந்தி இருக்கும். ஆனுல் சுக்கிரபகவான் கஷ்டம் நவ
டம் விரயஸ்தானத்தில் பகைநீசமாயிருந்து சனி, இரா
கேது சம்பந்தமும் திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்
லும் இருந்தால் மந்தபுத்தி, ஞாபகக்குறைவு, பந்
மித்திரர் பகை, சண்டை சச்சரவு, வழக்கு வியசஜ்யம்
திரவிய நஷ்டம் முதலான கஷ்டமெல்லாம் வி
விக்கும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குருதிசையில் சூரியபுத்தி

9-மாதம் 18-நாள்

சூரியபகவான் நட்பாட்சி உச்சனுயிருந்து கேந்திர ஸ்தானுதிபதியாய் திசாநாதனுக்கு கோணத் திரிகோண ஸ்தானங்களி லிருந்தால், வித்தியாபிவிருத்தி, கீர்த்தி ஞான சக்தி, வீரத்தன்மை, வியாபாரவிருத்தி, உத்தி யோகமேன்மை, சம்பத்தும் திரவியலாபமுங் கிடைக்கும். ஆனால் சூரியபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து சனி ராகு, கேது பார்வைபெற்று திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் மனஸ்தாபமும் நஷ்டமும், கவலை யும், துன்பமும் துயரமும் அலைச்சல்பட் டலையச்செய்யும். ஆனால், சூரியன் சத்துரு ஸ்தானத்திலிருந்தால் எத்த கைய துன்பத்திற்கும அஞ்சாமல் தைரியமாய் விளங்கும் படியாகச் செய்யும்.

குருதிசையில் சந்திரபுத்தி

1-வருஷக் 4-மாதம்

சந்திரபகவான் ஜனனலக்ன குடும்பஸ்தான கேந் திர கோணுதிபதியாய் திசாநாதனுக்கு நட்பாட்சி உச்சனு யிருந்தால் வித்யாபிவிருத்தி, குரு உபதேசம், குடும்ப சவு ரட்சணை, அதிகாரம், வியாபார விருத்தி, உத்தியோக சம்பத்து திரவியலாபம், சுகசவுக்கியமெல்லாம் பொருந்தி யிருக்கும். சந்திரபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து குரு பகவானுக் ஆறெட்டு பனிரெண்டா மிடத்திலிருந் தால் பாலாரிஷ்டம், கண்டாதிகண்டம், கலகம்,வறுமை, துன்பம், வழக்கு, வியாஜ்யம் முதலான கஷ்டமெல்லாந் தோன்றும்,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குருதிசையில் செவ்வாய்புத்தி

11-மாதம் 6-நாள்

செவ்வாய்பகவான் ஜனனலக்கினத்திற்கு அஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசஸ்தானத்திலிருந்து திசா நாதனுகிய குரு பகவானுக்கு மறைவு ஸ்தானத்திலிருந் தால் பலவிதமான அலைச்சலும், உஷ்ணவியாதி, சொறி சிரங்கு, சீதபேதி முதலான வியாதிகளும் பொருந்தி பல ஹீனப் படுத்துவதுடன் சத்துரு பயம், வழக்கு வியாஜ் ஜியத்தினுல் கைப்பொருள் நஷ்டம், மனை, வீடு கைவிட் டுப்போவது முதலான கஷ்டத்தை விளைவிக்கும். ஆனுல் செவ்வாய் பகவான் ஜனன லக்கினத்திற்கு கேந்திராதி பதியாய் நட்பாட்சி உச்சனுயிருந்து திசாநாதனுக்குக் கேந்திராதிபதியா யிருந்தால், வித்யாபிவிருத்தி, ஞாபக சக்தி, பகவத்பக்தி, கல்வி, ஞானம், அறிவு, ஆலோசனை, வியாபார லாபம், வீடு வாங்குதல், திரவிய லாபம், சரீரா ரோக்கியம், மனைவிமைந்தர் சுகவாழ்வு, கீர்த்தி, பெருந் தன்மையான புத்தி சாதுர்ய மனைத்தும் பொருந்தி யிருக்கும்.

குருதிசையில் இராகுபுத்தி

2-வருஷம் 4-மாதம் 24-நாள்

இராகுபகவான் மேஷம், ரிஷபம், கடகம், விருச்சிகம், மகரராசியிலிருந்து திசாநாதனுகிய குருபகவானுக்கு கேந் திரஸ்தானத்திலிருந்தால் கல்வி, மனவுற்சாகம், அறிவு, ஆலோசனை விளக்கம், ஞாபகசக்தி, திரவியலாபம், வியா பார லாபம், உத்தியோக சம்பத்து, பெரியோர் நேசம், பந்துஜனக் கூட்டம், மனைவி மைந்தர் சுகவாழ்வு, சரீ

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சவுக்கிய மனோற்சாக மனைத்தும் பொருந்தியிருக்கும். ஆனால் இராகுபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்தால் பலவித கஷ்டநஷ்டமும் கவலையும் அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமும் பயங்கரமும் சத்துரு விரோதமும் பொருந்தி யிருக்கும்.

சீஷன்:—குரு சுவாமி! தாங்கள் அடியேன்மீது அன்புகூர்ந்து சனிதிசையில் நடக்கும் ஒவ்வொரு புத்தி நாதர்களின் பலன்களையும் விபரமாய்த் தெரிவிப்பீர்.

குரு:—சரி, அவ்விதமே தெரிவிக்கிறேன் கவனிப்பாய்.

சனிதிசையில் சனிபுத்தி

3-வருஷம் 3-நாள்

சனிபகவான் இலக்கினத்திற்கு 3-6-11-ம் இடத்தில் நட்பாட்சி உச்சனாயிருந்து குரு சுக்கிரன் புதன் பார்வையானால் தைரியம், உற்சாகம், திரவியலாபம், வியாபார விருத்தி, உத்தியோக சம்பத்து, அரசாங்கத்தார் சகாயம் பந்துமித்திரர் சகாயம், மனைவி மைந்தர் சுகசவுக்கிய வாழ்வானந்தமா யிருப்பதற்காகும். ஆனால் சனிபகவான் பகை நீச ஸ்தானத்திலிருந்து கோண திரிகோணாதிபதியாயிருந்தால் பலவிதமான கஷ்டமும் கவலையுமா யிருக்கும்.

சனிதிசையில் புதன்புத்தி

2-வருஷம் 8-மாதம் 9-நாள்

புதபகவான் லக்கினத்திற்குக் கோணதிரி கோண வாக்கு லாப ஸ்தானாதிபதியாய் நட்பாட்சி உச்சனா

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

யிருந்து திசாநாதனாகிய சனிபகவானுக்கு கேந்திராதிபதியாய் குரு சுக்கிரன் பார்வைபெற்றால் கல்வி, ஞானம், வித்யாபிவிருத்தி, பெரியோர்கள் சேர்க்கை, உற்றார் உறவினர் சகாயம், மனைவி மைந்தர் சுகவாழ்வு, வியாபார விருத்தி, பெருந்தன்மை, உத்தியோகவிருத்தி, திரவிய லாபம், சுகவாழ்வு, மாதா பிதா புத்திர களத்திர சுகசவுக்கியமனைத்தும் பொருந்தி யிருக்கும். புதபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்து இராகு கேது பார்வை பெற்றால் பலவிதமான கஷ்டமும் மனவிசாரமும் பொருந்தி யிருக்கும்.

சனிதிசையில் கேதுபுத்தி
1-வருஷம் 1-மாதம் 9 நாள்

கேதுபகவான் மேஷம் ரிஷபம் கடகம் விருச்சிகம் மகரராசியிலிருந்து திசாநாதனாகிய சனிபகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்து குரு சுக்கிரன் புதன் பார்வையானால் ஞானமும் கல்வியும் வித்யாபிவிருத்தியும் பகவத் பக்தியானந்த விரதானுஷ்டானமும் தேவாலய பூஜையும் மகான்கள் தரிசனமும் பெரியோர்கள் சேர்க்கையும் சரீராரோச்கிய சுகவாழ்வும் பொருந்தியிருக்கும். கேதுபகவான் திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலும் ஜனன லக்கினத்திற்கு மறைவு ஸ்தானத்திலு மிருந்தால் அன்ன வஸ்திரத்திற்குப் பஞ்சமும், பந்துஜன மித்திரா பகையாகி அலட்சியஞ் செய்யும்படியான கஷ்டமுமா யிருக்கும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சனிதிசையில் சுக்கிரபுத்தி

3-வருஷம் 2-மாதம்

சுக்கிரபகவான் ஜனனலக்னம் வாக்குஸ்தானம் கேந்திரகோண திரிகோண லாபஸ்தானத்தில் நட்பு ஆட்சி உச்சனுய் திசாநாதனுக்கும் கேந்திராதிபதியாயிருந்தால் வியாபாரலாபம், உத்தியோக சம்பத்து, சரீராரோக்கியம், ஸ்திரீகள் சேர்க்கை முதலான சுகானந்த வைபவமனைத்தும் பொருந்தியிருக்கும். ஆனுல், சுக்கிரபகவான் ஜனன லக்கினத்திற்கு 6, 8, 12-ல் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் வியாதி, ஸ்திரிகளால் கலகம், விபசார வீண் வழக்கு, மனவிசாரம் முதலான கஷ்ட நஷ்ட கவலைகளும் பொருந்தி யிருக்கும்.

சனிதிசையில் சூரியபுத்தி

11-மாதம் 12-நாள்

சூரியபகவான் நட்பு ஆட்சி, உச்சஸ்தாஞதிபதியாய் திசாநாதனுகிய சனி பகவானுக்கு கேந்திராதிபதியா யிருந்தால் வியாபார லாபம், திரவிய லாபம், புத்திர மித்திர களத்திர சுகசவுக்கியமாய் மனேற்சாகயிருப்பதற் காகும். ஆனுல், சூரியபகவான் பகை நீசஸ்தானத்தி லிருந்து சனிபகவான் பார்வை சம்பந்தமா யிருந்தால் பிதா புத்திர கலகம், பகைவரால் கலகம், மனவிசாரம், துயரமும், துன்பமும், வறுமையும், வியாதியும், கவலையும் கஷ்டமுமா யிருக்கும்.

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சனிதிசையில் சந்திரபுத்தி

1-வருடம் 7-மாதம்

சந்திர பகவான் லக்கின குடும்பஸ்தான கோண திரிகோண ஸ்தானத்திலிருந்து திசாநாதனாகிய சனி பகவானுக்கு கேந்திராதிபதியாய் நட்பு, ஆட்சி உச்ச ஸ்தானத்திலிருந்தால் பந்து மித்திரர் சுகானந்த உற்சாகம், கல்வி, வித்தை, ஞானம், மனோவுல்லாசம், திரவிய லாபம், சுகசவுக்கிய மனைத்தும் உண்டாகும். ஆனால், சந்திரபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் பித்தசுரம், மன மயக்கம், பலவித கஷ்ட நஷ்ட மனைத்தும் உண்டாகும்.

சனிதிசையில் செவ்வாய்புத்தி

1-வருஷம் 1-மாதம் 9-நாள்

செவ்வாய்பகவான் நட்பு ஆட்சி, உச்சனாய் திசாநாதனாகிய சனிபகவானுக்கு கேந்திராதிபதியா யிருந்தால் தைரியம், சரீரசவுக்கியம், திரவியலாபம்,வியாபார விருத்தி, உத்தியோக சம்பத்து, பிரக்யாதி முதலாகிய பலவித நன்மையு முண்டாகும். ஆனால், செவ்வாய் பகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் பித்த உஷ்ண வியாதி, மேக காரக ரோகாதிகளால் துன்பமும், மனவிசாரமும் நேரிடும்.

சனிதிசையில் இராகுபுத்தி

2-வருஷம் 10-மாதம் 6-நாள்

இராகுபகவான் ஜனன லக்கினத்தின் மூன்று, ஆறு பதினோராமிடத் ததிபதியாய் மேஷம், ரிஷபம், கடகம்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

விருச்சிக ராசியிலிருந்து திசாநாதனுக்கு கேந்திராதிபதியா யிருந்தால் வீரப்ரதாபம், வீரவான்கள் சிநேகம் வியாபார விருத்தி, உத்தியோகசம்பத்து, திரவியலாபம், சரீராரோக்கியம், மனைவி மைந்தர் குடும்ப க்ஷேமமாகவு மிருக்கும். ஆனல், இராகுபகவான் ஜனனலக்கினத்திற்கு அஷ்டம விரய ஸ்தானாதிபதியாய் திசாநாதனுக்கும் மறைவு ஸ்தானத்திலிருந்தால் வீண் வழக்கு, வம்பு, சண்டை, கைப்பொருள் நஷ்டம், கவலை, மனவிசாரம், துன்பமும், துயரமும், கஷ்டமுமா யிருக்கும்.

சனிதிசையில் குருபுத்தி
2-வருஷம் 6-மாதம் 12-நாள்

குருபகவான் ஜனன லக்கின வாக்குஸ்தான குடும்ப சுக சப்தமபாக்கிய லாபாதிபதியாய் ஆக்ஷி, உச்ச, நட்பு ஸ்தானங்களிலிருந்து திசாநாதனாகிய சனி பகவானுக்கு கோண திரிகோண ஸ்தானங்களிலிருந்தால், வித்யா சாமர்த்தியம், ஞாபகசக்தி, வியாபார விருத்தி, உத்தியோக சம்பத்து, திரவிய லாபம், மனைவி-மைந்தர்-மாதா பிதா-பந்துஜன மித்திரர் சுக சவுக்கியம், ஆலயபூசை அன்னதான தர்ம கைங்கரியம், தானதர்ம பரோபகாரம், சரீராரோக்கியமா யிருக்கும். ஆனல்,குருபகவான் ஜனன லக்கினத்திற் 6-8-12-மிடத்து அதிபதியாய் பகை,நீச அஸ்தமயமாய் திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால், மனமயக்கம், மனவிசாரம், சொற்சோவு, வியாபார நஷ்டமும் உண்டாகும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சிஷன் :—குருநாதா ! புத திசையில் வருகிற புத்தி நாதர்களின் பலன்களையும் விபரமாய்ப் புகல்வீர்.

குரு :—அன்பான சிஷ்யா! உன் மனம்போலவே புத திசையில் வருகிற புத்திநாதர்களின் பலன்களையும் சொல்லுகிறேன் கவனிப்பாய்.

புதன்திசையில் புதன்புத்தி

2-வருஷம் 4-மாதம் 27-நாள்

புதபகவான் லக்கின குடும்பஸ்தான திரிகோண லாப ஸ்தானத்திலிருந்து, நட்பு-உச்சமா யிருந்தால், கல்வி, ஞானம், சங்கீத கியானம், நடனப் பிரியம், வித்யாபிவிருத்தி, வியாபாரலாபம், பந்துமித்திரர் மாதா பிதா புத்திர களத்திர சுக சவுக்கிய முண்டாகும். ஆனால், புதபகவான் ஜனன லக்னத்திற்கு ஆறு-எட்டு-பன்னிரண்டாம் ஸ்தானுதிபதியாய் பகை நீச்சஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் பலவித கஷ்டமும், கவலையும், வியாபார நஷ்டமும், உத்தியோக ஸ்தான கலகமும், கவலேயும், மனமயக்கம், திகில், பந்துமித்திரர் கலகம், பலவிதமாகியகஷ்ட நஷ்டங்களும் உண்டாகும்.

புதன்திசையில் கேதுபுத்தி

11-மாதம் 27-நாள்

கேது பகவான் ஜனன லக்கினத்திற்கு கேந்திர ஸ்தானுதிபதியா யிருந்து, குரு, சுக்கிரன், பார்வை பெற்று, மேஷம், ரிஷபம், கடகம், விருச்சிகம், மகர

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ராசியிலிருந்து திசாநாதனுகிய குருபகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால், வித்யாபிவிருத்தி, சங்கீதபிரியம், சாஸ்திர விசாரணை, பந்துமித்திர புத்திர களத்திர மாதா பிதா குடும்ப சவுக்கியம். ஆனுல் கேது பகவான் திசா நாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்து சனி பார்வை பெற்ருல் மறதி, மனவிசாரம், கைப்பொருள் சேதம், விஷ ஜெந்துக்களால் துன்பம், விபரீத கஷ்டநஷ்டமாய் கவலை யும், கலவரமுமாய் இருப்பதாகும்.

புதன்திசையில் சுக்கிரபுத்தி

2-வருஷம் 10-மாதம்

சுக்கிர பகவான் லக்கின குடும்ப, சுகபாக்கிய இலாப ஸ்தானுதிபதியாய் ஆட்சி, உச்ச, நட்பு ஸ்தானத்தி லிருந்து திசாநாதனுகிய புதபகவானுக்குக் கோண திரி கோண கேந்திர ஸ்தானுதிபதயா யிருந்தால், மனைவி மைந்தர், மாதா பிதா சுக சவுக்கியம் வித்யாபிவிருத்தி, சங்கீதக்கியானம, வேசிகள்சேர்க்கை, வியாபாரவிருததி, உத்தியோக சம்பத்து, திரவியலாபம், கீர்த்திப்ரதாபம் பொருந்தியிருக்கும். ஆனுல், சுக்கிரபகவான் ஜனன லக் கினததிற்கு சஷ்டாஷ்டம விரயஸ்தானுதிபதியாய் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தா னத்திலிருந்தால் மனமயக்கம், திகில், தாசி வேசிகளால் கலகம், வியாபார நஷ்டம், உத்தியோக ஸ்தான கலகம, பந்துமித்திரர் பகை, அன்னவஸ்திர பஞ்சம், விபாதி முதலான பலவித கஷ்டமாயிருக்கும்.

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

புதன்திசையில் சூரியபுத்தி

10-மாதம் 6-நாள்

சூரிய பகவான் ஜனன லக்கின கேந்திராதிபதியாய் நட்பாட்சி உச்சனுயிருந்து, திசாநாதனுகிய புத பகவானுக்கு கேந்திராதிபதியாய் குரு பார்வை பெற்றிருந்தால் வித்யா லாபம், வியாபாரவிருத்தி, பொன், பொருள், பூமி, வீடு வாங்கல், புத்திர சம்பத்து முதலான சகல சம்பத்துடன் மனமகிழ்வாயிருக்கும். ஆனல், சூரிய பகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய புதபகவானுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் மனவிசாரம், திகில் கவலை நஷ்டம் துன்பமும் துயரமும் உண்டாகும்.

புதன்திசையில் சந்திரபுத்தி

1-வருடம் 5-மாதம்

சந்திர பகவான் ஜனன லக்கின வாக்குஸ்தான கேந்திரகோண ஸ்தானுதிபதியாய் நட்பாட்சி உச்சனுயிருந்து திசாநாதனுகிய புக பகவானுக்கு கேந்திரகோண திரிகோண ஸ்தானுதிபதியா யிருந்தால் வித்யாபிவிர்த்தி, சங்கீதக்கியானம், வியாபார லாபம், தாசிவேசிகள் சகாயம், உத்தியோக விருத்தி, திரவிய லாபம், மாதா பிதா களத்திர புத்திர சுகசவுக்கியமும், சரீராரோக்கியமும் பெருமையும், காந்தியும் பொருந்தியிருக்கும்.

புதன்திசையில் செவ்வாய்புத்தி

11-மாதம் 27-நாள்

செவ்வாய் பகவான் ஜனன லக்கின கேந்திராதிபதியாய் ஆட்சி உச்சம், நட்புஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய புத பகவானுக்கு கேந்திராதிபதியா யிருந்தால்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சாமர்த்தியமான தீரம், வல்லமை, வாய் சாதுர்யமாய்ப் பேசுதல், உற்சாகம், திரவியலாபம், பூமிலாபம், பந்துமித்திர குடும்ப சவுக்கியம், பெருமை கீர்த்தியாகவுமிருக்கும். ஆனால், செவ்வாய் பகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் வாத உஷ்ண ரோகம், காமாலை ஜுர வியாதிகளும், சத்துரு விரோதம், இராஜபயம், திகில், வியாபார நஷ்டம், உத்தியோக ஸ்தான கலகம், வறுமையும் மன விசாரமுமாய் இருக்கும்.

புதன்திசையில் இராகுபுத்தி
2-வருடம் 6-மாதம் 18-நாள்

இராகு பகவான் ஜனன லக்கின திரிதிய பஞ்சம விரயாதிபதியாய் பகை நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய புத பகவானுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் மனபயங்கரம், திகில், கலகம், கவலை, பந்துமித்திரர் கலகம் சண்டை சச்சரவு, வழக்கு வியாஜ்ஜியம் பரஸ்திரீகளால் தூரதேச பிரயாணம், மனஸதாபமும் பலவிதமான கெடுதியுமுண்டாகும். ஆனால், ராகுபகவான் உச்சஸ்தானமாகிய விருச்சிகத்திலிருந்து திசாநாதனுகிய புத பகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால் யாதொரு கஷ்ட நஷ்டமு மில்லாமற் சுகசவுக்கியமா யிருப்பதற்காகும்.

புதன்திசையில் குருபுத்தி
2-வருடம் 3-மாதம் 6-நாள்

குருபகவான் ஜனன லக்ன குடும்ப சுக சப்தம பாக்கிய லாபாதியாய் ஆக்ஷி உச்ச நட்பு ஸ்தானுதிபதியாய் திசாநாதனுகிய புத பகவானுக்கு கோண திரிகோண லாபஸ்தானத்திலிருந்தால் வித்யாபிதிவிர்த்தி, பிரபுக்கள்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சேர்க்கை, இராஜதரிசனம், பந்து மித்திர களத்திர புத்திர மாதா பிதா குடும்பசவுக்கியம் உண்டாகும். ஆனால், குருபகவான் ஜனன லக்கினத்திற்கு சஷ்டாஷ்ட விரயஸ்தானத்தில் பகை நீசமாய் திசாநாதனுகிய புத பகவானுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் பலவித மாகிய கஷ்ட நஷ்டங்களும், பகையும், தீராத தொடுவழக்கும், வறுமை பிணி முதலாகிய துன்பமும் துயரமுமா யிருக்கும்.

புதன் திசையில் சனிபுத்தி
2-வருடம் 8-மாதம் 9-நாள்

சனி பகவான் ஜனன லக்கினத்திற்கு திரிதிய லாப ஸ்தானத்திலிருந்து நட்பு, ஆக்ஷி உச்சஸ்தானுதிபதியாய் திசாநாதனுகிய புத பகவாகனுக்கு கேந்திர ஸ்தானத்தி லிருத்தால் வியாபாரிகளின் நட்பு, வர்த்தகத்தில் லாபம், உத்தியோக தொழில்முறையில் கீர்த்தி, திரவியலாபம் சரீராரோக்கியம், பந்து மிததிரர் சகாயம், பெரியோர் சேர்க்கை, திரவிய லாபமும் கிடைத்து கீர்த்தி பிரகாசமா யிருக்கும். ஆனல், சனிபகவான் நீசஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் பித்த சம் பந்தமான வியாதிகள், தொடுவழக்கு, சண்டை விரோ தம், வறுமை, கைப்பொருள் சேதம் முதலான கஷ்ட நஷ்டமுண்டாகும்.

சீஷன் :— குருஸ்வாமி! தாங்கள் அனுக்கிரகஞ் செய்த வரையிலும் தெரிந்துக்கொண்டேன். இனி

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கேதுதிசையில் வரும் ஒன்பது நாதர்களின் பலனையும் விபரமாய்ச் சொல்ல வேண்டும்.

குரு :—சரி; அப்படியே சொல்லுகிறேன் கவனிப் பாய்.

கேதுதிசையில் கேது புத்தி
4-மாதம் 27-நாள்

கேதுபகவரன் ஜனன லக்கினத்திற்கு மூன்ருறு இலாப ஸ்தாபனத்திலிருந்து குரு, சுக்கிரன், புதன் பார வையா யிருந்தால் கல்வி, ஞானம், திரவிய லாபமும் பொருந்தி யிருக்கும். ஆனுல், கேது ஜனன லக்ன சப்தம அஷ்டம விரயஸ்தானத்திலிருந்து சனி சூரியன் பார்வை பெற்ருல் சத்துருக்கள் விரோதத்தாலும், கைப்பொருள் நஷ்டமும். கவலையும் நேரிடுவதுடன் பந்துஜன மித்திரர் கலகத்தினுலும் மணைவி மைந்தரைப் பிரிந்து இருக்க இடமில்லாமல் அலைந்து அந்நிய தேசவாசியாயலையும்படி யான கஷ்ட நஷ்ட துன்பமும் துயரமும் பொருந்தி யிருக்கும்.

கேதுதிசையில் சுக்கிரபுத்தி
1-வருஷம் 2-மாதம்

சுக்கிரபகவான் ஜனன லக்ன குடும்பசுக சப்தம பாக்கிய இலாப ஸ்தானுதிபதியாய் ஆட்சி, உச்ச, நட்பு பெற்று, திசாநாதனுகிய கேது பகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால் வித்யாபிவிருத்தியும், ஞானமும் சங்கீத பிரியமும், தாசிகள் நேசமும், குடும்ப சவுக்கிய

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மும், திரவிய லாபமும், சரீராரோக்கிய சுகசவுக்கியமும் பொருந்தி யிருக்கும். ஆனால், சுக்கிரபகவான் பகை நீச ஸ்தானத்திலிருந்து ஜனன லக்கினத்தின் சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசமாயிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானமா யிருந்தால் ஸ்திரீகளால் கலகம் பந்து மித்திரர் மனவெறுப்பு, கஷ்டமும், கவலையும், தீராத் துயரமும், துன்பமும் பொருந்தியிருக்கும்.

கேதுதிசையில் சூரியபுத்தி

4-மாதம் 6-நாள்

சூரியபகவான் ஜனன லக்கினத்திற்கு மூன்ருறு பதினோராமிடத் ததிபதியாய் ஆட்சி, உச்ச, நட்பு ஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய கேது பகவானுக்கு கேந்திராதிபதியா யிருந்தால் மனோற்சாகம், தைரியமும், வியாபார லாபம், கீர்த்தி பிரகாசமா யிருக்கும். ஆனால், சூரியபகவான் அஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசம் பெற்று திசாநாதனுக்கு சஷ்டாஷ்டம விரயஸ்தானத்தி லிருந்தால் அக்கினிபயம், உஷ்ணஜுரம், சத்துரு விரோதம், திரவிய நஷ்டம் கைப்பொருள் சேதமும், பலவித மான துன்பமும் துயரமும் பொருந்தி யிருக்கும்.

கேதுதிசையில் சந்திரபுத்தி

7-மாதம்

சந்திரபகவான் ஜனன லக்கின வாக்குஸ்தான கேந்திர திரிகோண இலாபஸ்தானத்திலிருந்து திசா நாதனுகிய கேது பகவானுக்கு கேந்திர ஸ்தானத்தி

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

விருந்தால் சரீர சவுக்கியமும், திரவிய லாபமும், பந்து ஜனக்கூட்டமும், சுகசவுக்கியமும், சரீராரோக்கியமுமா யிருக்கும். ஆனால், சந்திர பகவான் ஜனனலக்கினத்திற்கு ஆறு எட்டு பனிரெண்டாமிடத்திலிருந்து பகை நீசமாய் சனி, ராகு, கேது பார்வை பெற்றிருந்தால் பலவிதமாகிய மனஸ்தாபமும், விஷ பயமும், பித்த சீதள ஜுரமும், கவலேயும், கஷ்டமுமா யிருக்கும்.

கேதுதிசையில் செவ்வாய்புத்தி
4-மாதம் 27-நாள்

செவ்வாய் பகவான் ஆக்ஷி, உச்ச நட்பாயிருந்து ஜனன லக்கினத்திற்கு மூன்று ஆறு பதினேரும் வீட்டி விருந்து திசாநாதனுகிய கேது பகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால், மனதைரியம், உற்சாகம், சரீரா ரோக்கியம், கல்வி, ஞானம், வித்தியாபி விருத்தி, உத்தி யோக விருத்தி, திரவிய லாபம், மாதா பிதா களத்திர புத்ர சுக சவுக்கியமா யிருக்கும். ஆனல், செவ்வாய் பக வான் பகை நீசஸ்தானத்திலிருந்து சூரியன் சனிபார்வை பெற்று திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் பித்த உஷ்ண வியாதி, ஜுரம், சத்துரு விரோதம், மன விசாரம், திகில், கஷ்ட நஷ்டங்களும் உண்டாகும்.

கேதுதிசையில் இராகுபுத்தி
1-வருஷம் 18-நாள்

இராகு பகவான் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகர ராசியிலிருந்து ஜனன லக்கினத்தில்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மூன்று ஆறு பதினொன்றிலிருந்து குரு பார்வை பெற்றால் திடச்சித்தம், வியாபார விருத்தி உத்தியோகத்தில் மேன்மை கீர்த்திப் பிரகாசமும், திரவிய லாபமுங் கிடைக்கும்.

கேதுதிசையில் குருபுத்தி

11மாதம் 8-நாள்

குரு பகவான் ஆட்சி உச்ச நட்பாய் ஜனன லக்கின குடும்ப சுகசப்தம பாக்கிய லாபஸ்தானத்திலிருந்து திசா நாதனாகிய கேது பகவானுக்கு கேந்திராதிபதியா யிருந்தால் வித்யாலாபம், ஞானம், கல்வி, தேவதா பூசை, தீர்த்தயாத்திரை, திரவியலாபம், உத்தியோக, சம்பத்து, வியாபார விருதகி, மனோற்சாகம், மனைவி மைந்தர் மாதா பிதா பந்து ஜனங்களின் சுக சவுக்கிய முதலான நன்மை யனைத்தும் கிடைக்கும். ஆனால், குருபகவான் பகை நீசமாய் மூன்றாறு எட்டு பனிரெண்டாமிடத் ததிபதியாய் பகை நீசமாயிருந்து சனி ராகு பார்வை பெற்று திசாநாதனுக்கு மறைவு ஸ்தானந்திலிருந்தால், பலவிதமான மனச்சஞ்சலம், வியாஜ்ஜியம், வழக்கு, சூதகம், வறுமை, விஷபயம், சத்துரு விரோதம, உத்தியோக கலகம், வியாபார நஷ்டம், கலகம், கலவரம், துன்பம், துயரமனைத்தும் நேரிடும்.

கேதுதிசையில் சனிபுத்தி

1-வருஷம் 1-மாதம் 9-நாள்

சனி பகவான் ஆட்சி நட்பு உச்சனாய் ஜனன லக்கினத்தில் மூன்று ஆறு பதினொன்றில் அமர்ந்து திசா

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நாதனுகிய கேதுபகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால் புத்திகூர்மை ஞாபகசகதி, வித்யாலாபம், உத்தியோக விருத்தி, திரவியலாபம், மாதா பிதா களத்திர புத்திர பந்து ஜனங்களின் சுக சவுக்கியமும், மனேற்சாகமும் பொருந்தியிருக்கும். ஆனுல், சனிபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து ஜனன லக்ன கோணதிரிகோணுதிபதியால் திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்து சூரியன், செவ்வாய் பார்வைபெற்ருல் மதிமயக்கம், மனக்கிலேசம், பிதா உஷ்ண வியாதி, சத்துரு விரோதம், தூரதேச பிரயாணம், சண்டை, சச்சரவு, வழக்கு, வியாஜ்ஜிய கஷ்ட நஷ்டங்களும் உண்டாகும்.

கேதுதிசையில் புதன்புத்தி

11-மாதம் 27-நாள்

புதபகவான் ஜனன லக்கின குடும்ப சுகசப்தம பாக்கிய ஜீவன லாப ஸ்தானுதிபதியாய் நட்பாட்சி உச்ச ஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய கேதுபகவானுக்கு கேந்திராதிபதியா யிருந்தால் வித்தியாலாபம், வியாபார லாபம், உத்தியோகவிருத்தி, மனைவி மைந்தர் மாதா பிதா சுற்றத்தார் சுகசவுக்கியம், உத்தியோகஸ்தர்நேசம் திரவியலாபமனைத்தும் மங்களகரமாய் நடக்கும். ஆனுல் புதபகவான்பகை நீசமாய் சஷ்டாஷ்டமவிரயஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் மந்தபுத்தி, மன விசாரம், திகில், பயங்கரம், சூதகம்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வியாதி, வறுமை முதலான கஷ்ட நஷ்டங்களெல்லாம் தோன்றும்.

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய
சோதிட அரிச்சுவடி முதல் பாகம்
முற்றிற்று.

---

* இதற்குப்பின் இரண்டாம் பாகத்தில் மற்ற விஷயங்களைப் பார்த்துக்கொள்ளவும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

உ

கடவுள் துணை

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய

சோதிட அரிச்சுவடி

—ஃ—

(இரண்டாம் பாகம்)

கணேசர் துதி

எண்சீரடி விருத்தம்

ஆதிபராசக்திமைந்தன் கணேசன்பாதம்
அனுதினமும்மனதிருத்தி மாநிலத்தில்
ஜோதிட நூலாராய்ந்து மானிடர்க்கு
சொல்லுகிறேன் அவரவர்கள் ஜாதகத்தை
நீதிசேர்பலன் களையான் விபரமாக
நிகழ்த்துவேன் மாணுக்கா நீயுங்கேட்க
ஓதினேன்முதற்பாகந் தன்னிலன்பாய்
உற்றஇரண்டாம்பாகம் சொல்லுவேனே.

சொல்லுவேனிரண்டாம் பாகத்திலுற்ற
ஜோதினிடத்தினிலையதனைக் கவனித்தோர்ந்து
தொல்லுலகில்மாந்தர்கள் முன்செய்தகர்மத்தால்
தோற்றுகின்றசுகதுக்க மிரண்டுங்கண்டு
நல்லபலன்துர்ப்பலனில் வேளாவேளை
நடக்குமென்றுஜாதகங்கள் மதிக்கொண்டு
செல்வந்தராயிருக்கும் சமயங்கண்டு
செய்கின்றமுயற்சியெலாம் ஜெயங்கொள்வாரே.

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சீஷன் :—குருநாதா! சுக்கிர திசையில் நடக்கும் ஒன்பது புத்திநாதர்களின் பலன்களையும் விபரமாய் தெரிவிப்பீர் சுவாமி.

குரு :— அவ்விதமே சொல்லுகின்றேன் கவனிப் பாய்.

சுக்கிரதிசையில் சுக்கிரபுத்தி

3-வருஷம் 4-மாதம்

சுக்கிரபகவான் லக்ன குடும்ப சுக சப்தம பாக்கிய லாபாதிபதியாய் ஆக்ஷி உச்ச நட்புஸ்தானத்திலிருந்தால் கல்வி, ஞானம், வித்யாலாபம், உத்தியோக விருத்தி, வியாபாரலாபம், திரவியலாபம் உண்டாகும். ஆனல் சுக்கிரபகவான் ஜனன லக்னத்திற்கு ஆறெட்டு பனி ரெண்டாமிடத்ததிபதியாய் பகை நீசஸ்தானத்திலிருந் தால் பலவிதமாகிய கஷ்ட நஷ்ட கலகமும், வியாதியும், சத்துரு விரோதமு முண்டாகும்.

சுக்கிரதிசையில் சூரியபுத்தி

1-வருஷம்

சூரியபகவான் ஜனன லக்கினத்திற்கு மூன்று பதினொரு மிடத்திலிருந்து நட்பாட்சி உச்சமாயிருந்தால் பலவித நன்மையும் சுகசவுக்கியமு முண்டாகும். ஆனல் சூரியபகவான் சஷ்டாஷ்டமவிரயஸ்தானத்தில் பகை நீசமாயிருந்து திசாநாதனுக்கு மறைவுஸ்தானத்திலிருந் தால் வியாதி, சத்துருபயம், பலவித கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சுக்கிர திசையில் சந்திரபுத்தி

1-வருஷம் 8-மாதம்

சந்திரபகவான் ஜனன லக்கினத்திற்கு கோண திரி கோண ஸ்தானுதிபதியாகிய நட்பாட்சி உச்ச ஸ்தானுதி பதியா யிருந்து திசா நாதனுகிய சுக்கிர பகவானுக்கு கேந்திர ஸ்தானத்திலிருந்தால் பலவிதமான நன்மையும் சுகசவுக்கியமும் திரவிய லாபமும் கிடைக்கும். ஆனுல் சந்திரபகவான் சஷ்டாஷ்டம விரயஸ்தானத்திலிருந்து பகை நீசமாய் திசா நாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந் தால் பலவித கஷ்ட நஷ்டமும் சத்துரு விரோதமு முண் டாகும்.

சுக்கிரதிசையில் செவ்வாய்புத்தி

1-வருஷம் 2-மாதம்

அங்காரக பகவான் நட்பாட்சி உச்சனுய் ஜனன லக்கினத்திற்கு மூன்ருவது இலாப ஸ்தானத்திலிருந்து திசாநாதனுகிய சுக்கிரபகவானுக்கு கேந்திர ஸ்தானத்தி லிருந்தால் தைரியம், வீரம், உத்தியோகவிருத்தி வியா பார லாபம், திரவிய லாபமும் கிடைக்கும். ஆனுல், செவ்வாய் பகவான் பகை நீசமாயிருந்து ஜனன லக்கி னத்திற்கு அஷ்டம விரய ஸ்தானந்திலிருந்து திசாநாத னுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் வியாதி சத்துரு விரோதம் பலவிதமான கஷ்ட நஷ்டங்களும் தோற்றும்.

சுக்கிரதிசையில் இராகுபுத்தி

3-வருடம்

இராகு பகவான் ஜனன லக்கினந்திற்கு மூன்ருறு பதினொன்றிலிருந்து, குருபகவான் பார்வைபெற்று திசா

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நாதனுகிய சுக்கிர பகவானுக்குக் கேந்திரத் தானத்தி லிருந்தால் பலவித நன்மையும் திரவியலாபமும் உண் டாகும். ஆனல் இராகுபகவான் ஜனனலக்ன அஷ்டம விரயத்தானத்திலிருந்து சனி, சூரியன் பார்வைபெற்று திசாநாதனுக்கு மறைவுத் தானத்திலிருந்தால் பலவித மாகிய கஷ்ட நஷ்டங்களும், வியாதி, சத்துரு பயமு முண்டாகும்.

சுக்கிரதிசையில் குருபுத்தி
2-வருடம் 8-மாதம்

குரு பகவான் லக்கின குடும்ப சுகசப்தம பாக்கிய ஜீவன லாபஸ்தானுதிபதியாய் நட்பாட்சி உச்சனுய் திசா நாதனுகில் சுக்கிர பகவானுக்குக் கேந்திர திரிகோண ஸ்தானுதிபதியாயிருந்தால் கல்வி ஞானம், வாத்திமைத் தொழில், பிரசங்கம், திரவியலாபம், சுகசவுக்கியமாயிருக் கும். ஆனல் குருபகவான் பகை நீசஸ்தானத்திலிருந்து சுக்கிரபகவானுக்கு மறைவுஸ்தானமாயிருந்தால் பலவித கஷ்ட நஷ்டமும் தீராக் கவலையுமா யிருக்கும்.

சுக்கிரதிசையில் சனிபுத்தி
2-வருடம் 2-மாதம்

சனி பகவான் ஜனன லக்கினத்திந்கு மூன்ருறு பதினேராமிடத்திலிருந்து நட்பாட்சி உச்சனுய் திசா நாதனுகிய சுக்கிர பகவானுக்குக் கேந்திர ஸ்தானத்தி லிருந்தால் பலவித நன்மையும், திரவியலாபமும், சுக சவுக்கியமும் உண்டாகும். ஆனல், சனி பகவான்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பகை நீச ஸ்தானத்திலிருந்தும், அஷ்டம விரய ஸ்தானத்திலிருந்து திசாநாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் பலவித கஷ்ட நஷ்டமும், வியாதியும், சத்துரு ாயமும் உண்டாகும்.

சுக்கிரதிசையில் புதன்புத்தி
2-வருடம் 10-மாதம்

புதபகவான் ஜனன லக்கினத்திற்குக் கோண திரிகோண ஸ்தானத்தில் நட்பாட்சி உச்சனுயிருந்து திசா நாதனுக்குக் கேந்திர ஸ்தானத்திலிருந்தால் உத்தியோக விருத்தி வியாபார லாபம், திரவியலாபம், சுகசவுக்கியமாயிருக்கும். சுக்கிரபகவான் அஷ்டம விரயஸ்தானத்தில் பகை நீசமாயிருந்தால் பலவிதமான கஷ்டமும் திரவிய நஷ்டமுமா யிருக்கும்.

சுக்கிரதிசையில் கேதுபுத்தி
1-வருடம் 2-மாதம்

கேதுபகவான் ஜனன லக்கினத்தில் மூன்ருறு பதினோராமிடத்திலிருந்து திசாநாதனுகிய சுக்கிர பகவானுக்குக் கேந்திர ஸ்தானத்திலிருந்தால் வித்தியாபிவிருத்தி, உத்தியோக விருத்தி, பெரியோர் சேர்க்கை, பந்துஜன மித்திரர் சுகசௌக்கியமாயிருக்கும் கேதுபகவான் திசா நாதனுக்கு மறைவு ஸ்தானத்திலிருந்தால் கஷ்ட நஷ்டமும் வியாதியும், தரித்திரமுமா யிருக்கும்.

சீஷன் :—குருசுவாமி! கிரகங்களின் நட்பு, ஆட்சி, உச்சம், சமமென்னும் விபரத்தையும் தெரிவிப்பீர்.

CC-0. OldTTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு :—அப்படியே தெரிவிக்கின்றேன் கவனிப்பாய்.

மேஷ ராசி

சூரியன்-உச்சம்
சந்திரன்-சமம்
செவ்வாய்-ஆட்சி
புதன்-சமன்
குரு-நட்பு
சுக்கிரன்-சமம்
சனி-நீசம்
இராகு-பகை
கேது-பகை

மிதுன ராசி

சூரியன்-சமம்
சந்திரன்-நட்பு
செவ்வாய்-பகை
புதன்-ஆட்சி
குரு-பகை
சுக்கிரன்-நட்பு
சனி- நட்பு
இராகு-நட்பு
கேது-நட்பு

ரிஷப ராசி

சூரியன்-பகை
சந்திரன்-உச்சம்
செவ்வாய்-சமம்
புதன்-நட்பு
குரு-பகை
சுக்கிரன்-ஆட்சி
சனி-நட்பு
இராகு-நீசம்
கேது-நீசம்

கடக ராசி

சூரியன்-நட்பு
சந்திரன்-ஆட்சி
செவ்வாய்-நீசம்
புதன்-நட்பு
குரு-உச்சம்
சுக்கிரன்-பகை
சனி-பகை
இராகு-பகை
கேது-பகை

சிம்ம ராசி

சூரியன்-ஆட்சி
சந்திரன்-நட்பு

துலா ராசி

சூரியன்-நீசம்
சந்திரன்-நட்பு

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

செவ்வாய்-நட்பு	செவ்வாய் சமம்
புதன்-நட்பு	புதன்-நட்பு
குரு-நட்பு	குரு-பகை
சுக்கிரன்-பகை	சுக்கிரன்-ஆட்சி
சனி-பகை	சனி-உச்சம்
இராகு-பகை	இராகு-நட்பு
கேது-பகை	கேது-நட்பு

கன்னி ராசி	விருச்சிக ராசி
சூரியன்-சமம்	சூரியன்-நட்பு
சந்திரன்-நட்பு	சந்திரன்-நீசம்
செவ்வாய்-பகை	செவ்வாய்-ஆட்சி
புதன்-ஆட்சி	புதன்-சமம்
குரு-பகை	குரு-நட்பு
சுக்கிரன்-நீசம்	சுக்கிரன்-சமம்
சனி-நட்பு	சனி-பகை
இராகு-நட்பு	இராகு-உச்சம்
கேது-நட்பு	கேது-உச்சம்

தனுசு ராசி	கும்ப ராசி
சூரியன்-நட்பு	சூரியன்-பகை
சந்திரன்-சமம்	சந்திரன்-சமம்
செவ்வாய்-நட்பு	செவ்வாய்-சமம்
புதன்-நட்பு	புதன்-சமம்
குரு-ஆட்சி	குரு-சமம்
சுக்கிரன்-சமம்	சுக்கிரன்-நட்பு

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சனி-சமம்
இராகு-நட்பு
கேது-நட்பு

சனி-ஆட்சி
இராகு-பகை
கேது-பகை

மகர ராசி

சூரியன்-பகை
சந்திரன்-பகை
செவ்வாய்-உச்சம்
புதன்-சமம்
குரு-நீசம்
சுக்கிரன்-நட்பு
சனி-ஆட்சி
இராகு-நட்பு
கேது-நட்பு

மீன ராசி

சூரியன்-நட்பு
சந்திரன்-சமம்
செவ்வாய்-நட்பு
புதன்-நீசம்
குரு-ஆட்சி
சுக்கிரன்-உச்சம்
சனி-சமம்
இராகு-நட்பு
கேது-நட்பு

சீஷன் :—குரு சுவாமி! கேந்திர திரிகோண ஸ்தானங்களெவை ?

குரு :—சரி, சொல்லுகிறேன் கவனிப்பாய்.

கேந்திர ஸ்தானமென்றால் : இலக்கினம் சுகஸ்தானம், சப்தமஸ்தானம், ஜீவனஸ்தானமுமாகும்.

திரிகோண ஸ்தானமென்றால் : இலக்கினம் பஞ்சம ஸ்தானம், பாக்கியஸ்தானமுமாகும்.

சீஷன் :—அபோவிக்கிய ஸ்தான மெவை ?

குரு :—3, 6—அபோவிக்கிய ஸ்தானம்.

சீஷன் :—லாபஸ்தான மெவை ?

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு :—11-ம் ஸ்தானமே லாபஸ்தானமாகும். இதனையே பணவரவென்பார்கள்.

சீஷன் :—ஆயுள் ஸ்தானமெவை ?

குரு :—ஜனன லக்கினத்திற்கு அஷ்டம ஸ்தானமே ஆயுள் ஸ்தானமாகும்.

சீஷன் :—சுவாமி! தாங்கள் முன் புகன்ற கிரக திசா புத்திகளில் மறைவு ஸ்தானமென்றீரே; அது எந்தெந்த ஸ்தானமாகும்.

குரு :—ஜனன லக்கினத்திற்கு 2-3-4-6-8-11-12-ம் ஸ்தானங்களையே வியாழபகவானுக்கு மறைவு ஸ்தானமென்று சொல்லுவார்கள். ஆனல் குரு, சுக்கிரன், புதன் வளர்பிறைச்சந்திரன் ஜனன லக்கினத்தைப் பார்த்தால் மிகவும் நன்மையான சுப பலனைக் கொடுப்பர். சனி இராகு, கேது லக்கினத்தைப் பார்த்தால் கஷ்ட நஷ்டங்களும வியாதிகளும் சத்துரு விரோதமும் சம்பவிக்கும். ஆனல், செவ்வாய் ஜனன லக்கினத்தைப் பார்த்தால் களத்திர தோஷ முண்டாகும். சூரியன் லக்கினத்தைப் பார்த்தால் கோபமுடையவர்களா யிருப்பதற்காகும்.

சீஷன் :—மாரக ஸ்தானங்களெவை ?

குரு :—ஜனன லக்கினத்திற்கு 2-4-8-10-11-12-ம் ஸ்தானங்களே மாரக ஸ்தானங்களாகும். இவ்விதமான மாரக ஸ்தானதிபர்களாகிய கிரகங்களே தமது திசைகளில் கொல்வார்கள். ஆனல், எந்தெந்த கிரகங்கள் இரண்டு மாரகஸ்தானதிபதியாய் வருகின்றதோ அந்த கிரகங்கள் கொல்வார்கள். ஆனல்,கண்டம் கண்டாதிக

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கண்டங்கள் தோன்றி மறையும். குரு, புதன், சுக்கிரன் ஜனன லக்கினத்தைப் பார்த்தால் நவக்கிரக சாந்தியால் சவுக்கியப்படுத்திக் கொள்வதற்காகும்.

சீஷன் விருத்தம்

அன்பான குருவே தாங்கள்
அறிவித்த ஜோதிடத்தில்
நன்மை துன்பங்க ளெல்லாம்
நலமுட னனுபவிக்கும்
தன்மையை யுரைத்தீர் சுவாமி
தரணியில் வருஷம் மாதம்
இன்னின்ன பெயர்க ளென்று
எந்தனுக் குரைப்பீரையா.

குருசுவாமி! தாங்கள் அடியேன்மீது அன்புகூர்ந்து உலகில் வசித்துலாவும் மனிதக்களின் ஜனன லக்கினத்திற் கிசைந்த ஜோதிட சாராம்சத்தின் கணிதத்திற் கிசைந்த இராசி லக்கினத்தின் கிரகங்களிருக்கும் நிலைமையும் அவர்கள் தமது திசாபுத்தியில் கொடுக்கும் சுக துக்கங்களையும் அடியேனுக்கு விபரமாய் உபதேசித்தீர். தமது அனுக்கிரகத்தின்படியே அடியேனும் கவனித்துணர்ந்தேன். ஆனால், மனிதர்களின் வாழ்நாட்களில் வருஷம், மாதம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணமாகிய இவைகளின் பெயர்களை வரிசைக்கிரமமாய் அடியேனுக்கு உபதேசித்தருள வேண்டும் சுவாமி

குரு:—அப்படியே தெரிவிக்கிறேன் கவனிப்பாய்.

சீஷன் :—சுவாமி! ஈதென்ன நூதன புதுமை தாங்கள் உரைத்தவிதமே வெகுபேர் தமக்கு இராசிநாதன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

திசாநாதன், இலக்கினேசன் புத்திரநாதன் அந்தரநாதன் ஆட்சி பெற்ற தமது சொந்த வீட்டிலிருந்தும் பலன் கொடுக்கவில்லையே யென்று பரதவிக்கின்றூர்கள். ஆனல் அதன் மர்மம் கவனிக்க வேண்டுமென யானும் வெகு நாளாய் சிந்தித்திருந்தேன். இன்றையதினம் நமது திரு வாக்கினல் வெளியாகுமென்று தமது திருவடியைப் பிரார்த்துக்கின்றேன். சுவாமி! நவக்கிரகாதியோர் தேவர்கள்தானே. அவர்கள் தமது சொந்த வீட்டில் வந்தாலும் சிலருக்கு நன்மையே செய்கின்றூர்கள். சிலருக்குக் கஷ்டத்தையே விளைவிக்கின்றூர்களே, அதென்ன காரணம் சுவாமி!

குரு:—எனது அன்பான சிஷ்யா! நவக்கிரகங்கள் ஒன்பது பேரும் தேவர்கள்தான். ஆனல் அவர்கள் ஜீவர்களின் பாவ புண்ணியங்களுக்குத் தகுந்த விதமான் சுகாசுக பலனைக் கொடுக்கும் அதிகாரிகள். ஆகையால் அவர்கள் தமது ஆட்சிவீடு, உச்சவீடு, நட்புவிடு, பகைவீடு, நீசவீடு ஆகிய இந்த ஐந்துவிதமான இராசி வீட்டில் வந்தாலும் ஜாதகனின் இராசியை அனுசரித்துத்தான் பலன் தருவார்கள்.

சீஷன்:—அதெவ்விதமாய் தருவார்கள்? அதன் விவரத்தைப் புகல்வீர் சுவாமி.

குரு:—சிஷ்யா! கவனமாய்க் கேட்பாய், ஒவ்வொரு மனிதர்களுடைய ராசிகட்கு 3-6-10-11-ம் இராசிவீட்டில் சூரியன் வந்தால் திரவிய லாபமும் தைரிய சந்தோஷத்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தையும் கொடுப்பான். மற்ற 1-2-4-5-7-8-9-12-ம் இராசி வீட்டில் வந்தால் கஷ்டபலனைக் கொடுப்பான். சந்திர னும் அவ்விதமே 1-3-6-7-10-11-ம் இராசி வீட்டிலிருந் தால் நல்ல பலனும் மற்ற 2-4-5-8-9-12-ம் வீட்டிலிருந் தால் கஷ்டபலனுந்தருவான். செவ்வாய்3-6-11-ம் இராசி யிலிருந்தால் வீரத்தன்மையும், திரவியலாபமும் தருவார் மற்ற 1-2-4-5-7-8-9-10-12-ம் இராசியிலிருந்தால் பகை வர்களால் பலவிதத துன்பமும் கவலையுங் கொடுத்துக்கஷ் டப்படுத்துவார். புதன் 2-4-10-11-ம் இராசியிலிருந்தால் புத்தி சாதுர்யமும் லட்சுமீகரமும், திரவிய லாபமும் தரு வான். மற்ற 1-3-6-7-8-12-ம் இராசியிலிருந்தால் மதி மயக்கம் சோம்பலும் துக்கமும் வறுமையும் தந்து அலைச் சற் படுத்துவார். குருபகவான 2-5-7-9-11-ம் இராசியி லிருந்தால லட்சுமீகரமும, திரவியலாபமும, பெருமையும, புகழும கீர்த்தியும் தந்து மேன்மையாயிருக்கச்செய்வார். மற்ற 1-3-4-6-8-10-12-ம இராசியிலிருந்தால் கஷ்டமும், கவலையும், பகைவரால் துனபமும துயரமும அடையச் செய்வார். சுக்கிரன் 1-2-3-4-5-8-9-11-12-ம் ராசியி லிருந்தால் புத்தி விருத்தியும் மனோற்சாகமும் சம்பத்தும் திரவிய லாபமும் தருவார் மற்ற 6-7-10-ம் இராசியிலிருந் தால் துக்கமும் துன்பமும் கவலையும் வறுமையும துயரமுமான கஷ்டபலனைத்தருவார். சனிபகவான் 3-6-11-ம் இராசியிலிருந்தால் தைரியமும் கீர்த்தியும் திரவிய லாபமும் பலவிதமான நன்மைகளும் கொடுப்பார். மற்ற 1-2-4-5-7-8-9-10-12-ம் இராசியிலிருந்தால் பலவித துன்பமும் வறுமையும் பகைவரால் கலகமும் வழக்கு முத லாகிய கஷ்ட பலன்களையும் தருவார்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இராகு கேது 3-6-11-ம் இராசியிலிருந்தால் மன தைரியமும் பலவிதமான நன்மையும் திரவிய லாபமும் தருவார்கள். மற்ற 1-2-4-5-7-8-9-10-12-ம் இராசியி லிருந்தால் கலகமும், துன்பமும், துயரமும், நஷ்டமும், வறுமையும், திகிலுமாகிய கஷ்டபலனைத் தருவார்கள். இவ்விதமே நவக்கிரகங்கள் 12-ம் இராசியிலும் சஞ்சரிக் கும்போது ஜன்ம ராசியே முதல் ராசியாக நியமித்துக் கொண்டு மற்ற ராசியாகிய 11-லும் கிரகங்களிருக்கும் நோக்கத்தைக் கண்டு சுபாசுப பலன்களைத் தெரிந்து கொள்ள வேண்டியது.

சீஷன் :—சுவாமி! தாங்கள் உபதேசித்தவை யனைத் துங் கவனித்துணர்ந்தேன். ஆனால் தாங்கள் தெரிவித்த விதமே சிலருக்குச் சுபஸ்தானத்தில் கிரகங்கள் வந்தாலும் கஷ்டபலனைத் தருகிறார்கள். சிலருக்குக் கிரகங்கள் அசுப ஸ்தானத்திலிருந்தாலும் பலவிதமாகிய நன்மையுந் திர விய லாபமும் தருகின்றார்களே. அதன் காரணமென்ன? தெரிவிப்பீர் சுவாமி

குரு:—சிஷ்யா!—நீ உரைத்தும் உண்மை. ஒவ் வொரு ஜாதகர்கட்கும் சந்திரனின்ற இராசி வீடு ஜன்ம ராசியென்றும், உடல்ராசி யென்றும் பெயர். உதய லக் கினமே, ஜன்ம லக்கினம் உயிர் லக்கின மென்றும் சொல் லப்படும். இந்த ஜன்ம லக்கினத்துடனே சேர்ந்த பனி ரெண்டு வீட்டிலிருக்கும் கிரகங்கள் 9-ம் தமது திசாபுத்தி களில் தாங்களிருந்த ஸ்தான பலனை யனுசரித்துப் பலன் தருவார்கள்.

CC-0. OldTTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சிஷன் :—அதன் காரணத்தை எனக்குச் சற்று விபரமாய்ச் சொல்வீர் சுவாமி.

குரு :—முதலில் குறிப்பித்திருக்கும் ஜனன லக்கின சக்கரத்தில் சொல்லியபடியே அவரவர்கள் பிறந்த வேளையில் உதயமான நாழிகை அளவின்படியே குறிப்பித்த லக்கினத்துடனே சேர்ந்த பனிரெண்டு ஸ்தானத்தின் பலனைத் தெரிவிக்கின்றேன் கவனிப்பாய்.

1-இலக்கினம், உயிர்லக்கினம் தனது சுக துக்கம் கவனிப்பது.

2-வது குடும்பஸ்தானம், வாக்குஸ்தானம், வித்யாஸ்தானம்.

3-வது தைரியஸ்தானம், தீரஸ்தானம், சகோதரஸ்தானம்.

4-வது சுகஸ்தானம், மாதுரு ஸ்தானம், வாகனஸ்தானம்.

5-வது புத்திரஸ்தானம்.

6-வது சத்துருஸ்தானம், ரோகஸ்தானம்.

7-வது களத்திரஸ்தானம், விரயஸ்தானம்.

8-வது ஆயுஸ்தானம்.

9-வது பிதுர்ஸ்தானம், பாக்கியஸ்தானம் கர்மஸ்தானம்.

10-வது ஜீவனஸ்தானம், தர்மஸ்தானம்.

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

11-வது மூந்த சகோதரஸ்தானம், இலாப ஸ்தானம்.

12-வது சயஸ்தானம், விரயஸ்தானம்.

என்று முன்னமே சொன்னது கோட்சார பலனுக்கிசைந்த பலனென்றால், கிரகங்களின் திசாபுத்திகளுக்கும் வெவ்வேறு விதமான பலன் நடக்கும். அச்சமயம் திசா புத்திகளில் கிரகங்கள் நல்ல பலனைக் கொடுப்பதா யிருந்தால், கோட்சாரத்தில் கிரகங்கள் கெட்ட ஸ்தானத்தி லிருந்தாலும், நல்ல பலனைச் சமமாய்த் தருவார்கள். ஆனால், திசாபுத்தி நாதர்களே கெட்ட ஸ்தானத்திலிருந்து கொடிய பலனைத் தரும்போது கோட்சாரத்தில் கிரகங்கள் நல்ல ஸ்தானத்திலிருந்தாலும், வறுமையும் சஞ்சலமு மடைந்து, விசனித்துக் கொண்டிருப்பார்கள்.

சீஷன் :—சுவாமி! கிரகங்கள் திசாபுத்திகளின்கஷ்ட சுகத்தைக் கொடுக்கும் ஸ்தானங்களின் விபரத்தைச் சொல்வீர்.

குரு:—சிஷ்யா! சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது இந்நால்வரும் கேந்திரஸ்தானத்திலிருந்தால் நல்ல பலனும், சந்திரனும், புதன், குரு, சுக்கிரன் திரிகோண ஸ்தானத்திலிருந்தால் நல்ல பலனும் கொடுப்பார்கள். இதை யனுசரித்துதான் அவரவர்களின் சுகதுக்க பலா பலன்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

சீஷன் :—சுவாமி! முன்னம் தாங்கள் தெரிவித்த வித மாக ஒவ்வொரு இராசியிலும் கிரகங்களிருக்கும் வருஷம்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மாதம், நாள் தெரிவித்தீரே. ஆனால் நவக்கிரகங்களின் திசை வருஷமெவ்வளவு?

குரு:—நவக்கிரகங்களின் திசை வருஷம்-120

சிஷன்:—அப்படியா? ஆனால் ஒவ்வொரு கிரகங்களுக்கும் திசை வருஷம் எவ்வளவு?

குரு:—சொல்லுகிறேன் கவனிப்பாய்.

நவக்கிரகங்களின் திசை வருஷம்

சூரியனுக்கு	வரு	6	சனிக்கு	வரு	19
சந்திரனுக்கு	,,	10	புதனுக்கு	,,	17
செவ்வாய்க்கு	,,	7	கேதுவுக்கு	,,	7
இராகுவுக்கு	,,	18	சுக்கிரனுக்கு	,,	20
குருவுக்கு	,,	16			
				ஆக வரு	120

சிஷன்:—சுவாமி, இந்த ஒன்பது கிரகங்களும் தமது திசையில் எவ்வெவ்விதமான பலனைத் தருவார்கள்?

குரு:—அடியில் குறிப்பித்த விதமாய்த் தனது திசையில் அவ்வவ்விதமான பலனைத் தருவார்கள்.

நவக்கிரகங்கள் தமது திசையில் கொடுக்கும் சுபாசுப பலன்கள்

சூரியபகவான் லக்கினம் 3-6-7-10-11ம் ஸ்தானத்தில் குரு சுக்கிரன் புதன் வளர்பிறைச்சந்திரன் சேர்க்கையாலும் பார்வையாலும் தமது திசை 6 வருஷத்திலும் கீர்த்தியும் சம்பத்தும் உத்தியோக விர்த்தியும் பிதா பந்துக்கள் சகாயமும் கிடைக்கும். ஆனால் மேற்குறிப்பித்த

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஸ்தான மல்லாமல் மற்ற ஸ்தானங்களிலிருந்து செவ்வாய் சனி ராகு கேது பார்வை பெற்றாலும், சேர்க்கையானு லும் பலவிதமான துன்பமும், கஷ்டமும், கவலையும், வறு மையும் தந்து ஊரூராயலையச் செய்யும்.

சந்திர பகவானும் சகல ஸ்தானத்திலிருந்து குரு-சுக்கிரன்-புதன் பார்வை பெற்றாலும், சம்பந்த முற்றிருந் தாலும், தனதான்ய சம்பத்தும், மனைவி, புத்திரர், பந்து ஜன சகாயமும் வித்யாபிவிருத்தி, உத்தியோகமுங் கிடைக்கும்- ஆனால், ஆறெட்டு பன்னிரண்டிலிருந்தா லும் செவ்வாய் சனி ராகு கேது பார்வையானாலும், சம் பந்தமாயிருந்தாலும் மனவிசாரம், சஞ்சலம், மந்தபுத்தி, வறுமை, சீதளசுரம் புகை முதலான கஷ்டங்களை உண் டாக்கும்.

செவ்வாய் பகவான் ஜனனகாலத்தில் கேந்திர ஸ்தா னங்களிலிருந்தும் குரு சுக்கிரன் பார்வை பெற்றாலும் சம் பந்தமா யிருந்தாலும், தனது திசை 7-வருஷம் தைரியம், மனோற்சாகம், உத்தியோகவிர்த்தி, திரவியலாபம், அதி காரம், சம்பத்து கீர்த்தி முதலான நல்ல பலன்களுண்டா கும். ஆனால் கோண ஸ்தான முதலானவைகளிலிருந்தும் சனி ராகு கேது பார்வையானாலும், பகையும். சண்டை சச்சரவும், கலகமும், உஷ்ண வியாதிகளுமுண்டாகும்.

ஆனால், புதபகவான் 6-8-12ம் ஸ்தானத்திலிருந்து சனி ராகு கேது பார்வையானாலும் சம்பந்தமானாலும் கஷ்ட பலனைத் தருவார். மேஷம் ரிஷபம் கடகம் கன்னி மகரம் முதலான ஸ்தானங்களிலிருந்தால் தனது திசை

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

18-வருஷம் வரையிலும் மனதைரியம், உற்சாகம் உத்தியோக விருத்தி, திரவிய லாபமுங் கிடைக்கும். மற்ற ஸ்தானங்களிலிருந்து செவ்வாய் சனி சம்பந்தமா யிருந்தாலும், பார்வை பெற்ருலும் பலவிதமான கலகமும், சஞ்சலமும், துயரமும், வறுமையும், மனபயங்கரமும்பொருந்தி யிருக்கும்.

குருபகவான் ஜனனலக்கினம் வாக்குஸ்தான கோண திரிகோண முதலான ஸ்தானங்களி லிருந்தால் தனது திசை 16-வருஷத்திற்கும் வித்தியாலாபம், உத்தியோக விருத்தி, புத்திர பாக்கியம் பந்துமித்திரர் சகாயம், திரவிய லாபமும் உண்டாகும். ஆறெட்டு பனிரெண்டாம் ஸ்தானங்களிலிருந்தால் கஷ்டபல னுண்டாகும்.

சனிபகவான் ஜனனகாலத்தில் கேந்திர ஆட்சி உச்ச ஸ்தானத்திலிருந்து குரு-சுக்கிரன்-புதன் பார்வையானுலும் சம்பந்தமா யிருந்தாலும் தனது திசை 19-வருஷத்திற்கும், மனதைரியம், உத்தியோக விர்த்தி, திரவிய லாபம், வியாபார விருத்தி, சர்வாதிகார மேன்மை முதலானவை யுண்டாகும். மற்ற கோண திரிகோண ஸ்தானங்களிலிருந்தால் பலவித கலவரமும், கலகமும் சண்டை சச்சரவும், வழக்கு வியாஜ்ஜியம், வறுமை, கைப்பொருள் சேதம், சோம்பல் முதலாகிய கஷ்டபலனு யிருக்கும். புத பகவான் ஜனன காலத்தில் லக்கினத்திலும் வ்ாக்கு ஸ்தான கோண திரிசோண சப்தம ஸ்தானங்களிலிருந்து சந்திரன்-குரு-சுக்கிரன் பார்வை பெற்ருலும் சம்பந்த

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மானுலும் தனது திசை 17-வருஷம் வரையிலும் வித்யாபி விர்த்தியும், வியாபார லாபமும், தனதான்ய சம்பத்தும், கீர்த்தியும், வியாபார லாபமும், தனதான்ய சம்பத்தும், கீர்த்தியும் பெருமையும் உண்டாக்கும்.

கேது பகவான் ஜனனகாலத்தில் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி மகரம் முதலான ஸ்தானங்களிருந்தால் வித்தை, ஞானம் அறிவு பெருந்தன்மை உத்தியோக விர்த்தி முதலான நன்மையெல்லாந் தனது திசை 7-வருஷம் வரையிலும் கொடுப்பார். ஆனல், மற்ற ஸ்தானங்களிலிருந்து செவ்வாய், சனிபார்வை பெற்றலும் சம்பந்தமானுலும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் கொடுப்பார்.

சுக்கிர பகவான் ஜனன காலத்தில் லக்கினம் வாக்கு ஸ்தானம், கோண திரிகோண ஸ்தானம், சுகசப்தமஸ்தானத்திலிருந்தால் திரவிய சம்பத்து, வித்யாபிவிருத்தி, உத்யோக சம்பத்து, வேசிநேசம், மனைவி மைந்தர், சம்பத்து, திரவியலாபமும், சுக்கிரபகவான் தனது திசையாகிய 20-வருஷம் கொடுப்பார். ஆனல் மறைவுஸ்தானங்களில் பகை நீசமாயிருந்தால், துன்பமும், துயரமும், கலகமும் வருமையுமாகிய கஷ்டபலனைக் கொடுப்பார். இவ்விதமே ஒன்பது கிரகங்களும் தமது திசைகளில் அவரவர்கள் ஜனன காலத்திலிருந்த தமது திசைகளில் சுபாசுப பலன்களைத் தருவார்கள்.

சீஷன்:—சுவாமி! தாங்களுரைத்த விதமே கவனித்திடினும் ஒவ்வொரு கிரகங்களின் திசைகளின் விபரத்தையும் அந்தந்த கிரகங்களிலிருந்த ஸ்தான பலனுக்கிசைந்த பலன்களைக் கொடுக்கும் விபரத்தையும் சொன்னீர். ஆனல், அந்தந்த கிரக திசையில் நடக்கும் புத்தி நாதர்கள் கொடுக்கும் சுபாசுப பலன்களையும் அடியேனுக்கு விபரமாய் புகல்வீர்.

6

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு:—நவக்கிரகங்கள் ஒன்பது பேரில் ஒருவர் திசா நாதரானால் மற்ற கிரகங்கள் அந்தந்த திசையிலேயே புத்திநாதராய் விளங்கித் தமக்குரிய பலா பலன்களைத் தருவார்கள்.

சீஷன் :—சுவாமி! இந்தவிஷயம் அடியேனுக்குவிவரமாய்ச் சொல்வீர்.

குரு:—சீஷ்யா! யான் உனக்கு முன்னமே தெரிவித்திருக்கிறேனே அவ்விதமாகவே குழந்தை பிறந்த தினத்தில் எந்த நக்ஷத்திரம் வருகிறதோ அந்தந்த நக்ஷத்திரத்தில் பிரவேசிக்கும் கிரகங்களே திசாநாதர்களாய் வருவதுண்டு. அவர்களைச் சேர்ந்த மற்ற கிரகங்களே புத்தி நாதர்களா யிருந்து அவரவர்கட்கிசைந்த பலாபலன் களைத் தருவார்கள்.

சீஷன்:—சுவாமி! அந்த நக்ஷத்திரங்களின் ஆதியந்த பரமநாழிகையின் விவரமெவ்வளவு? அவைகிழமையைப் போல் வராமல் ஒவ்வொரு நாட்களிலும் பேதப்பட்டு வருவதேன்?

குரு:—சிஷ்யா கவனமாய்கேட்பாய். கிழமைகளாகிய ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி என்னும் கிழமைகள் 7-க்கும் கால அளவின்படியே முதல்நாள் 1, சூரிய உதயாதி முதல் மறுநாள் சூரிய உதயாதியில்தான் அடுத்த கிழமையாகும். எப்படியெனில், ஞாயிற்றுக்கிழமை காலை உதயாதியில் 1-நாழிகை எண்ணிக்கையாக மறுநாள் உதயத்தில் 60-நாழிகையாகும். அப்போது திங்கட்கிழமையாகும். இந்த 60-நாழிகைக்கு இங்கிலீஷ் மணி வேளை 24-மணி ஆகும். அதனாலேதான் கிழமைகள் மாத்திரம் நாள் தவறாமல் பொருந்தி யிருக்கும். நட்சத்திரங்கள் அவ்விதமாய்ப் பொருந்தாது.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஏனெனில், நட்சத்திரங்கள் 27-க்கும் நாழிகைகள்பேதத் பட்டு வருவதால் முதல் நாளில் கொஞ்சமும் மறுநாள் மற்றதும் முடிந்து அடுத்த நட்சத்திரமும் வந்துவிடும். இதனாலேதான் நட்சத்திர பேதமாய் விடுவதுடன் முதல் நாளிலும் இருந்த நட்சத்திரமே மறுநாளிலுமிருப்பதுடன் அடுத்த நட்சத்திரமும் உதயமாகும். இதற்கிசைந்த கிரக திசாபுத்திகளும் அமையும்.

சீஷன் சொல்வது

விருத்தம்

அன்புடை என்குருவே நட்சத்திரங்கள்
அறுபது நாழிகைக்கும் விபரந்தன்னை
தன்மையுடனெந்தனுக்குப் புகல்வீரென்று
தமதுதிரு வடிதன்னைத் துதித்துநிற்கும்
என்மனதிற் கிசைந்தபடி சொல்வீரென்று
இருகரமும் சிரமீது குவித்துயானும்
நன்மையுடனேதுதித்தேன் ஜோதிஷத்தை
நலமுடனே கற்பிக்கும் குருவே போற்றி.

சீஷன் :—சுவாமி! தாங்கள் சொன்னவிதமே ஒவ்வொரு நாளிலும் நட்சத்திரம் பேதப்படுவதால் அந்த நட்சத்திரங்களின் நாழிகை விபரத்தை அடியேனுக்கு விபரமாய்த் தெரிவிப்பீர்.

குரு :—சரி! அப்படியே தெரிவிக்கிறேன், கவனிப்பாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நக்ஷத்திர ஆதியந்த பரமநாழிகை

அசுவனி	65	சுவாதி	65
பரணி	56	விசாகம்	61
கிருத்திகை	56	அனுஷம்	69
ரோகணி	56	கேட்டை	62
மிருகசீரிடம்	56	மூலம்	63½
திருவாதிரை	56	பூராடம்	62
புனர்பூசம்	62	உத்திராடம்	55
பூசம்	52	திருவோணம்	65
ஆயில்யம்	56	அவிட்டம்	66½
மகம்	54	சதயம்	53½
பூரம்	56	பூரட்டாதி	61½
உத்திரம்	56	உத்திராட்டதி	63½
அஸ்தம்	57	ரேவதி	64
சித்திரை	60		

ஆக நட்சத்திரங்கள் 27

மேற்குறிப்பித்தவிதமாக நக்ஷத்திரங்களின் நாழிகை பேதப்படுவதினுல்தான் ஒவ்வொரு தினத்திலும் நக்ஷத்திரங்கள் வித்தியாசமாய்ப் புரண்டு வருவதும், ஒவ்வொரு நக்ஷத்திரம் 2-நாளையிலும் பொருந்தியிருக்கிறது. ஆகையால் காலநிர்ணய அளவின்படியே நக்ஷத்திரத்திற்கு 60 நாழிகைதானென்று தீர்மானமாய்ச் சொல்ல முடியாது.

சீஷன் :—சுவாமி! கிரகங்கள் 9-பேரும் திசாநாதர்களாக வருவது எந்தெந்த நக்ஷத்திரங்களால்? அதன் விபரத்தையும் அடியேனுக்கு விபரமாய்ச் சொல்வீர்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கயவர்களும் கபடர்களும் நம்பமாட்டார்
காசினியி லவர்வார்த்தை கவனிக்காமல்
பயமில்லா தைரியமாய் வர்த்தக உத்யோகம்
பக்ஷமுடன் செய்தால்நற் பலனுண்டாமே.

(இ-ள்.) என் அன்பான சிஷ்யனே! மனிதர்களின் கால நிர்ணயத்தின்படியே அனுபவிக்கும் சுகதுக்கத்தின் பலனை அவரவர்கள் பிறக்கும்போது உதயமாகும் இலக்கினத்தை இன்னதென்றாராய்ந்துணர்ந்து அந்த இலக்கினத்திலிருக்கும் கிரகங்கள் கொடுக்கும பலாபலன்களை இன்னின்னவை யென்று கவனித்து அதன்படியே மனிதர்கள் செய்யும் காரியமும், வியாபாரம், உத்தியோகம் முதலானவை செய்வதற்குப் பொருந்தி யிருக்கும்.

சீஷன் விருத்தம்

அன்பான குருநாதா பூலோகத்தில்
அவரவர்கள் வெவ்வேறாய் சுகதுக்கத்தை
துன்பசுகமாகவே யனுபவிக்கும்
சூக்ஷமத்தை யெந்தனுக்கு விபரமாக
நன்மையுட னினிதாக உரைப்பீரென்று
நலமாயுன் பாதத்தை பணிந்தேன் சுவாமி
பன்னுவீ ரென்மீது கருணைகூர்ந்து
பனிரெண்டு ராசிகளின் பலனைத்தானே.

(இ-ள்.) சுவாமி! உலகிலுதித்த மனிதர்கள் சகலரும் பகவானுடைய கிருபையால்தானே பிறந்தவர்கள்; சிலர் ஏழைகளாகவும், சிலர் தனவந்தர்களாகவும், சிலர் அங்கஹீன வியாதியஸ்தராகவும், சிலர் அழகானந்த முகவசீகர தேஜசமைந்தவர்களாயிருப்பதும், சிலர் தான்யசம்பத்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

துடனிருப்பதும், சிலர் தரித்திர இம்சையாயிருப்பதும், சிலர் புத்ர மித்ர களத்ர பந்துக் கூட்டத்துடன் குடும்ப ரக்ஷகரா யிருப்பதும், சிலர் ஆதரவில்லா பரதேசியாய் அலைந்து திரிவது மென்ன காரணமோ? அவை யனைத் தும் அடியேனுக்கு விபரமாய்ச் சொல்வீர்.

குரு சொல்வது

எண்சீரடி விருத்தம்

அவரவர்கள் முன்செய்த வினையினாலே
அவனியில்தாய் வயிற்றிலிருந் துதிக்கும்போது
நவக்கிரகம் பனிரண்டு ராசிதன்னில்
நலமுடனே தானிருக்கும் சமயம்பார்த்து
தவறுமல் சுகாசுகத்தை கொடுப்பதென்று
தாரணியின் ஜோதிடநூ லுரைப்பதெல்லாம்
கவனமுட னாராய்ந்து பலனைக்கண்டோர்
காசினியின் மாய்கையெனக் கருதுவாரே.

(இ-ள்.) அன்பான சிஷ்யா! மனிதர் முன் சென்மத் திற் செய்த கர்மானுசாரத்தினால் மறு ஜெனனத்தில் தாயார் வயிற்றிலிருந்து பூமியிற் பிறக்கும்போது பஞ்சாங் கத்தைப் பார்த்து அன்றைய தினத்தின் நக்ஷத்திரத்தில் சந்திர னிருக்கும் ஸ்தானமே ஜென்மராசி யென்றும் பிறந்த வேளையே ஜனன லக்கினமென்றும் கவனித்துக் குறிப்பித்துக்கொண்டு அந்த லக்கினத்தின் பலனைக் கவனித்தால் அவரவர்களின் ஆயுள்வரையிலும் அவரனு பவிக்கும் சுகதுக்கங்கள், அவரவர் அனுபவிக்கும் கஷ்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

டங்களும், அவர்கள் ஆயுள் முதலானவை அறிய குறிப்பாகும். இலாப நஷ்ட மிவ்வளவென்றும் கவனிப்பதற்காகும்.

சீஷன் விருத்தம்

அவனியிலே பிறந்திருக்கும் மனிதர் தங்கள்
அல்லல்துன்பத்தால் திகைத்துக் கலங்கும்போது
கவனமுடன் அவரவர்பேர் ராசிபார்த்து
கழறுவீரென்ற லெவ்விதமாய்ச் சொல்வேன்
தவயோகம் புரியுமெந்தன் குருநாதா நீர்
தயைபுரிந்து பனிரெண்டு ராசிதன்னில்
நவக்கிரக மிருந்துபலன் கொடுப்பதெல்லாம்
நவிலுவீ ரென்றும்மைப் பணிந்திட்டேனே.

(இ-ள்.) சுவாமி! உலகத்தில் பிறந்த மனிதர்கள் தமது கால வித்தியாசத்தினுல் கஷ்டமும் கவலையும் அதிகரித்துத் தமது பேர் ராசியைப் பார்த்து பலன் சொல்வீரென்ருல், அதற் கெவ்விதமாய்ச் சொல்வதோ அதன் விபரத்தை அடியேனுக் கருளிச் செய்வீர் சுவாமி!

குரு விருத்தம்

உலகுதனில் மனிதர்கள் பிறந்தநாளில்
உற்றநக்ஷத் திரத்தி னெழுத்தினுலே
நிலையான பேரமைத்துப் பொருத்தமாக
நீட்டிய அக்ஷரஞ்சேர்த்துப் பேருமிட்டால்
கலவரமில் லாமலந்த ராசிவீட்டில்
கதிர்மதிசேய் மால்குருசுக்கிரன் சனியும்பாம்பும்
நலமுடனே யிருந்துபலன் கொடுக்குமார்க்கம்
நவிலுவே னென்சிஷ்யா கவனிப்பாயே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) எனது அன்பான சிஷ்யா! நீ கவனிப்பாய்; உலகத்திலிருக்கும் மனிதர் தமது பேர் ராசியைப் பார்த்துப் பலன் சொல்லவென்ருல், அவர்கள் பெயரைக் கேட்டால், அவர்கள் தனது பெயர் மதுரையென்ருல், அப்பேரின் முதலெழுத்து ம என்றிருப்பதால் மக நக்ஷத்திரத்திற்கு நாம நக்ஷத்திர எழுத்துக்கள் (ம-மி-மு-மெ) ம-என்ற முதலெழுத் திணைந்த பெயர் மதுரை. அந்த நக்ஷத்திரத்திற்கு அமைந்த ராசி எது என்ருல் மகம், பூரம், உத்திரம் முதற் பாதமும் கொண்டது சிம்மராசியாகும். அந்த ராசியே முதல் வீடாகக்கொண்டு மற்ற பதினேரு இராசிவீட்டிலு மிருக்கும் கிரகங்களால் இன்னினன பலன் நடக்குமென்று தெரிந்துரைப்பாயாஞல் அவரவர்கள் அனுபவத்திற்குப் பொருந்தி யிருக்கும்.

அதெவ்விதமென்ருல்,

விருத்தம்

சூரியன் ஜன்மம் ரெண்டில்
துலங்கிய நாலே ழைந்தில்
பாரிய வொன்பா னெட்டில்
பகர்ந்த பனிரெண்டில் நின்ருல்
காரியக் கேடலைச்சல் துர்க்
கனவுகண் தலைநோக் காடு
வீரிய மின்றி நோயால்
வீட்டைவிட் டோட்டுந் தானே.

(இ-ள்.) சூரியபகவான் ஜன்மராசியிலும் இரண்டு, நான்கு, ஐந்து, ஏழு, எட்டு, ஒன்பது, பனிரெண்டாம் இராசி வீடுகளில் எதிலாவது சூரிய பகவானிருந்தால் தான் செய்ய நினைக்கும் காரியமாகாது. மனது பலவிதமாகிய ஆலோசனையால் அலைந்து கொண்டிருக்கும். இரவில் நித்திரை செய்யும்போது துர்க்கனவு காணும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கண்ணெரிச்சலா யிருக்கும். சோம்பலாகவும், சரீர அசௌக்கியமாகவும் இடம் விட்டுப் பெயர்வதற்காக வும் தேச சஞ்சாரஞ் செய்வதற்காகிய விருப்பமு முண் டாகும்.

சூரியன் சுபபலன் கொடுக்கும் ராசிவீடுகள்
சூரியனிருந்த ராசிகளின் சுபபலன்

விருத்தம்

ஞாயிறு மூன்றுமாறும்
நற்பதி னொன்றுபத்து
ஏயுறு மிவ்விடங்கள்
இருந்திடிற் செல்வமுண்டாம்
ஈய்தலு மிரக்கமுண்டாம்
எதிரியை வெல்லலாகும்
சேயது தரிக்கும்பாரில்
தீராநோய் தீருந்தானே.

(இ-ள்.) சூரியபகவான் ஜனன ராசிக்கு மூன்று ஆறு, பத்து, பதினோரா மிடங்களி லிருந்தால் திரவிய லாபமும், தானதருமஞ் செய்யுந் தன்மையும், இரக்கமும், தயாளமும் எதிரியை வெல்லும் தன்மையு முண்டாகும். புத்திர பாக்கியமும் கிடைக்கும். சரீர வியாதி விலகி சவுக் கியமும் சுககம்பத்துங் கிடைக்கும்.

சந்திரன் துர்ப்பலன் கொடுக்கும்
இராசி வீடுகள்

விருத்தம்

பிறைபனி ரெண்டொன்பா னெட்
டிரண்டுநான் கைந்தில்நிற்கில்
சிறையுளான் கிலேசமுள்ளான்
திருடுவான் தீங்குசெய்வான்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நிறையிலான் நன்றியில்லான்
நிஷ்டூரன் நீதியில்லான்
முறையில்லான் வணக்கமில்லான்
மூதேவிக் குறையுள்ளாவான்.

(இ-ள்) சந்திரன் ஜனனராசிக்கு இரண்டு, நான்கு, ஐந்து, எட்டு, ஒன்பது பனிரெண்டாமிடங்களிலிருந்தால் அந்த ஜாதகர்களுக்குப் பலவிதமான மனசஞ்சலம், நிஷ்டூரம், அநியாய வழக்கு, பலவித கஷ்டநஷ்டம், சிறைச்சாலையிலிருத்தல், வரன்முறையில்லாமல்வார்த்தையோடுதல், சோம்பல், துக்கம், நித்திரை, மயக்கம், மூதேவி வாசம் பொருந்தியவர்களா யிருப்பதற்காகும்.

சந்திரன் நல்ல பலனைக் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

சந்திரன் மூன்றேடொன்றுஞ்
சார்பத்துப் பதினொன்றேழும்
இந்திரன் போலேவாழ்வான்
எதிரிமார் பாணியாவான்
தந்திர வாதியாவான்
சந்திரன் பாக்கியனாவான்
மந்திர வாதியாவான்
வைத்திய வாதனாமே.

(இ-ள்) சந்திரபகவான் ஜனன ராசிக்கு ஒன்று, மூன்று, ஆறு, ஏழு, பத்து, பதினொன்றுமிடத்திலிருந்தால், வியாபார விருத்தி, உத்தியோகம், சம்பத்து,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பகைவர்கட்கு அஞ்சாத தைரியமும், சந்திர சாமார்த்திய மும் வைத்தியத்திலும் வாதத்திலும் சிறந்தவர்களாகவு மிருப்பதற்காகும்.

செவ்வாய்பகவான் துர்ப்பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

நிலமகன் ஜன்மதன்னில் நிலவியரெண்டில் நான்கில், நலமறுமெட்டிற்பத்தில்நாட்டியபன்னிரண் டில்நின்ருல், பலவிதக்கேடுபெண்டீர் பதிபொருள் நாசம்வைப்பு, குலவியவாயுதத்தால் குலகுணம்பதி யும் போமே.

(இ-ள்) நிலமகனெனும் செவ்வாய்பகவான் ஜனன ராசியிலும், 2-4-6-8-10-12-ஆமிடங்களி லிருந்தால் பல விதமான கலகமும் சண்டையும் சச்சரவும், மனையாள் முதலாகிய பந்துக்கூட்டங்களுக்கு வியாதியும் கெடுதியும் கைப்பொருள் சேதமும் வைப்பு முதலிய கஷ்டத்தினுலும் குரூர குணத்தினுலும் இரும்பிடம் வாசஸ்தான கஷ்ட மும் கவலையுமா யிருக்கும்.

செவ்வாய்பகவான் நல்ல பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

தண்பதி ஞென்றுமாறுந் தன்னுடன் மூன்றும் வீட்டில், திண்குச னிற்கிற்றீர்க்க வயதுடனீகை யுள்ளான், பெண்கலியாண முண்டாம் பிள்ளைபாக் கியமுண்டாகும், மண்மனை பயிருமுண்டாம் வாழ்வு கள்மிகவுண்டாமே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்). குஜக்கிரகமென்னும் செவ்வாய் பகவான் ஜனனராசிக்கு 3-6-11-ம் வீட்டிலிருந்தால் திரவிய லாபம் சரீராரோக்கியம் சுயசம்பத்தும் புத்திரபாக்கிய சம்பத்தும் மங்களகரமாகிய கலியாண விஷயங்களும், பூமிலாபம் பயிர் விருத்தியும் தனந்தான்ய சம்பத்தும் உண்டாகும்.

புதபகவான் துர்ப்பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

புத்திதான் ஜென்மதன்னில்
பொருந்திமூன் றைந்திலேழில்
உந்தியவெட் டொன்பானில்
உகந்த பன்னிரண்டில்நின்ருல்
சிந்தைபேதகமாம் வித்தை
திரவியங் களவுபோகும்
கொந்திலர்குழலாள் சேதங்
கோளிஞற் குற்றமாமே.

(இ-ள்) புதபகவானுனவர்ஜனனராசிக்கு 1-3-5-7-8-9-12-ம் வீட்டிலிருந்தால் மனச்சோர்வு, மறதி, வித்தையின்மீது வெறுப்பு, திரவியங் களவு போவது, மனையாளுக்குக் கஷ்டம், புத்தி தடுமாற்றம், வியாபார நஷ்டம் முதலாகிய பலவித கஷ்ட நஷ்டங்களுமா யிருக்கும்.

புதபகவான் நல்ல பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

அதுவுடனிரண் டெட்டாறு பதினென்ருமிடத்திற், புதனிருந்தக் கால்மென்மேல் புத்தியும் யோக

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

முண்டாம், சுதனுமேல் சுதனுமுண்டாஞ் சுற்றமுஞ் சுகமுண்டாகும், ரதகஜ துரகஞ்சேனை நாலுமே மிக வுண்டாமே.

(இ-ள்) புதபகவான் ஜனன ராசிக்கு 2-5-6-11-ம் இடத்திலிருந்தால் அறிவு, ஞானம், புத்தி விருத்தியுண்டாகும். மனைவி மைந்தர் சுகஜீவியா யிருப்பதற்காம். பந்து மித்திரர் சுகவாழ்வு, இரதகஜதுரக சேனைசைன்ய லாபமும் கிடைக்கும்.

குருபகவான் துர்ப்பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

பத்துடன்மூன்றுநான்கு பன்னிரெண்டெட்டோடுற்ற
மத்தமமாறிலொன்றின் மன்னிருக்கும்போது
நித்தமுமலைச்சலுற்ற நிட்டூரவாதபித்தம்
பெற்றவள்பிறப்புபிள்ளை பெண்சாதிபகையுமாவார்.

(இ-ள்) குருபகவானனவர் ஜனனராசிக்கு 1-3-4-6-8-10-12-ம் இடங்களிலிருந்தால், மனச்சோர்வு திகில் கஷ்டம், கவலை, பகை, வறுமை, கண்டாதி கண்டங்கள் முதலான துன்பம், பிணிமுதலானமனவிசாரமாயிருக்கும்.

குருபகவான் சுபபலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

பெருபதினொன்றைந்தேழில்
   பேர்ஒன்பதாமிரண்டிற்றேவ
குருவரிற் செல்வஞ்சீரூர்
   குதிரை வெண்குடைதீவர்த்தி
தருமமுந் தானமுண்டு
   தாய்தந்தை துணையுமுண்டு

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அருமையும் பெருமையுண்டாம்
அரசர் சேவையு முண்டாமே.

(இ-ள்) குருபகவானுனவர் ஜனனராசிக்கு 2-5-7-9 11-ம் இடங்களிலிருந்தால் தனதான்ய சம்பத்து, உத்தியோக சம்பத்து, வியாபாரலாபம், அஸ்வவாகனம், தானதர்மஞ் செய்யும் நற்குணமும், வியாபரர லாபமும், தாய் தந்தை மனைவி மைந்தர் சுற்றத்தார் சகாயமும் இலட்சுமி கடாக்ஷமும், பெருமையும், இராஜதரிசனமுங் கிடைப்பதற்காகும்.

சுக்கிரபகவான் நல்ல பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

வெள்ளியோ ராறுமேழும்
விளங்கும் பததாமிடத்தில்
அள்ளிய செம்பொனுண்டாம்
அன்னதானங்க ளுண்டாம்
வெள்ளியுஞ் செம்புமுண்டாம்
வித்தையும் புத்தியுண்டாம்
தெள்ளிய மொழிவுமென்மேல்
திரவியம் திருவுண்டாமே.

(இ-ள்) சுக்கிரபகவான் ஜனனராசிக்கு 6-7-10-ம் இடமாகிய இந்த ஸ்தானங்களி லில்லாமல் மற்ற எந்த ஸ்தானங்களிலிருந்தாலும் திரவிய லாபமும், உத்தியோக சம்பத்தும், வியாபார விருத்தியும், பொன்பொருள் பூஷணுதிகளும், தானதர்ம பரோபகாரஞ் செய்யும்படியான தன்மையும் பொருந்தி யிருக்கும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சுக்கிரபகவான் துர்ப்பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

உக்கிர மாறுமேழு மோர்பத்து பதிகடன்னில் சுக்கிர னிருந்திட்டாலே துன்பமும் தொல்லையுண் டாம், துர்க்குறி மனக்கிலேச சோர்வுடன் சொரியு முண்டாம், வக்கிரம் பிடித்தாப்போலே மயக்கமே மிகவுண்டாமே.

(இ-ள்.) ஜனனராசிக்கு 6-7-10-ம்இடங்களில்சுக்கிர பகவானிருந்தால், உத்தியோக ஸ்தானத்தில் கலகமும் வியாபார நஷ்டமும், பலவிதமான சஞ்சலமும், கஷ்டமும் கவலையும் அதிகரித்து மனவிசாரமாய் இருக்கும்படியான வெறியர்களைப்போ லிருப்பதற்காகும்.

சனிபகவான் நல்ல பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

ஆறுபன்னொன் பான் மூன்றில்
அந்தகன் நிற்குமாகில்
கூறுபொன் பொருளுமுண்டாம்
குறைவிலா செல்வமுண்டாம்
ஏறுபல்லக்கு முண்டா
மிடம் பொருளேவலுண்டாம்
காறுபாலஷ்ட லட்சுமி
கடாட்ச முண்டாகுந்தானே.

(இ-ள்.) ஜனனராசிக்கு 3-6-11-ம் இடங்களில் சனி பகவானிருந்தால் உத்தியோக சம்பத்தும் வியாபார லாப மும், திரவிய லாபமும், வண்டி வாகனாதிகள் முதலான வைபவங்களும் இடம், பொருள், ஏவலாளர் சம்புத் தும், லட்சுமி கடாட்சமும் பொருந்தி யிருக்கும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சனிபகவான் துர்ப்பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

பனிரெண் டொன்பது
  பத்தேழும் பகரைந்து நாலிலெட்டில்
சனியனே யிருந்தாற்றுன்பம்
  சஞ்சலம் துக்கமுண்டாம்
முனிவறல் மூர்க்கரோடு
  மூண்டிடும் கலகத்தாலும்
மனோவிசா ரத்தினாலே
  மறுநக ரோடுவாரே.

(இ-ள்) ஜனன ராசிக்கு, 1-2-4-5-7-8-9-10-12-ம் இடங்களில் சனி பகவானிருந்தால், பலவிதமான கஷ்டமும், கவலையும், சஞ்சலமும், திகிலும், பயங்கரமும், பகைவர் துன்பமும், பித்த வியாதியும், துக்கமும், துன்பமும், துயரமும், வியாபாரத்தில் கஷ்டமும், உத்தியோக ஸ்தானத்தில் கலகமும், மனசஞ்சலமும், குடும்பக் கலகமும் பொருந்தி யிருக்கும்.

இராகு பகவான் துர்ப்பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

ஐந்துபத்தொன்றேழி லிரண்டொன்பான்
  யெட்டில் நான்கில்
வந்திட்ட ராகுதன்னால்
  வையக மனிதர்தங்கள்
சிந்தையும் மிகமெலிந்து
  திரவிய மழிந்து நோயால்
சந்ததம் வைத்தியத்தால்
  தனவிரயஞ் செய்வாரே.

(இ-ள்) இராகு பகவானனவர் ஜனன ராசிக்கு ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஏழு, எட்டு, ஒன்பது,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பத்து, பனிரெண்டாம் இடங்களி லிருந்தால் மனச் சஞ்சலம், திகில், பயங்கரம், பகைவர் விரோதம், உத்தி யோகத்தில் கலகம், வியாபார நஷ்டம், வியாதி, துக்கம், துன்பம், துயரம் முதலான கஷ்ட நஷ்டமாயிருக்கும்.

இராகுபகவான் நல்ல பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

இராகுபன் னொன்றுமூன்று
மிடத்திற் சேரின்
பாகுதேன் பழமும்பாலும்
பதார்த்தமு மன்னமுண்டாம்
ஆகுங்காரியங்க ளுண்டாம்
அன்னதானங்க ளுண்டாம்
வாகுவைப்பாட்டி யுண்டாம்
வரத்துமேல் வரத்துண்டாமே.

(இ-ள்.) இராகு பகவானுனவர் ஜனனராசிக்குமூன்று ஆறு, பதிருென்ரும் இடங்களிலிருந்தால் திரவியலாபம், அறுசுவைபதார்த்த திவ்யான்ன சுகபோஜனுதிகளுடன் பால், பழம், தேன், பலகார வகைகளும் நினைத்தகாரியங் கைகூடுதலு முண்டாம். அன்னதானம் செய்யும்படியான நல்ல நினைவும் தனலாபமும் கிடைக்கும். தாசி, வேசி, சுக சவுக்கியமும் பொருந்தி யிருக்கும். உத்தியோக சம் பத்தும், வியாபார லாபமும் மேன்மேலும் விருத்தியாகும் திரவிய லாபமும் கீர்த்தியும் பொருந்தி யிருக்கும்.

கேதுபகவான் துர்ப்பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

கேதுநான் கைந்தெட் டொன்பான்
கிட்டியீரைந் திரண்டேழ்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஓதுபன்னிரண்டி லொன்றில்
சத்துருக் கிளையுந்தீதாம்
சூதுடன் மயிர்களைந்து
சுடுபட்டு சொரூபமாறிச்
சேதுடன் காசியாத்திரை
தேசாந்திரம் போவார்தாமே.

(இ-ள்.) கேது பகவான் ஜனனராசிக்கு ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பனிரெண்டா மிடங்களிலிருந்தால் மன பயங்கரமும், கஷ்டமும், கவலையும், துன்பமும், பந்துஜனவிரோதமும்; சத்துருக்களின் சூது மார்க்கத்தினுல் பலவிதமான துன்ப மெல்லாம் விளைந்து சகிக்க முடியாமல் தேச சஞ்சாரியாய் சேது, காசி முதலிய க்ஷேத்திர யாத்திரை வாசியாய் அலைந்து திரிந்து மனவிசாரமா யிருக்கும்படியாய் நேரிடும்.

கேதுபகவான் நல்ல பலன் கொடுக்கும் இராசி வீடுகள்

விருத்தம்

மூன்றுபதி ஞென்றிற்கேது
முகமலர்ந் திருக்குமானுல்
ஆன்ருேர்கள் சகாயமுண்டாம்
அதிகார உத்தியோகமுண்டாம்
சான்ருேருஞ் சிநேகமாவார்
சகலசம்பத்து லாபம்
தோன்றியே மனமகிழ்ந்து
சுகமுடன் ஜீவிப்பாரே.

(இ-ள்) கேதுபகவானுனவர் ஜனனராசிக்கு மூன்று, ஆறு, பதினொன்ரு மிடங்களிலிருந்தால் ஞானமும், புத்தியும், பக்தியும், பெரியோர்கள் நேசமும், பந்துக்களின்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சகாயமும், உத்தியோக விருத்தியும், வியாபார லாபமும் பந்துஜன சகாயமும், புத்ர மித்ர களத்ராதி சுக சவுக்கியமும் உண்டாகி சதாகாலமும் மனேல்லாசமாய் ஜீவித்தருப்பதற்காகும்.

சீஷன் விருத்தம்

நவக்கிரகமொன்பதுபேர் மனிதர்கட்கு
நற்பலன்துர்பலன் கொடுக்கும் விபரமெல்லாம்
தவமுனியே குருநாதா உம்மால்யானும்
அவனிதனில் ஜோதிஷனுய் பேரெடுத்து
அனைவர்க்கும் ஜாதகங்க ளெழுதித்தந்து
கவனமுட பலனுரைக்கும் உண்மையெல்லாம்
கற்றுணர்ந்தேன் குருவேனின் னருளினுலே.

(இ-ள்.) குருநாதா! யான் உமது திருவருட்கிருபாவீக்ஷண்யத்தால் மனிதர்கள் பிறந்த ஜாதக மெழுதுந் தன்மை, அந்த ஜாதகத்தின்படியே இராசி சக்கரத்திலிருக்கும் கிரகங்களின் பலன்களையும் விபரமாய்ச் சொல்லுந் தன்மையும் கற்றுணர்ந்தேன். ஆனுல் மனிதர்கள் பிறக்கும்போது உதயமாயிருக்கும் நக்ஷத்திரங்களில் எவ்வெவ்விதமாய் பலன் கிடைக்குமோ அவ் விபரமெல்லாம் அடியேனுக்குப் புகல்வீர் சுவாமி.

குரு விருத்தம்

அன்புடையமாணுக்கா நக்ஷத்திரங்கள்
அனுதினமும்ஒவ்வொன்ருய் வரிசையாக
நன்மையாய்காலங்கழியுந் தன்மையாக
நடப்பதற்குஏற்ருப்போல் வருகும்போது

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தன்மையாய்ப்பிறந்தவர்கள் பலன்களெல்லாம்
தனித்தனியேபோதிப்பே னிவையனைத்தும்
உன்மனதிலேயிருத்தி கற்றுணர்ந்து
உரைப்பாய்நக்ஷத்திரபல னுலகோருக்கே.

(இ-ள்.) எனது அன்பான சிஷ்யனே! நீ மிகவும் புத்திசாலியானதால் யான் இதுவரையிலும் கற்பித்தவை யனைத்துந் தெளிவாய்க் கற்றுணர்ந்து கொண்டாய். ஆனால், தற்சமயம் அந்த நக்ஷத்திரத்தில் பிறந்தவர் களின் குணாதிசயமும் நடத்தையும் பலனையும் உபதேசிக் கும்படியாய்க்கேட்டாய். அது எவ்விதமென்றால் தின மொரு நக்ஷத்திரமாக இருபத்தேழு நக்ஷத்திரங்கள் வரு கிறது அப்படியே காலக்கிரமத்தின் பிரகாரமே யுகாயுகங் கள் வரையிலும் இருபத்தேழு நக்ஷத்திரங்களும் அதி லிருந்து பிரண்டு பிரண்டு வந்துகொண்டே யிருக்கும். அதன் விபர மெவ்விதமெனில் :

விருத்தம்

அனுதினமும் நாள்போல் நக்ஷத்திரங்கள்
அமைந்துவரும் போதுதாய் கர்ப்பம்விட்டு
மனமிரண்டு மா நிலத்தில் வருகும்போது
மன்னியதோர் நாளிலுற்ற நக்ஷத்திரத்தை
கனமுடனே பார்த்தந்த வேளைக்கேற்ற
கணிதம்போ லேபலனும் நடக்குமென்று
உனக்கிந்த மர்மத்தைச் சொல்லிவிட்டேன்
உற்றுப்பார்த் ததன்பலனைக் கவனிப்பாயே.

(இ-ள்.) எனது அன்பான மாணவா! தினந்தோறும் நாள் திதி நக்ஷத்திரம் கரணம்யோகமெல்லாம் வரிசைக் கிரமமாய் வருகிற சமயத்தில் எந்த நாளையில் ஜாதகன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தாய் கர்ப்பத்தைவிட்டு பூமியில் பிறக்கின்றுனோ, அந்த நாளிலிருக்கும் நட்சத்திரத்தினுல் அந்த ஜாதகனுக்கு அமையும் சுகதுக்கமாகிய இரண்டுவித மார்க்கமாய் இனி சொல்லிக்கொண்டு வருகிறேன் கவனிப்பாய்.

அசுவனி	65	சுவாதி	65
பரணி	56	விசாகம்	61
கிருத்திகை	56	அனுஷம்	69
ரோகணி	56	கேட்டை	62
மிருகசீரிடம்	56	மூலம்	63½
திருவாதிரை	56	பூராடம்	62
புனர்பூசம்	62	உத்திராடம்	55
பூசம்	52	திருவோணம்	65
ஆயில்யம்	56	அவிட்டம்	66½
மகம்	54	சதயம்	53½
பூரம்	56	பூரட்டாதி	61½
உத்திரம்	56	உத்திராட்டதி	63½
அஸ்தம்	57	ரேவதி	64
சித்திரை	60		

ஆக நட்சத்திரங்கள் 27

இவ்விதமாய் இருபத்தேழு நட்சத்திரமும் வரும் ஆனுல், நாழிகை பேதத்தினுல் பிரண்டு வரும்போது, ஆதியந்த பரம நாழிகையின்படி ஒவ்வொரு தினத்தில் ஒவ்வொரு நக்ஷத்திரமும் முடிவாகி அந்தமானுலும், மற்ெருரு நக்ஷத்திரம் ஆதியாகிய உதயமானுலும், அவர்கள் பிறந்த சூரியோதய நாழிகையின் காலப் பிரமாணத்தில் எந்த நட்சத்திரமாகுமோ, அந்த நட்சத்திரங்களில் பிறந்த பலனை விபரமாய்ச் சொல்லுகிறேன் கவனிப்பாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அஸ்வனியில் பிறந்தவர்கள் பலன்

விருத்தம்

சந்ததம்பொய் சொல்லாதோன்
தன்விழி சிவந்திருப்பான்
சுந்தர மாகவேதான்
துலங்குமா'பரணம்பூண்பான்
சிந்தையில் கோபமுள்ளான்
சிறந்தநற் கீர்த்தியோங்கி
அந்தமாயிருப்போ ரெல்லாம்
அஸ்வனி நக்ஷத்திரத்தாரே.

(இ-ள்) அஸ்வனி நக்ஷத்திரத்தில் பிறந்தவர் சிவந்த விழியும், ஆபரணப் பிரியமும், கீர்த்தியும், கோபசிந்தையும் உள்ளவர்களா யிருப்பார்கள். ஆனுல், அந்த நக்ஷத்திரங்களில் எந்தக் கிரகம் ஜனன காலத்தில் உதயமாகிறதோ அதன் பலனையும், முன்பு தெரிவித்த இராசி பலனையும், கிரக பலனையும் ஆராய்ந்து சொன்னுல் பலன் நடக்கும், உண்மையான விபரமெல்லாம் ஒழுங்காய் விளங்கும்.

பரணி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

விருத்தம்

அன்னை தந்தையர்கள்மீது
அன்புவைத் தெந்தநாளும்
நன்மையாய் ஆதரிப்பார்
நாடுவ ரற்பநித்திரை
துன்பஞ் சொற்கோபி
துலங்கிடும் பரணிதன்னில்
இன்பமாய் பிறந்தோரெல்லாம்
இவ்வித மிருப்பர்தானே.

(இ-ள்.) பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தாய் தகப்பனுக்குப் பிரியமானவர்களா யிருப்பார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தம்மைப் பெற்றவர்களைத் தன்னுயிர்போல காப்பாற்று வார். சொற்ப நித்திரை புரிவார். சிற்சில சமயம் மனக் கிலேச மதிகரித்து மனிதர்மீது கோபத்தை யுடையவ ராக விருப்பார்கள். ஆனால் அந்தக் கோபம் அதிகரிக்கா மல் உடனுக்குடனே சாந்தமா யிருப்பார்கள்.

கிருத்திகை நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

பக்தியிற் சிறந்தகோமான்
  பகவானைத் தினம்பணிந்து
முத்திமார்க் கத்தில்மேவும்
  மூதறிவோன் வித்வானும்
சத்தியிற் சிறந்துபுத்தி
  சமர்த்தனவியா பாரஞ்செய்து
நித்திய பொருளைச்சேர்ப்பார்
  நீள்கிருத்தி கையில்ஜனித்தோர்.

(இ-ள்.) கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர் கள் தெய்வபக்தியிற் சிறந்து பகவானைத் துதிசெய்வ துடன் கல்வியிற் சிறந்த வித்வானாகவும், ஞானியாகவும் இருப்பதுடனே இல்லற மார்க்கத்திற் கிசைந்த பொருள் சேகரிப்பதற்காக மேன்மையான வியாபாரஞ் செய்தும் கீர்த்திப் பிரகாசமா யிருப்பார்கள்.

ரோகணி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

அன்புடனே ரோகணியில் பிறந்தபேர்கள்
  அயலார்சொல்வுண்மையென நம்புவார்கள்
வன்மைசேர்வார்த்தைகளில் கெட்டிக்காரர்
  வையகத்திற்புலவரென பேரெடும்பார்கள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அன்னதானஞ்செய்யும் கீர்த்தியொடு
அனு தினமும்தயிர் பால்நெய் விரும்புவார்கள்
இன்னவிதம் ரோகணியில் பிறந்தோருக்கு
இருக்குமென்றுபெரியோர்கள் சொல்லுவாரே.

(இ-ள்.) ரோகணி நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் அயலார் சொல்லும் வார்த்தையை உறுதியாய் நம்புவதுடன் தாங்கள் பேசும்படியான வார்த்தையை ஸ்திரப்படுத்தும் சமர்த்தராகவுமிருப்பார்கள். கல்வியிற் சிறந்த புலவரென சகலரும் புகழ்ந்துரைக்கப்படுவார்கள். சதா காலமும் தயிர், பால், வெண்ணெய், மோர், நெய் முதலானவைகள் மீது விருப்பமுடையவர்களாகவும், அன்னதானஞ் செய்யும் தர்மகுணமும், அதற்குத் தகுந்த திரவிய லாபமும் பொருந்தி யிருப்பார்கள்.

மிருகசீரிட நக்ஷத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்

விருத்தம்

அதிகாலைஸ்நானஞ்செய்ய ஆவலுற்றேகுளிப்பர்
துதிமிகும்பகவத்பக்தி துலங்கிடும்ஞானமார்க்கம்
நிதிமிகுநடனநாட்டியம் நீணிலந்தனிலேகாண
மதித்திடுவார்களென்று மிருகசீரிடத்திற்சொல்வாய்

(இ-ள்.) மிருகசீரிட நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் அதிகாலையிலெழுந்து ஸ்நானபான நியம நிஷ்டை முடித்துக்கொண்டு பகவத்பக்தி யானந்தமாய் விரதானுஷ்டானம் புரியும் நற்குணமும் ஞானமார்க்கமும் ஆடல்பாடல் சங்கீத கியானத்துடன் கண்டு மனமகிழ விருப்பமுடையவர்களா யிருப்பார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

திருவாதிரையிற் ஜனித்தோர்கள்
திறமாய்பொய்யைப் பேசிடினும்
மருவொன்றில்லா வாசகமாய்:
மதிப்பாருலகோர் திடகாத்ர
உருவாய்விளங்கிடுவார் வறுமை
உற்றேதரித்ர மெய்திடினும்
பெருமையாளரைப் போல
பேசிசமர்த்தாய்த் திரிகுவாரே.

[இ-ள்.) திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வாய்சமர்த்தாய் பொய் வார்த்தைப் பேசிடினும் அந்நியர் உண்மையென்றே நம்புந் தன்மையா யிருக்கும். சரீரம் திடகாத்திரமா யிருக்கும். சிற்சில சமயம் வறுமையால் திகைத்துத் தரித்திர இம்சை யடைந்திருந்தாலும் தமது தைரியத்தால் சகலரும் பெருந்தன்மையாய் மதிக்குந் தன்மைக் கிசைந்த சமர்த்தரா யிருப்பார்கள்.

புனர்பூச நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

புனர்பூசநக்ஷத்திரத்தே பிறந்தோர்
புகழானகீர்த்தியா யிருப்பதோடு
மனமகிழ்வாய்சதாகாலம் சுத்தமாக
மாக்ஷியுடனேயிருப்பார் சமர்த்தராக
இனஜனங்கன்சகலருக்கும் எந்தநாளும்
இளைத்திடாசிங்கம்போல் வழிநடப்பார்
கணவான்போல்பேசிடுவார் அருகிலுள்ளோர்
தான்புகழ்ந்தால்உற்சாக மெய்துவாரே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சகலரும் தன்னைப் புகழ்ந்து பேசுந் தன்மையான கீர்த்தி யோடு விளங்குவதுடன் சுத்தமாய் வார்த்தையாடுந் திட சித்தமும் தமது இனஜன பந்து மித்திரர்கள் மெச்சிக் கொள்ளும்படியான சாமர்த்திய முடையவர்களா யிருப் பார்கள.

பூச நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

பூசநக்ஷத்திரத்துதித்தோர் புனிதராயுலகில்நாளும்
மாசிலாகுணவானென்று மானிலத்தோர்வதிக்க
வாசியோகங்கள்செய்து வையகந்தனில்சிறந்து
ஈசனைத்துதித்துஞான இன்பந்தைநாடுவாரே.

(இ-ள்.) பூசநக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் துர்க் குணமில்லாத சுத்த மனதமைந்தவர்களாய் நல்ல குண வானென்று சகலரும் புகழுந் தன்மையான பகவத் பக்தி யானந்தமாய் வாசியோகஞ் செய்யப் பிரியமும், பரமசிவ தியானமும், பகவத்பக்தியானந்தமாயிருந்து ஞானானந்த இன்பத்தை விரும்பி யிருப்பார்கள்.

ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

எண்சீரடி விருத்தம்

வன்மைசேராயில்யந்தன்னிற் பிறந்தோர்
வையகத்தில்பிறர்சொல்லைக் கேட்பதற்கு
இன்புறுவார்வஞ்சக மில்லாமனத்தோர்
எதிரிகட்குஅஞ்சாத தீரவானும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அன்பாகதாய்தந்தைக் கினியராகும்
ஆரண்யயாத்திரைக்கும் பிரியராகும்
நன்னயமாயித்யாதி குணத்தோகின்பாய்
நலமுடனேஜீவிப்பா ருலகமீதே.

(இ-ள்.) ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் நிலை எவ்விதமென்ருல் அன்னியர் வார்த்தையை அன்புடன் கேட்பார்கள். வஞ்சக நினைவில்லாதவர்கள், எதிரிகட்கு அஞ்சாதவர்கள் சத்துரு ஜெயம் பெறும் தீரத் தன்மையுடையவர்கள். தாய் தகப்பன் மீது விஸ்வாச முடையவர்களா யிருப்பார்கள். வனசஞ்சாரியாய் ஆரண்ய யாத்திரை செய்யப் பிரியமா யிருப்பார்கள்.

மக நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

சந்த விருத்தம்

மகநக்ஷத்திரத்திற் பிறந்தோர்கள்
மதிக்குங்கீர்த் திப்ரதாபர்
பகரும்வித்யா வடிவழகர்
பலதிசைசஞ் சாரப்பிரியர்
சுகமேவியவாழ் வாய்விளங்கி
சூழ்புவிதனிலே யிருப்பார்
புகழுங்கீர்த்தி யாயிருந்து
புனிதராக விளங்குவரே.

(இ-ள்.) மக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலதிசை சஞ்சாரஞ் செய்வதற்குப் பிரியப்படுபவரும், கீர்த்திப் பிரகாசமாய் விளங்கி சுகசரீரமாகவும் அழகானந்த முகவசீகரமாகவும், சுகவாழ்வாகவும் ஜீவித்திருப்பார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பூர நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்

விருத்தம்

பூர நட்சத்திரத்தில் பிறந்தவரெந்தநாளும்
தாரணியோர்களுக்குத் தகுந்தவார்த்தைகளைப்பேசி
தீரமாய்தொழிற்புரிந்து திறமுடன் வியாபாரஞ்செய்
வீரமாயுலகில்நாளும் வித்வானுய்ஜீவிப்பாரே. [வார்

(இ-ள்.) பூர நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சதாகாலமும் நயமாக சகலரிடத்திலும் பிரிய வசனமாய்ப் பேசுவதுடன் கைத்தொழில் புரிய சாமார்த்தியமும், வியாபாரஞ் செய்யும் திறமையும் பொருந்தியவர்களாய் வித்வானுய் ஜீவித்திருப்பார்கள்.

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

விருத்தம்

உத்திரந்தன்னிற்பிறந்தோர் உலகினில் ஞானியாகி, மெத்தவும்பலமுள்ளோராய் மேன்மைசேர் கோபியாகி, சித்தத்தில்பக்திவாய்ந்து ஸ்நானத்திற் பிரியமுள்ளோர், வித்தியாவிருப்பமாக விளங்கியே ஜீவிப்பாரே.

(இ-ள்.) உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் முன் கைப் யலமுள்ளவர்களாகவும், கோபமுள்ளவர்களாகவும், தெய்வ பக்தியிற் சிறந்தவர்களாய் விளங்கி ஆசார அனுஷ்டானத்துடன் அவனியில் சுகமாய் ஜீவித்திருப்பார்கள்.

அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

எண்சீரடி விருத்தம்

அன்புடையவென் சிஷ்யா சொல்லக்கேளாய்
அஸ்தநட்சத்திரத்தில் பிறந்திட்டோர்கள்
தன்மைசேர்கல்விப்பிரியர் மார்பழகராகும்
தரித்திரர் அன்னியரை வணங்கி வாழ்வார்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இன்பத்தையெந்நாளும் விரும்பிடாமல்
இளைத்தமனத்தால்சோர்ந்துதிகைத்திருப்பார்
வன்மைசோர்வையகத்தில் தொழில்புரிந்து
வகையுடனேஜீவிப்பார் கவனிப்பாயே.

(இ-இ.) அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வித்யாவிருப்பமுடையவராகவும், மார்பழகாகவும், தரித்திரமாய் ஜீவித்தாலும் பல தொழில் செய்ய விருப்பமும், வியாபாரஞ் செய்வதற்குப் பிரியமும், அன்னியரிடத்தில் தந்திரமாகவும் வணக்கமாகவும் பேசிப் பொருள் சேகரஞ் செய்து ஜீவித்துக் கொண்டிருப்பார்.

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

எண்சீரடி விருத்தம்

சித்திரை நட்சத்திரத்திற் பிறந்தபேர்கள்
சிவந்தவிழியலங்கார தேகமுள்ளோர்
மெத்தவுமேநற்குணமாய் விளங்குவார்கள்
மேன்மைசேர் வாசனுதிகளின்மீது
சித்தம்வைத்திருப்பார்கள் மனிதர்மீது
சிநேகமாய்வாஞ்சையுடன் நேசிப்பார்கள்
வித்தைகற்று உத்தியோக வியாபாரத்தில்
விருப்பமுற்றுஜீவிப்பார் கவனிப்பாயே.

(இ-ள்.) சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சிவந்தவிழி யலங்காரமும் அழகான சரிரமும், மிகவும் நற்குணமாகவும் விளங்குவார்கள். வாசனுதிளின்மீது பிரியமும் மனிதர்களிடத்தில் விஸ்வாசமாகவும், சிநேக

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வாஞ்சையாகவுமிருப்பார்கள் வித்யா விருப்பமும், உத்தி யோகத்தில் கீர்த்தியும், வியாபாரத்தினுல் திரவியஞ் சேகரித்துச் செலவு செய்யுந் தன்மையும் பொருந்தி யிருப்பார்கள்.

சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

சந்த விருத்தம்

அன்பானசுவாதி நட்சத்திரம்
அமைந்தநாளிற் பிறந்தோர்கள்
இன்பமாய்சகலர்க் கும்பிரியர்
இராஜசேவைக் கிஷ்டமுறும்
தன்மையான குணசீலர்
தந்தைதாய்க்கு மிகப்பிரியர்
நன்மையான கல்வியினில்
நகரோர்மெச்சுந் திடத்தோரே.

(இ-ள்.) சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சகல ருக்கு பிரியமான சிநேகமா யிருப்பதுடன் இராஜசேவை காணப் பிரியப்படுவார்கள். தாய் தந்தைமீது ஆசா பாசமா யிருப்பார்கள். கல்வியில் தேர்ச்சியடைந்து சகல ருக்கும் நல்லவரா யிருப்பார்கள்.

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்

விருத்தம்

நன்மைசேரும்விசாக நட்சத்திரந்தனில் பிறந் தோர், முன்கோபமுடையோராவார் முகத்தினில் மருவுள்ளோராம். வன்மைசேரும் சமத்தர் வஸ்திரப் பிரியராகும், தன்மையாங்குணவானுக தரணியில் ஜீவிப்பாரே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(-ள்.) விசாக நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் முன் கோபி, முகத்தில் மருவுடையவர்களா யிருப்பார்கள். மிகவும் சாமார்த்தியமுடையவராகவும், வஸ்திர ஆபரண சிங்காரராகவும், நல்ல குணவந்தராகவும் ஜீவித்திருப் பார்கள்.

அனுஷ நக்ஷத்திரத்தில்

பிறந்தவர்கள் பலன்

ஏண்சீரடி யாசிரிய விருத்தம்

அன்பாய்அனுஷ நக்ஷத்திரத்தில்பிறந்தோர்
அனுதினமும் வஸ்திரப்பிரியராகும்
தன்மைசேர் அழகலங்காரராகும்
தாம்பூலப்பிரியரென சாற்றுவாரே
அன்னை தந்தைக்குப்பிரியர் கோபியாகும்
ஆபரணம்மேற்பிரிய முடையோராகும்
நன்மையாய்ச்சொல்லுறுதி பிசகிடாதோர்
நகரோர்க்குநல்லவரா யிருப்பர்தாமே.

(இ-ள்.) அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தினந்தோறும் ஆடையாபரண சிங்கார அலங்காரமாக வும், தாம்பூலப் பிரியராகவும், தாய் தந்தைக்கினிய நற் குணசாலியாகவும், சொல்லுறுதி தவராதவராகவு மிருப் பதற்காகும்.

கேட்டை நக்ஷத்திரத்தில்

பிறந்தவர்கள் பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

கேட்டைநட்சத்திரத்தில் பிறந்திட்டோர்கள்
கெம்பீரமாகவே பேசுவார்கள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தாஷ்டீகபலமுடைய சமர்த்தராகும்
சாந்தமில்லாதுஷ்டருடன் நேசிப்பார்கள்
மேட்டிமையாய்சகலருமே புகழ்ந்துபேச
மேன்மையுடனேவிளங்குந் தீரராகும்
மாட்சிபெரும் சகோதர விஸ்வாசியாக
மாநிலத்தில்மகிழ்ந்திருப்பார் கவனிப்பாயே.

(இ-ள்.) எனது அன்பான சிஷ்யா! கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கெம்பீரமாகப் பேசுவார்கள். தாஷ்டீகமான பலமுடையவர்களாயிருப்பார்கள் சாமர்த்திய தீரமும் பொருந்தி யிருப்பதுடன் சாந்தமில்லாத குரூரகுணமமைந்த துஷ்டர்கள் நேசமூம் பொருந்தியிருந்தாலும், தனது வாய் சாமர்த்தியத்தினுலும், கைசாமர்த்தியத்தினுலும், காண்போர் புகழ்ந்துரைக்கும் தீரவானுகவும் விளங்குவதோடு சகோதா விசுவாசியாகவு மிருப்பார்கள்.

மூல நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

விருத்தம்

தனவானும் ஜீவாத்மாக்கள் தன்னுயிர்போல் மதித்து மனமகிழ்ந்துலகோர்மீது மதித்திடுநட்பு வாய்த்த, சினமிலாகுணவானுகும் திரவியந்தேடி தர்மம், முனைந்துமேசெய்வாரந்த மூலநட்சத்திரம் பிறந்தோர்.

(இ-ள்.) மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சகல ஜீவர்களிடத்திலும், பிரியமுந் தன்னுயிர்போல் மன்னுயிரைக் காக்குந் தயாளமும் உலகத்திலுளோர் மீது நட்புந் தயாளமும் பொருந்தியவராய், கோப மில்லாத [illegible] குணத்தினாலும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

புகழ்ந்துரைக்குந் தன்மையான கீர்த்தியுடையவர்களா யிருப்பார்கள்.

பூராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

விருத்தம்

வித்தியானந்தமாக விரதானுஷ்டானம்புரிந்து
நித்தியவிரதஞான நிதிமிகும்ஸ்திரீயென்றோதும்
உத்தமிதனைமணந்து உலகினில்வாழ்ந்திருக்கும்
புத்திமானுயிருப்பார் பூராடத்திற்பிறந்தோர்.

(இ-ள்.) பூராட நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் உத்தமகுணமுடையவராய் விளங்கி, கற்புநிலை தவராத சற்குணத்துடன் பகவத்பக்தி யானந்த விரதானுஷ்டானம் புரிந்து, ஞானனந்தமா யிருக்கும் உந்தம ஸ்திரீயை மணம் புரிந்து சுகானந்தமாய் வாழ்ந்திருக்கும் தன்மையும், புத்தியுள்ளவராகவு மிருப்பார்கள்.

உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

விருத்தம்

அன்னைதந்தையரின்மீது
ஆசாபாசங்களாகி
இன்பமுடன் ஆதரிக்கும்
இனியநற்குணாளராகி
தன்மையாம் உத்தியோகஞ்செய்வார்
தகுந்தவர்த்தகமுஞ்செய்வார்
நன்னயஉத்திராட
நட்சத்திரந்தனிலுதித்தோர்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மிகவும் சாமார்த்தியமாய் உத்தியோகஞ் செய்தும், வியாபாரஞ்செய்தும், பொருள் சேகரஞ் செய்யும் தன்மையும், தாய் தந்தையார் மீது ஆசாபாச நேச விஸ்வாசமாகவு மிருப்பார்கள். தமது பந்து ஜனங்களும் புகழுந் தன்மையான கீர்த்தியா யிருப்பார்கள்.

திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

திருவோண நட்சத்திரந் தனிற்பிறந்தோர்
திறமையுடன்கல்விகற் றுணர்ந்துநல்ல
பெருமையுடனுத்யோகம் புரிந்துதிரவியம்
பேதமில்லாமல்சேர்த்து வியாபாரஞ்செய்வார்
அருமையுடன் வாசனுதிகளின்மீது
ஆசையுண்டு அலங்காரவிருப்பமுண்டு
தருமகுணமா யிருப்பா ருலகின்மீது
தரணியோர்த ன்மகிழ கவனிப்பாயே.

(இ-ள்.) திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கல்வி கற்றுணர்ந்து உத்தியோகஞ் செய்வார். வியாபாரம் செய்வார். வாசனுதிகளின் மீது பிரியமும். ஆடையாபரண அலங்கார சிங்காரமும் பொருந்தியவர்களாய் தம்மைச் சகலரும் புகழ்ந்துரைக்கும்படியான தருமகுணம் பொருந்தியவர்களாவு மிருப்பார்கள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

உலகினிலே அவிட்ட நக்ஷத்திரத்தில்பிறந்தோர்
உத்தமராய்க்கல்வியிலே விருப்பமுற்று
பலகலையும்நன்குணர்ந்து தீரமாக
பாரினிலேபிரக் யாதியாயிருந்து
நிலமையுடனுத்யோகம் புரிவாரின்னும்
நிதிதேடிவியாபாரஞ் செய்வாரன்பாய்
கலகமிலாதரணியிலன் பாயிருப்பார்
கவனித்துக்கிரகநிலை கண்டுசொல்வாய்.

(இ-ள்.) அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வித்யா விருப்பத்துடன் பல நீதிசாஸ்திர புராணங்களைக் கற்றுணர்ந்தும், உத்தியோக சாமார்த்தியமும், வியாபார லாபமும், திரவியலாபமும் பொருந்தியிருப்பார்கள். உலகத்திலே யாதொரு விசனமும் கலகமுமில்லாமல் தந்திரமாய் ஜீவிப்பார்கள்.

சதய நட்சத்திரத்தில் பிறந்தவர்சள் பலன்

விருத்தம்

கனிவுடனேசதய நட்சத்திரத்துதித்தோர்
கல்வியிலேவெகுப்பிரியர் சொல்பொருதோர்
முனிவுளர்போற்சிற்சமயம் தயாளமுள்ளோர்
முன்கோபிதனந்தேடுந் தன்மையாளர்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பனியொத்தகுளிர்ந்த வார்த்தைகளைப்பேசி
பட்சமுடனே யிருப்பார்தரணிமீது
தனியாகவழிநடக்க மனதிலஞ்சார்
தைரியமாயிருப்பார்கள் கவனிப்பாயே

(இ-ள்.) சதய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தனியாய் வழி நடப்பதற்கு அஞ்சமாட்டார்கள்; கோபசிந்தையுடையவர்கள், முன்கோபி, மிகவும் சாந்தமாகவும் மிருதுவாகவும் பேசுவார்கள், தயாளசிந்தை யுள்ளவர்கள், மனிதர்களிடத்தில் பட்சமாகவு மிருப்பார்கள்.

பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

நலமுடையபூரட்டாதியி லுதித்தோர்
நற்குணமாய்வித்தியா விருப்பமுள்ளோர்
பலபேரும்புகழ்ந்துரைக்குந் தீரராகும்
பட்சமுடன்பெற்றோரை ஆதரிப்பார்
கலகமதுசெய்யாமல் ஞாயமாக
காசினியோர்நேசமதை வகித்திருப்பார்
சிலசமயம்ஏழையா யிருந்திட்டாலும்
சிலசமயம்தனவந்த னுவார்பாரே.

(இ-ள்.) பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நற்குணசாலியாகவும், வித்தியாபி விருப்பமும், சகலரும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

புகந்துரைக்குந் தன்மையாகவும், தாய்தந்தையர்மீது ஆசாபாச நேச விஸ்வாசமாகவு மிருப்பார்கள். எவர்க ளிடத்திலும் கலகஞ் செய்யார். நியாயமாக சகலரிடமும் பட்சமாய் நேசித்து நற்குணமாய் ஜீவித்துக் கொண் டிருப்பார்கள்.

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

அன்புடனே உத்திரட்டாதிதன்னில்
அவனிதன்னில் பிறந்தோர்கள்சுகமதாக
இன்புடனேகல்விகற்ற சகலருக்கும்
இனிமையாளரென்றுமிக கீர்த்திவாய்ந்து
தன்மானஞ்செய்து ஆயுளோடு
தரணியிலேஜீவிப்பர் மனைவிமைந்தர்
நன்மையுள்ள பந்துஜனக் கூட்டத்தோடு
நலமுடனேவாழ்ந்திருப்பார் கவனிப்பீரே.

(இ-ள்.) உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர் கள் வித்யா விருப்பமுடையவர்களாகவும் சகலருக்கும் நல்லவர்களாய் விளங்கும் தன்மையுடையவர்களாகவும், தானதர்மஞ் செய்யும் கீர்த்தியுடையவர்களாகவும், திர விய சேகரஞ் செய்யும் சாமார்த்தியமும், மனைவி மைந்தர் பந்துஜன மித்திரர்களுடனே பெருத்த கூட்டமும், பெரிய குடும்பஸ்தராகவும் வாழ்ந்திருப்பார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

அன்புடனேரேவதியிற் பிறந்திட்டோர்கள்
ஐஸ்வரியம்பூர்ணாயுசா யிருப்பார்
தன்மையுடன் கல்விகற்று உலகோர்மெச்ச
தனசம்பத்தராயிருப்பா ருலகமீது
அன்னைதந்தைபுத்திரர் களத்திராதிசுற்றம்
அனைவர்களுஞ்சூழ்ந்திருக்கவாழ்ந்திருப்பார்
நன்னயமாய்பகவானை மறந்திடாமல்
நலமுடனேபூஜித்து ஜீவிப்பார்கள்.

(இ-ள்.) ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வித்யா விருப்பத்துடன் கல்வி கற்றுணர்ந்து உத்தியோகம் செய்தும், திரவிய சேகரம் செய்து வியாபாரஞ் செய்யும் சாமர்த்தியத்துடனும், தாய் தந்தை சகோதரர் மனைவி மைந்தர் பந்துக் கூட்டங்களுடனே வாழ்ந்திருப்பார்கள்.

சீஷன் விருத்தம்

அனுதினமுமென்மீது தயாளசிந்தை
அமைந்தஜோதிடசாஸ்திர விவரந்தன்னை
மனமகிழவெந்தனுக்கு உபதேசித்தீர்
மாக்ஷிமையானவற்றைக் கற்றுணர்ந்தேன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தினகரனுற்பொருந்தியலக் கினமாதத்தில்
ஜெனித்தவர்கள்பலாபலனை எந்தனுக்கு
மனமகிழ்வாய்ச்சொல்வீரென் றுமதுதிவ்ய
மலரடியையான்பணிந்தேன் அருள்செய்வீரே.

(இ-ள்.) குருநாதா! தாங்கள் அடியேன்மீது அருள் புரிந்து சோதிடத்தின் நிலையை அடியேனுக்கு அனுக்கிரகஞ் செய்தீர். ஆகையால், இனி அடியேன்மீது அன்பு கூர்ந்து, சூரியனிருந்த இராசிகளின் பலாபலனை அடியேனுக்கு விவரமாய்ச் சொல்வீர் சுவாமி.

குரு விருத்தம்

அன்புடையசிஷ்யா நீ சொல்லக்கேளாய்
அந்தந்தராசிதனில் ரவியிருக்கும்
தன்மையாலவரவர்க ளனுபவிக்கும்
தகுந்தபலன் விபரமாய்ச்சொல்வேன்கேட்பாய்
உன்மனதிலேயிதனை உறுதியாக
ஊக்கமுடன்கவனித்துக் கற்றுணர்ந்து
நன்மையாய்ச்சகலருக்கும் காலநேர்மை
நலமுடனேவிபரமாய்ச் சொல்லுவாயே.

(இ-ள்.) எனது அன்பிற்கினிய சிஷ்யா! நான் இது வரையில் சொல்லிக்கொண்டு வந்த சோதிட விபரமெல்லாம் கவனித்தாய். ஆனால், தற்சமயம் ஒவ்வொரு இராசியிலும் சூரியனிருக்கும்போது ஜனனமானவர்களின் பலனையும் விபரமாய்ச் சொல்லுகின்றேன் கவனிப்பாய்.

CC-0. Old Tamil Texts - Digitized by Sri Muthulakshmi Research Academy

மேஷ ராசியில் சூரியபகவானிருக்கும் பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

தினகரனுமுச்சமாய் மேஷந்தன்னில்
திறமையுடனேயமர்ந் திருக்கும்போது
கனமுடனேபிறந்தோர்கள் தைரியமாக
கல்வியுணர்ந்துஉத்யோகம் செய்வாரன்பாய்
தனதான்யசம்பத்தும் கீர்த்தியோடு
தரணியிலேவாழ்ந்திருப்பா ரெந்தநாளும்
சினமில்லாதிருப்பர்குரு பார்வையானல்
சிந்தித்துவிபரமாய்ச் சொல்லுவாயே.

(இ-ள்.) மேஷ ராசியில் சூரியன் உச்சமாயிருக்கும் போது பிறந்தவர்கள் மனதைரியமும், சாமர்த்தியமும் வித்யாபிவிருத்தியும், உத்தியோக லட்சணமும், வர்த்தக விருப்பமும், தனதான்ய சம்பத்தும் பெற்றிருப்பர். குரு பகவான் சிம்மராசியிலிருந்து மேஷத்திலிருக்கும் சூரியனைப் பார்த்தால் கோபமில்லாத சாந்த மனமுடையவர்களா யிருப்பார்கள்.

ரிஷப ராசியில் சூரியபகவானிருக்கும் பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

மகிழ்வாகரிஷபத்தில் பிறந்தபேர்கள்
மனமகிழ்வாய் மனைவிபுத்திரர்களோடு
ஜெகமதுஜீவிப்பர் பந்துகூட்டம்
சேர்ந்தன்பாயிருந்திடவும் வறுமையில்லா

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

புகழாகவஸ்திரங்கள் வாசனுதி
பூஷணுதிகள் வியாபாரஞ்செய்து
சுகமாகவாழ்ந்திருப்பா ரென்றுநீயே
சொல்லுவாயனுபவிக்கும் விவரந்தானே.

(இ-ள்.) ரிஷபராசியில் சூரியபகவா னிருக்கும்போது பிறந்தவர்கள் சதாகாலமும் ஆனந்தமாய் ஜீவித்திருப்ப துடன் வித்தையை விசேஷமாய்க் கற்று உத்தியோகஞ் செய்தும், வாசனுதி திரவியம், வஸ்திர வியாபாரம் செய் தும் ஜீவித்திருப்பதுடன், மனைவிமைந்தர் பந்து கூட்டத் துடனே கீர்த்திப் பிரகாசமாய் ஜீவித்திருப்பார்கள்.

மிதுன ராசியில் சூரியபகவானிருந்தால் பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

மிதுனத்தில்சூரிய னிருக்கும்போது
மேதினியிற்பிறந்தோர் பலனைக்கேட்பாய்
விதிமுறைபோல்வித்தைகற்று கவிகள்பாடி
வித்வானுய்விளங்குவார் வையகத்தில்
சதிபதிமனமகிழ்வாய்ப் பொருந்திவாழ்ந்து
சற்புத்ரபாக்கியம்பெற் றுலகில்வாழ்வார்
மதிதனிலேசிறந்ததெது சிஷ்யாநீதான்
மனமகிழ்வாராய்ந்து பலனைச்சொல்வாய்.

(இ-ள். மிதுன ராசியில் சூரியபகவா னிருக்கும் போது பிறந்தவர்கள் வித்தையில் தேர்ச்சியடைந்தவர்க

CC-0. Old Tamil Texts Digitized by Sri Muthulakshmi Research Academy

ளாய் சாஸ்திர புரணங் கற்றுணர்ந்தும், திரவியந்தேடி தனவந்தர்களா யிருந்து, உத்தம மனைவியை மணந்து சற்புத்திரர்களைப் பெற்று, நற்குணமமைந்து பந்து கூட்டத்துடனே வாழ்ந்திருப்பார்கள்.

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய
சோதிட அரிச்சுவடி இரண்டாம் பாகம்
முற்றிற்று.

மற்ற மீதியான விஷயங்களாகிய சேர்திட சாராம்சத்தை மூன்ரும் பாகத்தில் விபரம் விபரமாய் விமரிசையாய்த் தெரிந்து கொள்ளவும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

உ

கடவுள் துணை

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய

சோதிட அரிச்சுவடி

—ஃ—

(மூன்றும் பாகம்)

கணேசர் துதி

ஆதிவேதாந்தஞான ஐயனேகணேசமூர்த்தி
சோதியேசொரூபானந்த சுயம்பிரகாசமுதேஞான
வேதியரிஷிகள்போற்றும் வேதவிக்னேசாயானும்
சோதிடங்கணித்துச்சொல்ல துணையாய்வந்தருள்
செய்வீரே.

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

ஐயனே ஆசிரியா ஞானவாழ்வே
அடியேனுக் கஞ்ஞான இருளைப்போக்கி
பொய்யிலா ஜோதிடத்தி னுண்மை யெல்லாம்
பூரணமா யெந்தனுக்குப் போதித்தீரே
வையமிசை இவ்வளவோ இதன்மேலுண்டோ
வழுத்துவீ ரெந்தனுக்கு குருவே ஞான
மெய்யனே தமதுதிரு வடியையானும்
மேன்மையாய் மனதிருத்தி கவனிப்பேனே.

சீஷன் வசனம்

(இ-ள்.) குருநாதா தாங்கள் சொன்னதை யான் அங்கீகரித்தேன். ஆனால், தாங்கள் இதுவரையில்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சொன்னதைவிட இன்னும் விசேஷமுண்டோ வெனும் ஆராய்ச்சியுடையவனு யிருக்கின்றேன். தாங்கள் அடியேன் மீது அன்பு வகித்து அருள்புரிய வேண்டும் குருநாதா.

குரு சொல்லுவது

எண்சீரடி விருத்தம்

ஆரப்பா ஜோதிடத்தை முழுதுங்கண்டார்
ஆராய்ந்து பலன்சொல்வோர் சமர்த்தராவார்
கோரப்பா குருவருளை மனதிலெண்ணு
குறிப்பாக ராசிகளில் நவக்கிரகங்கள்
நேராக நின்றபல னறிந்தே சொல்லு
நேர்மையுடனுண்மையெல்லாம்விளங்கும்பாரே
பாரப்பா வுந்தனுக்குண்மை யுரைத்தேன்
பக்ஷமுடன் சோதிடத்தை கவனிப்பாயே.

(இ-ள்) வித்யா விருப்பமுடன் கல்விகேள்விகளிற் சிறந்த சிஷ்யா! சோதிடத்தின் மர்ம ரகசியத்தைத் கவனித்து பலன் சரியாய்ச் சொல்வதற்கு கல்வி யானந்தமும், வித்யாபிவிர்த்தியும், விவேகமும், பகவத் பக்தியும் ஞானமும், ஞாபக சக்தியும் இருக்கவேண்டும். அவ்வித சக்தியுடையோர்தான் ஜோதிடவல்லவரென்று சொல்லுதற்காகும். அத்தகைய ஞானவானுகிய சீஷனே குரு விஸ்வாசியா யிருந்து ஜாதகத்தை ஆராய்ந்து பலன் சொல்லும்போது நவக்கிரகங்களிருக்கும் ஸ்தான பலன், இலக்கின பலன் முதலான விஷயமெல்லாம் கவனித்துச் சொன்னுல் ஜாதகரின் த்ரிகால லக்ஷணமும் சரியாய் நடப்பதை விவரமாய்ச் சொல்வதற்காகும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சீஷன் சொல்லுவது

விருத்தம்

எனதினிய குருஸ்வாமி ஜோதிடத்தை
எந்தனுக்கு விபரமாய் கற்பித்ததற்கு
மனதினிலே மிகமகிழ்வு கொண்டுவுந்தன்
மாட்சிபெரும் திருவடியை பணிந்துயானும்
அனுதினமும் தமதருளை சிரமேற்கொண்டு
அவனியில்வாழ் மனிதர்களின் ஜாதகத்தை
இனிதாக பார்த்துபலன் சொல்வதற்கு
இசைந்தபடி கற்பிப்பீர் குருவேபோற்றி.

(இ-ள்.) எனது அருமையான குருநாதா! சோதிட சாஸ்திரத்தின் ஆராய்ச்சி யனைத்தும் அடியேனுக்குப் போதிப்பதற்காக மனதிற் கருணைவாய்ந்த மாக்ஷிமை தங்கிய தமது திருவடியை துதிக்கும் அடியேன் மீது கருணை கூர்ந்து உலகிற் பிறந்த மனிதர்களின் வாழ் நாளிற் கமையும் ஜாதக ரகசியத்தின் பலனை அடியேன் சரியாகச் சொல்லும்படியாக அனுக்கிரகஞ் செய்வீர் சுவாமி.

குரு சொல்லுவது

எண்சீரடி விருத்தம்

அன்பான என்சிஷ்யா சோதிடத்தை
ஆராய்ச்சி செய்வதற்கு அறிவுவேண்டும்
நன்மையுடனே யிரண்டாம் பாகந்தன்னில்
நலமுடனே மிதுனத்தில் ரவியிருந்தால்
இன்னின்ன பலன் நடக்கு மென்றுமுன்னே
இனிதுடனே புகன்றேன்பின் துடர்ச்சியாக
நன்னயமாய்ச் சொல்லுகின்றேன் ஜோதிடத்தை
நலமுடனே கவனித்துப் பலன்சொல்வாயே,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) எனது அன்பிற்கிசைந்த புத்திசாதுர்யமான சிஷ்யா! இந்த ஜோதிட சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்வதற்கு அறிவு அதிகமாய் வேணும். நீ புத்தியுள்ள சிஷ்யனுகையால், விபரமாய்க் கவனித்துக் கற்றுணர்ந்தாய். ஆனுல் இரண்டாம் பாகத்தில் சூரியன் மிதுன ராசியிலிருக்கும் வரையில் நடக்கும் பலாபலன்களை விபரமாய்ச் சொன்னேன். ஆனுல், இன்னும் அத்துடர்ச்சியாக கடக ராசியில் சூரியனிருக்கும் பலனும் இன்னும் அநேக ரகசியமும் சொல்லிக்கொண்டு வருகின்றேன் கவனிப்பாய்.

கடக ராசியில் சூரியபகவானிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

கடகத்தில் சூரியனு மிருந்திட்டாலோ
காரிடன் குஜராகு கேதுபார்த்தால்
தடவரையில் வெகுதுயர மனுபவிப்பார்
சசிபுதனும் குருசேர்ந்தும் பார்த்திட்டாலும்
கடல்சூழ்ந்த பூமியிலே கீர்த்திவானுய்
கனகமுடன் நிலவளமும் விசேஷமாக
திடமாக சேகரித்து வாழ்ந்திருப்பான்
திறமையுடன் கவனித்துப் பலனைச்சொல்லே.

(இ-ள்) கடக ராசியில் சூரியனிருக்கும்போது சனி, செவ்வாய், இராகு கேது பார்த்தால், பலவிதமான கஷ்டமும், கவலையும், வறுமையும், சஞ்சலமும், துன்பமும் உண்டாகும். ஆனுல், கடக ராசியில் சூரியனிருந்துவளர் பிறைச் சந்திரன், புதன், குரு சம்பந்தமானுலும், பார்வையுற்ருலும் பொன் பொருள் சேகரஞ்செய்து கீர்த்திவந்த

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ளுய், நிலம் பூமி காணி ஆக்ஷியுடன் சுகவாளு யிருப்பதாகும்.

சிம்ம ராசியில் சூரியனிருந்த பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

சூரியனும் சிம்மராசி தனிலிருக்க
சூழ்புவியிலே பிறந்தஜாதகர்க்கு
வீரியமும்தைரியமும் கீர்த்திமேன்மை
விளங்கிபேதனவாளு யிருப்பாராளுல்
காரியுடன் சனிபாம்பு பார்க்கலாகா
கதிரவனைகுருபார்த்தால் மெத்தநன்மை
பாரிலுள்ளஜாதகரின் பலனைநன்ருய்
பார்த்துரைப்பாய்நவ க்ரகநிலையைப்பார்த்தே.

(இ-ள்.) சூரிய பகவான் சிம்ம ராசியிலிருக்கும்போது பிறந்த ஜாதகர் மிகவும் கீர்த்திவாய்ந்தவரா யிருப்பதற்காகும். தைரியமும், மேன்மையும் பொருந்திய தனவந்தரா யிருப்பார்கள் ஆளுல், சூரியன் சிம்மத்தில் ஆட்சி பெற்றிருந்தாலும் சனி, ராகு, கேது சம்பந்தமாளுலும் பார்த்தாலும் துர்ப்பலனேயே அனுபவிக்கச் செய்யும் ஆளுல், குரு பார்த்தால் விசேஷ நன்மை யுண்டாகும்.

கன்னி ராசியில் சூரியனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

கன்னியிலேசூரியனு மிருக்கும்போது
காரியுடன்சேய்பாம்பு சேர்ந்திட்டாலும்
வன்மையுடன்பார்த்தாலும் கெடுதியுண்டு
வறுமைசிலசமயத்தில் வந்தேதீரும்
நன்மையுடன்குருபுதனும் மதியும்பார்த்தால்
நலமுடனும் சம்பந்தமுற்ருலும்நன்மை

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தன்மையுடன் கிரகநிலை ஆராய்ந்தன்பாய்
ஜாதகர்க்குபலன்சொல்வாய் தெளிவாய்த்
தானே.

(இ-ள்.) கன்னியா ராசியில் சூரிய னிருக்கும்போது சனி, செவ்வாய், ராகு, கேது பார்த்தாலும் சம்பந்தமுற்றாலும், பலவித கஷ்டமும் கவலையுமுண்டாகும். ஆனால் குரு பார்த்தால் சகலவித நன்மையுமுண்டாகும் புதனும் சந்திரனும் சம்பந்தமானால் விசேஷ நன்மையும் கீர்த்தியும் உண்டாகும்.

துலா ராசியில் சூரியனிருந்த பலன்

எண்சீர் விருத்தம்

பருதிதுலாராசியிலே யிருக்கும்போது
பாம்புசனிசேய்பார்த்தால் தந்தைக்காகா
குருபுதனும்மதிகாணில் சுபமேயாகும்
கொஞ்சமெனுந்துயர மணுகிடாது
சுருதியுக்திஅனுபவ திருஷ்டாந்தத்தால்
சொல்லுவாய்பலன்விபர மாகவேதான்
அருமையாய்ஜோதிடத்தை கணித்துசீராய்
அவரவர்க்கும்பலனுரைக்க தகுதியாமே.

(இ-ள்.) துலாராசியில் சூரிய பகவானிருக்கும்போது அந்த ராசியை சனி, ராகு கேது பார்த்தாலும் சம்பந்த முற்றாலும், ஜாதகனுடைய தந்தைக்கு ஆகாது பலவித கஷ்ட நஷ்டமும் அடிக்கடி வந்துதீரும். ஆனால், குரு புதன், சந்திரன் பார்வையானாலும் சேர்க்கையானாலும் விசேஷ நன்மையும் கீர்த்தியும் பெருமையுமுண்டாகும்; ஆனால், மற்ற கிரகங்களிருக்கும் ஸ்தானத்தைக் கண்டு அவைகட்குத் தகுந்தவிதமான சுருதி யுக்தி அனுபவ

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

திருஷ்டாந்தமுடன் ஜாதகர்க்குப் பலன்சொன்னால் சரியா யிருக்கும்.

விருச்சிகராசியில் சூரியனிருந்த பலன்

எண்சீர் விருத்தம்

விருச்சிகராசியிலே சூரியனிருக்க
வியாழனும்மீன ராசிதனிலிருந்து
அருமையுடன்பார்த்தாலே விசேஷநன்மை
அரவுசனிபார்க்கசேர்ந் திருந்திட்டாலே
வறுமையுடன்கவலையுந் துன்பமுண்டாம்
வையகத்தில்சிறுமை யடைத்தலைகுவார்கள்
பெருமையுள்ளோர்பரிகசித் திகழ்ச்சிசெய்ய
பேதமையாய்சந்ததமு மலைகுவாரே.

(இ-ள்) விருச்சிகராசியில் சூரியனிருந்தால் குரு மீன ராசியிலிருந்து ஒன்பதாமிடத்தில் பார்வை செலுத்தினால் விசேஷ நன்மையாகும். ஆனால், விருச்சிகராசியிலிருக்கும் சூரியனை சனிராகு கேது பார்த்தால் பலவித கஷ்ட நஷ்டமும் கவலையும் உண்டாகும். சிறுமையும், தரித்திரமும் பொருந்தியவராய் உலகத்தில் கஷ்டப்படுவார்கள். சில மனோ கர்விகள் தமது செல்வச் செருக்கால் பரிகசித்தாலும் தலைகுனிந்து விசனமாய் யாதும் புகலுதற்கியலாமலும் துயரப்படுந் தன்மையா யிருப்பார்கள்.

தனுசு ராசியில் சூரியனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

சூரியனும்தனுசிலே யிருக்கும்போது
சுரர்குருவும்புதசனியும் சேர்ந்திருந்தால்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வீரியமாம்சாமர்த்திய மிகவேசெய்து
விளங்குவார்தனுசு ஜன்ம லக்னமானால்
பாரிலுள்ளோர்சகலருமே தலைவணங்க
பராக்ரமமுடன் ராஜகெம்பீரமாக
காரியானுகூலத்தின் நன்மையாலே
காசினியிலேசமர்த்தா யிருப்பர்தானே.

(இ-ள்.) சூரியபகவான் தனுசுவிலேயிருக்கும்போது, குரு, புதன், சந்திரன் சேர்ந்திருந்தால் மன தைரியத்துடன் வெகு சமர்த்தாய் திரவியம் சேகரித்துப் பெருமையாய் வாழ்ந்திருப்பதற்காகும் ஆனால் தனுசு ஜன்மலக்னமானால் ராஜகெம்பீரமாய் பேசுந் தன்மையும் ராஜாங்கத்திற் கிசைந்த பெருந்தன்மையான வியாபாரியா யிருந்து விசேஷ திரவியஞ் சேகரித்து சத் விஷயத்தில் பிரீதியுடையவரா யிருப்பதற்காகும்.

சூரியன் மகரராசியிலிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

மகரத்தில்சூரிய னிருக்கும்போது
மந்தனுடன்ராகுபார்வை செலுத்தினாலும்
திகழ்கேதுபுதன்சேர்ந்தால் ஜாதகர்க்கு
திக்கில்லாஏழ்மைதுன்பம் சூழுமப்பா
புகழுடனேகுருசுக்ரன் பார்வையானால்
பொல்லாங்கெல்லாம்விலகி சுகமாவார்கள்
ஜெகமீதிலிதனையனு சரித்துப்பார்த்து
செப்புவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே.

(இ-ள்.) மகர ராசியில் சூரியனிருக்கும்போது சனி ராகு பார்வையும், கேது, புதன் சேர்க்கையுமிருந்தால் புலவிதமான துன்பமும் திக்கில்லா ஏழையைப்போல்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

துஷ்டர்களிடத்தில் கஷ்டப்பட்டு சகலருக்கும் பகையாய் விளங்கி துயரமும் துக்கமும் அனுபவித்துக் கஷ்டப்படு வார்கள். ஆனால் குருபகவானும், சுக்கிரபகவானும் பார்த் தாலும் சேர்ந்திருந்தாலும் எத்தகைய பொல்லாதவஞ்சக ராகுலும், மனதில் பரிதாபமுடையவராய் துன்பஞ் செய் யாமல் இருப்பார்கள் அவ்விதமாய் எவர்களேனும் கொடுமைசெய்ய நினைத்தாலும் குருசுக்ரர் சகாயத்தினுல் பொல்லாங்கெல்லாம் விலகி நன்மையுண்டாகும் அதே னெனில் அவரவர்கள் கர்மானுசாரத்தின்படியே பூமியில் பிறக்கும்போது, கிரகங்கள் சஞ்சரிக்கும் நிலையைக்கண்டு தான் ஜாதகர்க்குப் பலன் சொல்லவேண்டும்.

சூரியன் கும்பராசியிலிருந்த பலன்

அம்புவியில்மானிடராய் ஜன்மித்தோர்க்கு
ஆதித்தன்கும்பராசி தனிலிருக்க
சிம்மராசிதன்னிலே சனியிருந்தும்
சீறுகின்றபாம்புடன்தான்ரவியைக்காணில்
வம்புடனேவாதுகள்தான் வந்துசூழும்
வர்த்தகம்உத்தியோ கஞ்செய்தாலும்
நம்பார்கள்ஜாதகனை அவனும்நம்பான்
நலமில்லாதுயருற்று கலங்குவானே.

(இ-ள்) உலகிற்பிறந்தமனிதர் சுகதுக்கத்தை யறிவ தென்றால் கிரகங்கள் எந்தெந்த ஸ்தானத்திலிருந்தார் களோ அவைகட்கிசைந்த பலன்களைக் கொடுப்பாகள். என்றாலும், கும்பராசியில் சூரியனிருக்க, சிம்மராசியில் சனியிருந்து சூரியனைப் பார்த்தால் பலவிதமான கஷ்ட மும் கவலையும் சூழுமென்றால் இராகு கேதுக்களின் பார்வையுண்டானால் பலவித துன்பமும் துயரமுமுண்டா

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கும். அதேனெனில், சனி, ராகு, கேது சூரியனுக்குப் பகையாயிருப்பதினால் அவர்கள் பார்வையை சூரியன் மீது செலுத்தினாலே ஜாதகன் வெகு துயரமடைவதற்காகும். ஆனால், குரு சுக்ரன் பார்வையிருந்தால் அவ்வளவு கஷ்டமும் கவலையுமில்லாமல் சாதாரணமாய் காலம் கழித்துக் கொண்டிருக்கலாகும்.

சூரியன் மீனராசியிலிருந்த பலன்

அன்புடனேமீனத்தில் ரவியிருந்தால்
அவருடனேகுருசுக்ர னிருப்பாராகில்
பொன்பொருளும் விசேஷமாய்சேகரித்து
பூதலத்தில்கீர்த்தியாய் வாழ்ந்திருப்பார்
வன்மையுடன் சனிராகு கேதுசேர்ந்தால்
வழக்குபலஉண்டாகும் ஜாதகர்க்கு
துன்பமுண்டுதுயரடைவா ரென்றேசொல்லு
தொல்லுலகில்கிரக நிலையைப்பாரே.

(இ-ள்.) மீனராசியில் சூரியபகவானிருக்க அவருடனே குரு ஆக்ஷியாகவும், சுக்கிரன் உச்சமாகவு மிருந்தால் வெகு பொருள் சேகரஞ் செய்து மகா தனவந்தராயிருப்பதற்காகும். ஆனால், மீனராசியிலிருந்து சூரியனை சனி ராதுகேது பார்த்தால் பலவித சஞ்சலமும், கஷ்டமும் கவலையும் அடைவார்கள். ஆகையால் கிரகங்கள் நின்ற நிலையைக்கண்டு பலன் சொல்லவும்.

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

ஐயனேஎன்குருவே அடியேனுக்கு
ஆதித்தன்பனிரெண்டு ஸ்தானந்தன்னில்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

உய்யவேபலன்தரும் மார்க்கத்தோடு
உற்றகிரகபார்வையுடன் சேர்க்கையாகும்
செய்யபலன்விபரமாய்ச் சொல்லிவிட்டீர்
செழுமதியாம்சத்திரனும் இராசிதன்னில்
வையமிசைஜாதகர்க்கு அமைந்ததானல்
வரும்பலனை அடியேனுக் குரைசெய்வீரே

(இ-ள்.) குருசுவாமி! தாங்கள் அடியேன்மீது அன்பு கூர்ந்து சூரியபகவான் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரெண்டு ராசியிலும் சஞ்சரிக்கும்போது ஜாதகரனுபவிக்கும் பலாபலனெல்லாம் விவரமாய்ச் சொன்னீர். ஆனல், சந்திரபகவான் அவ்விதமே பனிரெண்டு ராசியிலும் சஞ்சரிக்கும்போது ஜாதகர் அனுபவிக்கும் பலாபலனையும் அடியேன் கவனிக்கும்படியாய் திருவாய்மலர்ந்தருள்வீர் சுவாமி.

குரு சொல்வது

எண்சீரடி விருத்தம்

தன்மையுள்ளயென்சிஷ்யா சொல்லக்கேளாய்
சந்திரனும்பனிரெண்டு ராசிதன்னில்
நன்மையுடனேயமர்ந்த பலனைச் சொல்வேன்
நலமுடனேகவனிப்பாய் அறிவமைந்த
என்சிஷ்யா உலகினிலே பிறந்தோருக்கு
ஏற்றதொருகிரகநிலை யிருக்கும்நேர்மை
வமையாயுந்தனுக்கு விபரமாக
வழுத்துவேன் கவனித்துக் கொள்வாயே.

(இ-ள்.) எனது அன்பிற்கிசைந்த சிஷ்யா! சந்திர பகவான் பனிரெண்டு ராசியிலு மிருக்கும்போது அந்தந்த

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கிரகங்களின் சேர்க்கையாலும் பார்வையாலும் உண்டா கும் பலாபலனை விபரமாய்ச் சொல்லுகிறேன் கவனிப் பாய்.

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

ஆசியராமென்குருவே இராசியான
ஆமேடம்மிதுனங்கடகம் சிம்மங்கன்னி
மாசிலாதுலாதேள்வில் மகரம்கும்பம்
மீனமெனும்பனிரெண்டு ராசிதன்னில்
வீசுபுகழ்சந்திரன் வருகும்போது
விளங்கியஜன்மத்தி லிருந்திட்டாலும்
பேசுபுகழ்ஜாதகர்க்கு பலனைத்தானே
புகலுவீரென்றுமையான் பணிந்திட்டேனே.

(இ-ள்.) குருநாதா ! மேஷம், ரிஷபம், மிதுனம், கட கம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரண்டு ராசியிலும் சந்திரன் வந்திருக்கும்போது ஜாதகர்க்குக் கொடுக்கும் பலாபலன் களை அடியேனுக்கு விபரமாய் அனுக்கிரகம் செய் தருளுவீர்.

குரு சொல்வது

எண்சீரடி விருத்தம்

அவ்விதமேசொல்லுகின்றேன் மாணுக்கா நீ
அன்புடனேகவனித்து மதியில்நாட்டு
எவ்விதமாய்சந்திரனும் இராசிதன்னில்
இருந்தாரோ அவ்வவ்விதமேபலன்கள்
அவ்வியமில்லாதமையும் காரணத்தை
அருள்புரிவேன்சிஷ்யா நீகவனமாக

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஒவ்வியேகருத்துடனே கேட்டுக்கொண்டு
ஓதுவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே.

(இ-ள்.) எனது பிரியமுள்ள சிஷ்யா! நீ வினவியதும் சரியே! ஆனுல் யான் உனக்கு விபரம் விபரமாக சந்திரன் ஒவ்வொரு ராசியிலுமிருக்கும்போது இன்னின்ன பலன் அமையுமென்பதை விபரமாய்ச் சொல்லுகின்றேன் கவனமாய்க் கேட்டுணர்ந்து பலாபலனை விபரமாக ஜாதகர்க்குச் சொல்லுவாய். ஆனுல், சந்திரனே மாதுர்காரனுனபடியினுலே இந்த சந்திரனின்ற இராசி வீடே ஜன்ம ராசியென்று கணக்கெடுத்துரைப்பது ஆகையால், யான் உனக்கு ஒவ்வொரு ராசியிலும் சந்திரனிருக்கும் பலனைச் சொல்வேன் கவனித்து ஜாதகர்க்கு பலனைச் சொல்வாய் அஃதெவ்விதமெனில்:—

மேஷராசியில் சந்திரனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

அன்பானஎன்சிஷ்யா மேஷந்தன்னில்
ஆனசந்திரனிருக்க பலனைச்சொல்வேன்
நன்னயமாய்கவனிப்பாய் சனிசேய்பாம்பு
நலமுடனேசேர்ந்தாலும் பார்த்திட்டாலும்
துன்பமுண்டுதுயரமுடன் வறுமையாலே
துடித்துப்பின்சுகமடைவா ரின்னங்கேளு
பொன்னவன்மால்சேர்ந்தாலும் பார்த்திட்டாலும்
போதவேநற்பலனைத் தருகுவாரே.

(இ-ள்.) மிகவும் புத்தி சாதுர்யமாய் சாஸ்திர ஆராய்ச்சியிற் தேர்ச்சி யடைந்த சிஷ்யனே! உனக்கு சந்திரனிருக்கும் மேஷராசியின் பலனைச் சொல்வேன் கவனிப்பாய்: மேஷத்தில் சந்திரனிருக்கும்போது சனி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

செவ்வாய், இராகு கேது சேர்ந்திருந்தாலும் பார்த்தாலும் பலவிதமாகிய துன்பமும் துயரமும் நேரிடுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், குரு, புதன் சம்பந்தமானாலும் சேர்ந்திருந்தாலும் சுப பலன்களும் உத்தியோக கீர்த்தியும் வியாபார லாபமும் பெருகுமென்று ஜாதகர்க்குப் பலனை விபரமாய்ச் சொல்வாய். ஆனால் சந்திரன் அந்த ஸ்தானத்தில் தனியாயிருந்தால் சமபலனாய் விளங்குமென் றுணர்வாய்.

ரிஷபராசியில் சந்திரனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

சந்திரனும்ரிஷபத்தி லிருக்கும்போது
சார்ந்துநின்றகிரகங்கள் வலுவைப்பார்த்து
எவ்விதம்பலன்சொல்வ தென்றுநீயும்
ஏமாருமற்கேட்டு மனதில்நாட்டு
சந்திரனே ரிஷபத்தில் உச்சமானால்
சகலவித நன்மையுமே வந்துசேரும்
இந்தவிதஜாதகர்க்கு பலனைச்சொன்னால்
இனிதுடனேசரியாக அமையும்பாரே.

(இ-ள்.) சந்திரபகவான் ரிஷபராசியி லிருக்கும்போது எந்தெந்தகிரகங்கள் சம்பந்தமானாலும் பார்வையானாலும் தான் ரிஷபராசியில் உச்சம்பெற்ற பலத்தினாலும், சகல வித நன்மையும் சரீராரோக்கியமும் பந்துமித்திரர்களின் சேர்க்கையு முண்டாகும். ஆனால் குரு, புதன் சம்பந்தமானாலும் பார்வை பெற்றாலும் விசேஷ நன்மையுண்டாகும். ஆனால் ஜாதக பலனைக் கவனித்துச் சொல்லும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

போது திசாபுத்தி அந்தர பலனையும் கணக்கெடுத்துப் பார்த்துப் பலனை விபரமாய் சொல்லுவாய்.

மிதுனராசியில் சந்திரனிருந்த பலன்

மிதுனத்தில்சந்திரனு மிருக்கும்போது
மேன்மையுடன்புதன்சேர்ந்து தனுசில்வியாழன்
அதிகபலமாய் ஆக்ஷியாயிருந்து
அன்புடனேசந்திரனை பார்த்திட்டாலே
நிதிசேரும்பந்துமித்ரர் வந்துசூழ்வார்
நீணிலத்திலனைவர்களும் புகழ்ந்துரைப்பார்
விதிமுறையும்மதிமுறையும் கவனித்தோர்ந்து
விளக்கும்நல்லபலனெல்லாம் வழுத்துவாயே.

(இ-ள்) மிதுன ராசியில் சந்திரபகவா னிருக்கும் போது, புதபகவான் மிதுனத்தில் ஆட்சிபெற்று சந்திரனுடன் சம்பந்தப்பட்டும், தனுசில் குருபகவானிருந்து மிதுனத்திலிருக்கின்ற சந்திரனைப் பார்த்தால் வியாபார விருத்தியுடன் திரவிய லாபமும் கிடைக்கும். பந்துமித்திரர் சேர்க்கையும் பலவித நன்மையு முண்டாகும். ஆனால், வளர்பிறைச் சந்திரனு யிருப்பதால் விசேஷ நன்மை யுண்டாகும்.

கடகராசியில் சந்திரனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

கடகமெனும்ராசியிலே மதியிருக்க
கனககுருஉச்சமாய் சேர்ந்திருக்க
திடமுடனேமகரத்தில் புதனிருந்து
திறமையுடன்சந்திரனை பார்த்திட்டாலே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அடைவுடனேபலநன்மை வந்துசூழும்
அதிகபொருள்வியாபாரத்தால் கிடைக்கும்
கடல்மார்க்கபிரயாணஞ் செய்வதற்கும்
காட்டுமென்றேஜாதகர்க்குபலன் சொல்வாயே.

(இ-ள்.) கடகராசியில் சந்திரபகவானிருக்கும்போது சூரியபகவான் சம்பந்தமுற்று உச்சமாயிருப்பதுடன் மகர ராசியில் புதனிருந்து கடகச் சந்திரனைப் பார்த்தால், பல வித நன்மையும், திரவிய லாபமும் கூடும். கடல் மார்க்க யாத்திரையும் உத்தியோக விர்த்தியும், வியாபார லாபமும் கிடைக்குமென்று ஜாதகர்க்குரிய திசாபுத்தி அந்தர பலனையும் ஆராய்ச்சி செய்து பலன் சொல்லுவாய்.

சிம்மராசியில் சந்திரனிருந்த பலன்

சந்திரனும்சிம்மத்தி லிருக்கும்போது
சார்ந்துரவிதானிருந்தா லமாவாசையாகும்
இந்தவிதமிருக்கும்போ துலகில்ஜனித்தால்
இசைந்திடுவான் கொலைகளவு செய்வதற்கு
சிந்தைமகிழ்ந்தேகுருவும் தனுசில்நின்றால்
திரவியலாபத்துடனே இருப்பானென்பாய்
மந்தனுடன் இராகுகேதுக்கள்பார்த்தால்
மதிமயங்கிவறுமையடைவானென்றேதே

(இ-ள்.) சிம்மராசியில் சந்திரனிருக்கும்போது சூரியனில் சிம்மத்தில் ஆட்சி பெற்றிருந்தால் அமாவாசையாகும். அத்த சமயத்தில் பிறந்த ஜாதகன் திருடுவதற்கும் கொலை செய்வதற்கும் துணிவான். ஆகையால் தனுசிலிருந்து குரு பார்த்தால் கொலை களவு செய்ய

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மனதிசையாமல் சற்புத்திரனுயிருப்பான் என்று ஜாத கர்க்கு விபரமாய் சொல்லலாம்.

கன்னியாராசியில் சந்திரனிருந்த பலன்

கன்னியிலேசந்திர னிருக்கும்போது
கவுரமாய்புதபகவா னுச்சமாக
நன்னயமாய்சேர்ந்திருக்க குருமகரந்தன்னில்
நலமுடனேயிருந்து சந்திரனைப்பார்க்க
பொன்பொருளும்சேர்ந்திருக்கும் பூஷணமுண்டாம்
போனபொருள்வந்தெய்தும் விசேஷநன்மை
துன்பமாம்சனிராகு கேதுசேர்ந்தால்
துயரடைவார்வறுமைநோயாலென்றுசொல்வாய்.

(இ-ள்.) கன்னியா ராசியிலே சந்திரனிருக்கும்போது புதபகவான் கன்னியில் உச்சமாயிருக்கவும், மகரத்தில் குரு இருந்து சந்திரனைப் பார்த்தால் பொன் பொருள் திரவிய லாபம், வியாபார லாபம் கீர்த்தியுண்டாம். ஆனுல் கன்னியா ராசியிலிருக்கின்ற சந்திரனை சனி இராகு கேது பார்த்தாலும் சம்பந்தமானுலும் பலவிதமாகிய துன்பமும் துயரமும் சூழ்ந்து பலவித கஷ்டப்படச்செய்யும். வறுமை சூழ்ந்தும் பித்த சம்பந்தமான வியாதியால் கஷ்டப்படச் செய்யும். சந்திரபகவான் தனியாயிருந்தால் சுகதுக்கம் சமமா யிருப்பதுடன் கவலையில்லாமல் சாதாரணமாயிருக்கும். அங்காரகன் சம்பந்தமானுல் சந்ததமும் யோகமாய் மகா சமர்த்தனுக எவர்கட்கும் அஞ்சாமலிருந்து தன சேகரஞ்செய்வானென்றுசொல்லுவாய்.

©Classic Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

துலாராசியில் சந்திரனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

அர்த்தமுள்ளமதிதுலாந் தனிலிருக்க
அம்புலிக்கவ்வீடு சமமேயாகும்
எந்தவிதமானாலும் பலன்கொடாது
எழில்குருபுதன்சேர்ந்தும் பார்த்திட்டாலும்
தொந்தரைகளணுகாது சுகமும்கொஞ்சம்
தோற்றுமடா ஆனாலும சுக்கிரன்சேர்ந்தால்
சிந்தைமிகவேமகிழ்ந்து திரவியந்தேடி
சிறப்புடனேவாழ்ந்திடுவா ரென்றுசொல்லே.

(இ-ள்.) துலாராசியில் சந்திரனிருந்தால் சமமானபலனாய் யாதொரு நன்மையுமில்லாமல் மதிமயக்கமா யிருப்பதுடன் காண்போர் அறிவில்லாதவனென்று அலட்சயமாய்ப் பேசுவார்கள். ஆனால், குரு, புதன் சேர்ந்தாலும் பார்த்தாலும் கஷ்டமும் கவலையு மில்லாமல் சுகமாய் பொருள் சேகரஞ் செய்து ஆஸ்தி பூஸ்திதி யில்லாவிட்டாலும் வறுமையில்லாமல் ஜீவித்திருப்பதற்காகும். ஆனால் சுக்கிரன் சம்பந்தமுற்றால் திரவியவந்தனாய் வியாபாரத்தினாலும் பொருள் சேகரஞ்செய்து ஜீவித்திருப்பதற்காகும்.

விருச்சிகராசியில் சந்திரனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

விருச்சிகத்தில்சந்திரனு மிருக்குமானால்
விளங்கியநீசஸ்தான மதுவேயாகும்
குருபகவான்பார்த்தாலும் சேர்ந்திட்டாலும்
கொடுமையில்லைதுயரில்லை வறுமையில்லை

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பொருளுடனேகீர்த்தியுண்டு நன்மையுண்டு
புகழ்கீர்த்திவிசேஷமாய் வருகும்பாரே
பெருமையுடன்பெரியோர்கள் சேர்க்கையுண்டு
பேதமையற்றுலகினிலே யிருப்பர்தானே.

(இ-ள்.) விருச்சிகராசியிலே சந்திரனிருக்கும்போது நீசஸ்தான பலனாக யாதொரு பலனில்லாமல் மந்தமதியா யிருப்பார்கள். ஆனால், குருபகவான் சந்திரனுடன் சம்பந்தமானாலும் பார்த்தாலும் துன்பதும் துயரமுமில்லாமல் சவுக்கியமாயிருக்கும். பெரியோர்கள் சேர்க்கையும் கீர்த்தியும் பெருமையும் விசேஷமாய்ப் பொருந்தி மன தைரியமுடன் சுகமாயிருப்பார்கள்.

தனுசுராசியில் சந்திரனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

தேவகுருஸ்தானமென்னும் தனுசில்சந்திரன்
தெளிவாகயிருந்தாலே கீர்த்தியுண்டு
ஆவலுடன்பொருள்தேடி பெரியோர்சேர்க்கை
அதிகமாயமைந்திருக்கும் ஆனாலின்னும்
பூவுலகில்தனவந்த ராயிருந்து
புனிதனெனவேலயுலகோர் புகழ்ந்துரைக்க
மேவியேயிருப்பார்கள் தரணியோர்கள்
கேண்மையுடனேபுகழ்வா ரென்றுசொல்லே.

(இ-ள்.) தேவகுரு ஸ்தானமாகிய தனுசு ராசியில் சந்திரனிருக்க அதிக சாமார்த்தியமாய் பொருள் தேடி சமர்த்தனா யிருப்பதற்காகும். காண்போர் தனவந்த

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

னென்று சொல்லும் நற்பெயரமைந்து கீர்த்திவந்தனு யிருப்பதற்காகும். (குருபகவானும் மிதுன ராசியிலேயே இருக்க விசேஷ நன்மையுண்டாகும்.

மகரராசியில் சந்திரனிருந்த பலன்

மகரத்திற்சந்திரனு மிருக்கும்போது
மந்தனுடன்சேய்ராகு கேதுபார்த்தால்
ஜகமீதுள்ளோராலே பழிக்கப்பெற்று
சஞ்சலமாயிருப்பார்க ளாகையாலே
புகழுடனேகுருபகவான் சுக்ரன்பார்த்தும்
புதன்காணில்மனதைரிய மிகவுண்டாகி
மகிழுடனேதிரவியங்கள் வெகுவாய்ச்சேர்த்து
மாநிலத்தில்கீர்த்தியுடன் வாழ்குவாரே.

(இ-ள்.) மகரராசியிலிருக்கும் சந்திரனை சனி, ராகு கேது பார்த்தாலும் சம்பந்தமானாலும் பலவிதமான கஷ்டமும் கவலையுமுண்டாகும். ஆனால், குரு புதன் சம்பந்தமானால் திரவியலாபமும் கீர்த்தியுமுண்டாகும்; பெரியோர்கள் சேர்க்கையும் பெற்று ஆஸ்தி பூஸ்திதியுடன் வாழ்வார்கள்.

கும்பராசியில் சந்திரனிருந்த பலன்

கும்பத்தில்சந்திரனு மிருக்கும்போது
குருபுதனும்பார்த்தாலும் சேர்ந்திட்டாலும்
செம்பொன்பணிஆடையுடன் கீர்த்திவானாய்
செல்வந்தனாகவே வாழ்ந்திருப்பார்
அம்புலியும்தனியாக யிருந்திட்டாலும்
அரவுசனிசேய்காணில் பலனேயில்லை

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வம்புடனேதொல்லையுண்டு சுகமிராது
வறுமையுடனிருப்பார்க ளென்றுகூறே.

(இ-ள்.) கும்ப ராசியிலே சந்திர னிருக்கும்போது சனி, ராகு, கேது சம்பந்தமானாலும் சேர்ந்தாலும், பல விதமாகிய கஷ்டமும் கவலையும் துன்பமும் துயரமும் சூழும். ஆனால், புதன் பார்வையானாலும் சம்பந்தமானாலும் பலவித நன்மையும் திரவிய லாபமும் கிடைக்கும். சந்திரன் தனியா யிருந்தால் சகலவித நன்மையுமுண்டாகும். சுக்கிரன் சேர்ந்திருந்தால் பலவித சாஸ்திர ஆராய்ச்சியில் வல்லவரா யிருப்பார்கள்.

மீனராசியில் சந்திரனிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

மீனராசியிலிருந்த சந்திரனைவியாழன்
மேன்மையுடன்சேர்ந்தாலும் பார்த்திட்டாலும்
ஞானமுடன்வித்தையுண்டு கீர்த்தியுண்டு
நல்லறிவுதோன்றுமடா ஜாதகர்க்கு
தானென்றமனேற்சாக மதிகரித்து
தனவந்தனுகஉத்தி யோகஞ்செய்வான்
ஆனதொருபுதன்காணில் வியாபாரஞ்செய்து
அவனியிலேவாழ்ந்திருப்பா னென்றுசொல்லே.

(இ-ள்.) எனது அன்பான சிஷ்யா! உனது அறிவிற்கு மெச்சினேன் நீ யான் புகலும் வாக்கியமொவ்வொன்றையும் கவனித்துணர்வாய் ; குருபகவானுடைய சுயக்ஷேத்திரமாகிய மீனராசியில் சந்திரனிருக்க அந்த சந்திரனை குரு கடகத்திலிருந்து உச்சம் பெற்றுப் பார்த்தாலும் சம்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பந்தமா யிருந்தாலும், வித்தை புத்தியும் மேன்மேலும் அதிகரித்து இராஜாங்க உத்தியோகம் செய்து திரவியம் சேகரித்து கீர்த்திவந்தனு யிருப்பதற்காகும். ஆனல்; புதன் கன்னியிலிருந்து உச்சம்பெற்று மீனச் சந்திரனைக் கண்டால் பெரிய கௌரவமான வர்த்தகஞ் செய்து இலக்ஷாதிபிரபுவாய் கீர்த்திப் பிரகாசமா யிருப்பதற்காகும்.

சீஷன் விருத்தம்

எண்சீரடி விருத்தம்

என்குருவே அடியேன்மீ தருள்சுரந்து
எழிலானஜோதிஷத்தில் ராச்சியத்தை
அன்புடன்போதித்துமதி ராசிதன்னில்
அமர்ந்திருந்துபலன்கொடுக்கும் விபரஞ்சொன்
தன்மையுடன்குருபகவான் பனிரெண்டுராசி[னீர்
தனிலிருந்துபலன்கொடுக்கும் விபரந்தன்னை
நன்மையுடனெந்தனுக்கு உபதேசிப்பீர்
நமஸ்கரித்துவணங்கியே துதிக்கின்றேனே.

(இ-ள்.) குருநாதா! தாங்கள் அடியேன்மீ தருள் சுரந்து சோதிட சாஸ்திர மனைத்தும் போதித்து சந்திர பகவான் பனிரெண்டு இராசியிலிருக்கும் பலன்களையும் விபரமாய்ப் புகன்றீர். அடியேன் கவனித்துணர்ந்து புனிதனுனேன். ஆனல் துவாதச ராசிகளெனும் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரெண்டு ராசிகளில் சந்திரனிருக்கும்போது பலாபலன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தந்தவிதமே குஜபகவானுகிய செவ்வாயும் அந்தந்த ராசியிலிருந்தால் என்னென்னவிதமாய் பலன் தருவாரோ அதனை அடியேனுக்கு விபரமாய் புகல்வீர்.

குரு சொல்வது

எண்சீரடி விருத்தம்

எனதருமைசீடாகேள் பனிரெண்டுராசி
என்னுமந்தஸ்தானத்தில் குஜனிருந்தால்
தனக்குரியபலாபலனை தருகுமார்க்கம்
தற்சமயமுந்தனுக்கு போதிக்கின்றேன்
மனமகிழகவனித்து ஜாதகர்க்கு
மர்மமெல்லாந்தெரியவே பலனைச்சொல்வாய்
உனதுளத்தில்போதிக்கும் ஜோதிடத்தை
உறுதியுடனே நிறுத்தி கவனிப்பாயே.

(இ-ள்.) எனது அருமையான சிஷ்யனே! துவாதச ராசியின் எந்தெந்த ஸ்தானத்தில் குஜபகவானுகிய செவ்வாய் பகவானிருந்தாலும் தானிருந்த ராசி பலனும் தன்னுடன் சேர்ந்த கிரகங்கள், தன்னைப்பார்த்த கிரகங்களின் பலாபலனும் ஜாதகர்க்குக் கொடுக்கும் தன்மையும் விபரமாய்ச் சொல்வேன் கவனமாய்க் கேட்பாய்.

மேஷராசியில் செவ்வாயிருந்த பலன்

ஆனதொருமேஷத்தில் செவ்வாய்தானே
ஆக்ஷிபெற்றுநின்றுலே பூமிலாபம்
ஞானமுண்டுகுருசேர்ந்தால் பார்த்திட்டாலும்
நல்லறிவுதோணுமடா உத்தியோகஞ்செய்து

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வேணபொருள்சேகரிப்பான் புதன்சேர்ந்தாலும்
விருப்பமுடன்பார்த்தாலும்வர்த்தகஞ்செய்வானே
நானென்றபெருமையுடன் கீர்த்தியோங்கி
தனவந்தனுயிருப்பான் கவனிப்பாயே.

(இ-ள்.) மேஷராசியிற் செவ்வாய் பகவான் ஆட்சி பெற்றிருந்தால் பூமி லாபங் கிடைக்கும். ஆனல் குரு பகவான் தனுசு ரர்சியில் ஆட்சி பெற்றுமேஷ ராசியைப் பார்த்தால் உத்தியோகஞ் செய்து வெகு பொருள் சேகரித்து கீர்த்திப் பிரகாசமாய் இருப்பதற்காகும். ஆனல் புதபகவான் மேஷத்திலிருந்தாலும் பார்த்தாலும் கௌரவமான வர்த்தகஞ் செய்து பெருமையாய் திரவிய சேகரஞ் செய்து தனவந்நரென்று தன்னை சகலரும் புகழும்படியான கீர்த்தியுடன் வாழ்ந்திருப்பதற்காகுமென் றுணர்வாய்.

ரிஷபராசியில் செவ்வாயிருந்த பலன்

சுக்கிரனுக்காட்சியான ரிஷபந்தன்னில்
செவ்வாய்பகவானிருந்தாலே சுகமிராது
மிக்கவேசனிராகு கேதுபார்த்தால்
மிகதுன்பம்விளையுமடா சேர்க்கையாக
பக்குவமாய்குருபுதனும் சுக்கிரனும்சந்திரன்
பார்த்தாலும்சேர்ந்தாலும் பலன்களுண்டு
சிக்கிலாஜோதிடத்தை கணித்தாராய்ந்து
சிறப்புடனேபலாபலனைச் சொல்வாயே.

(இ-ள்.) சுக்கிரபகவானுக்கு சொந்த வீடான ரிஷப ராசியில்செவ்வாய் பகவானிருந்தால் ஜாதகனுக்கு சுகமே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கிடைக்காது. அந்த ராசியிலிருக்கும் செவ்வாய் பகவானை சனி, ராகு, கேது பார்த்தாலும் சம்பந்தமானாலும் பலவித மான மனக்கவலையும் கஷ்டமும் துன்பமும் துயரமும் விளையும். ஆனால், குரு, புதன் சுக்கிரன் சேர்ந்தாலும் பார்த்தாலும் விசேஷ பலன் கிடைக்குமென்று ஜாதகர்க்கு பலன் சொல்வதுடன் ஜோதிடத்தையும் கணித்தா ராய்ந்து சொல்வாய்.

மிதுனராசியில் செவ்வாயிருந்த பலன்

மிதுனமெனும்ராசியிலே குஜனிருக்க
 மேன்மையுடன்குருதனுசி லிருந்துபார்க்க
புதபகவான்மிதுனத்தி லாட்சியாகி
 பூரணச்சந்திரனுடனே செவ்வாயோடு
இதமாகச்சேர்ந்திருந்தால் வியாபாரவிருத்தி
 இலாபமுடன்தனவந்த னுயிருப்பார்
அதிகதுன்பம்சனிராகு கேதுபார்த்தால்
 ஆகாதுசகலருக்கும் விரோதியாமே.

(இ-ள்.) மிதுனராசியிலே செவ்வாய் பகவானிருக்க அவரை குரு தனுசிலிருந்து பார்த்தும் புதன் மிதுன ராசியிலேயே ஆக்ஷிபெற்று அங்காரகனுடனேசம்பந்தமா யிருந்தாலும் அந்தக் கிரகங்களுடான வளர்பிறைச்சந்திர னும் சேர்ந்திருந்தால் வியாபார விர்த்தியினல் வெகு திர வியஞ் சேகரஞ் செய்து தனவத்தனு யிருப்பதற்காகும் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்து வித்யாபிவிர்த்தி யடைந்திருப்பதற்காகும். ஆனால், மிதுனத்திலிருக்கிற

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சந்திரன், சனி, ராகு, கேது பார்த்தாலும், சம்பந்தமானு லும், சகலருக்கும் விரோதியாகவும் வறுமையாளனுகவு மிருப்பதுடன் சதாகாலமும் மன சஞ்சலமா யிருப்பதற் காகும்.

கடகராசியில் செவ்வாயிருந்த பலன்

கடகமெனும்ராசியிலே குஜனிருக்க
 கடலையுடன்எத்தொழிலும் செயவொண்ணுது
அடைவுடனேமீனத்தில் குருவிருந்து
 அன்புடனேகடகசெவ்வாய் தன்னைப்பார்த்தால்
திடமுடனே நற்பலனே கிடைக்குமென்று
 திறமுடனேபுகல்வாய் ஜாதகர்க்கு
விடநாகனெனும்ராகு கேதுமந்தன்
 விருப்பமுடன்பார்த்தாலே கொடுமையாமே.

(இ-ள்.) கடகராசியில் செவ்வாய் பகவான் இருந் தால் மனவிசாரமும் திகிலும் பொருந்தியவரா யிருப்ப துடன் எடுத்த காரியம் நிறைவேருமலும், வறுமையாள ராயிருப்பார்கள். ஆனுல் குருபகவான் மீனராசியிலிருந்து பார்த்தாலும், கடகத்திலிருக்கும் செவ்வாய் பகவானுடன் சம்பந்தமாயிருந்தாலும் மனதைரியம், உற்சாகம் உத்தி யோகவிர்த்தி வியாபார லாபத்தினுல் திரவிய சேகரஞ் செய்து கீர்த்திப் பிரகாசமா யிருப்பதற்காகும்.

சிம்மராசியில் செவ்வாயிருந்த பலன்

ஆதித்தனுக்காட்சிசிங்க ராசிதன்னில்
 அன்புடனேசெவ்வாய்பகவா னிருப்பாராகில்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வேதியனும்குருதனுசி லிருந்துபார்க்க
விளங்குபுதன்கன்னியா ராசியிலிருக்க
பூதலத்தில்கல்விகைத் தொழிலுங்கற்று
பொருள்சேர்த்துதனவந்த னுயிருப்பார்
ஆதரவாய்ச்சனிராகு கேதுபார்த்தால்
ஆகாதுவறுமைதுன்ப மெய்தும்பாரே.

(இ–ள்.) சூரியனுக்கு சொந்தமாகிய சிம்ம ராசியில் செவ்வாய் பகவா னிருக்கும்போது குரு பகவான் தனுசி லிருந்து பார்க்கவும், கன்னியாராசியில் புதபகவா னிருந் தால் கல்வியிலும் கைத்தொழிலிலும் தேர்ச்சி யடைந்து வெகு பொருள் சேகரஞ்செய்து தனவந்தரா யிருப்பதற் காகும். ஆனல், சனி ராகு கேது சிம்மராசியிலிருக்கும் செவ்வாயைப் பார்த்தாலும் சேர்ந்திருந்தாலும் பலவித கஷ்டமும் கவலேயும் வறுமையும் துன்பமும் துயரமு மடைந்தவர்களா யிருப்பார்கள்.

கன்னியாராசியில் செவ்வாய் நின்ற பலன்

கன்னியாராசியிலே செவ்வாய்நின்ருல்
கவலேயிலாமனதைர்ய மாயிருப்பார்
நன்னயமாய்ப்புதன்சேர்ந்துமீனத்தில்வியாழன்
நலமுடனேயிருந்துகன்னி குஜனேக்காண
பொன்பொருளும்சேகரித்து தனவானுகி
பூமியுடன்நிலவளமும் பெருகிவாழ்வார்
தன்மையுடன்நவக்ரக நிலேயைக்கண்டு
தாரணியில்ஜாதகர்க்கு பலன்சொல்வாயே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) கன்னியா ராசியிலே செவ்வாய்பகவானிருந்தால் சஞ்சலமில்லாமலிருப்பார்கள். ஆனால், புதன்கன்னியில் ஆட்சி உச்சமாய் பலப்பட்டு செவ்வாயுடனே சம்பந்தப்பட்டும், மீனராசியில் குருவிருந்து செவ்வாய் பகவானையும் புதனையும் பார்த்தால் வித்யாபி விர்த்தியும் வியாபார லாபமும் கிடைத்து பொன் பொருள் சேகரஞ் செய்து மகா தனவந்தனுக விளங்குவார்கள். ஆனால், மற்ற கிரகங்சிளின் நிலையைக்கண்டு பலாபலன் நடக்கும் விஷயங்களை விபரமாய்ச் சொல்ல வேண்டும்.

துலாராசியில் செவ்வாயிருந்த பலன்

அன்புடனே துலாராசி தனிலேசெவ்வாய்
அமர்ந்திருக்கசுக்கிரனும் சேர்ந்திருக்க
கும்பத்திலிருந்துகுரு பார்த்திட்டாலே
குவலயத்தில்வெகுபொருளை சேகரித்து
நன்மையுடன்தனவந்த னுயிருப்பார்
நாடியேசனிராகு கேதுபார்த்தால்
துன்பமுடன்வறுமையா லலைவாரென்றே
சொல்லுவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே.

(இ-ள்.) துலாராசியில் செவ்வாய் பகவானிருக்க சுக்கிரனும் ஆட்சி பெற்று செவ்வாயுடன் சம்பந்தமாயிருக்க குரு பகவான் கும்பராசியிலிருந்து திரிகோண பார்வை செலுத்தினல் மிகவும் கீர்த்திப்பிரகாசமாய்த் திரவியஞ் சேகரஞ் செய்து, வியாபார விர்த்தியினலும் உத்தியோக விர்த்தியினலும் திரவிய சேகரஞ் செய்து தன

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வந்தனுயிருப்பதற்காகும். ஆனுல், சனி ராகு கேது பார்த்தாலும் சம்பந்தமானுலும் மனவிசாரமும், அலைச்சலும் அதிகரித்து திரவிய சேகரஞ் செய்யுந் தன்மையில் சிறந்து, கீர்த்திவந்தரா யிருப்பதற்காகும். அதேனெனில் சனிபகவானுக்கு துலாராசி உச்சவீடா யிருப்பதினுல் வெகு நன்மையுண்டாகுமெனப் புகல்வாய்.

விருச்சிகராசியில் செவ்வாயிருந்த பலன்

அன்பாகவிருச்சிகத்தில் செவ்வாய்நின்ருல்
அதிகபொருள்சேகரித்து காணிபூமி
நன்மனையும்வீடுநிலம் வாங்குவீர்கள்
நலமுடனேகுருபுதனும் பார்க்கசேர
பொன்பொருளும்மிகச்சேரும் தனவானுக
பூமியிலே வாழ்ந்திருப்பா ரென்றேசொல்லு
தன்மையாய்சனிராகுகேது பார்க்கசேர
தரித்திரனைப்போல் மயங்கியிருப்பார்தானே.

(இ-ள்.) செவ்வாய்பகவான் விருச்சிகராசியில் ஆட்சி பெற்றிருந்தால் வியாபார விருத்தியினுலும், உத்தியோக விருத்தியினுலும் வெகுபொருள் சேகரஞ் செய்து காணி, பூமி, நிலம். வீடு, மனை வாங்குவதுடன் தனவந்தரா யிருப்பார்கள். ஆனுல், சனி, ராகு, கேது பார்வையுற்ருலும் சனி சம்பந்தமானுலும் சதாகாலமும் மன சஞ்சலமா யிருப்பார்கள்; எவ்விதமானுலும் தனவந்தராகவே யிருப்பதற்காகும்.

தனுசுராசியில் செவ்வாயிருந்த பலன்

தனுசென்னும்ராசியிலே செவ்வாய் நிற்க
தனவந்தராகவே விளங்குவார்கள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இனிதுடனேகுருபார்த்தும் சேர்ந்திட்டாலும்
இசைந்தநல்யோகமுடன் வாழ்ந்திருப்பார்
தனதான்யசம்பத்தும் பெருகிவாழ்வார்
சனிராகுகேதுகண்டால் பலனிராது
மனமகிழஜோதிடநூ லாராய்ந்தன்பாய்
மாநிலத்தின்ஜாதகர்க்கு பலன்சொல்வாயே.

(இ-ள்.) தனுசுராசியிலிருக்கும் செவ்வாய் பகவானை குருபகவான் சேர்ந்தாலும் பார்த்தாலும் மகா தனவந்தனுக விளங்குவதற்குரிய யோகவானுய்விளங்கி உத்தியோகத்திலுைம் வியாபாரத்திலுைம் வெகு பொருள் சேகரித்து தனதான்ய சம்பத்துடன் பந்து மித்திரர்கள சூழ பெருந்தன்மையான குடும்பரக்ஷகனு யிருப்பதற்காகும். ஆனல், சனி ராகு கேது இவர்கள் பார்த்தால் எவ்வளவு பிரயாசை எடுத்தாலும் சம்பாதித்த திரவியத்திற்கும் சாப்பிட்ட செலவிற்கும் சரியாய் அமைந்து விடுமல்லாமல் வறுமை நோயில்லாமல் மத்திய பலனுயிருக்கும்.

மகரராசியில் செவ்வாயிருந்த பலன்

மகரமெனும்ராசியிலே செவ்வாய்நிற்க
மதிகுருவும்புதன்சுக்ரன் பார்க்கில்சேர்ந்தும்
புகருடனேவிளங்கினல் பொருள்கைகூடும்
புனிதனெனஜாதகர்கள் கீர்த்தியோடு
மகிழுடனேவாழ்ந்திருப்பார் சுகமாய்நாளும்
மாட்சியுடனேஜீவித் திருப்பர்தானே
ஜெகமீதுகிரகநிலை தன்னைப்பார்த்து
சொல்லுவாய்பலன்விபரம் தெளிவாய்நீயே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) மகரமெனும் ராசியிலேசெவ்வாயிருக்க அந்த ராசியை சந்திரன், குரு, புதன் சுக்ரன் பார்த்தால் வெகு தனவந்தனு யிருப்பதற்காகிய வித்தையும், புத்தியும், கல்வியும் ஞானமும் மேன்மேலு முண்டாகும். ஆனல், கிரக நிலையுடன் திசாபுத்தியையும் பார்த்துப் பலன் சொல்ல வேண்டும்.

கும்பராசியிலிருந்த செவ்வாய் பலன்

விருத்தம்

அம்புவியிலேபிறந்த ஜாதகர்க்கு
அளவுபோல்ஜாதகத்தின் பலனைச்சொல்ல
கும்பராசியிலிருந்த செவ்வாய்தன்னை
குருசுக்ரன்புதனிபார்த்தால் விசேஷலாபம்
வம்பணுகாசுகஜீவி யாகநாளும்
வாழ்ந்திருப்பார்வையகத்தில் கீர்த்தியுண்டு
சம்ப்ரமதாய்சனிராகு கேதுபார்த்தால்
சரசமாய்லாபமது கிடைக்குந்தானே.

(இ-ள்.) உலகத்தில் பிறந்த ஜாதகர்க்கு பலன் சொல்வதென்றால் அவர்கள் பிறக்கும்போது கும்பராசியில் செவ்வாயிருந்தும் அவரை குரு சுக்கிரன் புதன்பார்த்தால் விசேஷ நன்மையுண்டாகும். வியாபார விர்த்தியினலும் உத்தியோக விர்த்தியினலும் விசேஷ திரவிய லாபம் கிடைத்து தனவந்தரா யிருப்பதற்காகும். ஆனல், சனி, ராகு, கேது, கும்பராசியிலிருக்கும் செவ்வாயைப் பார்த்தால் சமமாய் பலன் கிடைக்கும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மீனராசியிலிருந்த செவ்வாய் பலன்

அன்புடனே மீனத்தில் செவ்வாய்நிற்கில்
அந்தணனும்புதன்சசியு மிருக்கப்பார்க்க
நன்மையுடன் உத்தியோகம் வியாபாரவிர்த்தி
நலமுடனேவாய்க்குமப்பா நல்லோர்சேர்க்கை
பொன்பொருளும்மிகவுண்டாம் பூஷணங்கள்சேரும்
போஜனதிகுறைவில்லாமற் கிடைக்குமென்று
வன்மையுடன் பலன்சொல்வாய் ஜாதகர்க்கு
வையகத்தோருந்தனையே நம்புவாரே.

(இ-ள்) மீனராசியி லிருக்கின்ற செவ்வாயை குரு புதன் சந்திரன் பார்த்தாலும், சேர்ந்திருந்தாலும், வித்யா சமர்த்தினுலும், கைத்தொழில் சமர்த்தினுலும் சகலரும் புகழுந் தன்மையாய் தேர்ச்சி யடைந்து, உத்தியோக விஷயத்தினுலும், வியாபார விர்த்தியினுலும் வெகு பொருள் சேகரித்து தனவந்தரா யிருப்பதுடன் நல்லோர் சேர்க்கையும் சுகபோஜனதிகளும் கிடைத்து மிகவும் சவுக்கியமாகவும் மேன்மையாகவு மிருப்பதற்காகும்.

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

ஆதியிலேயெந்தன்மேல் கிருபைகூர்ந்து
அவனியோர்ஜாதகத்தின் பலனுராய்ந்து
சோதிடநூல்கணிதத்தின் விபரம்போல்
சொல்லவேஅனிக்கிரகஞ் செய்திட்டீரே
கோதிலாப்பனிரெண்டு ராசிதன்னில்
கோரியபுதனிருந்தால் பலன்தானென்ன

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நீதியாயெந்தனுக்கு சொல்வீரென்று
        நினதருளை சிந்தித்து பணிந்திட்டேனே.

(இ-ள்.) குருநாதா! அடியேனுக்கு ஜோதிட சாஸ்திரத்துண்மையை வெகு அன்பாக கற்பித்த ஆசிரியரே! இதுவரையிலும் தாங்கள் போதித்தவை யனைத்துங் கற்றுணர்ந்தேன். இனி தமது கிருகையால் புதபகவான் பனிரெண்டு ராசியிலு மிருந்தால் என்னென்ன பலன் அனுபவிப்பார்களோ? அதனை அடியேனுக்கு விபரமாய்ப் புகலுவீர் குருநாதா.

குரு சொல்வது

அன்பானசிஷ்யாநீ சொல்லக்கேளாய்
        ஆறிரண்டுராசியிலே எவையிலேனும்
தன்மையாய்புதனிருந்தால் சமயம்போல
        தருவார்பலாபலன்கள் ஜாதர்க்கு
நன்மைதுன்மையின்னதென்று கவனித்தற்கு
        நாடியேகிரகசேர்க்கை பார்வைகண்டு
இன்பமுடன்பலனுரைத்தால் உண்மையென்று
        இப்புவியோருந்தனையே புகழுவாரே.

(இ-ள்.) எனது அன்பான சிஷ்யனே! புதபகவான் ஜாதகரின் ஜனனகாலத்தில் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரெண்டு ராசியில் எந்தெந்த ராசியில் அந்த புதபகவான் இருக்கின்றாரோ அந்தந்த ராசிக்குரிய பலனும் மற்ற கிரகங்களில்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சேர்க்கை நோக்கத்தா லுண்டாகும் பலனும் சமயோசித மாய்க் கொடுப்பாரென் றுணர்வாய்.

மேஷராசியிலிருந்த புதன் பலன்

வித்யாகாரனுன புதன்மேஷத்தில்
விருப்பமுடனிருந்தாலும் குருபார்த்தாலும்
புத்தியுண்டுபக்தியுண்டு விவேகமுண்டு
பொருள்சேர்க்குந்திறமையுண்டுவித்தையுண்டு
எத்திசையும்கீர்த்தியுண்டு புகழுமுண்டு
எங்கெங்கும்வியாபாரஞ் செய்யலாபம்
உத்தியோகவிர்த்தியுண்டு சம்பத்துண்டாம்
உதித்தலக்னபலன்போல கணித்துச்சொல்லே.

உதித்தலக்னபலன்போல கணித்துச்சொல்லே.

(இ-ள்.) வித்யா காரகனுகிய புதபகவான் மேஷ ராசியிலிருக்கும்போது அவரை குரு பார்த்தாலும் சேர்ந் தாலும் வித்தையும், புத்தியும், ஞானமும், கல்வியும், விவேகமும் பொருந்தி, வியாபாரத்தினும் உத்தியோக விஷயத்தினும் திரவிய லாபம் பெற்று தனவந்தரா யிருப்பதற்காகும். ஆனல், ஜாதகர் பிறந்த ஜனன லக்கி னத்தைக் கணித்து புதனின்ராசியின் கணக்கெடுத்துச் சொல்ல வேண்டும். கிரக சேர்க்கை பார்வைக்கிசைந்த விதமாகவே சுப அசுப பலன் நடக்குமென் றுணர்வாய்.

ரிஷபராசியில் புதனிருந்த பலன்

புதபகவான்ரிஷபத்தி லிருக்கும்போது
பொருந்தியேகுருசுக்கிரன் சனிபார்த்தாலும்
இதமுடனே பொன்பொருளும் மிகவேசேரும்
இசைவாய்உத்தியோகத்தில் பெருமையுண்டு

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சதமாகஎப்போதும் லாபமுண்டு
சனிராகுகேதுசெவ்வாய் இருக்கபார்க்க
அதமபலனுண்டாகும் நன்மையில்லை
அவனியிலேகவலையுடன் கலங்குவாரே.

(இ-ள்.) புதபகவான் ரிஷபராசியி லிருக்கும்போது குரு, சுக்கிரன், சந்திரன் சேர்ந்தாலும் பார்த்தாலும் வித்யாசமர்த்துடன் உத்தியோகஞ்செய்தும், வியாபாரஞ் செய்தும் திரவியம் சேகரஞ் செய்வதற்காகும். அதனுல், பொன், பொருள் மிகவும் சேரும். சகலருமபுகழும்தன்மை யான மேன்மையாயிருப்பதற்காகும். ஆனல் சனி, ராகு, கேது, செவ்வாய் ரிஷபத்திலிருந்த புதனைச் சேர்ந்தாலும் பார்த்தாலும் பலவிதமான கஷ்டமும், கவலையுமுண்டாகு மென் றுணர்வாய்.

மிதுனராசியிலிருந்த புதன் பலன்

மிதுனத்தில்புதனுட்சி யாகநின்று
மேன்மையுடன் குருசுக்ரன் சனிபார்த்தாலும்
இதமுடனேசேர்ந்தாலும் வியாபாரத்தில்
இசைவாகவெகுலாபம் கிடைக்குமப்பா
பதமுடனேசனிராகு கேதுபார்க்க
பலதுன்பம்நேரிடுமென் றுரைத்திடாயே
நிதிசேரும்மேஷத்தில் குஜனிருக்க
நீதியாய்பூதலத்தில் ஜீவிப்பாரே.

(இ-ள்.) மிதுன ராசியில் புதன் ஆட்சியா யிருக்கும் போது குரு, சுக்கிரன் சந்திரன் பார்த்தாலும் சேர்ந்தாலும் பெருந்தன்மையான வியாபாரஞ் செய்து விசேஷ பொருள் சம்பாதித்துக் கீர்த்திப் பிரகாசமா யிருப்பதற்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

காகும். அக்சமயம் மேஷத்தில் செவ்வாய் ஆட்சி பெற்றிருந்தால், காணி, பூமி, நிலபுலத்துடன் வாழ்ந்திருப்பார்கள். ஆனால், சனி, ராகு, மிதுனத்திலிருக்கும் புதனுடன்சேர்ந்தாலும் பார்த்தாலும் பலவிதமான கஷ்டமும், கவலையும் சூழ்ந்து பலவித துன்பமும் துயரமும் அதிகரித்து வறுமையாளரா யிருப்பதற்காகும்.

கடகராசியிலிருந்த புதன் பலன்

கடகத்திலிருக்கும்புத னோடுசந்திரன்
கலந்திருக்கும்போதுகுருஉச்சராகி
திடமாகசசிமாலோ டிருக்கும்போது
தீரவைராக்கியமாய் வித்தைகற்று
படபடப்பாய்இராஜங்க உத்தியோகஞ்செய்து
பற்பலதர்த்தகஞ்செய்து கீர்த்தியோங்கி
அடைவாகபூதலத்தில் வாழ்ந்திருந்து
ஆஸ்திபூஸ்திதியுடனே விளங்குவாரே.

(இ-ள்.) கடகராசியில் புதனிருக்கும்போது சந்திரன் ஆட்சியாகவும், குரு உச்சமாகவு மிருந்து சேர்ந்திருக்க ஜாதகன் தைரியமாய் வித்யாசாலைக் கேகி வைராக்கியமாய் வித்தை கற்று மிகவும் சாமர்த்தியமாய் இராஜாங்க உத்தியோகஞ் செய்தும் இன்னும் பலவிதமான வர்த்தகஞ் செய்தும் மகா தனவந்தனாக ஆஸ்தி பூஸ்தி யுடன் வாழ்ந்திருப்பார். இந்த கிரகங்கள் மூவரும் கடகத்திலிருக்கும்போது பிறப்பதற்கு வெகு புண்ணியபல

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

னிருக்கவேண்டும். இந்தச் சமயத்திதி மிதுனமே லக்கி னமா யிருந்தால் விசேஷ நன்மை யுண்டாகும்.

சிம்மராசியில் புதனிருந்த பலன்

சிம்மத்தில்புதனிருக்க கேதுராகு
சேர்ந்திருந்தும்பார்த்தாலும்சனிசேய்காணில்
பங்கமாய்பலகாரியம் வியர்த்தமாகும்
பட்டகஷ்டம்வீணுகி கவலையுண்டாம்
தங்கியேசூரியனும் ஆக்ஷிபெற்று
தனுசுலிருந்தேகுருவும் பார்த்திட்டாலே
எங்கெங்கும்கீர்த்திபெற்ற தனவானுகை
இருப்பார்கள்பிரபுவென் றுலகோர்முன்னே.

(இ-ள்.) சிம்மராசியில் புதனிருக்க அவரை சனி ராகு கேது பார்க்க எந்தகாரியமும்செய்வதற்கு ஆரம்பஞ் செய்தால் பலவிதமான பங்கமாகும். அப்படியே விடா முயற்சியாய்ச் செய்தாலும் எடுத்த காரியம் வீணுகி பல வித கவலையுண்டாகும். ஆனுல் சூரியன் சிம்ம ராசியில் ஆட்சிபெற்று புதனுடன் சம்பந்தமா யிருந்தும், தனுசில் குருவிருந்து ஆட்சியாய் சிம்மராசியிலிருந்த சூரியனையும் புதனையும் காணில் பலவிதமான சாமர்த்தியஞ் செய்து கீர்த்திப்பிரகாசமாய் வர்த்தகஞ் செய்தும், உத்தியோகஞ் செய்தும் சகலரும் புகழ்ந்துரைக்கும்படியான பெருமை யுடன் பிரயத்தனமாய் உலகத்திலுள்ளோர் மெச்சுந் தன்மையாய் ஜீவித்திருப்பார்கள்.

கன்னியாராசில் புதனிருக்க பலன்

கன்னியிலேபுதனுட்சி உச்சமாகி
காணும்சுக்கிரனும் குருவும்சந்திரன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நன்னயமாயிருந்தாலோ வர்த்தகஉத்தியோகம்
நலமுடனேதான்புரிந்து பணஞ்சேர்த்தன்பாய்
பொன்பொருள்பூஷணலாபத் துடனேவாழ்ந்து
புவியிலுள்ளதனது பந்துமித்ரரெல்லாம் [பாயி
அன்புடனே புகழ்ந்துரைக்க ஆஸ்திபூஸ்திதியோடின்
அவனியிலேவாழ்ந்திருப்பா ரறிகுவீரே.

(இ-ள்) கன்னியா ராசியில் புதன் ஆட்சி உச்சமாயிருக்க, சுக்கிரனும் குருவும், சந்திரனும், புதனுடனே சேர்ந்திருந்தால்வித்தையிற்சிறந்துஉத்தியோகஞ் செய்தும், பலவிதமான கௌரவ வர்த்தகஞ் செய்தும்,பலவிதமான சமர்த்தினல் ஆஸ்தி பூஸ்தி யுடையவர்களாய் தனந்தான்ய சம்பத்துடன் பந்துமித்திரர் சகிதம் சுகானந்தமாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

துலாராசியில் புதனிருந்த பலன்

புதபகவான்துலாராசி தனிலிருக்க
பொருந்தியேசுக்கிரனும் ஆட்சியாக
சதமெனவேமிதுனத்தில்வியாழ னிருந்துபார்க்க
சனிஉச்சமாகவே சேர்ந்திருக்க
விதவிதமாய்வர்த்தகஞ்செய் தெவருமெச்ச
விளங்குவான்லக்ஷாதி பிரபுவாக
இதமாககன்னியிலே பிறந்தோருக்கு
இத்தகையபலனெல்லாம் நடக்கும்பாரே.

(இ-ள்.) புதபகவான் துலாராசியிலிருந்தும், அந்த ஸ்தானத்திலேயே சுக்கிரபகவான் ஆட்சியாகவும், சனி பகவான் உச்சமாகவு மிருக்கும்போது குரு பகவான்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மிதுனத்திலிருந்து துலாராசியைப் பார்க்க பலவிதமான வர்த்தகஞ் செய்து பிரபுவாக விளங்குவான். ஆனால், கன்னியா லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு மேற்படி துலா ராசியில் மேற்குறிப்பித்த விதமாக கிரகங்களிருந்தால் இலக்ஷாதி பிரபுவா யிருப்பதற்காகும்.

விருச்சிகராசியில் புதனிருந்த பலன்

விருச்சிகத்தில்புதனிருக்க செவ்வாய் ஆட்சியாக
விரும்பியிருந்தாலும்குரு கடகத்திலுச்சம்
பெருமைபெற்றுபார்வைதனை செலுத்தினாலே
பேசுபுகழ்கீர்த்திவா னுய்விளங்கி
அருமைசேர்கப்பல்வியா பாரஞ்செய்து
அநேகமாய்பொருள்சேர்த்து நிலமும்பூமி
தருணமேவாங்குவார் சனிராகு கேதுபார்க்க
தந்திரமாயிருப்பார்கள் கவனிப்பாயே.

(இ-ள்.) விருச்சிகராசியில் புதபகவானிருக்கும்போது செவ்வாய் ஆட்சியாய் புதனுடன் சேர்ந்திருக்கக் கடக ராசியில் குரு உச்சம்பெற்று விருச்சிகத்திலிருக்கும் புதனை யும் செவ்வாய் கிரகத்தையும் பார்த்தால் கடல் மார்க் கத்தின் தீவுகளின் சரக்குகளை கப்பலிற் கொண்டு வந்து பற்பல தேசத்திலும் வியாபாரஞ் செய்து விசேஷமாய் திரவிய சேகரஞ் செய்து கப்பல் வியாபாரியென பெய ரெடுத்து இலக்ஷாதி பிரபுவாய் விளங்கி காணி, பூமி, வீடு, மனைமுதலான நிலபுலன்களை வாங்கிக்கொண்டு, பந்துமித்திரர் புகழ் வெகுமேன்மையாக ஜீவித்திருப்பார்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கள். ஆனால், சனி, ராகு, கேது பார்வையானால் மன விசாரமா யிருப்பார்கள்.

தனுசு ராசியில் புதனிருந்த பலன்

தனுசென்னும்ராசியிலே புதனிருக்க
தகுந்தவிதம்மகரத்தில் சனிசேய்நிற்க
கனமுடனேகுருதனுசில் ஆட்சியாக
கனகமணிவியாபாரி யாகவாழ்வான்
தனியாகபுதனிருந்தால் பலன்தானற்பம்
தக்கபடிகேதுராகு சேரபார்க்க
நினைவில்பலயோசனைகள் விளங்கினாலும்
நிலைக்காதுசெய்கார்யம் வர்த்தமாகாதே.

(இ-ள்.) தனுசு ராசியில் புதனிருக்கும்போது மகரத்தில் சனி ஆட்சியாகவும், செவ்வாய் உச்சமாகவுமிருந்து குருவானவர் தனுசில் ஆட்சிபெற்று .புதனுடனே சேர்ந்திருந்தால் நவரத்ன வியாபாரஞ் செய்து வெகு பொருள் தேடி பூமி லாபத்துட னிருப்பார்கள். புதன் தனியாக இருந்தால் சமபலனாய் நடக்கும். ராகு கேது பார்த்தாலும் சேர்ந்தாலும் மனதில் நினைவுமாத்திரம் பலவிதமாய் தோற்றும். ஆனால் நினைத்த காரியம் முடியாது.

மகரராசியில் புதனிருந்த பலன்

மகரத்தில்புதனிருக்க சனிசேய்சேர
மாட்சிமையாய்தமிழ்வித்தை கற்றுணர்ந்து
புகழுடனேவர்த்தகத்தில் லாபமேற்று
பூமிமனைவீடுகளும் வாங்கிக்கொண்டு

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஜெகம்புகவாழ்ந்திருப்பார் பெருமையாக
செந்திருவும்வந்ததுவும் குருபார்த்தாலே
அகமகிழவாழ்ந்திருப்பா ரென்றேநாளும்
அவனியில்சூழ்ஜாதர்க்குப் புகலுவாயே.

(இ-ள்) மகர ராசியிலே சனி ஆக்ஷியாகவும் செவ்வாய் உச்சமாகவு மிருக்கும்போது புதபகவானும் மகர ராசியி லிருந்தால் வித்யா விர்த்தியினாலும், வியாபார விர்த்தியினாலும் திரவிய சேகரஞ் செய்து பூமி, மனை, வீடு நில்புலத்துடனே மிகவும் பெருமையுடனே கீர்த்திப் பிரகாசமாய் வாழ்ந்திருப்பார்கள். ஆனால், குரு பார்த்தால் மகாலட்சுமி கடாக்ஷத்துடனே பந்து மித்திரர் புத்திர பாக்கியத்துடனே சுக ஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

கும்பராசியில் புதனிருந்த பலன்

கும்பத்தில்புதனிருக்க சனிஆட்சியாக
குருசுக்ரன்சேர்ந்தாலும் பார்த்திட்டாலும்
அம்புவியிலேராஜ யோகமாக
அனுபவிப்பார்பலநன்மை விசேஷமாக
செம்பாம்புகேது ராகுடனேசூரியன்
சேர்ந்தாலும்பார்த்தாலும் ஜாதகர்க்கு
வம்பானபலதுன்ப துயரஞ்சூழும்
வையகத்தில்சுகமில்லா திருப்பர்தானே.

மீனராசியில் புதனிருந்த பலன்

மீனராசியில்குருவும் ஆக்ஷியாக
மேன்மையுடன்சுக்கிரனும் உச்சமாக

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தானிருந்தால்புதனிருக்க சங்கீதவித்வானுதி
தரணியில்வாழ்வோர்க்கு குருவாய்த்தோன்றி
ஞானமுடன் தத்வப்பிரசங்கியாகி
நல்லறிவுதான்விளங்கி சுகமாய்வாழ்வார்
வானசாஸ்திரங்கற்று ஜோதிடத்தில்
வல்லவராயிருப்பார்கள் கவனிப்பீரே.

(இ-ள்.) மீனராசியில் குரு ஆட்சியாகவும் சுக்கிரன் உச்சமாகவு மிருக்கும்போது, புதனும் மீனராசியிலிருந்தால் உலகத்தி லிருப்போர்க்குக் குருவாக விளங்கி ஞானோபதேசஞ் செய்தும், தத்துவப்ரசங்கஞ் செய்தும், நல்லறிவு விளங்கி சுகமாக வாழ்ந்திருப்பதுடன், வான சாஸ்திரங்கற்று ஜோதிடத்தில் தேர்ச்சியுடையவர்களா யிருப்பார்கள்.

சீஷன் சொல்வது

ஐயனேகுருநாதா அடியேனுக்கு
ஆதாரமாகவே ஜோதிடத்தைத்
துய்யனேபோதித்தீர் கிருபைகூர்ந்து
தொல்லுலகின்ஜாதகர்க்கு இராசிதன்னில்
மெய்யனேவியாழனின்ற பலனெனக்கு
மேன்மையாய்ச்சொல்வீரென் றுமதுபாதம்
வையமிசைநம்பியே பணிந்துயாலும்
வணங்கியேதுதிக்கின்றேன் குருவேபோற்றி.

(இ-ள்) குரு ஸ்வாமி! அடியேனுக்குச் சகாயமாக ஜோதிடசாஸ்திரத்தைப்போதிப்பதற்கு கிருபைசெய்து கிரகநிலை யனைத்தும் கற்பித்தீர். ஆனல், மேஷம்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்என்னும்பனிரெண்டு ராசிகளில் எந்தெந்த ராசியில் குருவிருந்து சுபாசுபபலன் கொடுப்பாரோ அதை அடியேனுக்கு விபரமாய்ச் சொல்வீரென்று தமது திருவடியைப் பணிந்து, தமது திருவருளை சிந்திக்கின்றேன் அனுக்கிரகஞ் செய்வீர் சுவாமி.

குரு சொல்வது

சொல்லுவேனென்சிஷ்யா விபரமாக
சோதிடத்தின்சாராம்சம் மனதுட்கொண்டு
அல்லல்துன்பத்தாற்றிகைத்து கலங்கினுலும்
அகமெலிந்துவருத்தமுரு திருந்தென்னுளும்
வல்லாண்மையாயிருப்பீ ருலாகார்முன்னே
வானோர்கள்குருவான வியாழனெந்த
நல்லவைசெய்யும் ராசிதனிலே நின்றால்
நடக்கின்றபலன்சொல்வேன் கவனிப்பாயே.

(இ-ள்.) அன்பான சிஷ்யனே! ஜோதிடசாரம்சத்தை விபரமாய்ச் சொல்லுகிறேன் கவனிக்கவும். ஜாதகர்க்குத் துன்பமும் துயரமும் வருவதெல்லாம் கிரக நிலையாகுமென்று மனவிசார மெய்தாமல் மனோற்சாகமா யிருக்க வேண்டும். கிரகங்கள் நல்ல ஸ்தானத்தி லிருக்கும்போது நல்ல பலனும், கெட்ட ஸ்தானத்தில் லிருக்கும்போது கெட்ட பலனும் நேரிடுமாகையால் அதற்குத் தகுந்தவிதமாக சுகதுக்கத்தை யனுபவிக்கும்போது மனோ விசாரமாகிலும், [illegible]லும்

CC-0. Old Tamil Texts, Digitized by Sri Muthulakshmi Research Academy

பகவத் பக்தியானந்தமா யிருந்தால் யாதொரு பாபத்தி லும் சிக்காமல் சுத்தமா யிருந்து இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியும் பெறுவதற்காகும். இவற்றிற் கிசைந்த விதமாய் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், என்னும் பனிரெண்டு ராசியில் எந்தெந்த ராசியில் குரு வருகின்ருரோ அப்போது நடக்கும் பலன் விபரத்தைச் சொல்லுகின்றேன் கவனிப்பாய்.

மேஷராசியிலிருந்த குரு பலன்

எண்சீரடி விருத்தம்

குருபகவான்மேஷத்தி லிருக்கும்போது
குஜனுடசியாயிருந்து சூரியனுச்சம்பெற்று
பெருமையாயிருந்தாலே தனவந்தனுகி
பொன்பொருளும்வீடுமனை ஆஸ்திபூஸ்தி
அருமையுடனேசேர்த்து பந்துக்கூட்டம்
அனைவருக்குமேலாக கீர்த்திபெற்று
தருமதானஞ்செய்து வாழ்வாரென்று
தைரியமாய்புகலுவாய் ஜாதகர்க்கே.

(இ-ள்.) குருபகவான் மேஷராசியி லிருக்கும்போது செவ்வாய் பகவான் மேஷத்தில் ஆட்சியாயிருந்தும், சூரியன் உச்சனுக மேஷத்திலிருந்தால் அந்த ஜாதகர்கள் வித்தியாசமர்த்தினுல் உத்தியோகஞ்செய்தும் வியாபாரம் செய்தும், பலவிதமாய் திரவியம் சேகரித்து வீடு, மனை, நிலபுலத்துடனே ஆஸ்தி பூஸ்திகளாய் சுக ஜீவியா யிருந்து தமது பந்துக் கூட்டத்தார் புகழ்ந்துரைக்கும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தன்மையாய் அன்னதான தரும கைங்கரிய மனைத்தும் செய்து மனேல்லாசமாய் ஜீவித்திருப்பார்சள்.

ரிஷபராசியிலிருந்த குரு பலன்

அன்புடனேரிஷபத்திலே குருவிருக்க
அவருடனேசந்திரனும் புகரும்சேர
பொன்பொருளும்சேகரிப்பார் தடையிராது
போதவேசனியும் சேய்பார்த்தாலும்
நன்மையில்லைதுன்பமுண்டு வதுமைசூழும்
நவிலொணுபலகவலை வந்துசூழும்
வன்மையாய்ஜாதகரின் லக்னராசி
வகையுடனேதானறிந்து பலன்சொல்வாயே.

(இ-ள்.) ரிஷபராசியில் குருவிருக்க அவருடனே சந்திரன் உச்சமாகவும், சுக்கிரன் ஆட்சியாகவு மிருப்பதினுல் அந்த ஜாதகன் விசேஷமாய் திரவியம் சேகரித்து காணி, பூமி, வீடு, மனை. நிலபுலத்துடனே மகாதனவந்தனுக விளங்குவார்கள். ஆனுல் சூரியன், சனி, செவ்வாய் சேர்ந்தாலும் பார்த்தாலும் துன்பமும் துயரமும் கஷ்டமும் கவலையும் வறுமையும் பொருந்தியவர்களா யிருப்பார்கள். ஆகையால், ஜாதகரின் ஜனன லக்னத்தைப் பார்த்துப் பலன் சொல்லவும்.

மிதுனராசியிலிருந்த குரு பலன்

குருபகவான்மிதுனத்தி லிருக்கும்போது
கூறவேபுதனுட்சி யாயிருக்க
கருணையுடன்சுக்கிரனும் சந்திரன்பார்க்க
சகலகலைவல்லவரா யிருக்கலாகும்
பொருளுடனே ஆபரணமும்வீடுபூமி
பொன்வெள்ளிநாணயமும் சேகரித்து

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பெருமையுடன்வாழ்ந்திருப்பா ருலகிலென்று
பேதமில்லாத்துரைத்திடுவாய் ஜாதகர்க்கே.

(இ-ள்.) மிதுன ராசியில் குருபகவா னிருக்கும்போது புதனும் ஆட்சியாய் சேர்ந்திருக்க சுக்கிரனும் சந்திரனும் பார்வை செலுத்தினல் அந்த ஜாதகன் எந்த கல்வியை கற்பதற்கு விரும்புகின்ருனே அவையனைத்தும் தனக்கு எளிதில் சித்தியாகி சகலவித வித்தைகளிலும் தேர்ச்சி யடைந்தசமர்த்தனுய் உத்தியோகத்திலும் வியாபாரத் தினுலும் திரவிய சேகரஞ்செய்து பொன், வெள்ளி ஆபர ணுதிகளுடனும் வீடு, பூமி, மனை, நிலபுலத்துடனே மிக வும் பெருமையுடன் யாவரும் புகழ்ந்துரைக்கும்படியாக ஜீவித்திருப்பார்கள்.

கடகராசியிலிருந்த குரு பலன்

கடகத்தில்குருபகவா னுச்சமாகக்
கதிரவனுமேஷத்தி லுச்சமாகி
திடமுடனேசந்திரனும் ஆட்சியானல்
திருமகளின்கடாட்சத்தால் நன்மையுண்டு
அடைவுடனேசனிராகு சேய்கேதுகாணில்
ஆகாதுநற்பலன்கள் கிடைத்திடாது
மடத்தனமும்பிணிமயக்கம் விசனம்சோம்பல்
மந்தபுத்தியாயிருப்பா ரென்றுசொல்லே.

(இ-ள்.) கடகராசியில் குருபகவான் உச்சமா யிருக் கும்போது சூரியன் மேஷத்தில் உச்சமாய் நிற்கசந்திரன் கடகத்தால் ஆட்சியா யிருக்கும்போது பிறந்த ஜாதக னுக்கு லட்சுமிகடாட்சமும் பொருந்தி, சதாகாலமும் தனந்தான்ய பசு புத்திர லாபத்துடனே தனவந்தராய் ஜீவித்திருப்பார்கள். ஆனல், செவ்வாய், சனி, ராகு,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கேது பார்த்தாலும் சம்பந்தமானாலும், மந்த புக்தியாய் யாதொரு நற்பலனு மில்லாமல் சோம்பலும், விசனமும் பொருந்தியவராய் யிருப்பதற்காகும்.

சிம்மராசியிலிருந்த குரு பலன்

சிம்மராசியில்குருவு மிருக்கும்போது
செவ்வாயும்நட்பாக சேர்ந்திருக்க
பங்கமிலாசூரியனும் ஆட்சியாக
பராக்ரமமாய்உத்தியோக வர்க்கத்தால்
தங்கமுடன்வெள்ளிசெம்பு பணமும்சேர்த்து
தரணியிலேபெருமையாய் வாழ்ந்திருப்பார்
சங்கையுடன்சனிராகு கேதுபார்த்தால்
சஞ்சலமும்வறுமையும்சூழ்ந் தலைவர்தானே.

(இ-ள்.) சிம்மராசியில் குருபகவா னிருக்கும்போது அந்த சிம்மத்தில் செவ்வாய் நட்பாய்சேர்ந்திருக்க, சூரிய பகவான் ஆட்சியாகி சம்பந்தமா யிருக்கையில் பிறந்த ஜாதகன் மகாசமர்த்தனாய் விளங்கி, வித்யாசம்பத்துடன் உத்தியோகஞ் செய்தும் வர்த்தகஞ்செய்தும்வெகு லாபத்துடன் தங்க நாணயமும் செம்பு நாணயமும் விசேஷமாக சேகரித்து பூமியிலே தமது பந்துமித்திரர்முன் மிகவும் மேன்மையாக ஜீவித்திருப்பதற்காகும்.

கன்னியாராசியிலிருந்த குரு பலன்

கன்னியிலேபுதனுட்சி உச்சமாக
கருதுபுகழ்வியாழனுமே சேர்ந்திருக்க
நன்மையுடன்வித்வானாய் பலகாஸ்திரங்கற்று
நலமுடனேசங்கீத வித்வானாகி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பொன்பூமிவீடுநில புலமும்பெற்று
பொருளதிகமாய்சேர்த்து வாழ்ந்திருப்பார்
தன்மையுடன்சனிராகு கேதுபார்த்தால்
தரணியிலேவறுமையினுல் திகைப்பர்தானே.

(இ-ள்.) கன்னியாராசியில் புதன் ஆட்சி உச்சமாய் இருக்கும்போது அவருடனே குருபகவானிருந்தால் ஜாதகன் மகா வித்வானுய் பற்பல சாஸ்திரமும் கற்று சங்கீத வித்வானு யிருந்து பொருள் விசேஷமாய் பொருள் சம்பாதித்து சுகஜீவியாய் வாழ்ந்திருப்பான். ஆனுல், சனி, ராகு கேது பார்த்தாலும் சேர்ந்திருந்தாலும் அடிக்கடி சமயம் நேரிடும்போதெல்லாம் வறுமையாளனு யிருப்பானென் றுணர்வாய்.

துலாராசியில் குரு பலன்

துலாராசிதன்னிலே குருவிருந்தால்
துயரில்லாமனதைரிய மாயிருப்பார்
பலகலையுமன்பாக கற்றுணர்ந்து
பார்தனிலேவித்வானுய் விளங்கிநல்ல
கலையுணர்ந்துஞானமய மாய்விவேகம்
கருத்தினிலேநல்லபுத்தி மிகவேதோன்றி
நலமுடனேதனவந்த னுய்விளங்கி
நற்கீர்த்தியோடிருப்பார் கவனிப்பீரே.

(இ-ள்.) துலாராசியில் குருபகவானிருக்கும்போது துன்பமும் துயரமுமில்லாமல் மனதைரியமா யிருப்பதுடன் பலகலையும் தெளிவாய் கற்றுணர்ந்து ஞானமாய் விவேகத்திற் சிறந்து மனதில் நல்ல புத்தியுடன் விளங்கி கீர்த்திப்பிரகாசமா யிருப்பார்கள். (இவ்வளவு நன்மையும் கன்னியாராசியில் புதனிருக்கும்போது அந்த லக்கி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

னத்திலேயே ஜனனமானவர்களுக்குத்தான் பொருந்தியிருப்பதுடன் தனவந்தனுகவு மிருப்பார்கள்.

விருச்சிகராசியில் குருவிருந்த பலன்

விருத்தம்

விருச்சிக ராசிதன்னில
வியாழனு மிருக்கும்போது
மருவிலா செவ்வாய்நாதன்
மகரத்தி லுச்சமாக
அருமையாய் சனிகும்பத்தில்
அமர்ந்திருந்தால் நல்யோகம்
பெருமையாய் கிடைத்துநாளும்
பொன்பொருளுடன் வாழ்வாரே.

(இ-ள்.) விருச்சிக ராசியிலே வியாழ பகவா னிருக்கும் போது அந்த ராசிநாதனுகிய செவ்வாய் மகரத்தில் உச்சமா யிருக்கவும் சனி பகவான் கும்பராசியில் ஆட்சி பெற்றிருந்தால் பெரியோர்கள் சேர்க்கையுடன் ஞானப் பிரசங்கத்தில் விருப்பமும் தர்க்க சாஸ்திரத்தில் பெருமையும் கிடைத்து சதாகாலமும் குறையாத பொன் பொருளுடன் வாழ்ந்திருப்பார்கள்.

தனுசுராசியில் குருவிருந்த பலன்

கட்டளைக்கலிப்பா

தனுசுராசியில் குருஆட்சியாய்
தக்கசுக்கிரன் மீனத்திலுச்சமாய்
தனிமையாய் சனிமகரத்திருக்கினும்
தகுந்தபுத்தியும் மிதுனத்திலுற்றிட
தன தான்யபசு புத்திரலாபமும்
[illegible]

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மனமகிழ்வாய்ப்பெற்றுப்பொன் பொருள்சேர்த்து
மானிலந்தனில் ஜீவித்திருப்பாரே.

(இ-ள்.) தனுசு ராசியில் குருபகவான் ஆட்சியாயிருக்கவும், புதபகவான் மிதுனத்தில் ஆட்சியாகவுமிருக்கும்போது ஜனனமான ஜாதகனுக்கு தனதான்யம் பசு புத்ர லாபமும் மனதைரியமும் கீர்த்தியும் பெற்று உத்தியோகத்தினுலும், வியாபாரத்தினுலும் மனோற்சாகத்துடன் திரவிய சேகரஞ் செய்து பொன் பொருள் சேர்த்தும்கொண்டு மகாதனவந்தனுகப் பூலோகத்தில் ஜீவித்திருப்பதற்காகும்.

மகரராசியில் குருவிருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

மகரத்தில்குருவிருக்க சனிசய்சேர
மதிவீட்டிலிருந்துபுதன் குருவைப்பார்க்க
ஜெகமீதுபலகலையு முணர்ந்துஞானத்
தெளிவுற்றவிவேகயென் றெவருமெச்ச
புகழுடனேபொருள்சேர்த்துவியாபாரஞ்செய்து
பூதலத்தில்உத்யோகம் செய்துநன்ருய் [ம்
அகமகிழவீடுநிலம் காணியாட்சி
அதிகாரமாகவே ஜீவிப்பாரே,

(இ-ள்.) மகரராசியிலிருக்கும்குருபகவானுடனே சனிபகவானும் செவ்வாய் பகவானும் சேர்ந்திருக்க புதன் கடகத்திலிருந்து பார்க்க உலகத்தில் பற்பல சாஸ்திரத்திலுஞ் சிறந்த வித்வானுகவும், விவேகமுடைய உத்யோகஸ்தனுகவும், வியாபாரியாகவு மிருந்து வெகு பொருள் சேகரித்து வீடு, மனை காணி பூமி வாங்கிக்கொண்டு ஆளடிமையுடனே அதிகாரமாய் ஜீவித்திருப்பார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கும்பராசியில் குருபகவானிருந்த பலன்

கும்பமெனும்ராசியிலே சனிமால்நிற்க
குருபகவானும்அந்த ராசியேற
அம்புவியில்வெகு கீர்த்தியாயிருப்பார்
அனேகவிதமாய்தனஞ்சேர்த் துலகில்வாழ்வார்
லம்பாகபருதிமதி ராகுகேது
வளர்குஜனு ம்பார்த்தாலும் சேர்ந்திட்டாலும்
செம்புதுட்டும்கிடையாமல் வறுமையாக
ஜெகமீதுதுயற்றுத் திரிவர்தாமே.

(இ-ள்) கும்பராசியில் குருபகவா னிருக்கும் போது அந்த ராசியிலே சனி ஆட்சியாகவு மிருக்க இவர்களுடனே புதபகவானும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் பூலோகத்தார் மெச்சிக்கொள்ளுந் தன்மையாக கீர்த்திப் பிரகாசமா யிருப்பதுடன் மகா சமர்த்தாக திரவியஞ் சேகரித்து குடும்பரக்ஷசனுய் ஜீவித்திருப்பதற்காகும். ஆனல், சூரியன், சந்திரன், ராகு, கேதுசெவ்வாய்முதலான கிரகங்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும் ஜாதகன் எவ்வளவு பிரயாசையாய் கஷ்டப்பட்டாலும், செம்பு துட்டும் கூட கையில் மீதியில்லாமல் அடிக்கடி வறுமைநோயினுல் கஷ்டப்படுவார்கள்.

மீனராசியில் குருவிருந்த பலன்

குருபகவான்மீன ராசியிலேநிற்க
குஜன்ரவியும்மேஷத்தி லிருந்தாரானுல்
பொருள்சேர்த்துகாணிபூமி நிலமும் வாங்கி
பிரபுவெனபந்துகூட்டத் துடனேவாழ்வார்
கருணையுடன்சுற்றத்தார் சகாயத்தாலே
கவலையின்றிமனமகிழ்வா யிருக்கலாகும்
மருவியேசனிராகுகேது சேரபார்க்க
மந்தமதிவறுமைதுய ரெய்துந்தானே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) குருபகவான்மீனராசியிலே ஆட்சியாயிருக்க அவருடனே வளர்பிறை சந்திரன் சேர அப்போது சூரியனும் செவ்வாயும் மேஷத்திலிருந்தால் மகா தனவந்தனென் றுலகோக் புகழுந் தன்மையான வெகு பொருள் சேகரித்து, வீடு, மனை, காணி பூமி வாங்கிக்கொண்டு மேலும் மேலும் பணத்தை விருத்தி செய்து பிரபுவென்று பந்துமித்திரர் புகழ்ந்துரைக்க மேன்மையாய்வாழ்ந்திருப்பதற்காகும். ஆனால், சனி, ராகு, கேது, மீனராசியிலிருக்கும் குருவுடனேயும், மேஷராசியிலிருக்கும்செவ்வாய் சூரியனுடனும் சேர்ந்தாலும் பார்த்தாலும் அற்ப புத்தியும் அறிவின்மையும், வறுமையும், துயரமும் அதிகரித்து சதாகாலமும் ஏழ்மையாகவே யிருக்கும்படிச் செய்யும்.

குரு சொல்வது

அன்புறும்சீஷா நீயும்
அறிவினு லுணர்ந்திட்டாயே
பன்னிரண் டுராசியிலும் சுக்ரன்
பக்ஷமா யிருக்கும்போது
அன்புடன் கிரகநோக்கும்
அவர்களோ டிணங்கிநிற்கும்
தன்மைபோல் பலாபலன்கள்
தருகுவா ரறிகுவாயே.

(இ-ள்.) எனது அன்பான சிஷ்யா! பனிரெண்டுராசியிலும் சுக்கிரபகவான் வருகும்போது மற்ற கிரகங்களின் சேர்க்கையின்படி பலன் கொடுப்பாரென்றுணர்க.

சீஷன் சொல்வது

ஜெகம்புகழுமென்குருவே தெளிந்தஞான
தேசிகாஜோதிட சாராம்சமெல்லாம்
மகிழுடனே அடியேனுக் குபதேசித்த
மாக்ஷிமைசேராசிரியா சுக்கிரனும்ஒவ்வொர்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

புகழிலகும்ராசியிலே வருகும்போது
 புனிதனே நடக்கின்ற பலனைச்சொல்லி
தகுந்தவிதமெந்தனுக்கருள் செய்வீரென்று
 தமதுதிருவடிபணிந்து துதிக்கின்றேனே.

(இ-ள்.) உலகமெல்லாம் புகழ்ந்துரைக்கும்படியான எனது குரு ஸ்வாமி! அடியேனுக்கு சோதிட சாராம்ஸத்தை யெல்லாம் விபரமாய் அனுக்கிரகஞ் செய்தீர். அவற்றின் சாராம்ஸ மனைத்தும் அடியேன் தெளிவாய்க் கற்றுணர்ந்து புனிதனுனேன். ஆனல் சுக்கிரபகவானனவர், மேஷம், ரிஷபம், மிதுனம் கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பன்னிரண்டு ராசியிலும் வருகும்போது அவரால் நேரிடும் சுப அசுபபலன்களை அடியேனுக்கு விபரமாய்ப் புகல்வீரென்று தமது திருவருளைச் சிந்திக்கின்றேன் சுவாமி.

குரு சொல்வது

மாசிலாமன துடைய எனதுசிஷ்யா
 மாநிலத்தின்மனிதர்கட்கு நன்மைதுன்மை
வீசியேவருவதென்றல் கிரகவேதை
 விளங்கினல்துயருண்டு விலகில்நன்மை
ஜோசியத்தின்விசேஷமெல்லாம் கவனித்தோர்க்கு
 சுலபமாய்தெரியுமென்று மதிப்பாய்நீயே
ஆசையுள்ளமாணுக்கா சுக்கிரனபலனைச்சொல்வேன்
 அன்பாககவனித்துக் கொள்வாயே.

(இ-ள்.) குற்றமற்ற சுத்த மனதுடைய எனது அன்பான சிஷ்யா! உலகினில் மனிதர்கட்கு நன்மையும் துன்மையும் விளங்குவதெல்லாம் கிரகங்களி லிருக்கும் ஸ்தான பலன்களேயாகும் என்றலும் ஒவ்வொரு கிரகஞ்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

களும் எந்தெந்த ராசிலிருந்தாலும் அந்த ராசி பலத்துடனே அந்த கிரகங்களைப் பார்த்த கிரகத்தின் பலனும் சேர்ந்த பலனும் தகுந்த விதமாய்த் தருவார். அப்படியிருக்க இந்த சோதிட சாராம்ஸ பலன் விபரமாய்க் கவனித்தவர்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்வார்கள். ஜாதகன் அநுபவிக்கும் நன்மை துன்மையனைத்தும் அவரவர்கள் முன் ஜனனத்தில் செய்த பாவ புண்ணிய வசத்தின்படியேபூமியில் கிரகங்களினுல் சுகதுக்க மடைகின்ருரென்பதுஉனக்குத் தெளிவாய்த் தெரியும். ஆனுல் சுக்கிர பகவானும் மற்ற கிரகங்களின்படியே எந்தெந்த கிரகங்களின் சேர்க்கை பார்வை பெறுகின்றதோ அந்த பலன்களனைத்தும் விபரமாய்த் தருவதை புகல்வேன் கவனமாய்க் கேட்பாய்.

சுக்கிரன் மேஷராசியிலிருந்த பலன்

எண்சீரடி யாசிரிய விருத்தம்

சுக்கிரனும்மேஷத்தி லிருக்கும்போது
சுரர்குருவும்புதன்சசியும் காண்பாராகில்
மிக்கவேபலன் தருவார் மென்மேலும்கீர்த்தி
மிகுதியாயடைந்திடுவார் சுகபோகபாக்கியம்
எக்காலமும்குறையாய் வாழ்ந்திருப்பார்
இராகுகேதுக்கள்குஜன்ரவி சேரபார்க்க
துக்கமுடன்துயரத்தால் கலகஞ்சூழும்
துன்பமாய்வறுமையுற்று திகைப்பர்தாமே.

(இ-ள்.) மேஷ ராசியில் சுக்கிரபகவான் இருக்கும்போது அவரை குருபகவானும் புத பகவானும் சந்திர பகவானும் பார்த்தாலும் சேர்ந்திருந்தாலும் அதிக திரவிய சம்பத்துடனே மேலும் மேலும் கீர்த்தியும், சுகபோக பாக்கியமும் தவருமல் ஆயுள் வரையும் ஆனந்தமாய் அனுபவித்துக் கொண்டிருப்பார்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கள். ஆனால், ராகு, கேது, செவ்வாய்சூரியனும் மேஷத்தி லிருக்கின்ற சுக்கிரனைப் பார்த்தாலும் சேர்ந்தாலும் பல விதமாகிய கலகமுற், பந்துக்களிடத்திலும் மனையாளிடத் திலும், சண்டை சச்சரவும், வறுமையும் துன்பமும் துயர மும் நேரிடுமென்று கவனித்துணர்வாய்.

சுக்கிரன் ரிஷபராசியிலிருந்த பலன்

அன்புடனே சுக்கிரனும் ரிஷபந்தன்னில்
ஆட்சியாயிருக்கசனி புதனும்சேர
நன்மைமிகவுண்டாகும் போகபாக்யம்
நல்லசுவையானருசி மிகுந்திருக்கும்
இன்பமுள்ளபலகார பக்ஷணங்கள்
இசைந்தஅன்னபதார்த்தங்கள் கிடைக்கு
துன்பமாம்குஜரவியும் ராகுகேது [மப்பா
தொடர்ந்தாலும்பார்த்தாலும் கவலையாமே.

(இ-ள்.) சுக்கிரபகவான் ரிஷப ராசியில் ஆட்சியா யிருக்க, சனி பகவானும் புத பகவானும் சம்பந்தமாய்ச் சேர்ந்திருந்தாலும் பார்த்திருந்தாலும் சதாகாலமும் மன உற்சாகம், பெண்கள் சிநேகமும் நல்ல ருசி மிகுந்த பல கார பக்ஷணங்களும் நாவிற்கினிய அன்ன பதார்த்தங் களும் சுகானந்த வாழ்வும் மிக மகிழ்வாய் கிடைக்கும். ஆனால், சூரியன், செவ்வாய், ராகு, கேது, பார்ந்தாலும் சேர்ந்திருந்தாலும் பலவித துன்பமும், துக்கமும் கவலை யும், மனசஞ்சலமும், வறுமையும் சூழ்ந்து பலவிதமாய் கஷ்ட மடையச் செய்யும்.

சுக்கிரன் மிதுனராசியிலிருந்த பலன்

அசுரர்குருசுக்கிரனும் மிதுனராசி
அமர்ந்திருக்கப்புதனும் சேர்ந்திருக்க

CC-0 Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இசைவாகதனுசில்குரு இருந்துபார்க்க
இராஜயோகபாக்ய சுகசௌக்கியங்கள்
பசையானவியாபார உத்யோகலாபம்
பந்துமித்திரர்நேயம் மாதர்சேர்க்கை
அசையாமல்கிடைக்கும்ரவி சேய்காணில்சேர
அலைச்சலுடன்தரித்திரமுற் றலைகுவாரே.

(இ-ள்.) சுக்கிரபகவான் மிதுனராசியி லிருக்கும் போது புதபகவானும் சந்திரபகவானும் அவருடனே சேர்ந்திருந்தும் குருபகவான் தனுசு ராசியிலிருந்து பார்வை செலுத்தினுல் ராஜயோக சுகபோக பாக்கியங்களை அனுபவிப்பதற் கிசைந்த திரவிய லாபந் தருவதற் கிசைந்த பெருமையான வர்த்தகங்களும் உயர்தரமான உத்தியோகங்களும் நடனமாதர் சேர்க்கையும் பந்து மித்திரர் கூட்டத்தின் உபசரணைகளும் 'விசேஷமாய்க்கிடைப் பதுடன் சதா காலமும் மனோ உற்சாகமும் பொருந்தி யிருக்கும். ஆனுல், மிதுனத்திலிருந்த சுக்கிரனை சூரியன், செவ்வாய் சேர்ந்திருந்தாலும் மன அலைச்சல் தீராக் கவலை பலவித ஆலோசனையால் ஏதொன்றையும் பூர்த்தி செய்யாமல் அறைகுறையாகவே செய்து எதிலும் திருப்தி யில்லாமல் வறுமையாளராய் சகலருக்கும் பகையாளி யாய் அடி உதையுடன் வெறியரா யலைந்து மிக வறுமை யாளராயிருப்பார்கள்.

கடகராசியில் சுக்கிரனிருந்த பலன்

கடகமெனும்ராசியிலே புகரிருக்க
கதிரவனும்சேய்கூடில் கலகம்துன்பம்
விடாதுதுயராகுமப்பா ஜாதகர்க்கு
விதியிதுவென்றவர்களும் விசனிப்பார்கள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அடைவாகசுரர்குருவும் சசிமால்சேர்ந்தும்
அன்புடன்பார்த்தாலும் சுகபோகபாக்கியம்
திடமாகவேகிடைக்கும் தனதான்யலாபம்
திருமகளின் கடாக்ஷமதுசேருந்தானே.

(இ-ள்) கடகராசியில் சுக்கிரனிருக்கும்போது அவருடனே சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருந்தாலும் ஜாதகனுக்கு பலவிதமான மனஸ்தாபமும் எடுத்த காரியம் நிறைவேருமலும் மாதர்களினுலும் பந்து மித்திரராலும் பலவிதமான கலகமும் சஞ்சலமும் வறுமையும் சூழ்ந்து சதா துக்கமும் துயரமும் துன்பமடையச் செய்யும் ஆனுல், கடகத்திலிருந்த சுக்கிரனேடு புதன், சந்திரன் குரு சம்பந்தமானுலும் பார்வை செலுத்தினுலும் ஸ்திரீகளின் சிநேகம் சுகபோக பாக்கியம் கிடைப்பதற்கிசைந்த திரவிய லாபந் தருவதல்லாமல் வியாபார லாபத்தினுலும் உத்தியோக லாபத்தினுலும் பொருள் சேகரித்து சுகானந்தமா யிருப்பதற்காகும். மகா லட்சுமி கிருபையும் பொருந்தி யிருப்பதற்காகும்.

சிம்மராசியில் சுக்கிரனிருந்த பலன்

புகர்சிம்மந்தனிலிருக்க சசியும்பொன்னன்
புதனிவர்கள்சேர்ந்தாலும் பார்த்திட்டாலும்
வெகுவாகதனந்தேடி. கீர்த்திவானுய்
வேசையர்களுடன்சேர்ந்து ஆடல்பாடல்
மகிழ்வாககண்டுகளித் தானந்திப்பான்
மாநிலந்தனிலிவனே பிரபுவாகும்
சுகமில்லைகதிர்சேய்ராகு கேதுகூடில்
சூழ்புவியில்தரித்திரனு யலைகுவானே.

(இ-ள்.) சுக்கிர பகவானுனவர் சிம்மாசியிலிருக்கும் போது குரு, சந்திரன், புதன் இவர்கள்சேர்ந்திருந்தாலும்,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சிம்ம ராசியிலிருக்கும் சுக்கிரனை இம்மூன்று கிரகங்களும் பார்த்தாலும் பலவிதமாய் திரவியந் தேடி தாசி வேசிகளுடனே ஆடல் பாடல் புரிந்து மனோல்லாசமாய் ஜீவித்திருந்து சகலரும் மெச்சும் கீர்த்திவந்தனு யிருப்பதற்காரும். ஆனால் சிம்மராசியிலிருக்கும் சுக்கிரனுடனே சூரியன், செவ்வாய், ராகு, கேது சேர்ந்திருந்தாலும் சுக சவுக்கியமில்லாமல் சதாகாலமும் மனவியாகூலத்துடனே ஜாதகர்கள் பலவித கலகத்தினுல் கஷ்டப்பட்டு கவலையுடன் தரித்திர இம்சையுடனே வறுமைநோயாற் கலங்குவார்கள்.

கன்னியா ராசியில் சுக்கிரனிருந்த பலன்

கன்னியாராசியிலே புகரிருந்து
  கதிரவன்சேய்ராகு கேதுகூடில்
துன்பமுண்டுதுயரத்தால் வறுமையுண்டு
  தொலையாததுன்பமே யடைவர்கண்டாய்
தன்மையுடன்புதனுட்சி சனியுச்சமாக
  தானிருந்தால்சுக்ரனுடன் சுகபோகங்கள்
நன்மையுடனேகிடைகக்கும் தனதான்யலாபம்
  நலமுடனேபோகசுக மெய்துவாரே.

(இ-ள்.) கன்னியாராசியிலே சுக்கிரனிருந்தால் அவனுடனே சனி சூரியன், செவ்வாய், ராகு, கேது சேர்ந்தாலும் பார்த்தாலும் பலவிதமான துன்பமும துயரமும் வறுமையும் கஷ்டமும் கவலையும் சூழ்ந்து துயரப்படுத்திக் கொண்டிருப்பதுடன் ஸ்திரீ சேர்க்கையில்லாமல் தியங்கி மயங்கி திக்கற்ற பரதேசிபோ லலையச்செய்யும். ஆனால், கன்னியா ராசியிலிருந்த சுக்ரனுடன் புதபகவான் அட்சி உச்சமாய் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகர்கருப் பலவித நன்மையும் ஸ்திரீகளின் சிநேகமும் சுகபோக

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பாக்கியமும் சுகானந்த வைபவமும் திரவிய லாபமுங் கிடைக்குமென் றுணர்வாய்.

துலாராசியில் சுக்கிரனிருந்த பலன்

அன்புடனே துலாராசி தனிலேசுக்கிரன்
ஆக்ஷியாயிருந்திடவும் சனியும்சேர்ந்து
நன்மையாய்குருபுதனும் சனியும்பார்க்க
நலமுடனே வெகுலாப மனுபவித்து
கன்னியர்கள் சேர்க்கையுடன சுகபோகங்கள்
களிப்புடனேயனுபவிப்பார் குறையுருமல்
வின்னமுடன் பருதிசேய் சேர்ந்திட்டாலே
விதவிதமாய்வேதனைவந் தெய்தும்பாரே.

(இ-ள்.) துலா ராசியிலே சுக்கிரபகவான் ஆட்சியாயிருக்கும்பேபது சனி உச்சமாய் அவருடனே சேர்ந்திருந்தாலப்போதுகுரு, புதன், சந்திரனும்பார்த்தால்வர்த்தகத்தாலும் உத்தியோகத்தாலும் வெகுமேன்மையாய் திரவிய லாபம் கிடைப்பதுடன் சுகபாக்யாதி வைபவங்களும் பெண்கள் சேர்க்கை முதலான சுகசவுக்கிய மனைத்தும் கிடைக்கும். ஆனல் துலாராசியிலிருக்கும் சுக்கிரனுடன் சூரியன், செவ்வாய் சேர்ந்திருந்தால் விதவிதமான வேதனைகளும் வறுமையும் சூழ்ந்து கஷ்டப்படுத்துவதுடன் பெண்களினுல் துன்பமுண்டாகும்.

விருச்சிக ராசியில் சுக்கிரனிருந்த பலன்

சுக்கிரனும்விருச்சிக ராசியிலிருந்தால்
செவ்வாயும் புதனிவர்கள் சேர்ந்திருக்க
மிக்கவேசுபபலனும் கொடுப்பதோடு
மேலானகீர்த்தியுடன் தனதான்யம்பூமி
தக்கதாய்கிடைக்குமென்று சாஸ்திரத்தில்
தகுந்தபடியேயுரைத்தோம் மானிடர்க்கு

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சிக்கலாதிசாபுத்தி பலனுராய்ந்து
செப்புவாய்ஜாதகரின் பலனைத்தானே.

(இ-ள்.) சுக்கிரபகவான் விருச்சிகராசியில் இருந்தால் அவருடனே செவ்வாய் புதனும் சேர்ந்திருந்தால் அதிகமாகிய சுபபலனும் கொடுப்பதோடு தனதான்ய சம்பத்துடனே பூமிலாபமும் கீர்த்தியும் பொருந்தி யிருக்கும். ஆனால், இலக்கன பலமும் திசாபுத்தி பலமும் ஆராய்ந்து பலன் சொல்லவும்.

தனுசுராசியில் சுக்கிரனிருந்த பலன்

தனுசிலேசுக்கிரனு மிருந்திட்டாலே
தனதான்யம்பெருகுமடா சீஷாகேட்பாய்
அனுதினமும்பலவிதநற் புத்தியுண்டாம்
அன்புடனே வியாழனுமே மீனத்துற்ருல்
தனகனமும்பந்து மித்திரர்களோடு
தரணியிலேவாழ்ந்திருப்பார் சுகமதாக
சனிராகுகேதுகுஜ னிவர்கள்சேர்ந்தால்
சண்டைசச்சரவுடனே துலங்குவாரே.

(இ-ள்) தனுசிலே சுக்கிரபகவா னிருந்தால் ஜாதகர்க்கு தனந்தான்ய பசுபுத்ர லாபத்துடனே சகலவித நன்மையும் கீர்த்தியும் உண்டாகும். ஆனால், குருபகவான் மீனராசியில் ஆட்சிபெற்று சுக்கிரனிருக்கு மிடத்திற்கு நாலாமிடமாகிய மீனராசியிலிருந்தால் பந்து மித்திரரால் சகலவித நன்மையும் கீர்த்தியும் உண்டாகும். ஆனல் சனி, ராகு, கேது பார்த்தாலும் சம்பந்தமானுலும் முன்கோபமும் சண்டை சச்சரவு முண்டாகும்.

மகரராசியில் சுக்கிரனிருந்த பலன்

மகரமெனும்ராசியிலே புகரிருந்தால்
மந்தனுமேசேர்ந்திருக்க குஜனும்சந்த்ரன்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மிகபலமாய்சேர்ந்திருந்தும் காண்பாரானுல்
மேன்மையுடன்கீர்த்தியுண்டு சம்பத்துண்டு
சுகமுண்டுதனந்தான்ய லாபமுண்டு
சூழ்புவியோர்சகாயமுண்டு கீர்த்தியுண்டு
தகமையுடன்லக்னபலன் திசாபுத்திகண்டு
தரணியில்வாழ்ஜாதகர்க்கு பலன்சொல்விரே.

(இ-ள்.) மகர ராசியில் சுக்கிர னிருந்தால், அவருடனே சனி, செவ்வாய், சந்திரனும் சேர்ந்திருந்தால் அதிகாரமும் ஆண்மையும் கீர்த்தியும் சம்பத்துடன் திரவிய லாபமும் கிடைக்கும். ஆனுல், ஜாதகர் பிறந்த இலக்கின பலனையும் அந்தந்த திசாபுத்தி பலனையும் ஆராய்ந்து பலன் சொல்லவும்.

கும்பராசியில் சுக்கிரனிருந்த பலன்

கும்பத்தில்சுக்கிரனி ருக்கமந்தன்
கூடினுல்மனேற்சாக மதிகரித்து
அம்புவியில்திரவியங்கள் சேகரித்து
ஆண்மையுடனதிகநன்மை மிகவமைந்து
செம்புவெள்ளிபொன்பணமும் தைரியமாக
சேகரித்துநன்மையுடன் வாழ்ந்திருப்பார்
வம்பனுகாதுலகமதி லிருப்பாரென்று
வழுத்துவாய்ஜாதகர்க்கு பலனைத்தானே.

(இ-ள்.) கும்ப ராசியில் சுக்கிரனிருக்க அவருடனே சனி கேந்தரித்தால் வெகு திரவியம் சேகரித்து பொன், வெள்ளி, செம்பு பணங்களுக்குக் குறையாக லக்ஷ்மீகரமாயிருப்பார்கள். உலகத்தாருடனே யாதொரு கலகமுமில்லாமல் சுகமாயிருப்பதற்காகும்.

CC-0. Old Tamil Texts Digitized by Sri Muthulakshmi Research Academy

மீனராசியில் சுக்கிரனிருந்த பலன்

மீனராசியில்சுக்கிர னுச்சம்பெற்று
மேன்மையுடனேயிருக்க குருஆட்சியாகி
தானுமேசேர்ந்திருக்க புதன்மிதுனத்துற்றால்
தன்வீட்டில்செவ்வாயும் ஆட்சியானால்
ஞானமுடன்கல்வியுண்டு சம்பத்துண்டு
ஞானத்திலுள்ளோர்கள் நட்புமுண்டு
தானேதான்வீடுமனை திரவியம்சேர்த்து
தரணியிலேவாழ்வார்கள் கவனிப்பாயே.

(இ-ள்.) மீனராசியில் சந்திரபகவா னிருந்த பலன் எவ்விதமாகுமெனில், அவருக்கு அத்த ஸ்தானம் உச்ச மானதால் அவருடனே குருவும் ஆட்சியாயிருக்க புதன் மிதுனத்தில் ஆட்சியா யிருந்தால் அந்த ஜாதகர் வித்யா விர்த்தியமைந்து ஞானமும் கல்வியும் திரவிய சம்பத்தும் விசேஷமாய் பொருந்தியிருப்பதற்காகும். உலகத்திலிருக் கும் சகலமும் தனக்கு சினேகமா யிருப்பதுடனே மகா சமர்த்தாய் திரவிய சேகரஞ் செய்து, வீடு மனை விசேஷ மாய் வாங்கிக்கொண்டு சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்க ளென்று சொல்லப்படும்.

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய
சோதிட அரிச்சுவடி மூன்றாம் பாகம்
முற்றிற்று.

இனி நான்காம் பாகத்தைப் பார்க்கவும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

௳

கடவுள் துணை

குரு சிஷ்ய சம்பாஷணையாகிய

சோதிட அரிச்சுவடி

—ஃ—

(நான்காம் பாகம்)

கணேசர் துதி

விருத்தம்

அந்தரத்தமரார்போற்றும் ஆதியேஜோதிநாதா
சிந்தையிலுனைத்துதித்தேன் திருவருள்பெற்றுயானும்
அந்தமாய்ஜோதிஷத்தை அன்புடனெழுதுதற்கு
சுந்தரகலேசிசர்பாதம் துதித்துயான்பணிந்திட்
டேனே.

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

ஞானகுருவேயுமது கிருமையாலே
ஞாலமதிலேபிறந்த ஜாதகர்க்கு
தானமர்ந்தநவக்கிரகம் இராசிதன்னில்
தன்மையுடனிருந்தாலும் பார்த்திட்டாலும்
ஆனபலன் அவரவர்க்குத் தருவாரென்று
அறைந்திடடீராஞலும் சனீஸ்வரன்தான்
தானமர்ந்தஸ்தானத்தில் பலனைக்கேட்க
தமதுதிருவடிதனையே துதித்திட்டேனே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) சுவாமி குருநாதா! தாங்கள் அடியேனுக்கு போதித்த வரையிலும் கிரகங்கள் மேஷம், ரிஷபம், மிது னம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு மகரம், கும்பம், மீனம் என்னும் 12-இராசியிலும் வருகிற போது அவரவர்க்குத் தகுந்த பலனைக் கொடுப்பார்க ளென்றுரைத்தீர். ஆனால் சனிபகவான் மேற்குறிப்பித்த 12-இராசியிலும் வரும்போது என்னென்ன விதமாய் பலாபலன் தந்து சுகதுக்கத்தை அனுபவிக்கச் செய் வாரோ அதை அடியேனுக்கு விபரமாய்ப் புகல்வீர்.

சீஷன் வசனம்

அன்பான யென்குருவே அடியேனுக்கு
அனுக்கிரகஞ்செய்தபடி யானுணர்ந்தேன்
இன்னும்பின்னால்நடக்கும் விபரமெல்லாம்
இனிதாகசொல்வீரென் றுமதுபாதம்
என்மனதிலேதுதித்து வினவலானேன்
எனக்கதனைவிபரமாய்ச் சொல்வீரையா
சின்மயானந்தசிவ னருளினாலே
சீராகஜோதிஷத்தை கவனிப்பேனே.

(இ-ள்.) எனது ஆசிரியராய் விளங்கிய குருஸ்வாமி இதுவரையிலும் அடியேனுக்கு உபதேசித்த ஜோதிட சாஸ்திர நூலாராய்ச்சி யனைத்தும் கவனித்தேன். இனி நடக்கும் ஜோதிட சித்தாந்தத்தின்படியே நவக்கிரகங் கள் ஜாதகர்க்கு கொடுக்கும் பலன்களை விவரமாய் தெரி விப்பீர் சுவாமி.

குரு சொல்வது

அன்பானசிஷ்யா நீ சொல்லக்கேளு
அவனியில்வாழ்மாந்தருக்கு நவக்கிரகங்கள்

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

முன்ஜென்மந்தன்னிற்செய்த வினையைப்போல
மூதறிஞர்வாக்கியம்போல் பலன்கொடுக்கும்
தன்மையெல்லாமுந்தனுக்கு சொல்லுகின்றேன்
தாரணியில்ஜாதகர்க்குப் பலனைச்சொல்வாய்
நன்மையாய்வாழ்ந்திருக்க விபரஞ்சொல்லி
நவக்கிரகதேவர்களை துதிக்கச்சொல்வாய்.

(இ-ள்.) எனது பிரியமுள்ள சிஷ்யா! யான் முன்பு உனக்கு தெரிவித்த ஜோதிட விபரத்தில் பின்னால் நடக்கும் விபரங்களையும் சொல்வேன். அவையனைத்தும் கவனிப்பாய். ஆனால், மனிதர்கள் முன்ஜனனத்தில் செய்த வினையளவின்படியே நவக்கிரகங்கள் அந்தந்த ராசியில் வரும்போது கொடுக்கும் பலனையும் சொல்வேன். ஆகையால், ஜாதகர்களுக்கு பலனைச் சொல்லும்போது அந்த நவக்கிரக தேவர்களை ஸ்தோத்திரஞ் செய்யும்படி சொல்வாய்.

குரு சொல்வது

அன்பானமாணுக்கா உனக்கமைந்த
அறிவினாலுந்தனுக்கு ஜோதிடத்தில்
நன்மையெல்லாம்விபரமாய் போதிப்பேன்யான்
தலருமலொவ்வொன்றும் விபரமாய்க்கேள்
பன்னிரண்டுராசியிலும் சனீஸ்வரன்தான்
பக்ஷமுடனேவந்து பலன்கொடுக்கும்
நன்மைதுன்மைபுந்தனுக்கு சொல்லுகின்றேன்
நலமுடனேகேட்டுநீ தெரிந்துகொள்வாய்.

(இ-ள்.) என் அன்பிற்கிசைந்த சிஷ்யனே! உனது அறிவினாலமைந்த ஆராய்ச்சியினால் ஜோதிடத்தின் தன்மையனைத்தும் உனக்கு விபரமாய் போதிப்பேன், நீ

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அவைகளை யெல்லாம் கவனித்துக் கற்றுணர்வாய். ஆனால், இதுவரையில் உனக்கு யான் போதித்து வந்தவை யனைத்தும் கவனித்து வந்தாயல்லவா? தற்சமயம் உனக்கு போதிக்கும் விஷயங்களில் சனிபகவான் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரெண்டு ராசிகளில் எந்தெந்த ஸ்தானத்தில் வருகின்றரோ அந்தந்த ஸ்தானத்திற்குரிய பலாபலனை விபரமாய்ச் சொல்லிகிறேன் கவனமாய்க் கேட்பாய்.

மேஷராசியில் சனிபகவான் இருந்த பலன்

சனிபகவான்மேஷத்தி லிருப்பாராகில்
சார்ந்துகுஜன்புதன் குருவும் ரவியுங்கூடில்
தனதான்யசம்பத்து மிகவுண்டாகும்
தரணியில்சூழ்பந்துக்கள் நேசமுண்டு
மனமகிழ்வும்உற்சாகம் கீர்த்தியுண்டு
மதித்திடும்ஜாதகலக்ன பலனுங்கொண்டு
கனமானதிசாபுத்தி பலனைக்கண்டு
கழறுவாய்ஜாதகரின் பலனைத்தானே.

(இ-ள்.) சனிபகவான் மேஷராசியி லிருக்கும்போது அவருடனே குருவும் செவ்வாயும் புதனும் சூரியனும் சேர்ந்திருந்தால் மிகவும் மனமகிழ்வும் மனோற்சாகமும், தைரியமும், தனந்தான்யம், பசுபுத்ர லாபமும், பந்துமித்திரர்களின் சிநேகிதமு முண்டு. அதனால் வெகு நன்மையுண்டாகும். ஆனால், ஜாதக லக்ன பலத்துடனே திசா புத்தியின் பலனையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொன்னால் சரியாயிருக்குமென் றுணர்வாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சனிபகவான் ரிஷபராசியிலிருந்த பலன்

அன்பானசனிபகவான் ரிஷபத்துற்றால்
அவருடனேசுக்கிரனும் புதனும்சேர்ந்தால்
நன்மையுடன்கல்வி சங்கீதஞானம்
நலமுடனேகற்றுணர்ந்து தனவானாகி
வன்மையுடனேசமர்த்தாய் விளங்கியிந்த
வையகத்தோர்புகழ்ந்துரைக்கும் கீர்த்திவானாய்
பொன்பணிகள்பூஷணங்கள் அணிந்துகொண்டு
புகழாகவாழ்ந்திருப்பா ரென்றுசொல்லே,

(இ-ள்.) சனிபகவான் ரிஷபராசியி லிருக்கும்போது அவருடனே சுக்கிரனும் புதனும் சேர்ந்திருந்தால் கல்வி யும் சங்கீதக்யானமும், ஆத்மலாப விசாரணையும், ஞான சிரியனால் கற்றுணர்ந்து பலவிதமாய் பொருள் சேகரஞ் செய்து, பூலோகத்தார் மெச்சுந்தன்மையாக ஆடை ஆபரணாதிக ளணிந்துகொண்டு புகழ் பிரகாசமாய் வாழ்ந்திருப்பார்கள்.

சனிபகவான் மிதுனராசியிலிருந்த பலன்

மிதுனராசியில் சனீஸ்வரனிருந்தால்
மால்மதியுங்குருகூடி நிற்பராகில்
அதிசுகமாகவே வாழ்ந்திருப்பார்
ஆபரணம்பொன்வெள்ளி மிகவேசேர்த்து
நிதிமிகுந்தனவந்த னாயிருப்பார்
நீணிலத்தோர்புகழும் பிரபுவாவார்
உதித்தலக்கினபலனும் திசாபுத்திதன்னை
உற்றுபார்த்தேபலனை உரைத்திடாயே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) மிதுனராசியில் சனிபகவா னிருக்கும்போது சந்திரனும் புதனும் குருவும் சேர்ந்திருந்தால் இரத்தினாபரண அலங்கிர்தனாகி விளங்குவதுடன் கல்வியிற் சிறந்து அரசாங்க உத்தியோகத்தில் அதிகார லக்ஷணத்துடன் வெகுபொருள் சேகரித்து உலகத்திலுள்ளோர்களெல்லாம் ஐஸ்வரிய மிகுந்த தனவந்தனாகிய சீமானென்று புகல்வதற்காகும். ஆனால், ராகு சம்பந்தமில்லாமல் லிருந்தால் தான் இத்தியாதி வைபவங்களுண்டாகுமென்றுணர்வீர். இவற்றை ஆராய்ச்சி செய்யும்போது திசாபுத்தி பலனையும் அவற்றின் பலனெவ்விதமாயமையுமோ அதனையும் இதனுடனே சேர்த்துப் பலாபலனாராய்ந்து பார்த்துப் பலனுரைக்க வேண்டும்.

கடகராசியில் சனிபகவானிருந்த பலன்

கடகராசியில்சனிசேய் ரவியும்நிற்க
கஷ்ட நஷ்டம்கவலையுடன் கலகமுண்டு
திட்மாகசந்திரனும் குருவும்சேர்ந்தால்
தீரமுடன்பொருள்சேர்த்து தனவானாகி
கடலுலகில்கீர்த்திபெறும் சீமானாகிக்
கௌரவமும்மனைவி மைந்தருடனேவாழ்ந்து
கடவுள்பக்தியாய்விரத மனுஷ்டித்தன்பாய்
காசிலிரியில்வாழ்ந்திருப்பார் கவனிப்பாயே.

(இ-ள்.) கடக ராசியில் சனிபகவா னிருக்கும் போது, அவருடனே செவ்வாய் பகவானும் சூரிய பகவானும் சேர்ந்திருந்தால் பலவிதமான கஷ்ட நஷ்டமும் கவலையும் நேரிடும். பகைவரால் கலகமும் நேரிடும். ஆனால், கடகத்தில் சந்திரன் ஆட்சியாகவும்,

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு உச்சமாகவுமிருந்தால் மனதைரியமும் உற்சாகமும் பொருந்தி யிருப்பதுடன் கல்வியில் தேர்ச்சியடைந்து உத்தியோகத்தினுல் திரவியஞ் சேகரித்து வியாபார விர்த்தியாலும் பொருள் சேகரஞ் செய்து, கற்புநிலை தவருத உத்தம மனைவியுடன் வாழ்ந்து, சற்புத்திரபாக்கியம் பெற்று சதா ஆனந்தமாய் பகவத் பக்தியிற் சிறந்து விரதானுஷ்டானம்புரிந்து வெகு மேன்மையாய் ஜீவித்திருப்பதற்காகும்.

சிம்மராசியில் சனிபகவான் இருந்த பலன்

சிம்மராசியில்சனிசேய் ரவியும்நிற்க
சித்தமிகவேகலங்கி துயரத்தாழ்ந்து
எங்கெங்கும்பகையாகி கலங்குவார்கள்
எதிரிலுற்றுகுருபுதனும் மதியும்பார்க்க
மங்காததைரியமாய் பொருளும்சேர்த்து
மாநிலத்தில்வாழ்ந்திருப்பார் திசைஆராய்ந்து
சங்கையில்லாபலனுரைப்பீர் சோதிடவல்லோரே
சரிசரியென்றேகேட்டோர் மகிழுவாரே.

(இ-ள்.) சிம்மராசியில் சனிபகவானிருக்கும்போது சூரியபகவானும் செவ்வாய்பகவானும் சேர்ந்திருந்தாலும் பார்த்தாலும் காண்போர்க்கெல்லாம் பகையாகி கலங்குவதுடன் மனவெறுப்பும் குரோதமு மதிகரித்து சதா சாலமும் விசனமா யிருப்பார்கள். ஆனுல், குரு, புதன், சந்திரன் பார்வைபெற்ருலும் சேர்ந்திருந்தாலும் மனேற்சாகமும் தைரியமும் பொருந்தியவராய் திரவியஞ் சேகரித்து சுகஜீவியா யிருப்பார்கள். அந்தச்சமயத்தில் நடக்கும் திசாபுத்தி பலனையும் விபரமாய் ஆராய்ச்சிசெய்து

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பார்த்து காலபலனை விபரமாய்ச் சொன்னால் ஜோதிடங் கேட்பவர் நடந்த விஷயமும் நடக்கும் விஷயமும் சரியா யிருப்பதால் இனி நடக்கப்போகும் பலனும் சரியாகவே இருக்குமென்று மனமகிழ்வார்களையா சோதிட கணித வல்லோர்களே.

கன்னியா ராசியில் சனியிருந்த பலன்

கன்னியிலேசனிசேயும் ரவியும்நிற்க
கலகமுண்டுசகலருமே பகையாவார்கள்
நன்னயமாய்புதன் சந்திரன் குருவும்சேர்ந்தால்
நலமுண்டுசுகமுண்டு பொருளுமுண்டு
தன்மையாய்க்கேதுசுக்ரன் சேர்ந்திருந்தால்
தைரியமும்பக்தியுடன் ஞானமுண்டு
அன்புடனேலக்னபலன்திசை ஆராய்ந்து
அவனியோர்க்குரைப்பீர் ஜோதிடவல்லோரே.

(இ-ள்.) கன்னியா ராசியிலே சனி பகவானுடன் சூரியபகவானும் செவ்வாய் பகவானும் சேர்ந்திருந்தால் மனவிசனமும் கலவரமும் பொருந்தி சகலருக்கும் பகையா யிருப்பார்கள். ஆனால் கன்னியா ராசியிருக்கும் சனி பகவானுடனே புதனும் சந்திரனும் குருவும் சேர்ந்தால் பலவித நன்மை யடைவதுடன் திரவியஞ் சேகரித்து சுகமா யிருப்பதற்காகும். கேது பகவானும் சுக்கிரபகவா னும் சேர்ந்திருந்தால் தெய்வபக்தியும் ஞானமும் திரவிய லாபமும் உண்டாகும். ஆனால், இலக்கினத்தின் குறிப் புணர்ந்து அந்தந்த சமயத்தில் நடக்கும் திசாபுத்தைிய

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஆராய்ந்து அவற்றிற்கிசைந்த பலாபலனையும் சேர்த்து மேற்படி கிரகங்கள் நின்ற பலனையும் கவனித்துச் சொல்வீர்கள் சோதிடரே.

துலாராசியில் சனிபகவான் இருந்த பலன்

அன்பாய்துலாராசியில் சனிஉச்சமாகி
அமைந்திருக்கசுக்கிரனும் ஆட்சியானுல்
நன்மையுண்டுபலவிதமாய் பொருளைத்தேடி
நகரோர்முன்கீர்த்தியுடன் சுகமாய்வாழ்வார்
தன்மையுடனேகேது சேர்ந்திருக்க
தரணியிலேஞானவானு யிருப்பார்
பொன்னவன்சூரியனவரோ டிருப்பாராகில்
பொருந்தாதிந்தப்பலன்கள் கவனிப்பீரே.

(இ-ள்.) துலாராசியில் சனிபகவான் உச்சமாயிருக்கவும் அவருடன் சுக்கிரன் ஆட்சியாயிருந்தால் பலவித நன்மையுடன் திரவியஞ் சேகரித்து நகரவாசிகள் மதிக்குந் தன்மையான கீர்த்தியுடன்சுகமாய் வாழ்ந்திருப்பார். ஆனுல் கேதுபகவானும் அவர்களுடனே சேர்ந்திருந்தால் பகவத்பக்தியானந்தத்தினுல் பெரியோர்கள் ஞானவானென்று மதிக்கும்படியான கீர்த்தி வந்தவராயிருப்பார்கள். அந்தசனி சுக்கிரனுடனே சூரியனும் குருவும் சேர்ந்திருந்தால் இத்தியாதி பெருமையும் புகழும் திரவிய லாபமும் குறையுமென்றுணர்வீர்கள், சோதிட கலைவல்லோரே. ஆனுல், சனி திசையிலும் சுக்கிர திசையிலும் வெகு பொருள் சேகரித்து சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

விருச்சிகராசியில் சனிபகவான் இருந்த பலன்

விருச்சிசகராசியில்சனியும் [illegible]
விளங்கிட [illegible]

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பொருள்மிகவேசேகரித்து தனவானாகி
பொன்மணிகள் தானணிந்து பூதலத்தில்
பெருமையாய்வாழ்ந்திருப்பார் அவ்வாறின்றி
பேர்புகழ்சனிராகு ரவியும்சேர
பருவத்திலவன்வாழ்வு வறுமையாகி
பாரோர்முன்பரிதவிப்பா னென்றுசொல்லே.

(இ-ள்.) விருச்சிக ராசியில் சனிபகவானிருக்கும் போது அவருடனே குருபகவானும், புதபகவானும் செவ்வாய் பகவானும் சேர்ந்திருந்தால் ஜாதகன் மனோ வுல்லாசத்துடனே வித்யா சமர்த்துடனே திரவிய சேகரஞ் செய்து தனவந்தனென்று தரணியோர் புகழுந் தன்மையாக பொன் பணி பூஷணலங்காரத்துடன் வாழ்ந்திருப்பதற்காகும். அவ்வித மில்லாமல் விருச்சிகராசியில் சனி; ராகு, சூரியனும் சேர்ந்திருந்தால், சத்துருக்களின் கொடுமையால் மனவிசாரத்துடன் திகிலடைந்தவனாய் வறுமையால் திகைத்துப் பரதவிப்பதற்காகும்.

தனுசுராசியில் சனிபகவான் இருந்த பலன்

தனுசுராசியிலேசனி நட்பாயிருக்க
சந்திரனும்புதன்குருவு மிருப்பாராகில்
தனதான்யம்வியாபார விர்த்தியுண்டு
தரணியோர்புகழ்ந்துரைக்கும்படியாய்வாழ்வார்
தினகரனும்சனிராகு சுக்ரன்சேர
தீராதகவலையுடன் வறுமைசூழ்ந்த
மனந்திகைத்துகனங்குறைந்து விசனத்தாழ்ந்து
மாநிலத்தோர்புகழ்ந்திடவே யலைவர்தானே,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) தனுசு ராசியில் சனி பகவான் நட்பாயிருக்கும்போது குரு பகவானும் ஆட்சியா யிருந்து அவர்களுடனே சந்திரனும் புதனும் சேர்ந்து நட்பா யிருக்கும் போது பிறந்த ஜாதகர்கள் தனந்தான்ய சம்பத்துடன் வியாபாரத்தினுல் வெகு பொருள் சேகரித்து உலகத்தோர் புகழுந் தன்மையாக மிகவும் கீர்த்திப் பிரகாசமாய் வாழ்ந்திருப்பார்கள். ஆனுல், தனுசு ராசியில் சனி யிருக்கும்போது சூரியனும் சனி ராகு சேர்ந்திருந்தால் கலகங்களினுல் பலவித துயரடைந்து வறுமையாளராய்த் திரிந்து கவலையா யிருப்பார்கள்.

மகரராசியில் சனிபகவான் இருந்த பலன்

மகரத்தில்சனி ஆட்சியாயிருந்தால்
        மால்சேய்பொன்ராகுவும் பொருந்திநின்ருல்
மிகமகிழ்வாய்வித்யாபி விர்த்தியாக
        மேன்மையுடன் இலக்கண சாஸ்திரங்கள்கற்று
ஜகமீதுவியாபார உத்தியோகத்தால்
        தனந்தேடிமனைபூமி பெற்றிருப்பான்
சுகமில்லைரவிபகையாய் மகரத்துற்ருல்
        சூழ்புவியிலலைச்சலா யிருப்பர்தானே.

(இ-ள்.) மகர ராசியில் சனிபகவான் ஆட்சியாயிருக்கும்போது, அவருடன் புதன், செவ்வாய், குரு, இராகுபகவானும் சேர்ந்திருந்தால், ஜாதகனுக்கு வித்யாபி விர்த்தியாக இலக்கிண இலக்கிய சாஸ்திர ஆராய்ச்சியினுல் பிரபல சமர்த்தும் உத்யோக வியாபார விருத்தியும்பெருகி, மனை, பூமி, லாபத்துடன் பிரபலமாய் வாழ்ந்திருப்பதற்காகும். ஆனுல், சனி ராகு மகரத்திலிருக்கும்போது

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சூரிய பகவான் பகையாய் அவர்களுடனே சேர்ந்து மக ரத்திலிருந்தால் சதாகாலமும் அனைவர்க்கும் பகையாய் அலைச்சலால் திகைத்து வறுமையாளரா யிருப்பதற் காகும்.

கும்ப ராசியில் சனிபகவான் இருந்த பலன்

கும்பத்தில்சனிபகவான் னிருக்கும்போது
கூடியேரவிராகு செவ்வாய்நின்ருல்
வம்பரால்பலதுயரை யனுபவித்து
வையகத்திலேழைபோல் கலங்கிநிற்பார்
உம்பர்குருமால்சுக்ரன் சனியோடுற்ருல்
உயர்வானகீர்த்தியுடன் பொருளைத்தேடி
அம்புவியில்வியாபாரம் உத்யோகஞ்செய்தும்
அகமகிழ்வாய்சுகமாக வாழ்வர்தானே.

(இ-ள்.) கும்பராசியில் சனி பகவானுடனே சூரியன் இராகு செவ்வாயும்சேர்ந்திருந்தால், மன விசாரத்தினுல் பலவிதமான துயரடைந்து வருபவர்களாகித் துஷ்டர் களால் துன்பமடைந்து வறுமையாளரா யிருப்பார்கள். ஆனுல், குரு புதனும் சனி பகவானுடனே கும்பராசியி லிருந்தால் சகலருக்கும் நல்லவனுகி உலகத்தோர் தனக்கு உதவியாயிருந்து பல நன்மை செய்யும்படியான கீர்த்தி பெற்று வியாபாரத்தினுலும் உத்தியோகத்தினுலும் திர விய சேகரஞ் செய்து பெருமையாய் வாழ்ந்திருப்பதற் காகும்.

மீனராசியில் சனிபகவான் இருந்த பலன்

மீனராசியில்சனியும் குருவும்சேர்ந்து
மேன்மையுடனேயிருக்க புகர்மால்சேயும்
தானமர்ந்தால்யோகவா னுயிருந்து
தனதான்யசம்பத்தோ டன்பாய்வாழ்வான்

CC-0. OldTTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஊனமாய்ரவிராகு சனியோடுற்ருல்
உலகத்தில்பலதுன்ப மனுபவித்து
கானகத்திலலேபவர்போல் பகைவராலே
கஷ்டநஷ்டமனுபவித்துக் கலங்குவாரே.

(இ-ள்.) மீனராசியில் சனிபகவானும் சுக்ரனும்செவ்வாய் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் வித்யாபிவிருத்தியும் வியாபார லாபமும் பெற்று வெகுபொருள் சேகரித்து யோகவானு யிருப்பதற்காகும். ஆனல் மீனராசியிலிருக்கும் சனிபகவானுடனே சூரியனும் இராகுவும்சேர்ந்திருந்தால் பலவித துன்பமும் துயரமு மனுபவித்து சத்துருக்களால் கஷ்டநஷ்ட மடைந்து வனவாசியா யலேபவர்கள் போல் எந்த இடத்திலும் சிந்தை மெலிந்து தீராக் கவலேயுடனிருப்பார்கள்.

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

அன்பானகுருநாதா அடியேனுக்கு
ஆதாரமாகவே ஜோதிடத்தை
இன்பமாகஉபதேசித்தாற் போலந்த
இராகுபகவான்ராசிகளி லிருந்தால்
என்னென்னபலன்தருவா ரெந்தனுக்கு
எழிலுடனேசொல்வீரென் றும்துபாத
நன்மையாய்நமஸ்கரித்தேன் விபரமாக
நலமுடனேயெந்தனுக்குப் புகலுவீரே.

(இ-ள்.) குருநாதா! தாங்கள் சப்த கிரகங்களும் பனிரெண்டு ராசியில் ஒருவர்க்கொருவர் சேர்க்கையிலிருக்கும் பலாபலனெல்லாம் விபரமாய்ச் சொல்லிக்கொண்டுவந்தீர். ஆனல் இராகுகேதுக்களாகிய சாயாகிரகங்களும்,

CC-0. Tamil Texts Digitized by Sri Muthulakshmi Research Academy

ஒவ்வொரு ராசியில் முறைப்படியே வரும்போது அவர்களுடன் சேர்க்கையாயிருக்கும் கிரகங்களும் என்னென்ன பலன் கொடுப்பார்களோ அதன் விபரத்தை அடியேனுக்கு விபரமாய் புகல்வீர் சுவாமி.

குரு சொல்வது

எண்சீரடி விருத்தம்

புகலுவேன் சிஷ்யா இராகுகேது
        பொருந்திடுதற்குச் சொந்தராசியில்லை
சுகமுடனேபனிரெண்டு ராசிதன்னில்
        சுற்றிவருவாரொன்னரை வருஷகாலம்
ஜகமதில்ஜனித்திடுவோர் ஜாதகத்தைச்
        சார்ந்திருக்கும்பனிரெண்டு ராசிவீட்டில்
மகிழுடனே விளங்கிநிற்கும் பலனைச்சொல்வேன
        மதிமிகுந்தஎன் சிஷ்யா கவனிப்பாயே.

(இ-ள்.) எனதன்பிற்கினிய சிஷ்யா! உனது மனதில் பொருந்தும்படியாகச் சொல்கின்றேன் கவனிப்பாய். மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம். சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனிரெண்டு ராசிகளிலும் ஒன்னரை வருஷகாலம் வரையிலும் ராகு கேதுக்கலிருந்து ஜாதகர்க்குப் பலன் கொடுப்பது வழக்கம் ஆனால், அவர்களுடனே மற்ற சப்த கிரகங்கள் சேர்ந்து எந்தெந்த சமயத்தில் எவ்வெவ்விதமான பலன் கொடுப்பார்களோ அந்த விவரத்தையும் சொல்லிக்கொள்ள வருகிறேன் கவனிப்பாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மேஷராசியில் இராகுபகவான் இருந்த பலன்

எண்சீரடி விருத்தம்

ஜாதகத்தோர்க்கினிதுடனே மேஷராகும்
சனிபுதனும்சுக்கிரனும் பொருந்திநின்ருல்
பூதலத்தில்வெகுகீர்த்தி யர்கவாழ்ந்து
புகழுடனேதனவந்தராயிருப்பார்
காதலுடன்மனைவிமைந்தர் சுற்றத்தாரும்
கௌரவாய்மதிப்பார்கள் அவ்வாரின்றி
வேதனையாய்ச்சனிராகும் பொருந்திநின்ருல்
வெகுதுயரால்மனக்கவலை யடைகுவாரே.

(இ-ள்.) மேஷராசியிலிருக்கும் இராகுபகவானுடனே சந்திரனும் புதனும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் வித்தியாபி விர்த்தியும் உத்தியோக லாபமும் வியாபார விர்த்தியும் பொருந்தியவராய் சகலரும் புகழும்படியான கீர்த்தி வகித்து மனைவி மைந்தர்கள் சுற்றத்தார்களும் !ஆசாபாச நேசவிஸ்வாசத்துடன் இருக்கும்படியானமதிப்புடையவர்களா யிருப்பதற்காகும். ஆனல் மேஷராசியிலிருக்கும் ராகுபகவானுடனே சனிபகவான் சேர்ந்திருத்தால் 'பல விதமான கஷ்டநஷ்டத்தை அனுபவிப்பதுடன் சகலரும் பகையா யிருப்பார்கள்.

ரிஷபராசியில் இராகுபகவான் இருந்த பலன்

சுக்கிரனுமால்சசியும் ராகும்சேர்ந்து
சுகமாகரிஷபத்தி லிருப்பாராகில்
மிக்கவேதனந்தேடி புவியில்வாழ்ந்து
மேன்மையுடனேயிருப்பா ரவ்வாறின்று

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சிக்குடனேசேய்ராகும் பருதிசேர்ந்தால்
சிந்தைமெலிந்தே வறுமையாளராகி
துக்கமுடன்பலபேர்க்கும் பகைவராகி
துன்பத்தையனுபவிப்பார் கவனிப்பாயே.

(இ-ள்.) ரிஷபராசியிலிருக்கும் ராகுபகவானுடனே புதனும் சந்திரனும் சேர்ந்திருந்தால் தனவந்தர்களாய் இராஜயோகத்தை யனுபவிக்கும்படியான கீர்த்திவந்தர்களா யிருப்பார்கள். ஆனால், இராகு பகவானுடனே அங்காரகனும் சூரியனும் சேர்ந்திருந்தால் வறுமையாளரா யிருப்பதுடன் சிற்சில சமயத்தில் மனவியாதியும் சரீர வியாதியும் பொருந்தியவர்களா யிருப்பார்கள். சிலசமயம் துஷ்டர்களாலும் வம்பர்களாலும் துக்கமும் துயரமும் அனுபவித்து விரோதிகளால் துயருற்றுப் பல பேர்க்கும் பகையா யிருப்பார்கள்.

மிதுனராசியில் இராகுபகவான் இருந்த பலன்

மிதுனத்திலுற்ற ராகுபகவானோடு
மால்மதியுமிருந்தாலே வித்யாலாபம்
சுதன்பெண்டீர்பந்து மித்திரர்களோடு
சுகமாகவாழ்ந்து தனவந்தராவார்
அதிகசம்பத்தாயிருப்பா ரவனிமீது
ஆதித்தன்சனிராகும் மிதுனத்துற்றால்
நிதியிழந்துபதிவிட்டு பகைவராலே
நீணிலத்திலலைவார்கள் கவனிப்பாயே.

(இ-ள்.) மிதுனராசியி லிருக்கும் ராகு பகவானுடனே புதனும் சந்திரனும் சேர்ந்திருந்தால் வித்யா லாபமும் உத்தியோக விர்த்தியும் பெற்று உத்தம மனையாளுடன் சற்புத்திர பாக்கியம் பெற்று தனவந்த

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ராய் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள். ஆனால் இராகு சனி சூரியனாகிய மூவரும் சேர்ந்து மிதுனராசியி லிருந்தால் குரூரகுணமமைந்த பகைவர்களால் துன்ப மனுபவித்து வறுமையாளராய் மனமெலிந்து சுயதேசத்திலும் நிலைக்கவிடாமல் பரதேசவாசியா யலையச் செய்யும்.

கடகராசியில் இராகுபகவான் இருந்த பலன்

கடகராசியில்ராகு குருவும்சந்திரன்

கலந்திருந்தால்பிரபுவென் றெவருமெச்ச

திடமுடனேபொருள்சேர்த்து மனைவிமைந்தர்

தீர்க்கமுடன்பெருகியே சுகமாய்வாழ்வார்

விட நாகனான ராகுடனேசூரியன்

மேவியேசனிசெவ்வாய் புகரும் சேர்ந்தால்

கடன்பட்டும்பட்டினியென் றுரைப்பார்போல

கவலையினால்மிகமெலிந்து துடிப்பர்தானே.

(இ-ள்.) கடவராசியிலிருக்கும் ராகு பகவானுடனே குரு உச்சமாகவும் சந்திரன் ஆட்சியாகவும் பொருந்தியிருந்தால் சிறுவயதிலிருந்தே பிரபுத் தன்மையாய் வாழ்ந்து தனது வாலிபகாலத்தில் பலவிதமாய்ப் பொருள் சேகரித்து மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே சுகஜீவியாக வாழ்ந்திருப்பார்கள். ஆனால் சனி, ராகு, சூரியன், செவ்வாய், சுக்ரனும்சேர்ந்து கடகராசியிலிருந்தால் எவ்வெவ்விதமாய்க் கஷ்டப்பட்டுப் பணம் சேர்த்தாலும் பகைவர்களுடைய துன்பத்தால் கைப்பொருள் சேதமாகி கடன்பட்டுப் பட்டினியென்பது போல அலைச்சல்பட்டுத் துன்பத்தால் மதிமயங்கி யிருப்பார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சிம்மராசியில் இராகுபகவான் இருந்த பலன்

சிம்மராசியில்ராகும் சனியும்சுக்ரன்
சூரியனுமிருந்தாலே ஜாதகர்க்கு
மங்காததுயர்மிகுந்து பகைவராலே
மனத்துயரமதிகமாய்ப் பரிதவிப்பார்
இங்கிதமாய்இராகுசனி சுக்ரன்மாலும்
இனிதுடனேசேர்ந்திருந்தால் யோகமாகும்
எங்கிலுமேபுகழ்ந்தேற்றக் கீர்த்தியோடு
எந்நாளும்சுகமாக வாழ்வர்தானே.

(இ-ள்.) சிம்மராசியிலிருக்கும் இராகுபகவானுடனே சனி சுக்ரன் சூரியனும் சேர்ந்திருந்தால் சதாகாலமும் துன்பமும் துயரமு மதிகரித்து பகைவர்களாலே மனச் சஞ்சலமும் திகிலுமதிகரித்து பரிதவித்துக் கொண்டிருப் பார்கள். ஆனல் இராகு, சனி, சந்திரன் புதனும் சேர்ந்து சிம்ம ராசியிலிருந்தால் மனதைரியத்துடனே திரவிய சேகரஞ்செய்து கீர்த்திவந்தராய் சதாகாலமும் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

கன்னியாராசியில் இராகுபகவான் இருந்த பலன்

கன்னியிலேராகுபுதன் சுக்ரன்சேர்ந்தால்
கல்வியுடன்வியாபார லாபங்காணும்
நன்னயமாய்பொருள்சேர்த்து சகலருக்கும்
நன்மைசெய்துகீர்த்தியுடன் ஜீவிப்பார்கள்
தன்மையாய்ராகுரவிசுக்ரன் சனியும்சேர்ந்தால்
தரித்திரயோகங்காணும் எந்தநாளும்
துன்பமுற்றுதிகிலடைந்து வறுமையாலே
துயரடைவாரெந்நாளும் கவனிப்பீரே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) கன்னியாராசியிலே இராகு, புதன், சந்திரனும் சேர்ந்திருந்தால் வித்யாலாபமும் வியாபார விர்த்தியும் பெற்று வெகுபொருள் தேடி சுகஜீவியாய் வாழ்ந்திருப்பதற்காகும். ஆனால். ராகு, சுக்கிரன், சனி, சூரியனும் கன்னியா ராசியிலிருந்தால் பலவிதமான கஷ்ட நஷ்டங்களுடன் தரித்திர யோகத்தை யனுபவித்து வறுமையாளரா யிருப்பார்கள்.

துலாராசியில் இராகுபகவான் இருந்த பலன்

துலாராசிதனில்ராகு ரவிமால்சந்த்ரன்
சேர்ந்திருந்தால் ஜாதகர்க்கு கவலையாலே
அலைச்சலுற்றுவறுமையினுல் மனம்கலங்கி
அனுதினமும்றுயருற்றுத் தத்தளிப்பார்
நலமுடனேராகுசனி புதனும் செவ்வாய்
நாடியேசேர்ந்திருந்தால் சுகமாய்நாளும்
பலவிதமாய்ப்பொருள்தேடி சகலருக்கும்
பக்ஷமுடனேயிருப்பார் கவனிப்பிரே.

(இ-ள்.) துலாராசியி லிருக்கும் ராகு பகவானுடனே சூரியனும். சந்திரனும், புதனும் சேர்ந்திருந்தால் சதா காலமும் அலைச்சலுற்றவராய் வறுமையினுல் திகைத்து மனவிசாரமாய் துயரால் திகைத்துத் தத்தளிப்பார்கள். ஆனுல், துலாராசியில் சனி, ராகு, புதனும் சேர்த்திருந்தால் மகா சமர்த்துடன் திரவிய சேகரஞ் செய்து சகலருக்கும் நல்லவர்களாயிருந்து நற்குணம் பொருந்திய பலபேர் மீது பக்ஷமா யிருப்பார்கள்.

CC-0 Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

விருச்சிகராசியில் இராகுபகவான் இருந்த பலன்

விருச்சிகராசியில்ராகு உச்சமாகி
விளங்கிநிற்கசெவ்வாயும் ஆட்சியாக
குருபகவானவருடனே சேர்ந்திருக்க
கூர்மையுள்ளபுத்திவா னுயிருந்து
பெருமையுடன்கீர்த்தியாய்க் கல்விஞானம்
பெருகியேதனவந்த ராயிருப்பார்
பருதிமதிசனிபுதனு மவரோடுற்றல்
பலதுன்பமனுபவிப்பார் கவனிப்பீரே.

(இ-ள்.) விருச்சிகராசியில் ராகு உச்சமாகி யிருக்கவும் செவ்வாய் ஆட்சியாயிருக்க, அவர்களுடனே குருபகவானும் சேர்ந்திருந்தாற் புத்திசாதுர்யமாய் பல வித்தை கற்றும் விவேகசாலியாய் வியாபாரஞ் செய்தும் உத்தியோகம் புரிந்தும் பொருள் சேகரஞ் செய்து வெகு மேன்மையுடன் கீர்த்திவானுய் கல்வி ஞானற்திற் சிறந்த தனவந்தரா யிருப்பார்கள் ஆனுல், விருச்சிகராசியிலிருக்கும் இராகு பகவானுடனே சனி, சூரியன், சந்திரன், புதனும் சேர்த்திருந்தால் மதிமயங்கி சத்துருக்களால் பலவித கஷ்ட நிஷ்டூர மடைந்தவர்களாய் பலவித துன்ப மநுபவித்துக் கவலையினுல் வறுமையாளரா யிருப்பார்கள்.

தனுசுராசியில் இராகுபகவான் இருந்த பலன்

தனுசுதனில்விராகு சனியும்சுக்ரன்
தானிருந்தால்ஜாதகர்க்கு துயரத்தாலே
மனவிசாரத்துடனே துன்பமெல்லாம்
மாருதகவலையினு லதிகரித்து

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அனுதினமும்வறுமையினு லலைவாரப்பா
அமரர்குருபுதன்ராகும் தனுசிலுற்ருல்
தனந்தேடி விவேகமுடன் கல்விஞானம்
தானடைந்துகீர்த்தியாக வாழ்குவாரே.

(இ-ள்.) தனுசுராசியிலிருக்கும் இராகுபகவானுடனே சூரியனும், சனி சுக்கிரனுமிருந்தால் ஜாதகனுக்கு மன விசாரமும், துன்பமும், துயரமும், தீராத கவலையும் அதிகரித்து தினந்தோறும் வறுமையினுல் அலைவார்கள், ஆனுல், தனுசுலிருக்கும் இராகுபகவானுடனே குரு பகவானும் புதனும் சேர்ந்திருந்தால் வித்தியாலாபத்துடன் கல்வியிற் சிறந்தஞானவானுய் தனதான்ய சம்பத்துடன் கீர்த்தியாய் வாழ்ந்திருப்பதற்காகும்.

மகரராசியில் இராகுபகவான் இருந்த பலன்

மகரத்தில்சனி ஆட்சியேஉச்சமாகி
மாட்சிமையாயிருக்க ராகும்சேர்ந்தால்
சுகவாழ்வாய்ஜாதகரும் புவியில்வாழ்ந்து
சுறுசுறுப்பாய்கல்விகற்று உத்தியோகஞ்செய்து
ஜகத்தோரெல்லாம்புகழ கீர்த்திவானுய்
தனந்தேடிபிரபுவாய் வாழ்வாரப்பா
வெகுதுயரம்இராகு சுக்கிரன்சேர்ந்தால்
மேதினியில்துயருற்று கலங்குவாரே.

(இ-ள்.) மகரராசியில் சனி ஆட்சியாகவும்,செவ்வாய் உச்சமாகவு மிருக்கும்போது ராகுபகவானும் பொருந்தியிருந்தால் ஜாதகன் சிறு வயதிலேயே சுறுசுறுப்பாக

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மனதைரியமும் ஞாபகசக்தியும் பொருந்தியவனுய் கல்வி ஞானத்திற்சிறந்து உத்தியோகஞ்செய்து கீர்த்திப்பிரகாசமாய் திரவியந் தேடி தனவந்தராய் வாழ்ந்திருப்பதற்காகும். ஆனுல், மகரத்திலிருக்கும் இராகுபகவானுடனே சூரியனும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் பலவிதமான மனவிசாரத்துடனே சத்துருக்களால் துன்பமடைந்துவறுமையாளராய் கலங்கி துயரப்பட்டலேவார்கள்.

கும்பராசியில் இராகுபகவானிருந்த பலன்

கும்பராசியில்ராகு சனியோடுற்று
குருபுதனுமிருந்தாலே ஜாதகர்க்கு
அம்புவியில்கீர்த்தியுண்டு கல்வியுண்டு
ஐஸ்வரியத்துடனே வாழ்வாரப்பா
அம்புலியும்ராகுபுகர் செவ்வாயோடு
ஆதித்தனும்சேர்ந்து கும்பத்துற்ருல்
செம்பொன்னுமில்லாமல் தனமில்லாமல்
ஜெகமீதுவறுமையினு லலேகுவாரே.

(இ-ள்) கும்பராசியிலிருக்கும் இராகுபகவானுடனே சனி, குரு, புதன் சேர்ந்திருந்தால் ஜாதகர்க்கு நல்ல கீர்த்தியும் ஞாபக சக்தியும் கல்வியும் பெருகி தனதான்ய சம்பத்துடனே வாழ்ந்திருப்பதற்காகும். ஆனுல், கும்பராசியிலிருக்கும் ராகுபகவானுடனே செவ்வாய், சூரியன், சுக்கிரன் சேர்ந்திருந்தால் சதாகாலமும் மன சஞ்சலமுடைய வறுமையாளராய் கைப்பொருளில்லாமல் கவலையாய்த் திரிந்தலேவார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மீனராசியிலிருந்த சுக்கிரபகவான் பலன்

மீனராசியில் குருவும் ஆட்சியாக
மேன்மையுடனேயிருக்க ராகுசுக்ரன்
ஆனசெவ்வாய் நால்வருமாய் அமர்ந்திருந்தால்
அம்புவியில்சமர்த்தனென்ற கீர்த்திவாய்ந்து
ஞானமுடன்கல்வியுண்டு பொருளும்சேரும்
ஞாயிறுடன்மதிசேய்சனியும் ராகோடுற்ருல்
ஊனமாய்வறுமையினுல் மனந்திகைத்து
உலகினர்க்குப்பகையாகிக் கலங்குவாரே.

(இ-ள்.) மீனராசியில் குருபகவான் ஆட்சியா யிருக்கும்போது சுக்கிரனும் உச்சமாயிருக்க செவ்வாய் நட்பாகவும், ராகுபகவானுடனே சேர்ந்து இந்நால்வரும் மீனராசியிலே பொருந்தி யிருந்தால்வித்தியாலாபமும், ஞானமும் பொருந்தி, திரவிய சேகரஞ்செய்யும் நன்முயற்சியும், திரவிய லாபமும் பெற்று, தனவந்தரா யிருப்பார்கள். ஆனால், மீனராசியிலிருக்கும் சனிபகவானுடனேசூரியன், சந்திரன், ராகுபகவானும் சேர்ந்திருந்தால், சத்துருக்களின் கொடுமையினுல் மனந் திகைத்து வறுமையாளராக அலேவார்கள்.

சீஷன் சொல்வது

அன்பானகுருநாதா ஜோதிஷத்தின்
ஆதாரமானவழி யெந்தனுக்கு
நன்மையாயுபதேசஞ் செய்தீர்யானும்
நலமாகக்கவனித்தேன் ஜாதகர்க்கு
இன்பமாய்க்கேதுபக வான்கொடுக்கும்
இன்பதுன்பபலனெல்லாம் விபரமாகப்
பன்னுவீர்தமதிதிவ்ய பாதந்தன்னை
பக்ஷமாயான்வணங்கி துதிக்கின்றேனே.

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) சுவாமி! அடியேனுக்கு ஜோதிஷசாஸ்திரத்தின் ஆதார மார்க்கமனைத்தும் உபதேசித்தீர்; யான் பன்னிரண்டு ராசியிலிருக்கும் கிரகங்களின் பலாபலனை யெல்லாம் சவனித்தேன். ஆனுல், ஒவ்வொரு ராசியிலும் கேதுபகவானிருந்தால் எவ்வெவ்விதமான பலன் கிடைக்கும்படியாய்ச் செய்வாரோ அதனை அடியேனுக்கு விபரமாய்ச் சொல்வீர் குருநாதா.

குரு சொல்வது

கல்வியின்மேல்விருப்பமுற்று ஜோதிடத்தைக்
கவனமாய்க்கற்றுணர்ந்து தேச்சியுற்று
நல்விவேகத்துடனே விளங்கியிந்த
ஞாலமதிலுள்ளோர்க்கு பலனைச்சொன்னுய்
தொல்லுலகிலேபிறந்த ஜாதகர்க்கு
தோன்றுமீராறு ராசிதனில்கேது
வல்லமையாயிருந்த பலனைச்சொல்வேன்
வகையுடனேவிபரமாய்க் கவனிப்பாயே.

(இ-ள்.) வித்யாவிருப்பத்துடன் ஜோதிட சாஸ்திரத்தைக் கவனமாய்க் கற்றுணர்ந்து உலகிலுள்ள ஜாதகர்க்குப் பலனைச் சொல்லும் வல்லமையுடைய எனது அருமையான சீஷ்யனே! மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரெண்டு ராசியாகிய ஸ்தானங்களில் எந்நெந்த ராசிகளில் கேதுபகவா னிருக்கின்ருரோ அந்தந்த ராசி பலனையும் அந்த கேதுபகவானுடனே எந்தெந்த கிரகங்கள்சேர்ந்திருக்கின்ருரோ அந்தக்த பலன்களையும் விபரமாய்ச்சொல்வேன் கவனிப்பாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மேஷராசியில் கேதுபகவான் இருந்த பலன்

தன்மையுடனேகேது மேஷத்துற்றால்
சனிரவியும்மால்மதியும் புகரும்சேர்ந்தால்
துன்பத்தினுற்றிகைத்து கலகத்தாலே
துயரடைவார்வறுமையுற்று மனந்திகைப்பார்
அன்புடனேசெய்ஆட்சி யாயிருக்க
அவருடனேகுருகேதும் சேர்ந்திருந்தால்
நன்மதியாம்ஞானமுண்டு கல்வியுண்டு
ஞாலமதில்பொருள்சேர்த்து ஜீவிப்பாரே.

(இ-ள்.) மேஷராசியிலிருக்கும் கேது பகவானுடனே சனி, சூரியன், புதன், சுக்கிரன், சந்திரனும் சேர்ந்திருந்தால் பகைஞரின் குரூர துன்பத்தினால் மனவிசாரமடைந்து வறுமையினால் துயரடைவார்கள். ஆனால் மேஷராசியிலிருக்கும் கேதுபகவானுடனே செவ்வாய் பகவானும் குரு பகவானும் சேர்ந்திருந்தால் வித்யாபிவிர்த்தியும் கல்வியும் ஞானமும் ஞாபக சக்தியும் பெருகி உத்தியோகஞ் செய்தும் வியாபாரஞ் செய்தும் பொருள் சேகரஞ்செய்து தனவந்தராய் ஜீவித்திருப்பார்கள்.

ரிஷபராசியில் கேதுபகவான் இருந்த பலன்

கேதுபகவான்ரிஷப ராசிதன்னில்
கெம்பீரமாயிருக்க புகரும்மைந்தன்
ஆதரவாயிருக்க புதனுஞ்சேர்ந்து
அமர்ந்திருந்தால்ஜாதகர்க்கு கீர்த்தியுண்டு
தீதிலாகல்வியுடன் ஞானமுண்டு
திரவியசேகரஞ்செய்து வாழ்ந்திருப்பார்
ஆதித்தன்குருமதியும் கேதோடுற்றால்
அவனியிலேவறுமையினால் கலங்குவாரே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) ரிஷபராசியிலிருக்கும் கேது பகவானுடனே சுக்கிரன்-சனி-புதனும் சேர்ந்தால் வித்யா லாபமும், ஞாபக சக்தியும் உத்தமர் நேசமும் பெற்று உத்தியோக விர்த்தியும் வியாபார லாபமும்பெற்று கீர்த்தி பிரகாசமாய் வாழ்ந்திருப்பதற்காகும். ஆனால் ரிஷபராசியிலிருக்கும் கேது பகவானுடனே சூரியனும் சந்திரனும் குருவும் சேர்ந்திருந்தால் சத்துருக்களினால் சச்சரவும் கலகமும் நேர்ந்து வறுமையினால் துயரமடைந்து கலங்குவார்கள்.

மிதுனராசியில் கேதுபகவான் இருந்த பலன்

மிதுனத்தில்கேதுபுதன் குருவும்சேர்ந்தால்
மிகவுமேநல்லபலன் கிடைக்கும்கல்வி
அதிகமாய்க்கற்றுணர்ந்து யோகஞ்செய்வார்
அன்பாய்வர்த்தகஞ்செய்து பொருளைச்சேர்ப்பர்
மதிரவியும்புகர்கேதும் மிதுனத்துற்றால்
மனக்கவலையடைவார்கள் பகைவராலே
நிதிதுறந்துதுயரடைந்து வறுமையுற்று
நீணிலத்திலேதிகைத்துக் கலங்குவாரே.

(இ-ள்.) மிதுனராசியிலிருக்கும் கேதுபகவானுடனே புதனும் குருவும் சேர்ந்திருந்தால் ஜாதகர்க்கு நல்ல பலனைக் கொடுத்து கல்வியும் ஞானமும் கீர்த்தியும் பெருகி, சகலருக்கும் நல்லவரென்பதாய் உத்தம குணமமைந்து உத்தியோக லாபமும் பெற்று திரவிய சேகரஞ்செய்து பெருமையாய் வாழ்வார்கள். ஆனால் மிதுனராசியிலிருக்கும் கேது பகவானுடனே சூரியனும் சந்திரனும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால், சத்துருக்களால் மனக்கவலையடைந்து கைப்பொருளிழந்து வறுமை நோயினாலே மானிலத்தோர்முன் மதிமயங்கி கலங்குவார்கள்.

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கடகராசியில் கேதுபகவான் இருந்த பலன்

கடகத்திலிருக்கும் கேதுடனேசந்திரன்
கதிரவனும்புகர்சனியு மிருந்திட்டாலே
விடநாகம்போற்பகைவர் கலகத்தாலே
வறுமையுடன்மனக்கவலை யடைவாரப்பா
திடமுடனேகேதுகுரு சேர்ந்திருந்தால்
திரவியஞ்சேகரித்துலகில் வாழ்ந்திருப்பார்
கடவுள்மீதினில் பக்தியாயிருந்து
காசினியிலேவிரத மனுஷ்டிப்பாரே.

(இ-ள்.) கடகராசியிலிருக்கும்கேது பகவானுடனே சூரியனும் சந்திரனும், சனியும் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் துர்க்குணமமைந்த பகைவர்கள் பாம்புபோற் சீறி துன்பப்படுத்துவதுடன் தீராக் கவலையும் வறுமையும் மிகுந்து கஷ்ட நஷ்டத்தினல் கலங்கித் துடிப்பார்கள். ஆனல் கேதுபகவானும் குருவும் கடக ராசிலவிருந்தால் பகவத் பக்தியானந்தமாய் விரதானுஷ்டானம் புரிந்து சகலருக்கும் நல்லவர்களாயிருந்து திரவியசேகரஞ்செய்து ஜீவித்திருப்பார்கள்.

சிம்மராசியில் கேதுபகவான் இருந்த பலன்

சிம்மத்திலேகேதுரவி மதியுஞ்சேர்ந்து
சுக்கிரனும்சனிபகவா னிருந்திட்டாலே
பங்கமடைவார்சத்ரு விரோதத்தாலே
பலநாளும்வறுமையுடன் கலங்குவார்கள்
மங்களமாய்கேதுபுதன் குஜனும்சேர்ந்தால்
மாக்ஷிமையாய்கல்விகற்று உத்யோகஞ்செய்வார்
சங்கையிலாமாநிலத்தில் பொருளுந்தேடி
சவுக்கியமாய்வாழ்ந்திருப்பார் கவனிப்பாயே,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) சிம்மராசியிலிருக்கும் கேதுபகவானுடனே சூரியன், சந்திரன், சுக்கிரன், சனியும் சேர்ந்திருந்தால் சத்துருக்களின் குரூர குணத்தினு லேற்படும் துன்பத்தினுல் மன விசாரமடைந்து சதாகாலமும் வறுமையினுல் திகைத்திருப்பார்கள். ஆனுல் சிம்ம ராசியில், கேது, புதன், செவ்வாயும் சேர்ந்திருந்தால் வித்யாபி விர்த்தியுடன் ஞாபகசக்தி பொருந்திய்வராய் உத்தியோக மேன்மையும் வியாபார லாபமும் பெற்று தனவந்தராயிருப்பதற்காகும்.

கன்னியாராசியில் கேதுபகவான் இருந்த பலன்

கன்னியிலேகேதுமதி புகரும்சூரியன்
காசினியிலேபிறந்த ஜாதகர்க்கு
வன்மையுடனேயிருந்தால் துயருண்டாகி
வறுமையுடன்சத்துருக்கள் கலகத்தாலே
துன்பமடைவார்ஆனுல் கேதுவியாழன்
துலங்கவேசெவ்வாயும் கன்னியிலிருந்தால்
நன்மையுண்டுபொருள்சேர்த்து கல்விஞானம்
நலமுடனேபெருகியே வாழ்வாரப்பா.

(இ-ள்.) கன்னியாராசியிலே இருக்கும் கேது பகவானுடனேசந்திரனும்,சுக்கிரன்,சூரியனும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகன் பகைவர்களால் துயரடைந்து சதாகாலமும் கலக்கமும் கவலையுமடைந்து துயரத்தி லாழ்ந்து வறுமையாளராக யிருப்பதற்காகும். ஆனுல் கன்னியாராசியிலே யிருக்கும் கேது பகவானுடனே வியாழ பகவானும் செவ்வாய் பகவானும் சேர்ந்திருந்தால் பலவிதமான நன்மையுடன் செல்வமுஞ் சேகரித்துச் சகலருக்கும் அன்பும் பிரியமு முள்ளவர்களா யிருப்பதற்காகும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

துலாராசியில் கேதுபகவான் இருந்த பலன்

கேதுபகவான் துலா ராசியிலேநிற்க
குஜன்ரவியும்மால்மதியும் சேர்ந்திருந்தால்
தீதுடனேபகைவர்களால் துன்பமுற்று
திகைத்திடுவார்வறுமையினு லென்றுரைப்பாய்
கோதிலாபுகர்ரவியும் சனியோடுற்ருல்
கோபமதுஜாதகர்க்கு மிகவுண்டாகும்
பூதலத்தில்தனந்தேடி வாழ்ந்திட்டாலும்
பொல்லாதோனென்றுலகோ ரேசுவாரே.

(இ-ள்.) துலா ராசியிலிருக்கும் கேது பகவானுடனே அங்காரகன், சூரியன், சந்திரனும்சேர்த்திருந்தால் பகைவர்களின் கொடுமையினுல் மனந்திகைத்து வறுமையால் கலங்குவார்கள் ஆனுல், சுக்கிரனும், சூரியனும், சனியும் சேர்ந்துதுலாராசியிலிருக்கும் கேதுபகவானுடனே சேர்ந்திருந்தால் வித்தையும் புத்தியும் பெருகி திரவியம்சேகரித்துப் பெருமையாய் வாழ்ந்தாலும் கோபமும் குரோதமுமுடையவர்களாய்ச் சகலரையும் அலட்சியஞ் செய்து மதியாமல் பேசி பகையாகி பொல்லாதவரென்று நிந்தனையடைவார்கள்.

விருச்சிகராசியில் கேதுபகவானிருந்த பலன்

விருச்சிகராசியில்கேதுடன் சனியும்சூரியன்
விளங்கிடவும்மதிகுஜனு மவரோடுற்ருல்
பொருளில்லாவறுமையாயிருந்திட்டாலும்
பொல்லாததுஷ்டனென்றே உலகோரேச
கருவத்தால்பகையாகி வறுமையுற்று
கலங்குவார்கேதுரு விருச்சிகத்தில்
பொருந்தினுல்கல்வி ஞானத்தில்தேர்ந்து
பூலோகத்தோர்புகழ ஜீவிப்பாரே.

CC0. Old Tamil Texts: Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) விருச்சிக ராசியிலிருக்கும் கேது பகவானுடனே சனி-சூரியன்-சந்திரன்-அங்காரனும் சேர்ந்திருந்தால், மோச தந்திர அடாவடித்தனமாய் திரவியஞ் சேகரித்து வீண் செலவுசெய்துவிட்டுக் கையில் காசில்லாத ஏழையா யிருந்தாலும் மனோகர்வத்தினால் எவர்களையும் மதியாமலிகழ்ந்து அலட்சியமாய் பேசி சகலரும் நிந்திக்கும்படியாய் பொல்லாதவரென்றும் வறுமையாளராய்க் கலங்கித் திகைத்திருப்பார்கள். ஆனால், விருச்சிகத்திலிருக்கும் கேது பகவானுடனே குருபகவானும் சேர்ந்திருந்தால் கல்வியும் தேர்ச்சியடைந்து ஞானவானாய் சகலரும் புகழ்ந்துரைக்குந் தன்மையாய் திரவிய சேகரஞ் செய்து வாழ்ந்திருப்பார்கள்.

தனுசுராசியில் கேதுபகவான் இருந்த பலன்

தனுசிலேகேதுபக வானிருக்க
சனிசூரியன் சந்திரனும் சேர்ந்திருந்தால்
மனவிசாரத்துடனே கவலையுற்று
மாற்றாரால்துயரடைந்து வறுமையாலே
தனமிழந்துசுகங்குறைந்து கஷ்டமாகும்
தனுசில்குருஆட்சிபெற்றுசேய்சேர்ந்துற்றால்
கனமுடனேகல்வியுடன் ஞானம்பெற்று
காசினியில்கீர்த்தியுடன் ஜீவிப்பாரே.

(இ-ள்.) தனுசுராசியிலிருக்கும் கேது பகவானுடனே சனி-சூரியன் - சந்திரனும்சேர்ந்திருந்தால்பகைவர்களின் குரூரத்தினால் மனவிசாரமும், கவலையும் நேரிட்டுவறுமையும், துன்பமும், துயரமும் உண்டாகும். ஆனால், கேது

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பகவானுடனே குருபகவானும், செவ்வாய் பகவானும் தனுசுராசியில் சேர்ந்திருந்தால் கல்வியுடன் ஞானமும் அதிகரித்துக் கீர்த்திப்பிரகாசமா யிருப்பதுடன் வியாபார விர்த்தியிலும் உத்தியோக விர்த்தியிலும் சிறந்தவர்களாய் திரவிய சேகரஞ் செய்து பெருமையுடன் வாழ்ந்திருப் பார்கள்.

மகரராசியில் கேதுபகவான் இருந்த பலன்

மகரத்திலேகேதுபகவா னிருக்க
மதிரவியும்செவ்வாயும் சேர்ந்திருந்தால்
சுகமில்லாதலைகுவா ரெந்தநாளும்
சூழ்ந்துபந்துகூட்டமெல்லாம் பகையாவார்கள்
மகரத்தில்சனி ஆக்ஷி பாயிருக்க
மாட்சிமையாய்கேதுகுரு சேர்ந்திருந்தால்
ஜெகமீதில் தனவத்தராயிருந்து
க்ஷேமமுடன்வாழ்ந்திருப்பா ரறிகுவீரே.

(இ-ள்.) மகரராசியில் கேதுசகவா னிருக்கும்போது சூரியனும் சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் மன விசாரமடைந்தவர்களாய் பந்துமித்திரர்களின் பகையி னால் பலவித கஷ்டநஷ்டமடைந்து கவலையடைந்து சுக மில்லாமல் துன்பத்திலாழ்ந்தவர்களாய் கலங்குவார்கள். ஆனால், மகரத்தில் சனி ஆட்சியாயிருக்க குருபகவானும் அத்த ஸ்தானத்தில் நட்பாயிருக்க அவர்களுடனே கேது பகவான் சேர்ந்திருந்தால் உலகில் பலபேருக்கும் நல்லவ னென்றே கல்வியிலும், ஞானத்திலும் சிறந்தவனாய் வியா பார விஷயத்திலும், உத்தியோக விஷயத்திலும் சிறந்து கீர்த்திப் பிரகாசமாய் பொருள் சேகரஞ் செய்து க்ஷேம லாபத்துடன் வாழ்ந்திருப்பதற்காகும்.

OC-3. Old Tamil Texts: Digitized by Sri Muthulakshmi Research Academy

கும்பராசியில் கேதுபகவானிருந்த பலன்

கும்பராசியில்கேது பகவானோடு
குருசனியும்புதன்சேர்ந்தால் ஜாதகர்க்கு
அம்புவியில்தனந்தான்ய சம்பத்தோடு
அதிகசுகமுண்டாகி வாழ்வாரப்பா
அம்புவியில்ரவிகேதும் கும்பத்துற்றால்
அலைச்சலுற்றுவறுமையினால் கலங்குவார்கள்
வம்பாகளங்கெங்கும் பகைமேலிட்டு
வையகத்தில்துயருற்றுத் துடிப்பார்தானே.

(இ-ள்.) கும்பராசியிலிருக்கும் கேது பகவானுடனே குரு, சனி, புதனிருக்க, கல்வியிலும் தேர்ச்சியடைந்து வியாபார விஷயத்திலும், உத்யோக விஷயத்திலும் தேர்ச்சியடைந்து திரவியஞ் சேகரித்துத் தனந்தான்ய சம்பத்துடன் சுகஜீவியாய் வாழ்ந்து க்ஷேபமாயிருப்பார்கள். கேது, சூரியன், சந்திரன் மூவரும் சேர்ந்து கும்பராசியிலிருந்தால் துர்க்குண மிகுந்த பகைவர்களின் குரூரமாகிய கலகத்தினால் வறுமையாளராய்க் கலங்குவார்கள்.

மீனராசியில் கேதுபகவானிருந்த பலன்

மீனராசியில்கேதுடன் குருவும்சுக்ரன்
மேன்மையுடனேயிருந்தால் வித்தைபுத்தி
ஞானமுடன்விவேகத்தால் சிறந்துவாழ்ந்து
ஞாலத்தில்தனவந்த ராயிருப்பார்
வானவர்கள்துணையுண்டு சம்பத்துண்டு
மதிரவியும்சனிகேது மீனத்துற்றால்
ஊனமாய்ப்பகைவர்களின் துன்பத்தாலே
உற்றமனக்கவலையினால் கலங்குவாரே.

(இ-ள்.) மீனராசியில் கேது, குருவும், சுக்கிரனுமிருந்தால் வித்தையும், புத்தியும், ஞானமும், விவேகமும் அதி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கரித்து தனந்தான்யசம்பத்துடனே வியாபார லாபமும், உத்தியோக லாபமும் பெற்று பகவத்பக்தி யானந்தமாய் சுகஜீவியாக வாழ்ந்திருப்பார்கள். ஆனுல், சூரியன்சந்திர னும் சேர்ந்திருந்தால் குரூரகுணமமைந்த சத்துருக்களின் கொடுமையினுலுற்ற துன்பத்தாலே நேரிட்ட மனக்கவலை யினுல் வறுமைநோயால் கலங்கி விசனமா யிருப்பார்கள்.

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

நற்புத்திபோதித்து யெந்தனுக்கு
    நவக்கிரகமிருந்த ராசிகளுக்கேற்ற
உற்றபலனுக்கீடாய் நன்மைதுன்மை
    உடையவராயிருப்பார்க ளென்றுரைத்தீர்
பற்றற்றஞானிகட்கு கிரகவேதை
    பலாபலனைக்கொடுக்காதோ விபரமாக
சற்றெனக்குப்போதிப்பீர் குருவேயுன்ருள்
    சரணடைந்துவினவினேன் சாற்றுவீரே.

(இ-ள்.) சுவாமி! அடியேனுக்கு சதாகாலமும் நற் புத்தி போதித்து, ஜோதிடசாஸ்துரத்தின்விபரமனைத்தும் தெளிவாய்க் கற்பித்த ஞானகுருவே! மனித வகுப்பினர் உலகில் ஜனிக்கும்போது மேஷம், ரிஷபம், மிதுனம், கட கம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பனிரண்டு ராசியிலும் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் நவக்கிரகங்கள் மேற்குறிப்பித்த ராசிகளில் சத்துரு மித்துருக்களாய்ச் சேர்ந்திருந்து ஜாதகர்க்குக் கொடுக்கும் பலாபலனையும் சொன்னீர். ஆனுல், இல்லற வாசிகளின் மனைவி, மைந்தர், பந்து, மித்திரர்களுட னிருக்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கின்றபடியால் கிரகங்களிருக்கும் பலாபலனுக்கேற்ற சுக துக்கத்தை யனுபவிக்கும்படியாய் நேரிடுகிறது. துறவி கட்கு மிப்படியே அமையுமோ? அவ்விதமாய் அவர்களும் அனுபவிப்பதற்காகுமோ? இதன் விவரத்தை அடியே னுக்கு விபரமாய்ப் புகலுவீர் சுவாமி!

குரு சொல்வது

புத்தியுள்ளசீஷா நீ பொறுமையாய்க்கேளு
பூதலத்தில்மானிடராய்ப் பிறந்திட்டாலும்
சத்தியமும்பொறுமையுடன் அடக்கத்தோடு
சாந்தம்ஜீவகாருண்யம் தயாளந்தன்னை
எத்ததியும்மனதிருத்தி வாழ்ந்திருந்து
ஈஸ்வரனைத்தியானித்தால் நவக்கிரகங்கள்
எத்ததியும்கஷ்டமில்லா சுகத்தைத்தந்து
எப்போதும்காத்திடுவார் கவனிப்பாயே.

(இ-ள்) எனது வாக்கியத்தை சித்தி சுத்தி பக்தி வைராக்கியமாய் மனதிலிருத்தி ஜோதிடசாஸ்திரத்தைக் கற்று வரும் விவேகத்திற் சிறந்த எனது சிஷ்யனே! உனது கருத்திற் கிசைந்தபடியே சொல்லுகின்றேன் சற்று நிதானமாகப் பொறுமையுடன் கவனித்துக் கேட் பாய். உலகில் பிறந்த மனிதர்கள் சத்திய நெறி தவருத உத்தமரா யிருந்து அடக்கம், பொறுமை, சாந்தம், தயா ளம், ஜீவகாருண்ய மென்னும் நற்குணங்களை மனதில் வகித்திருந்தால் நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது முதலானவர்கள் கஷ்டப்படுத்தாமல் காருண்யமாகக் காப்பாற்றுவார்கள். ஆகையால், பகவத்பக்தியானந்த மாயிருப்பவர்களுக்குச் சதாகாலமும் நன்மையே விளங்கு மென்பதாகக் கவனித்துக் கொள்வாய்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சீஷன் விருத்தம்

எண்சீரடி விருத்தம்

ஆசிரியா யென்குருவே ஜோதிஷத்தை
அன்புடனேபோதித்தஞானமூர்த்தி
மாசிலாமனமுடைய உமதுபாதம்
மனதிலேயான்துதித்து உலகோர்துன்பம்
பேசுதற்குவிசனமா யிருந்திட்டாலும்
பெருமையுறும்மனிதர்களைப் பார்க்கும்போது
வீசுபுகழ்சிவன்செயலென் றேமதித்தேன்
விதித்தவிதியெனக்கு புகலுவீரே.

(இ-ள்.) எனது குருநாதா! அடியேனுக்கு ஜோதிஷ சாராம்ச மனைத்துங் கற்பித்தீர். அவை யனைத்தும் அடியேன் தன்குணர்ந்தேன். ஆனால், பகவான் செயலால் உலகிற் பிறந்த மனிதர்களில் சிலபேர் ஏழையாகவும் பல வித கஷ்டநஷ்டமனுபவிப்பதைப் பார்த்தால் நவக்கிரக வேதை என்று கவனித்து விசனமுற்றேன் என்றாலும், சிலர் சதாகாலமும் திரவிய சம்பன்னராகவே விளங்குகின்றார்களே, இவ்விரு வகுப்பாரின் காரணமென்ன அடியேனுக்கு வியரமாய் புகல்வீர் சுவாமி.

குரு சொல்வது

எண்சீரடி விருத்தம்

அவரவர்கள் முன்செய்த வினையினாலே
அயன்விதித்தவிதிப்படியே சுகதுக்கத்தை
தவறாமலனுபவிக்கத் தான்பிறந்து
தரணியிலேயனுபவிக்க நேரிடுங்கால்
நவக்கிரகமவரவர்கட் கிசைந்தாற்போல
நற்பலனும்துர்ப்பலமும் கொடுக்கும்போது
பவபந்தபாசவலை தனிற்சிக்குண்டு
பலாபலனுமறிவிப்பார் கவனிப்பாயே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) மனித வகுப்பினர் முன்ஜென்மத்தில் செய்த பாப புண்ணியத்தினுல் உலகத்தில் பிறந்து சுகதுக்கத்தை யனுபவிப்பதற்கிசைந்தவிதமாய் பாச பந்தமென்னும் மாய வலேயில் சிக்கிக்கொண்டு கஷ்டப்படுவதிலும். சிலர் சதாகாலமும் தனவந்தராய் ஜீவித்து சுகத்தை யனுபவிப்பதுமா யிருக்கிருர்கள். இவை யனைத்தும் பிரமதேவன் அவரவர்களுக்கு விதித்தபடியே நவக்கிரகங்கள் அவரவர்களின் பாபத்திற்கு தகுந்த கஷ்டத்தையும், புண்ணியத்திற்குத் தகுந்த சுகத்தையும் கொடுத்து வருகிருர்கள். இவற்றையுணராதமனிதர்கள் கஷ்டத்தை யனுபவிக்கும் போது விசனிப்பதும் சுகத்தை யனுப்பவிக்கும்போது மனே கர்வமா யிருப்பதும் நன்மையாகாது. சதாகாலமும் அடக்கமாகவே சாந்த மனதுடையவரா யிருக்க வேண்டும். அவ்விதமாய் இருந்தால் அயன் விதித்த வாழ்நாளின்படியே ஆயுள் முடிந்தால் ஆண்டவன் திருவடியை நாடுவதற்காகும்.

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

ஆதியிலேயெந்தனுக்கு வித்யாவிவேகம்
அருள்புரிந்ததயா நிதியே குருவேஞான
ஜோதிமயமாய்விளங்கும் பகவானிந்த
சூழ்புவியின்மானிடர்க்கு நல்விவேகம்
நீதியுடனேயமைத்தால் மனிதரெல்லாம்
நீணிலத்தில்சுகமா இருப்பாரல்லோ
ஓதுவீரிதனுண்மை ரகசியத்தை
உத்தமநன்மனதமைந்த குருவேபோற்றி.

(இ-ள்.) குருநாதா! அடியேனுக்கு சகல சாஸ்திர புராணமனைத்தும் தெள்ளியதாய்க் கற்பித்தீரே; அதனுல் அடியேன் புனிதனுனேன். ஆனுல், என் மனதில் ஓர்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சர்தேக மிருக்கின்றது. அதென்னவென்றால், பகவான் மனிதர்களைச் சிருஷ்டிக்கும்போதே விவேக ஞானத்தை சகலருக்கும் சமமாக அமைத்திருந்தால் சகலரும் சுகமா யிருப்பார்களே, அவர் அவ்விதமாய்ச் செய்யாத காரண மென்ன? அடியேனுக்கு இருந்த ரகசியத்தை விபரமாய் சொல்வீர் சுவாமி.

குரு சொல்வது

எண்சீரடி விருத்தம்

அவனியிலேபிறந்தோர்க ளெந்தநாளும்
 அடக்கம்பொறுமைசாந்தம் தயாளத்தோடு
கவனமுடன்ஜீவகாருண்யமாக
 காசினியிலேயிருந்தால் மறுஜன்மத்தில்
நவக்கிரகமொன்பதுபே ரெந்தநாளும்
 நன்மையாய்சுபபலனை தருவாரப்பா
எவர்களையுமிம்சிக்கா திருப்பாரானால்
 ஏற்றசுபபலனனைத்தும் கிடைக்கும்பாரே.

(இ-ள்.) மனிதர்கள் பூமியில் பிறந்தால் தனக்குஎவ் வளவு கஷ்டம் வந்தாலும், அல்லது சுகம் வந்தாலும் அடக்கம், பொறுமை, சாந்தம், தயாளம் ஜீவகாருண்ய மென்னும் நற்குணத்துடனிருந்தால், யாதொரு கஷ்ட நஷ்டமு மணுகாமல் சுகஜீவியா யிருப்பதற் கிசைந்த பலனை, நவக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், செவ் வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என்னும் நவக்கிரகங்கள் நல்ல பலனைத் தருவார்கள்.

கோபம்குரோதம்லோபம் வஞ்சகம்பொருமை
 கொண்டுழல்வோரெந்நாளும் துன்பத்தாலே
ஆபத்துற்றதினமும் துயரிலாழ்ந்து
 அனுபவிப்பார்கஷ்ட நஷ்டங்கள் தன்னை

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பாபத்திற்சிக்காமல் நம்பினோரைப்
பரிதவிக்கச்செய்யாமல் பெரியோர்வாக்கின்
சாபத்திலகப்படா தெந்தநாளும்
சன்மார்க்கனுயிருந்தால் நன்மையாமே.

(இ-ள்.) மனித வகுப்பார் பூமியில் பிறந்து முன் ஜன்மத்தில் செய்த புண்ணியவசத்தினால் அநேகரை அடிமை கொள்ளும் தலைவனாக அதிகாரஞ் செலுத்தினாலும் தன்னைப்போன்ற மனிதனைச்சுதே என்று காருண்யமில்லாமல் கோபம், குரோதம், வஞ்சகம், லோபம், பொறாமையென்னும் பஞ்சவிதமாகிய துர்க்குணத்தால் கஷ்டப்படுத்தாமலும் பெரியோர்கள் சாபமேற்காதபடியே நற்குணத்தை வகித்து சன்மார்க்கனா யிருந்தால் சதாகாலம் சுகமாயிருப்பதற்காகும்.

சீஷன் சொல்வது

நன்மையாயெந்தனுக் குபதேசித்த
ஞானகுருவே நவக் கிரகமெல்லாம்
நன்மையாய்மனிதர்கட்கு சுகதுக்கத்தை
தகுந்தபடியேகொடுக்கும் விபரஞ்சொன்னீர்
பன்னிரண்டுராசியிலும் கிரகசேர்க்கைப்
பலனெனக்குவிபரமா யுரைப்பீரென்று
உன்னிரண்டுதிருவடியை பணிந்தேன்சுவாமி
உத்தமரேயெந்தனுக்கு போதிப்பீரே.

(இ-ள்.) குருநாதா! எனது அஞ்ஞானமந்தமதியைப் போக்கி புத்தி கூர்மையாய் விளங்கும்படியான விவேகத்தை யுண்டாகச் செய்த ஞான குருவே! மனிதர் பாப புண்ணியத்தை யனுபவிப்பதற் கிசைந்து சுக துக்கந் தருவதான இராசிகளாகிய மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், 'சிம்மம், கன்னி, துலாம்,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனி ரெண்டு ராசியிலும் கிரகங்கள் சேர்க்கையாக இருக்கும் போது எவ்விதமான பலன் தருவார்களோ அதனை அடி யேனுக்கு விபரமாய் சொல்வீர் சுவாமி.

குரு சொல்லுவது

எண்சீரடி யாசிரிய விருத்தம்

சொல்லுவேனென்சிஷ்யா கவனமாய்க்கேள்
ஜோதிஷத்தின்விபரமதை யுந்தனுக்கு
தொல்லுலகிலேபிறந்த ஜாதகர்க்கு
தோற்றும்பனிரண்டுராசி பலனுனக்கு
நல்வழியாகவே தெரிவிக்கின்றேன்
நலமுடனேமனதினிலே மிகித்துக்கொண்டு
சொல்லுவாய்ஜாதகர்க்குப் பலனைத்தானே
சொற்சோர்விலாமலே கவனித்தோதே.

(இ-ள்.) எனது அன்பான சிஷ்யா! மனிதர்கள் பிறக் கும்போது எந்த நட்சத்திரத்தில் பிறக்கின்ருர்களோ அதே இராசியாகும். அந்த நட்சத்திரங்கள் அஸ்வனி, பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்புசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ் தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திரட்டாதி, திருவோணம், அவிட்டம், சதையம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்னும் இருபத்தேழுநட்சத்திரங்களில் எந்த நட்சத்திரம் பிறந்த நாளையில் வருகிறதோ அந்த நட்சத்திரத்தின் கணிதத் தின்படியே அமையும் ராசிகளில் கிரகங்களிருக்கும் சேர்க்கையின்படியே பலன் தருவார்கள்.

சீஷன் சொல்வது

நலமுடனேயிருபத்தேழ் நட்சத்திரங்கள்
நடக்கின்ற ராசியிலே பிறந்தபேர்கள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பலவிதமாய்ச்சுகதுக்க மனுபவிக்கும்
பலனனைத்துமெந்தனுக்கு விபரமாக
உலகமதிலுதித்த ஜாதகர்க்கன்பாக
உற்றபலன்சொல்வதற் கின்பமாயுரைப்பீர்
தலமதிலேயெந்தனுக்கு ஜோதிஷத்தை
தானுரைப்பீர்குருநாதா போற்றிபோற்றி.

(இ-ள்.) சுவாமி ! மாதந்தோறும் வருகிற இருபத்தேழு நட்சத்திரங்களில் பிறக்கும்போது அந்த நட்சத்திரத்திற்குரிய ராசி பனிரெண்டிலும், கிரக சேர்க்கையாலுல் பலன் வெவ்வேராகுமென்றீரே! அதன் விவரமெவ்விதமோ அடியேனுக்கு விபரம் விபரமாய்ச் சொல்வீரென்று வேண்டுகிறேன். ஆனல் அவ்விதமே சேர்க்கையாகிய கிரகமிருந்தால் எவ்வெவ்விதமான பலன் நடக்குமென்று ஜாதகர்க்குச் சொல்வதோ அதை அடியேனுக்கு அனுக்கிரகம் புரிவீர் சுவாமி.

குரு சொல்வது

சூரியனும்சந்திரனும் குஜன்மால்பொன்னன்
சுக்கிரனுமிவர்களுடனே சேர்ந்திட்ட
காரியுடன்ராகுகேது நவக்கிரகங்கள்
கருதும்பன்னிரண்டுராசி தனிலெங்கேனும்
ஏறிருலவரவர்கள் கொடுப்பதற்கு
ஏற்றபலனுந்தனுக்கு சொல்கின்றேன்
பாரிலுன்முன்ஜாதகர்கள் வந்திட்டாலே
பலாபலனைத்தெளிவாகச் சொல்லுவாயே.

(இ-ள்.) எனது அன்புள்ள சிஷ்யா! உலகிலுள்ள மனிதர்கள் பிறக்கும்போது நடக்கின்ற நட்சத்திரங்களில் குறிப்பித்த ராசிகளிலிருக்கும் கிரக சேர்க்கையின் பலனைச் சொல்வேன் கவனமாய்க் கேட்பாய்,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சீஷன் சொல்வது

எண்சீரடி விருத்தம்

ஐயனேயென் குருவே ஜோதிடத்தை
 ஆராய்ந்துபலனுரைக்கும் விஷயமெல்லாம்
மெய்யனேயெந்தனுக்கு விபரமாக
 மேன்மையுடன்கற்பித்த ஞானமூர்த்தி
துய்யனே நவக்கிரகமொன் பதுபேராஞேர்
 தொடர்ந்தோவ்வோர்ராசியிலு மிருக்கும்போது
செய்கின்றபலாபலனை அடியேனுக்கு
 செப்புவீரென்குருவே பணிந்திட்டேனே.

(இ–ள்.) எனது குருநாதா! மனித வகுப்பார்கள் தமது பிராரத்துவ கர்மானுசார வினையின்படியே சுக துக்கத்தை அனுபவிப்பதற்கிசைந்த விதமே அவரவர் கள் பிறந்த ஜாதக லக்கின இராசி பலனுக் கிசைந்த பலாபலன் கொடுக்கும் நவக்கிரகங்களின் செயலாகிய ஜோதிஷ சாராம்ஸ பலனை ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லும் மார்க்கமெல்லாம் அடியேனுக்கு உபதேசித்த ஞான மூர்த்தியாகிய குருநாதா! தாங்கள் இன்னமும் அடியேனுக்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டுவது: நவக் கிரகங்கள் எந்தெந்தராசியில் எவ்வெவ்விதமாய்ச் சேர்ந் திருக்கின்ருர்களோ அச்சமயம் அந்த கிரகங்கள் கொடுக் கும் பலாபலனை விபரமாய்ச் சொன்னுல் கவனமாய்க் கற்றுணர்ந்து அடியேன்முன் வந்து கேட்கும் அந்தந்த ஜாதகரின் பலாபலனைச் சொல்லுவதற்குத் தமது திருவடி களைப் பணிந்தேன் சுவாமி!

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு சொல்வது

மேஷராசியில் கிரகங்கள் நின்ற பலன்

எண்சீரடி விருத்தம்

குற்றமில்லாயென்சிஷ்யா மேஷந்தன்னில்
குஜன் புதனுமதிரவியும் சேர்ந்திருந்தால்
நற்றமிழராய்ச்சியுடன் பலநூல்கற்று
ஞாலத்தில்வர்த்தகமும் உத்தியோகமுஞ்செய்து
சுற்றத்தாரெவர்களுமே புகழ்ந்துரைக்கச்
சொர்னபணிபூஷணமும் பொருளுந்தேடி
பற்றுதலாய் பந்துமித்திரரோடன்பாய்
பாருலகில்வாழ்ந்திருப்பா ரறிகுவீரே.

(இ-ள்.) மேஷராசியில் செவ்வாயும், புதனும், சூரியனும் சேர்ந்திருந்தால், அந்த மேஷராசியே ஜனன லக்னமாயிருந்தால் அந்த ஜாதகன் தமிழ் வித்தையில் வல்லவனாகி பலவித சாஸ்திர ஆராய்ச்சியிலும் தேறி புத்தி சாதுர்யமாய் உத்தியோகஞ் செய்தும் வர்த்தகம் செய்தும் பலவிதமாய் பொருள் சேகாஞ் செய்து கீர்த்திப் பிரகாசமாய் பொன் பொருள் பூஸ்திதியுடன் பந்து மித்திரர் சூழ பெரிய குடும்பஸ்தனாய் தனந்தான்யம் பசு புத்ர லாபத்துடன் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

சனிராகுகுருசுக்ரன் மேஷத்துற்றால்
சார்ந்தலக்கின மேஷமாயிருக்குமானால்
பணிமொழியாள் சேர்க்கையுண்டுகாணிபூமி
பாக்கியமும் வெகுசம்பத்தெய்தும்ஆனால்
தினகரனும்குஜ புதனுமேஷத்துற்று
திங்களுமேசேர்ந்திருக்க தீரமாக
கனதனமும்காணிநிலம் மிகவேபெற்றுக்
காசினியில்தனவானாய் வாழ்குவானே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) சனிபகவானும், ராகு, குருவும், சுக்கிர பகவானும் மேஷராசியிலிருந்தால் பெண்களுக்கு இனியவனுயிருப்பதுடன் வேசி நேசனுய் சகலரும் தீரவானென்று புகழ்ந்துரைக்கும்படியாயிருப்பான். அனுல், சூரியன் உச்சனுகவும், செவ்வாய் அட்சியாகவும் அந்த மேஷராசியிலிருக்க புதனும், சந்திரனும் அந்த ராசியிலிருந்தால் பலவிதமான வியாபாரஞ்செய்து திரவியஞ்சேகரித்து, காணி பூமி, விடுகளை வாங்கிக்கொண்டு காண்போர் பிரபுவென்றுரைக்குந் தன்மையான கீர்த்திவானுய் வாழ்ந்துகொண்டிருப்பதற்காகும், ஆனுல், ஜாதகரின் திசாபுத்தியையும் ஆராய்ந்துணர்ந்து பலன் சொல்லவேண்டும்.

காரியுடன்பருதிமதி மேஷத்துற்று
காணுமந்தராசியிலே ராகுசேர்ந்தால்
வீரியமாய்ஒவ்வொன்றும் நினைத்திட்டாலும்
விதிவசத்தாலநேக தடைசேர்ந்துநஷ்டம்
பாரிலேயனுபவிப்பார் பலனேயில்லை
பந்துஜனக்கூட்டமெல்லாம் பகையாவார்கள்
காரியங்கைகூடாமல் திகைத்துநிற்பார்
கவனித்துஜாதகர்க்குப் பலன்சொல்வாயே.

(இ-ள்.) சனியும் சூரிய சந்திரனும் மேஷராசியிலிருக்கும்போது அவர்களுடனே இராகுபகவானும் சேர்ந்திருந்தால் எந்தக் காரியத்தைச் செய்ய நினைத்தாலும் நிறைவேருமல் தடைபட்டுத் தனது விதியை நினைத்து எப்போதும் விசனிப்பார்கள் தனது முயற்சியினுல் நடத்தும் காரியம் விக்னமாகின்றதேயென்று மனங்கலங்கி துயருற்று விசனிப்பார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ரிஷபராசியில் கிரகங்கள் நின்ற பலன்

சுக்கிரனும்சனிமதியம் ரிஷபத்துற்றால்
சுகமாகபொருள்தேடி வாழ்ந்திருப்பார்
தக்கபடிகுருசேய்மால் கூடி நின்றால்
தனந்தான்யசம்பத்து மிகவேபெற்று
சிக்கனமாய்சுற்றத்தார் மெச்சவாழ்வார்
சித்தமதிலணுவேனும் விசனமின்றி
மிக்கவேகௌரவமும் பெருமைவாய்ந்து
மேதினியில்ஜீவிப்பார் கவனிப்பாயே.

(இ-ள்.) சுக்கிர பகவானும், சனிபகவானும், சந்திர பகவானும் ரிஷப ராசியிலிருந்தால் பலவிதத்திலும், திரவிய சேகரஞ்செய்து சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள். அந்த ரிஷபராசியில் குருபகவானும், செவ்வாய் பகவானும், புதபகவானும் சேர்ந்திருந்தால் தனதான்ய சம்பத்துடன் சுற்றத்தார் மெச்சுந்தன்மையாக மனதில் விசனமில்லாமல் வாழ்ந்திருப்பார்கள்.

கதிர்சனியும்குஜராகு ரிஷபத்துற்று
காணுரவிமந்தனுடன் கேதுற்றாலும்
அதிகநஷ்டமாகவே உலகில்நாளும்
அலைச்சலுற்றுவெகுநாட்கள் பிழைத்திருந்தும்
நிதியில்லாஏழையைப்போல் தனமில்லாமல்
நீணிலத்திலிருப்பார்கள் வறுமையாலே
எதுவுந்தோன்றாமனதில் கவலையாலே
ஏக்கமுற்றுவிசனமா யிருப்பார்தானே.

(இ-ள்) சூரியபகவானும், சனிபகவானும் செவ்வாய் பகவானும் இராகுபகவானும் ரிஷப ராசியிலிருந்தாலும் அல்லது சூரியன் சந்திரன் கேதுபகவானும்சேர்ந்து ரிஷப ராசியிலிருந்தாலும், ஆயுள் நீடித்து அநேக நாள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

வரையிலும் பூலோகத்தில் பூர்ணாயுசா யிருந்தாலும் பல விதமான எண்ணத்தினால் ஒவ்வொன்றையும் நினைத்துக் கொண்டு பலவிதமான எண்ணத்தினாலும் எதனையும் நிறைவேற்றாமல் மனசஞ்சலத்துடனே ஏழையா யிருப் பார்கள்.

மிதுனராசியில் கிரகங்கள் நின்ற பலன்

மிதுனத்தில்புதன் ஆட்சியாயிருக்க
மேன்மையாய்குருசெவ்வாய் கூடிநிற்க
புதுமையாய்வியாபாரஞ் செய்துநல்ல
பூஷணமும்அணிபணியும் அலங்கரித்து
நிதிமிகுந்த தனவந்தரென்றேயிந்த
நீணிலத்தில்கீர்த்தியாய் விளங்கிநாளும்
அதிகசமபத்தாயிருப்பர் அவனிமீது
ஆராய்ந்துபலன்சொல்வீர் ஜாதகர்க்கே.

(இ-ள்.) மிதுனராசியில் புதபகவான் ஆட்சியாயிருக்க அவருடனே குருபகவானும், செவ்வாய் பகவானும்சேர்ந் திருந்தால் நூதன வியாபாரஞ் செய்து அதிக லாபத் துடனே பலவிதமாய திரவிய சேகரஞ்செய்து ஆடை ஆப ரண அலங்காரத்துடன மகா தனவந்தரென காணப்பார் புகழும் தன்மையாய வாழ்ந்திருப்பார்கள் ஆனால் இலக் கின பலனையும் ஜீவஸ்தானாதிபதி நின்ற பலனையும் ஆராய்ந்து பலன சொல்வீர் சோதிடவல்லோர்களே.

சனிராகுசூரியனும் சுக்கிரமாக
சார்ந்துமிதுனத்திருந்தால் வறுமையாலே
தனமில்லா ஏழையாய பாதவித்தும
தரணியிலேபலராலும பழிக்கப்பெற்று
முனிவுடனே பாஷிக்கும வார்த்தையாலும்
மூர்க்க[illegible]யவர்க்கும் பகை[illegible]

CC0. Old Tamil Texts: Digitized by Sri Muthulakshmi Research Academy

கனதுயரமனுபவிப்பா ருலகமீது
காசினியின்மாந்தர்களே கவனிப்பீரே.

(இ-ள்.) மிதுனராசியில் சனிபகவானும் சூரியபகவானும், சுக்கிரபகவானு மிருந்தால் பலபேரால் பழிக்கப் பெற்று தனது வார்த்தையாலும் துர்க்குணத்தினாலும் சகலருக்கும் பகையாகி பல பேரால் பழிக்கப் பெற்றுக் கலங்குவார்கள். வறுமையும், துன்பமு மதிகரித்து துன் புறச் செய்யும். உலகத்தோரெல்லாம் பொல்லாதவரென்பதாய் மதியீனரா யலைகுவாரே.

கடகராசியில் கிரகங்கள் நின்ற பலன்

சந்திரனும்புதன்குருவும் கடகந்தன்னில்
சார்ந்துநின்றால்வித்யாபி விர்த்தியாலே
இந்திரனைப்போலெவரும் மெச்சவாழ்ந்து
இன்பமுடன்பலவிதமாய் பொருளைச்சேர்த்து
மைந்தர்மனையும் சுற்றம்பெருகிவாழ்ந்து
மாநிலத்தில்வெகுகீர்த்தியா யிருப்பார்
சந்ததமும்காருண்ய மாயிருந்து
தரணியிலேகீர்த்தியுட னிருப்பர்தானே.

(இ-ள்.) கடகராசியில் சந்திரன் ஆட்சியாகவும் குரு உச்சமாகவும், புதன் நட்பாகவுமிருக்கும்போது பிறந்த ஜாதகன் வித்யாபிவிர்த்தியுடன் வெகு புத்தி சாதுர்யமாய் கௌரவமாய் இராஜாங்க உத்தியோகஞ் செய்தும் பெருமையான வியாபாரஞ் செய்தும் வெகு பொருள் சேகரித்து பூலோக இந்திரனைப்போல் பெருமையாக மனைவி மைந்தர் சுற்றத்தாருடனே காருண்யமான மனதமைந்த கீர்த்திவந்தரா யிருப்பார்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சனிசூரியன்செவ்வாயும் சுக்கிரனுமாக
சார்ந்துகடகத்துற்ருல ஜாதகர்க்கு
முனிவோடுதுர்க்குணங்கள் மிகவுண்டாகி
மூதறிஞர்துஷ்டனென்றே கூறுவார்கள்
பனிமொழிமாதர்மைந்தர் பகைஞராகி
பாரிலுள்ளோர்பழித்திடவே கலங்கிவாடி
இனியெவ்வாருலகத்தில் பிழைப்பதென்று
ஏங்கியேதவிப்பா ரறிகுவீரே.

(இ-ள்.) சனி பகவானும் சூரியபகவானும், செவ்வாய் பகவானும் கடகராசியிலிருந்தால் முன் கோபமும், மூர்க்க குணமும் பொருந்தி பெரியோர்களால் நிந்திக்கப் பெற்றுச் சகலருக்கும் பகையா யிருந்து சதா சஞ்சலமாய் மனைவி மைந்தர்களாலும் நிந்திக்கப்பட்டு காலமெல்லாம் கவலையடைந்து கஷ்டப்படுவார்கள். அதனல் சகலருக்கும் பகையாகி ஜீவிப்பதற்கு வழியில்லாமல் கஷ்டப்படுவார்கள்.

அன்புடனேகடகத்தில் குருவிருக்க
அவருடனேகேதுநின்ருல் ஞானவானும்
நன்மையுடன்ராகிருந்தால் தனவானுக
நலமுடனேகீர்த்தியாய் வாழ்ந்திருந்து
பொன்பொருளும் அதிகமாய்ச்சேகரித்து
பூலோகத்தோர்மெச்சும் ராஜயோகம்
இன்பமாயனுபவித்து தனவானுக
இருப்பார்கள்பூமியிலே கவனிப்பீரே.

(இ-ள்.) கடகராசியில் குரு உச்சமாயிருக்கும்போது அவருடனே கேது பகவானிருந்தால் ஞானமும் கீர்த்தியும் பெற்று வித்தையிற் சிறந்த ஆசிரியரா யிருப்பார்கள். ஆனல் குருவும் இராகுபகவானும கடகராசியிலிருந்தால் பலவிதமாய் திரவிய சேகரஞ்செய்து தனதான்ய சம்பத்

© Tamil Texts. Digitized by Sri Mathulakshmi Research Academy

துடன் உலகத்தார் மெச்சுந் தன்மையான கீர்த்தியுட னிருப்பார்கள். சதா காலமும் ஆஸ்தி பூஸ்தியுடன் இராஜ யோகத்தை யனுபவித்துக் கொண்டிருப்பதற் காகும்.

கடகராசியில் கிரகங்கள் நின்ற பலன்

சந்திரனும்புதபகவான் கடகத்துற்ருல்
சந்தமும்தனவந்த ராய்விளங்கி
சிந்தைமகிழ்ந்தானந்த மாயிருந்து
சிறுமையிலாபெருமையுடன் மனைவிசுற்றம்
மைந்தருடன்பெருமையாய் வாழ்ந்திருந்து
மாநிலத்தில்கீர்த்தியா யிருப்பாரென்று
வந்துஜாதகப்பலனைக் கேட்போருக்கு
வழுத்துவாயென் சிஷ்யாவிபரமாக.

(இ-ள்.) எனது அன்பான சிஷ்யா! கடகராசியில் சந்திரன் ஆட்சியா யிருக்கும்போது புதபகவானும் அவருடனே சேர்ந்திருந்தால் சதா காலமும் விசனமின்றி மன மகிழ்வாகவே தனவந்தரா யிருந்து மனைவி மைந்தர் சுற் றத்தாருடனே விசனமில்லாமல் பெருமையாக வாழ்ந் திருப்பார்கள். ஆனல், ஜனன ஜாதக கணிதத்தின் படியே திசாபுத்தி அந்தர பலனையும் ஆராய்ச்சி செய்து மற்றக் கிரகங்களிருக்கும ஸ்தான பலனையும் கவனித் துணர்ந்து ஜாதகங் கேட்க வந்தவர்களுக்குப் பலாபலனை விபரமாய்ச் சொல்லவும்,

சிம்மராசியில் கிரகங்கள் நின்ற பலன்

சிம்மராசியில்குருவும் செவ்வாய்சேர்ந்து
தினகரனும்மால்கூடி யிருப்பாராகில்
மங்காததிரவியலா பத்தைப்பெற்று
மாநிலத்தில்கீர்த்தியுடனிருந்துவாழ்ந்து

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

எங்கெங்கும்பெருமையுடன் பேரெடுத்து
ஈன்றமைந்தர்மனைவி பந்துமித்திரரோடு
மங்களமாய்வாழ்ந்திருப்பா ரென்றேசொல்வாய்
மதிமிகுந்தசோதிடரே விபரமாக.

(இ-ள்.) சிம்மராசியிலிருக்கும் குரு பகவானுடனும், செவ்வாய்பகவானுடனும் சூரியனும் புதனும் சேர்ந்திருந்தால் சதாகாலமும் குறையாத திரவிய சம்பத்துடனும் கீர்த்திப்பிரகாசமாய் வாழ்ந்திருந்து சகலரும புகழந்துரைக்கும்படியான பெருமையாய் ஜீவித்திருப்பதுடன மனைவிமைந்தர் சுற்றந்தாருடனே மனமகிழ்வாய் வாழந்திருப்பார்கள்.

சனிராகுசுக்கிரனும் சிம்மம்தன்னில்
சார்ந்திருக்கும்போதுரவி சேர்ந்திட்டாலே
முனிவாகஜாதகர்கள் பலபேருக்கு
முனைந்துபகை யதிகரிக்கும்படியாய்பேசி
கனவில்லாதுஷ்டனென பலபேரேச
காசியினிலேதுயர மெய்துவார்கள்
இனிதாகஜனன ஜாதகத்தைப்பார்த்து
இன்பமுடனுரைந்திடுவா யுலகத்தோர்க்கே.

(இ-ள்.) சிம்மராசியில், சனி, இராகு, சுக்கிரன், சூரியனும் சேர்ந்திருந்தால் சதாகாலமும பலவிதமாகிய எண்ணங்களும, தன்னைப் பலபேர் பொல்லாதவனென்றிகழ்ந்து பேசும்படியான கோபத்தை விளைவிக்கும்படியாய்ப் பேசுவார்கள். சதாகாலமும் சண்டைசச்சரவினுலும் மனவியாகூலத்தினுலும் மதிமயங்கி திகிலடைந்து வறுமையாளராயிருப்பார்கள். ஆகையினுல் ஜனன ஜாதகத்தின் இலக்கின பலனையும் கிரகங்கள் நின்ற ஸ்தான பலனையும ஆராய்ந்து பலாபலனை விபரமாய்ச் சொல்வீர்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சந்திரனும்புதன் குருவும் சிம்மந்தன்னில்
சார்ந்திருக்கும்போதுலகில் ஜனித்தபேர்க்கு
சிந்தைமிகமகிழ்வாகும் ரவியும்சேர்ந்தால்
சிறப்புடனே தனவந்தராயிருந்து
மைந்தர்பாக்கியம் பெற்றமனைவிசுற்றம்
மகிழ்ந்திருக்க நன்மனதாய்வாழ்வாரப்பா
இந்தவிதமாகி சுகமமைந்திருந்தால்
இவர்களையே சுகவானென்றோதலாமே.

(இ-ள்.) சிம்மராசியில் சந்திரனும் புதனுமிருக்கும் போது பிறந்த ஜாதகர் சதாகாலமும் மனமகிழ்வாக யிருப்பதற்காகும். இவர்களுடனே சூரியபகவானும் சிம்ம ராசியில் ஆட்சயா யிருந்தால் பலவிதத்திலும் திரவிய சேகரஞ்செய்து வெகு மேன்மையுடன் சகலரும் மெச்சிக் கொள்ளுந் தன்மையாய் தனதான்ய சம்பததுடனே மனைவி மைந்தர்களுடனே சுகஜீவியாய் வாழ்ந்திருப் பார்கள்.

கன்னியாராசியில் கிரகங்கள் நின்ற பலன்

கன்னியில்லபுதன்சூரியன் மதியும்சேர்ந்தால்
காசினியில் தனவந்தராயிருந்து
பொன்பொருளும் சேகரிப்பார்வாதகத்தில்
பெருமையுடன்காசுபணம் செலவழிப்பார்
அன்புடனேமித்திரர்கள் வெகுபேர்சேர்ந்து
ஆனமட்டும்செலவுசெய்ய தூண்டுவார்கள்
நன்னயமாயஜாதகனும் பெருமையாக
நானிலத்தில் வாழ்ந்திருப்பார் நிகுவீரே.

(இ-ள்.) கன்னியா ராசியில் புதபகவானும், சூரிய பகவானும், சந்திரபகவானும் சேர்ந்திருக்கும்போது பிறந்த ஜாதகர் தனவந்தரா யிருப்பதுடன் வியாபாரத் தினல் வெகு பொருள சேகரிப்பார்கள். ஆனால், பணத்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தைப் பலவிதமாய்ச் செலவு செய்யும் சிநேகிதர் கூடி கௌரவப்படுத்துவார்கள்.

சனிசுக்ரன் குருபகவான் மூன்றுபேரும்
சார்ந்துகன்னிராசியிலே இருப்பாராகில்
இனிதுடனேஎவர்களிடம் பேசினாலும்
இணங்காமல் நிஷ்டூரமாகப்பேசி
முனிவுடனே நிந்தித்துபகைவராகி
முன்கோபத்தாலெவரும் சினங்கொள்வார்கள்
வனிதையர்களிணங்காமல் வறுமையாலே
வையகத்தோர்பழிப்பார்கள் கவனிப்பீரே.

(இ-ள்.) கன்னியாராசியிலே சனிபகவானும் சுக்கிர பகவானும், குரு பகவானு மிருந்தால் அந்த ஜாதகர் எவர்களிடததிலும் இதமாய்ப் பேசினாலும், அவர்களனை வரும் நிஷ்டூரமாயப் பேசுவதும கோபமாய் நிநதிததுப் பகைத்துக்கொண்டு அலட்சியமாய் மதிப்பார்கள். தீராக் கவலேயால் ஸதிரீகளும் வெறுத்துப் பேசுவார்கள், பந்துக களும் பரிகாசத்துடனே பழிததுப் பேசும்படியான வறு மையாளரா யிருப்பார்கள்.

புதன்கேதுகன்னியா ராசிதன்னில்
பொருந்தியிருந்தால் வித்யாசாலியாக
சதாகாலம்புத்தியுட னிருந்தெப்போதும்
சஞ்சலமில்லாமலே வர்த்தகங்கள் செய்து
நிதிமிகவும்சேர்த்து வெகுதனவானாக
நீணிலத்தில் வாழந்திருப்பார் பெருமையாக
இதமுடனேமனைவிமைந்தர் பந்துமித்திரர்
இன்பமுடனேமகிழ வாழ்குவாரே.

(இ-ள்.) கன்னியா ராசியிலே புதபகவானும் கேது பகவானும் சேர்ந்திருந்தால் கல்வியிலும் குணத்திலும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சிறந்தவர்களாய்ச் சிறந்து வெகுபுத்திசாலித்தன்மையாய் விளங்கி வர்த்தகஞ் செய்து வெகு பொருள் சேகரித்து தனவந்தர்களாய் விளங்கி மனைவி மைந்தர்களுடனே பந்துமித்திரர் புகழுந் தன்மையாக வாழ்ந்திருப்பதற் காகும்.

துலாராசியில் கிரகங்கள் நின்ற பலன்

சுக்கிரனும்ஆட்சியாய் சனிஉச்சமாகி
துலாராசிதனிலிருக்க புதனும்சேர்ந்தால்
மிக்கவேதனதான்ய சம்பத்தோடு
மேன்மையாய்வியாபார விர்த்தியாகி
பக்குவமாய்ப்பணஞ்சேர்த்து அவனியோர்முன்
பக்ஷமுடன்நேசித்து வாழ்ந்திருப்பார்
தக்கபடிமனைவிமைந்தர் சுற்றத்தோடு
தரணியிலேவாழந்திருப்பா ரறிகுவீரே.

(இ-ள.) துலாராசியில சுக்கிரன் ஆட்சியாகவும், சனி பகவான உச்சமாகவு மிருக்கும்போது அவர்களுடனே புதன சேர்நதிருந்தால் தனதான்ய சம்பததோடு மேன்மையான வியாபாரஞ் செய்து வெகு திரவியஞ் சேகரிதது உலகத்தா புகழ்ந்தும்பசும்படியான கௌரவ மாய் மனைவி மைநதர் சுறறததோடு வெகு மேனமை யாக வாழ்ந்திருப்பாாகள்.

பருதிமதிராகுகுஜன் துலாவில்நிற்க
பாருலகிலபிறந்த ஜாதகாக்கெந்நாளும்
சிறுமையுடன்பலதொல்லை வறுமையோடு
சினமுடனேகும்பாதுன்பம் மிகவுண்டாகி
அருமையாய்விளங்கிய பதனுக்களெல்லாம்
அனுதினமும்கலககங்கள செய்தெப்போதும்
கருத்தொணுகொடுமைசெயய பரிதவிததுக
காசினியிலலேவார்களகவனிப்பாயே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்.) சூரியனும், சந்திரனும், ராகு பகவானும், செவ்வாய் பகவானும் துலாராசியி லிருக்கும்போது பிறந்த ஜாதகர்க்கு சதாகாலமும் துன்பமும் கவலையும் வறுமையும் சூழ்ந்து கஷ்டப்படச்செய்யும். மனதில் கோபமும் குரோதமும் பெருகி சகலரையும் பகைத்துக் கொள்ளுந் தன்மையான துர்க்குணத்தினரா யலைந்து வறுமையாளராய்ப் பகைவர்கள் செய்யும் கொடுமை யினுல் பரிதவிப்பதுடன் உலகத்திற் பலவித கஷ்ட நஷ்டமடைவதற்காகும்.

விருச்சிகராசியில் கிரகங்கள் நின்ற பலன்

குருசெவ்வாய்சூரியனும் புதனுமாக
கூடியேவிருச்சிகத்தி லிருப்பாராகில்
பொருளுடனேபூஷணமும் பொன்பணிகளெல்லாம்
பொருந்தியேமிகமகிழ வாழ்ந்திருப்பார்
பெருமையுடன்மனைவிமைந்தர் சுற்றத்தோடு
பேருலகில்வாழ்ந்திருப்பா ருலகிலென்று
அருமையுடன்ஜோதிடநூ லாராய்ந்தன்பாய்
அவனியோர்முன் விபரமாய்ச்சொல்வீரே.

(இ-ள்.) விருச்சிகராசியில் குருபகவானும் செவ்வாய் பகவானும் சூரியபகவானும் புதபகவானும் இருந்தால் வெகு தனவந்தனுக விளங்கி பொன் மணி பூஷணாலங் கிர்தமும் பொருந்தியவனுய் மனைவி மைந்தர்களுடனே வெகு மேன்மையாய் வாழ்ந்திருப்பதற்காகும். ஆனுல் திசாபுத்தி அந்தர பலனையும் ஆராய்ந்து பலன் சொல் வீர்கள்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பருதிமதிசனிசுக்ரன் விருச்சிகத்தில்
பாம்புடனே சேர்ந்து நின்றால் ஜாதகர்க்கு
கருதுமதியில்லாமம் புத்திகெட்டு
காண்போரெல்லாம் பகைஞராய்விளங்கி
பெருமையிலாதுயருற்றுக் கலங்குவார்கள்
பேருலகில்வறுமையினு லேழையாக
இருப்பாரென்றேபுகல்வீர் ஜோதிடவல்லோரே
இனிதுடனே ஜாதகர்க்கு பலனைத்தானே.

(இ-ள்) விருச்சிக ராசியில் சூரியபகவானும், சந்திர பகவானும், சனிபகவானும், சுக்கிரபகவானும் சேர்ந்திருந்தால் அவர்களுடனே இராகுபகவானு மிருந்தால், ஜாதகர்க்கு மனோகர்வமும் குரோத குணமு முண்டாகி சகலருக்கும் பகைவனைப்போலாக யாதொன்றும் கவனியாமல் பேசுவதுடன் சகலருக்கும் விரோதமா யிருந்து வறுமையினால் கலங்குவார்கள்.

குரு சிஷ்ய சம்பாஷணை யாகிய
ஜோதிட அரிச்சுவடி நான்காம் பாகம்
முற்றிற்று.

திருமகள் அச்சகம், சென்னை-79—1995

CC-0. OldTTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சர்வார்த்த சிற்ப சிந்தாமணி — விலை ரூ. 60-00

இந்நூலில் சிற்ப லட்சணம், வாஸ்து லட்சணம், வாஸ்து நிதானம் அஷ்ட திக்கு லட்சணம், மனைகோஷங்களறிய கிரகப் பிரவேச விதிகள், மனை முகூர்த்தம், வீடு கட்ட வேண்டிய நிர்ணயம், தெரு வாசக்கால் வைக்க வேண்டிய விதி, சோடச மனைப் பொருத்தம், பூமி சல்லியம், கூபச் சக்கரத்துடன், தேவாலய சிற்பம் விக்கிரகச் சிற்பம், விமானச் சிற்பம், கெர்ப்பக் கிரகத்தின் விபரம் முதலான அநேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இந்நூல் கொல்லத்து மேஸ்திரிகளுக்கும் ஏனையோர்களுக்கும் மிகவும் உபயோகமானவை.

சோதிடக் களஞ்சியம் — (அச்சில்)

இது மிகப்பழமையான சோதிட நூல் அநேக சக்கரங்களுடன் கூடியது. சோதிட சம்பந்தமான நுட்ப விஷயங்களனைத்தும் இதில் கூறப்பட்டிருப்பதால், சோதிட சாஸ்திரத்தை கற்க விரும்புவர்களுக்கு இன்றியமையாத சிறந்த நூல். இப் புத்தகம் அநேக நாட்களாக கிடைக்காமலிருந்தமையால் சோதிட நண்பர்பலர் வேண்டுகோளுக்கிணங்க சுத்தப் பதிப்பாக இப்போது வெளியிட்டிருக்கிறோம்.

ஜோதிட பிரம்மஞான தீபிகை — (அச்சில்)

இந்நூலானது லக்னமுதல் 12-பாவங்களுக்குமுள்ள பலன்களை ஜோதிஷம் அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் எளிதில் விளக்கிக்காட்டக்கூடிய ஒரு வசன நூலாக இருக்கிறது. இந்நூல் ஒவ்வொரு மனிதரிடத்திலுமிருந்தால் அவரவர் வாழ்வு நாட்களில் வரும் நன்மை தீமைகளைச் சுலபமாய்ச் சோதிடர்கள் உதவியில்லாமலே அறிந்து கொள்ளலாம்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சத்திதாசன் இயற்றிய
சம்பூர்ண ரேகை சாஸ்திரம் விலை ரூ. 45—00

இதுபோன்ற அருமையான ரேகை சாஸ்திரம் இதுவரையில் வெளிவரவில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கைரேகைப் பலன்களை சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். பிறருடைய கையையும் பார்த்துப் பலன் சொல்லலாம்; சீரிய கருத்துக்களை எளிய நடையில் எழுதப்பெற்றது இது ஒவ்வொருவரின் விதிப் பலனை விளக்கக்கூடிய கருவி நூலாக விளங்குகிறது..

அனுபோக ஜாதக ரகசியம் விலை ரூ. 25—00

கிரகசார சக்கரத்துடன் கூடிய இந்த ஜாதக ரகசியத்தை ஜோதிடர்களும் சாதாரணமானவர்களும் சுலபமாகத் தெரிந்துகொள்வதற்காக, ஜாதகம் கணிக்கவும், ராசி கணிக்கவும், அஷ்டவர்க்கம் கணிக்கவும், கோசாரம், பன்னிரு பலாபலன்களும், திசாபுத்தி அந்தர பலன்களும் கண்ணாடிபோல் விளக்கி எழுதியிருக்கிறது.

ஸ்ரீ கணேசர் ஆரூட திபிகை விலை ரூ. 12—00

[கணேச ஆரூட பெரிய சக்கர படத்துடன் கூடியது]

இக்கிரந்தம் கையொப்பமாயிருக்கில் தாங்களே கைக் கண்ணாடிபோல் கருத்தைத்தெரிந்து அவரவர்களுடைய அதிர்ஷ்ட பலாபலன்களைச் செவ்வையாய் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஆரூட சம்பந்தமாக ஸ்ரீ கணேசர் ஒளவைக்கு அருளிச்செய்த இந்தக் கிரந்தம் ஏட்டுப்பிரதியிலிருந்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

கிடைக்குமிடம் :—

B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்,

26, வெங்கட்ராமய்யர் தெரு, கொண்டித்தோப்பு,
மின்ட் போஸ்ட், சென்னை-79,

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

எங்களிடம் கிடைக்கக்கூடிய சோதிட நூல்கள்

	ரூ.	காசு
'சுகர் நாடி' என்னும் சோதிட சிகாமணி (1500-சக்கரங்களடங்கியது)	100	00
சம்பூர்ண ரேகை சாஸ்திரம் (சக்திதாசன் இயற்றியது)	45	00
அனுபவ ஹஸ்தரேகை சாஸ்திரம் (சக்திதாசன் இயற்றியது)	30	00
சர்வார்த்த சிற்ப சிந்தாமணி	60	00
ஜோதிட சில்லரைக் கோவை (21-சோதிட நூல்கள் அடங்கியது)	60	00
'சோதிட கிரக சிந்தாமணி' என்னும் பெரிய வருஷாதி நூல் (டபில் கிரௌன் 1 x 16 அளவில்)	50	00
சோதிட அரிச்சுவடி (4-பாகங்கள் சேர்ந்தது)	35	00
திசாபுத்தி அந்தர பலன்	9	00
ஜோதிட நாடி	5	00
கணேச ஆரூட தீபிகை	12	00
அஷ்டதிக்கு ஆரூடம்	12	00
ஜோதிட கோட்சார சிந்தாமணி	12	00
ஜோதிட சந்திர நாடி (சகாதேவர் அருளிச் செய்தது)	9	00
நவக்கிரக நவகண்ட ஆரூடம்	8	00
சுந்தர சேகரம்; முதற்பாகம்	10	00
ஷை 2-ம் பாகமாகிய தியாகராஜ சேகரம்	9	00
ஷை 3ம் பாகமாகிய தியாகராஜ சோதிட ஆனந்தக் களிப்பு	10	00
புலிப்பாணி மகாமுனிவர் சோதிடம்-300	15	00
சர்வப் பிரயாண சகுன சாஸ்திரம்	...	அச்சில்

கிடைக்குமிடம் :—

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்.

26, வெங்கட்ராமய்யர் தெரு, கொண்டித்தோப்பு,
மின்ட் போஸ்ட் சென்னை-79,

CC-0. OldTamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy